2916

T. N. L. A. Debates
OFFICIAL REPORT
VOL: 19 NO: 4
March 31st
1986

D
V2ll,31 N76
N86·19·4
136460

சென்னை-600 008
136469

## உள்ளடக்கம்

31—3—1986


| | பக்கங்கள் |
|---|---|
| **1. வினாக்கள்–விடைகள்—** | |
| (அ) உடுக்குறியிட்ட வினாக்கள் | 565—613 |
| (ஆ) உடுக்குறியிடாத வினாக்கள் | 613—646 |
| **2. தகவல் கோரல்—** | |
| (அ) ஊராட்சி ஒன்றிய வாக்காளர் பட்டியல் .. | 646—647 |
| (ஆ) பஞ்சாலைத் தொழிலாளர்கள் போராட்டம் .. .. .. .. | 647—648 |
| (இ) பேரவைக் கூட்டம் நடந்து கொண்டிருக்கும்போது மாவட்ட வளர்ச்சி மன்றங்களின் கூட்டத்தையும் கூட்டுவது .. | 648—649 |
| (ஈ) நடைபெற்றுள்ள உள்ளாட்சி மன்றத் தேர்தலின் விளைவாக ஆங்காங்கே மோதல் ஏற்படுவதைத் தவிர்ப்பது .. | 649 |
| (உ) தேவதானப்பட்டி துப்பாக்கிச் சூடு குறித்து ஐ. ஜி. அறிக்கை வெளியிட்டிருப்பது .. .. .. | 650—652 |
| **3. கவன ஈர்ப்புகள்—** | |
| (அ) போதிய தண்ணீர் விடாததால், காவிரி பாசனப் பகுதி விவசாயிகள் பாதிக்கப் பெற்றுள்ளது .. | 652—659 |
| (ஆ) திருச்சி புறநகர்க் கிளையைச் சேர்ந்த கழகப் பேருந்து திருச்சி தடத்தில் விபத்திற்குள்ளானது .. .. | 659—665 |
| **4. அரசினர் சட்ட முன்வடிவு—** | |
| கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) இரண்டாம் திருத்த சட்ட முன்வடிவு, 1986 .. | 666—670 |

பக்கங்கள்.

5. வரவு-செலவுத் திட்டம் 1986-87 பொது விவாதம்—(தொடர்ச்சி) 670—775

*திரு. க. அன்பழகன் 670—706

திரு. உ. சுப்பிரமணியன் 706—731

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் 731—775

6. அறிவிப்பு—

உறுப்பினர்கள் திரு. ஆர். செங்காளியப்பன், திரு. கு. ரமணி ஆகியோர் கைது செய்யப் பெற்றுள்ளது குறித்து .. .. 776

7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள் .. 776—777

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

### 1986, மார்ச் 31, திங்கட்கிழமை.

பங்குனி 17, குரோதன, திருவள்ளுவர் ஆண்டு—2017

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9-00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. பி. எச். பாண்டியன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

"குடிபுறங் காத்தோம்பிக் குற்றம் கடிதல்
வடுவன்று வேந்தன் தொழில்".

குடிகளைப் பிறர் வருத்தாமல் காத்துத் தானும் வருத்தாமல் காப்பாற்றி அவர்களுடைய குற்றங்களைத் தக்க தண்டனையால் ஒழித்தல், அரசனுடைய தொழில் : பழி அன்று.

### 1. வினாக்கள்—விடைகள்

(அ) உடுக்குறியிட்ட வினாக்கள்

**கோவை உக்கடம்—செட்டி வீதி வட்டச்சாலை**

308 — (*வினா எண் 4335) **திரு. ஆ. நடராசன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை உக்கடம் பகுதியிலிருந்து செட்டி வீதி வரை வட்டச்சாலை அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் மதிப்பீடு என்ன ?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** (அ) கோவை உக்கடம் பகுதியிலிருந்து கண்டக்காமுத்தூர் சாலை வரை வட்டச் சாலை அமைக்கும் செயற்குறிப்பு கோவை மாநகராட்சியின் பரிசீலனையில் உள்ளது.

(ஆ) இத் இதிட்டத்தின் மதிப்பீடு ரூ. 20 இலட்சங்கள் ஆகும்.

**திரு. மா. சின்னராசு**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவையில் உக்கடம் பகுதியிலிருந்து செட்டிவீதி வரையில் உள்ள பகுதி மிக நெருக்கடியான போக்குவரத்துள்ள பகுதியாக இருக்கிறது. ஆகவே அந்தப் பகுதியிலே வட்டச் சாலை அமைப்பதன் மூலமாக போக்குவரத்து நெருக்கடியைத் தீர்ப்பதற்கு வாய்ப்பு இருக்கிறது. எவ்வளவு நீளத்திற்கு அந்தச் சாலை அமைக்கப்பட இருக்கிறது? அந்தத் திட்டத்தின் மதிப்பீடு என்ன? திட்டம் எப்போது துவக்கப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தச் சாலையின் நீளம் 1.6 கிலோ மீட்டர் ஆகும். அந்தத் திட்டத்தினுடைய மதிப்பீடு 20 லட்ச ரூபாய் ஆகும். முதற் கட்டமாக மண் பரப்பி அந்தச் சாலையைக் கொஞ்சம் சமன்படுத்த வேண்டும். அதற்கான வேலைகள் துவக்கப்படும். முதற்கட்டமாக அதற்காக 1 லட்ச ரூபாய் இந்த ஆண்டு ஒதுக்கப்பட்டிருக்கிறது.

**திரு. கு. ரமணி**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தை அமலுக்குக் கொண்டுவர வேண்டுமென்று அரசு முயற்சி எடுத்து சில காலமாகிவிட்டது என்பது என்னுடைய கருத்து. ஆனால் அங்கே வேலைகள் ஆரம்பிக்கப்படவில்லை. பெரிய குளம் இருக்கிறது. அந்தக் குளத்தினுடைய பகுதியிலே மணல் போட்டு நிரப்பி அதை ரோடு மாதிரி பார்ம் பண்ணுகிற வேலை நடக்க வேண்டும். இன்னும் அதற்கான நடவடிக்கைகளை எடுக்கவில்லை. துரிதமாக செய்ய வேண்டிய வேலை. காரணம் வெளியிலிருந்து வரக்கூடிய போக்குவரத்து மெயின் ரோடு, கேரள மாநிலத்திலிருந்து வரக்கூடிய ரோடு ஆகியவற்றைக் கனெக்ட் செய்யக்கூடிய ரோடாக இருப்பதால் எவ்வளவு காலத்திற்குள்ளே அது செய்து முடிக்கப்படும் என்பதை அறிவிப்பார்களா?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தச் சாலையின் முக்கியத்துவத்தை அரசு உணர்ந்திருக்கிற காரணத்தினால்தான் அந்த வேலையை எடுக்கும்படி ஆணை பிறப்பித்திருக்கிறது. அந்தச் சாலையிலே





பல்வேறு பகுதிகளிலே தேவையான — இடிபாடுகளை வெட்டு மணல் பரப்பி — அளவுக்கு சமன் செய்துகொண்ட பிறகு தான் அதற்குண்டான வேலைகளைச் செய்ய வேண்டும். எவ்வளவு விரைவிலே அந்த வேலைகளை மேற்கொள்ள வேண்டுமோ. அவ்வளவு விரைவிலே மேற்கொண்டு முடிப்பதற்கு அரசு ஆணை பிறப்பிக்கும்.

## காங்கேயம் நகரப் பேருந்து நிலையம்

309—(*வினா எண் 5543) டாக்டர் அ. பொன்னுசாமி **திரு. கா. செ. பழனிச்சாமி**: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காங்கேயம் நகரப் பேருந்து நிலையத்தை புதுப்பிக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது பணி துவங்கப்படும்?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்**: (அ) ஆம்.

(ஆ) பேருந்து நிலையத்தைப் புதுப்பிக்க கட்டிட வரைபடம் தயாரித்து, நகர் ஊரமைப்பு இயக்குநரின் ஒப்புதல் பெற்று, ரூபாய் 20 இலட்சத்திற்கு மதிப்பீடு ஒப்புதல் வரப் பெற்றவுடன், திட்டம் செயல்படுத்தப்படும்.

**திரு. கா. செ. பழனிச்சாமி**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தினுடைய மதிப்பீடு எவ்வளவு? வருகிற நிதியாண்டிலே அதற்காக ஒதுக்கப்பட்டிருக்கிற தொகை எவ்வளவு?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதற்கான மொத்த மதிப்பீடு 20 லட்ச ரூபாய் ஆகும். வருகிற ஆண்டுக்கு எவ்வளவு தொகை அதற்காக ஒதுக்கப்பட்டு இருக்கிறது என்ற புள்ளிவிவரம் என்னிடத்திலே இப்போது இல்லை. 7-வது ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ்

ஒருங்கிணைந்த நகர அபிவிருத்தித் திட்டத்திலே இது சேர்க்கப்பட்டிருக்கிற காரணத்தினால் விரைவிலே வேலைகள் துவங்கப்படும்.

## திருவில்லிபுத்தூர் நகர அபிவிருத்திப் பணிகள்

**310 — (*வினா எண். 5910) திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஏழாவது ஐந்தாண்டு திட்டத்தின்கீழ் மத்திய ஒருங்கிணைந்த நகர அபிவிருத்தித் திட்டத்தின்கீழ், திருவில்லிப்புத்தூர் நகராட்சியில் பேருந்து நிலையம், பைபாஸ் ரோடு, காய்கறி மார்க்கெட் ஆகியவை அமைக்கும் செயற்குறிப்பு அரசு பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் யாது?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** (அ) இல்லை.

(ஆ) இவ் வினா எழவில்லை.

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சியில் ஜனத்தொகை அதிகமாகிக் கொண்டே வருகிறது. இப்போது அங்கே பேருந்து நிலையத்திலே அதிகமான பேருந்துகள் வருகிற காரணத்தினால் இப்போதைய நிலவரப்படி நெருக்கடி அதிகமாக இருக்கிறது. ஆகவே அங்கே பேருந்து நிலையம், பைபாஸ் ரோடு, காய்கறி மார்க்கெட் ஆகியவைகளை அமைக்க வேண்டுமென்று துறையின் மூலமாக பரிந்துரை செய்தும், அது அரசுக்கு வந்தும் ஏன் அதை எடுத்துக் கொள்ளவில்லை? விரைவில் 7-வது ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ் செய்யப்படுகிற ஒருங்கிணைந்த நகர அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் பரிந்துரை செய்து அங்கே பேருந்து நிலையம், பைபாஸ் ரோடு, காய்கறி மார்க்கட் அமைப்பதற்கு வேண்டிய நடவடிக்கையை அரசு எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1985-86-இல் ஒருங்கிணைந்த நகர வளர்ச்சித் திட்டத்தின் கீழ் உதவி பெறுவதற்காக அந்தத் திட்டம்



சேர்க்கப்பட்டது. மீண்டும் அந்தத் திட்டத்தை கொஞ்சம் மாற்றி அமைக்க வேண்டுமென்று சொன்னதால் அதன்படி 80 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 23—12—1985 அன்று அந்தத் திட்டப் பிரேரணை வந்திருக்கிறது. எப்படியோ அது விடப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் சொல்லியபடி திருவில்லிபுத்தூரின் முக்கியத்துவத்தையும், அந்த நகரத்தை அபிவிருத்தி செய்ய வேண்டியதன் அவசியத்தையும் அரசு உணர்ந்து இருக்கிறது. இதை மறுபரிசீலனை செய்யும்.

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஸ்ரீவில்லிப்புத்தூர் நகராட்சியில் இப்பொழுது உள்ள பேருந்து நிலையத்தில் நடைபாதைக் கடைகள் இருக்கின்றன. ஸ்ரீவில்லிப்புத்தூர் வருமானம் இல்லாத நகராட்சியாக இருப்பதால், இந்த நடைபாதைக் கடைகளின் மூலம் ஆண்டிக்கு மூன்று இலட்சம் ரூபாய் வரையில் வருமானம் வருகிறது. ஆனால், இப்பொழுது உள்ள அரசியல் சூழ்நிலையின் காரணமாக, புதிய கவுன்சிலர்கள் வந்திருக்கின்றார்கள், அந்த அரசியல் சூழ்நிலையின் காரணமாக இந்தக் கடைகளை அப்புறப்படுத்த வேண்டும் என்றும், ஏலத்தில் விடக்கூடாது என்றும், கடைகள் இருக்கக் கூடாது என்றும் சொல்லிக்கொண்டு, டெய்லி வாடகை என்ற முறையில் வசூல் செய்து கொண்டிருக்கிறார்கள். இதை அரசு தடுத்து நிறுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** பேரவைத் தலைவர் அவர்களே, நகராட்சிகளுக்கு என்று சில உரிமைகள் இருக்கின்றன. அந்த உரிமைகளில் நாம் தலையிட முடியாது. இருந்தாலும், அரசியல் காரணமாக இப்படி ஏதேனும் நடவடிக்கை எடுக்கப்பட்டால், நிச்சயமாக அரசு அதைப் பரிசீலிக்கும், கவனிக்கும், அதற்குண்டான ஆணை பிறப்பிக்கும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஏ. எஸ். ரவீந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எந்த அடிப்படையில் இந்த நகர அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் நகரங்கள் தேர்ந்து எடுக்கப்படுகின்றன? திருவண்ணாமலை நகரத்தின் முக்கியத்துவத்தை மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சரவர்கள் அறிவார்கள்.

திருவண்ணாமலை நகரத்தையும் இந்த நகர அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் எடுத்துக்கொள்வதற்கு அரசுக்கு உத்தேசம் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற ஆண்டு தான் இந்தத் திட்டத்தின் கீழ் கட்டப்பட்ட பேருந்து நிலையத்தை திருவண்ணாமலையில் நான் திறந்து வைத்தேன்; மாண்புமிகு உறுப்பினர் அவர்களும் கலந்து கொண்டார்கள். அது அவர்களுக்கு நினைவு இருக்கும் என்று நம்புகிறேன். எனவே, திருவண்ணாமலையில் புதியதாக ஏதேனும் கடைகள் கட்டும் திட்டம் போன்று ஏதேனும் இருந்தால், இதற்கு என்று ஒரு குழு இருக்கிறது, அது பரிந்துரை செய்து அந்த வங்கியிடமிருந்து பணம் வாங்கித் தரவேண்டும். எனவே குழு பரிந்துரை செய்ய வேண்டும்—அந்தக் குழுவிற்கு அனுப்பினால் அது பரிசீலிக்கும். இப்படி மற்ற ஊராட்சி மன்றங்கள், ஊராட்சி ஒன்றியங்கள், நகராட்சிகள் போன்றவைகள் இப்படிப்பட்ட திட்டங்களின்கீழ், வருமானம் வரக்கூடிய இனங்களில் செய்ய வேண்டுமென்றால் அதைப்பற்றி அந்தக் குழு பரிசீலித்து சிபாரிசு செய்யும்.

## போச்சம்பள்ளி சனோலா தொழிற்சாலை

**311 — (* வினா எண். 3479) திரு. டி. ஆர். வேங்கடரமணன்:** மாண்புமிகு வேளாண்மை துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) போச்சம்பள்ளி சனோலா தயாரிப்பு தொழிற்சாலையில் உற்பத்தி அனுமதிக்கப்பட்ட அளவைவிட குறைவாக இருக்க காரணம் என்ன?

(ஆ) உற்பத்தித் திறனைப் பெருக்க என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டு உள்ளது?

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து:** (அ) அரைவைக்குத் தேவையான சூரியகாந்தி எண்ணெய் வித்துக்கள் கிடைக்காததே இதற்கு காரணமாகும்.

(ஆ) உற்பத்தித் திறனை பெருக்க நடவடிக்கைகள் எடுக்கப் படுகின்றன.

1986 மார்ச் 31]

தமிழ்நாடு வேளாண் தொழில்கள் கழகம் விவசாயிகளுக்கு வீரிய ஒட்டு விதைகளை சலுகை விலையில் விநியோகித்து நல் விளைச்சல் பெறச் செய்து விளைபொருட்களுக்கு உரிய விலை கொடுத்து கொள்முதல் செய்கிறது. இடைத்தரகர் இன்றி அரசு நிறுவனமே கொள்முதல் செய்கிறது என்பதனை விவசாயிகள் உணர நேரடி சந்திப்பு, பிரசுரங்கள் விநியோகம், கருத்தரங்குகள் ஆகியவற்றின் மூலம் விளம்பரப்படுத்தப்படுகிறது.

ஆலையின் உற்பத்திக்குத் தேவையான நல்ல நீர் கிடைக்க போச்சம்பள்ளி தன்னிறைவுத் திட்டத்தில் ஆலையின் தேவையையும் கருத்தில் கொண்டு திட்டங்கள் தீட்ட தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

உற்பத்தியாகும் பொருள்கள், அவற்றின் தரம் பற்றி வானொலி, தொலைக் காட்சி, திரைப்படம் ஆகியவற்றின் மூலம் விளம்பரம் செய்து உடனடி விற்பனை செய்வதன் மூலம் உற்பத்தியை அதிகரிக்க வழி செய்யப்பட்டுள்ளது. மேலும் விற்பனை நிலவரங்களை உடனுக்குடன் தெரிந்து நிர்வாகத்திற்கு பரிந்துரைக்கவும் முகவர்களை அடிக்கடி சந்திக்கவும் விற்பனை அலுவலர்களை நியமித்து விற்பனையை அதிகரிக்கவும் முயற்சி எடுக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் உற்பத்தி அதிகரிக்க வாய்ப்பு இருக்கிறது.

திரு. டி. ஆர். வேங்கடரமணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சனோலா என்ற சூரியகாந்தி எண்ணெய் இன்றைக்குப் பொதுமக்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டு அதிகமாகப் பயன்படுத்தப்பட்டு வருகிறது. இருந்தாலும் இன்றைக்கு அந்த எண்ணெய் கிடைப்பதில் மார்க்கெட்டில் தட்டுப்பாடு இருக்கிறது. அதற்கு என்று ஏற்படுத்தப்பட்டுள்ள அந்த ஆலையிலே போதுமான அளவிற்கு உற்பத்தி இல்லாத சூழ்நிலை இருக்கிறது. அதற்கான வித்துக்கள் கிடைக்கவில்லை என்று மாண்புமிகு அமைச்சரவர்கள் சொன்னார்கள். அந்த ஆலையின் உற்பத்தித் திறன் அதாவது புரொடக்ஷன் கெப்பாசிட்டி என்ன? கடந்த மூன்று ஆண்டுகளில் எந்த அளவிற்கு உற்பத்தி செய்திருக்கிறது என்பதை மாண்புமிகு அமைச்சரவர்கள் அறிவிப்பார்களா?

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து:** தலைவரவர்களே, மூன்றாண்டுகளில் உற்பத்தி படிப்படியாகப் பெருகி வருகிறது. 12,000 டன் உற்பத்தித்திறன் அந்த ஆலைக்கு. ஆகவே, தொடர்ந்து உற்பத்தியை அதிகரிக்க முயற்சி எடுக்கப்படுகிறது.

**திரு. டி. ஆர். வேங்கடரமணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 12,000 டன் என்று சொன்னார்கள். ஆனால் உற்பத்தி எவ்வளவு என்றுதான் நான் கேட்கிறேன். கிட்டத்தட்ட 20 சதவீதத்திற்கு மேல் உற்பத்தி செய்யவில்லை என்ற தகவல் எனக்கு வந்ததன் காரணமாகத்தான் நான் இந்தக் கேள்வியையே கேட்டேன். 12,000 டன் உற்பத்தித் திறன் என்று சொன்னார்கள். ஆனால் எவ்வளவு உற்பத்தி செய்கிறது என்று அறிய விரும்புகிறேன். ஏனென்றால், மார்க்கெட்டில் சூரியகாந்தி வித்துக்களை வைத்துக்கொண்டு விவசாயிகள் கஷ்டப்படுகிறார்கள். ஆனால் இந்த ஆலையிலே உள்ள நிர்வாகப் பணியாளர்கள் ஆலையின் எஃபிசியன்சியைச் சரிவரப் பராமரிக்காததன் காரணமாக எண்ணெய் வித்துக்கள் விவசாயிகளிடமிருந்து வாங்கப்படாமல், விவசாயிகள் கஷ்டப்படுகிறார்கள், எண்ணெய் கிடைக்காமல் பொதுமக்கள் கஷ்டப்படுகிறார்கள். எனவே, உண்மையான ப்ரொடக்ஷன் கெப்பாசிட்டி அந்த ஆலையைப் பொறுத்த வரையில் என்ன என்பதை மாண்புமிகு அமைச்சரவர்கள் அறிவிக்க வேண்டும்; மேலும், இதுகுறித்து உடனடியாகத் தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று உங்கள் மூலமாகக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து:** தலைவர் அவர்களே, 1984-85-இல் 2,820 டன் சூரியகாந்தி வித்துக்களை நாம் கொள்முதல் செய்திருக்கிறோம். உற்பத்தி திறன் 23.50 சதவீதம்.

(முற்பகல் 9-10)

**திரு. அ. வெங்கடாசலம்:** மாண்புமிகு தலைவர் அவர்களே, போச்சம்பள்ளியில் இருக்கிற இந்த சனோலா எண்ணெய் தயாரிக்கின்ற தொழிற்சாலைக்கு அங்கே வித்துக்கள் கிடைக்கவில்லையென்ற காரணத்தினால், வெளி மாநிலங்களிலிருந்து வாங்குவதாகச் சொன்னார்கள். அது என்னுடைய தொகுதியிலே இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் சொன்னதைப் போல்,



அங்கே விவசாயிகளிடத்திலே வித்துக்கள் இருந்தும் லோக்கல் பர்சேஸ் — அங்கேயே விலைக்கு வாங்குகின்ற நிலைமை இல்லை. அதற்கு அமைச்சர் அவர்கள் ஏதாவது ஏற்பாடு செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து:** தலைவர் அவர்களே, அதுபோன்ற நிலைமை இருக்குமானால், இங்கே, இந்த மாநிலத்திலேயிருக்கிற விவசாயிகளிடத்திலே கொள்முதல் செய்ய வேண்டுமென்று அரசு அறிவுறுத்தும்.

### நெல்லிக்குப்பம் மலைப் பகுதிகளுக்கான குடிநீர்த் திட்டம்.

312—(*வினா எண். 3770) **திரு. துரை அன்பரசன்:** மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நெல்லிக்குப்பம் தொகுதியில் மலைப்பகுதிகளான சாத்திப்பட்டு C.N. பாளையம், நடுவீரப்பட்டு, குமலங்குளம், விளங்கல் பட்டு, வானவன் மாதேவி, திருமானிக்குழி, கொடுக்கன் பாளையம், வெள்ளக் கரை, இராமாபுரம் ஆகிய பஞ்சாயத்துக்களில் குடிநீர் பிரச்சனையை தீர்க்க அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் யாவை?

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து:** தென் ஆற்காடு மாவட்டம், நெல்லிக்குப்பம் தொகுதியிலுள்ள மலைப்பகுதிகளில் பெரும்பாலான குடியிருப்புகளுக்கு தற்போது நீர்த்தேக்கத் தொட்டியுடன் கூடிய விசைப்பம்பு, பொதுக்கிணறுகள், கைப்பம்புகள் மூலம் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. குடிநீர் தட்டுப்பாடுள்ள மற்ற குடியிருப்புகளில் போதிய குடிநீர் வழங்க கைப்பம்புடன் கூடிய ஆழ்துளை கிணறு அமைத்தல், மேல்நிலை நீர்த் தேக்கத்தொட்டி அமைத்தல், கைப்பம்பு மற்றும் விசைப் பம்பு அமைத்தல் முதலிய பணிகள் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**திரு. துரை அன்பரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெல்லிக்குப்பம் தொகுதியில் மலைப் பகுதிகளான சாத்திப்பட்டு, சி. என். பாளையம், நடுவீரப்பட்டு, குமலங்குளம், விளங்கல்பட்டு, வானவன் மாதேவி, திருமானிக்குழி, கொடுக்கன் பாளையம் வெள்ளக்கரை, இராமாபுரம் ஆகிய பகுதிகள், நீண்டகாலமாக குடிநீர்ப் பற்றாக்குறையின் கொடுமையிலே

தவித்துக் கொண்டிருக்கின்றன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நீர்த்தேக்கத் தொட்டிகள் மூலமாக, குடிநீர் வழங்கி வருவதாகச் சொல்கிறார்கள். சில ஏரியாக்களில் குடிநீர்ப் பற்றாக்குறையைப் போக்க, குடிநீர்த் தேக்கத் தொட்டிகள் பயன்பட்டு வந்தாலும், மீண்டும் அவர்களுக்கு நல்லமுறையிலே குடிநீர் கிடைக்க, உடனடியாக, இப் பிரச்னையைத் தீர்க்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை மேற்கொள்வாரா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து:** தலைவர் அவர்களே, அரசு ஆவன செய்யும்.

### புதுக்கோட்டைக்கு காவேரியிலிருந்து குடிதண்ணீர்.

**313 — (*வினா எண். 4599) திரு. த. புஷ்பராசு :** மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை நகரத்திற்கு காவேரி ஆற்றில் இருந்து குடிதண்ணீர் வழங்க அரசிடம் திட்டம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து:** (அ) ஆம்.

(ஆ) புதுக்கோட்டை நகரத்தில் நீண்ட கால தேவைகளைக் கருத்தில் கொண்டு, காவிரியிலிருந்து நிலத்தடிநீரை எடுக்கும் சாத்தியக்கூறுகள் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் பரிசீலனையில் உள்ளது. இத்திட்டத்திற்கு சுமார் ரூ. 1100 லட்சம் செலவாகும் என மதிப்பிடப்பட்டிருக்கிறது.

**திரு. பொ. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தை மிகவும் வறட்சியாக உள்ள, இராமநாதபுரம் மாவட்டம், பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டங்களுக்கு விரிவுப்படுத்துகின்ற திட்டம் ஏதாவது அரசிடம் உள்ளதா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து:** தலைவர் அவர்களே, இது காவிரியிலிருந்து நிலத்தடி நீர் எடுக்கிற திட்டம். காவிரி இராமநாதபுரம் வரைக்கும் வராது.



**திரு. த. மாரிமுத்து:** பேரவைத் தலைவர் அவர்களே, புதுக்கோட்டை மாவட்டத்திலே மழை பெய்வதே கிடையாது; குடிநீர் பிரச்னை மிகக் கடுமையாக இருக்கிறது என்ற வகையில், இதய தெய்வம் புரட்சித் தலைவர் காலத்திலே அமைச்சர் அவர்கள் இப்படி ஒரு திட்டம் இருக்கிறது என்று அறிவிப்பு செய்தார்கள். இந்தத் திட்டம் புதுக்கோட்டை மாவட்டம் முழுவதற்கும் கிடைக்க வாய்ப்பிருக்கிறதா ? எந்த, எந்த இடத்திற்கு விரிவாக்கப்பட வாய்ப்பிருக்கிறது? அதனுடைய முழுமையான விவரங்களை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா ?

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து:** தலைவர் அவர்களே, புதுக்கோட்டை நகரத்தை மையமாகக் கொண்டுதான் திட்டம் தீட்டப்பட்டிருக்கிறது. இதைப்பற்றி விரிவான ஆய்வு நடத்தப்பட்டு வருகிறது.

**திரு. துரை கோவிந்தராசன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவிரியிலிருந்து, புதுக்கோட்டை நகரத்திற்கு தண்ணீர் கொடுக்கப்படும் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். காவிரி ஆற்றின் எந்த இடத்திலிருந்து அது துவங்கவிருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து:** தலைவர் அவர்களே, திருச்சிக்கு அருகில் எடுப்பதாக உத்தேசம் செய்யப்பட்டிருக்கிறது. தேவையான நீர் எடுக்கும் அமைப்புகளுக்கான 450 மீட்டர் நீளமுள்ள 8 குழாய்களைக் கொண்டு இரண்டு நீர் சேகரிக்கும் குழாய்க் கிணறுகளைக் கரையின் அருகில் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**திரு. ந. சிவஞானம் :** பேரவைத் தலைவர் அவர்களே, காவேரியிலே தண்ணீரே வருவதில்லை. ஆகவே, புதுக்கோட்டை வறட்சியான பகுதியாக ஆகிவிட்டது. ஆகவே, காவேரியில்லாமல், வேறிடத்திலேயிருந்து குடிதண்ணீர் வழங்க, அரசிடம் மாற்றுத் திட்டம் ஏதேனும் பரிசீலனையில் உள்ளதா ?

[1986 மார்ச் 31

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து:** தலைவர் அவர்களே, பாலாற்றிலே கூட தண்ணீர் வருவதில்லை; நிலத்தடி நீர் இருக்கிறது. அதைப்போல நிலத்தடி நீரை வைத்துதான் நாம் குடிநீர் திட்டத்தை அறிவித்து இருக்கிறோம்.

**திரு. க. பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவேரியிலே தண்ணீர் இல்லாததாலே, நாம் கர்நாடகத்தை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம். ஆனால், காவேரிக்கு வருகிற தண்ணீரைக்கூட, திருச்சிக்குப் பக்கத்திலேயுள்ள புகளூர் சர்க்கரை ஆலைக்கு மிக அதிகமான தண்ணீர் எடுத்துக் கொள்வதால், தஞ்சை மாவட்டத்திற்கு வருவதில்லை. ஆகவே, தஞ்சை மாவட்டத்திற்குக் கிடைக்க வேண்டிய தண்ணீர் பாதிக்காத அளவுக்கு இந்தத் திட்டம் தீட்டப்பட்டிருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து:** தலைவர் அவர்களே, ஆம்.

**திரு. பொ. உத்திராபதி:** தலைவரவர்களே, தஞ்சை மாவட்டத்தில் காவேரி ஆற்றுப்படுகையில் இருந்து புதுக்கோட்டை நகருக்கு தண்ணீர் கொடுக்கும் திட்டம் இருப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். நான் கேட்டுக் கொள்வது, தஞ்சை மாவட்டத்தில் வேதாரண்யம், திருத்துறைப்பூண்டி போன்ற பகுதிகளில் தண்ணீர் இல்லாத நிலைமை இருக்கிறதே; இது மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு தெரியுமா? ஆகவே தஞ்சை மாவட்டத்தில் குடிநீர் இல்லாத பகுதிகளுக்கு குறிப்பாக தஞ்சைக்கு அருகில் இருக்கிற இந்தப் பகுதிகளுக்கு குடிநீர் வழங்கும் திட்டம் இருக்கிறதா?

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து:** தலைவரவர்களே, இதற்கும் அதற்கும் தொடர்பு இல்லை.



1986 மார்ச் 31]

திரு. வே இரா. ஜெயராமன்: தலைவரவர்களே, *

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து:** தலைவரவர்களே, அது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்பட வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

**திரு. வே. இரா. ஜெயராமன்:** தலைவர் அவர்களே, கோவைக்கு சிறுவாணி ஒப்பந்தம் இருப்பதைப்போல காவேரி நீருக்கும் புதிதாக கர்நாடக அரசோடு புதிய ஒப்பந்தம் ஒன்றையும் ஏற்படுத்த அரசிடம் ஆலோசனை இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து:** தலைவரவர்களே, மூலக் கேள்விக்கு இது தொடர்பு இல்லை.

## ஆலந்தூர் மற்றும் பல்லவபுரத்தில் பாதாள சாக்கடை அமைப்புத் திட்டங்கள்.

**314—(*வினா எண். 3333) திரு. ம. ஆபிரகாம்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆலந்தூர் மற்றும் பல்லவபுரம் நகராட்சி பகுதிகளில் பாதாள சாக்கடை அமைக்கும் திட்டம் முழுமையாக நிறைவேற்றப்படாததற்கான காரணம் யாது?

(ஆ) இத் திட்டத்தினை தீவிரப்படுத்த எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது?

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து:** (அ) & (ஆ) ஒரு லட்சத்திற்கும் அதிகமான மக்கட்தொகை உள்ள நகரங்களுக்கு மட்டுமே தற்போது பாதாள சாக்கடை அமைக்கப்பட்டு வருவதால், ஒரு லட்சத்திற்கும் குறைவான மக்கட்தொகை கொண்ட ஆலந்தூர் மற்றும் பல்லவபுரம் நகராட்சிகளுக்கு பாதாள சாக்கடை அமைக்கும் திட்டம் ஏதும் தற்போது இல்லை.

---

* * மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

### நீலகிரி மலை இரயில் போக்குவரத்து மேம்பாடு

**226 — (* வினா எண். 2084) : திரு. மு. இராமநாதன் : மற்றும் எஸ். இராசாராமன் :** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீலகிரி மலையில் மலைப்பாதை இரயில் போக்கு வரத்தை மேம்படுத்த மத்திய அரசை மாநில அரசு வற்புறுத்துமா ?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் யாது ?

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** (அ) மற்றும் (ஆ) சுற்றுலாப் பயணிகளின் வசதிகளுக்காகவும் மற்றும் பல்வேறு தொழிற்சாலைகளில் பணிபுரிவோரின் போக்குவரத்திற்காகவும், நீலகிரி மலை இரயில் பாதையை மேம்படுத்தி புதியதாக பாதை அமைக்கவும் புதிய எஞ்சின்கள் வாங்கவும் ஆவன செய்யுமாறு இரயில்வே துறையை (தென்னக இரயில்வே) இவ்வரசு கேட்டுக் கொண்டுள்ளது. இதற்கிணங்க, நீலகிரி மலை இரயில் பாதையில் டீசல் கார்களை இயக்குமாறு இரயில்வேத் துறையைச் சேர்ந்த ஆராய்ச்சிப் பிரிவை மத்திய அரசின் இரயில்வே அமைச்சகம் பணித்துள்ளதாகவும் அப் பகுதியில் டீசல் கார்களைப் பயன்படுத்துவது பயணிகள் போக்குவரத்திற்கு உகந்ததாயிருக்கும் என்றும் தென்னக இரயில்வே தலைமைப் பொறியாளர் தெரிவித்துள்ளார்.

**திரு. கே. கல்லன் :** தலைவரவர்களே, நீலகிரி இரயில் பாதை உலகிலேயே ஒரு அற்புதமான பாதை. பஸ்ஸிலே செல்லுகின்ற பயணிகள் வாந்தி எடுத்து, அவதிப்படுகிறார்கள். இப்போது நீலகிரிக்கு ஒரே ஒரு இரயில் மட்டுமே போகிறது. இப் போதுள்ள முக்கியத்துவத்தை அறிந்து உதகைக்கு உல்லாசப் பயணிகளைக் கவருகின்ற இத்திட்டத்தை துரிதமாக எலக்ட்ரிபிகேஷன் செய்ய இந்த அரசு மத்திய அரசை வற்புறுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு இருக்கிற ஆர்வத்தில் எந்த அளவுக்கும் குறையாமல் இந்த மாநில அரசுக்கும் இருக்

*1986 மார்ச் 31]*

இறது என்பதை முதலில் தெரிவித்துக் கொள்கிறேன். மாநில
அரசுக்கு 12—7—1985-ல் மத்திய அரசு ஒரு கடிதம் எழுதியிருக்
கிறது. அதிலே, புதிதாக இரயில் எஞ்சின்களை வாங்க
உத்தரவு போட்டிருக்கிறார்கள் என்ற தகவல் தெரிவிக்கப்பட்
டிருக்கிறது. மற்றபடி அந்த பாதையை புதுப்பிக்க வேண்டும்,
விரிவுபடுத்த வேண்டும் என்பது கவனத்திலே இருப்பதாகத்
தெரிகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அந்தப்
பாதையை மின்சார இரயில் பாதையாக மாற்றவேண்டுமென்று
தெரிவித்தார்கள். அதையும் மயை அரசின் கவனத்திற்கு எழுதி,
நடவடிக்கை எடுக்கச் சொல்கிறோம். ஆனால் எந்த அளவுக்கு
கிடைக்கும் என்பதில் நம்பிக்கை இல்லை.

திரு. கே. உச்சி: பேரவைத் தலைவர் அவர்களே, இந்த
இரயில் பாதையை டீசலைஸ்ட் ஆக்க வேண்டுமென்று அந்தப்
பகுதி மக்கள் நீண்டகாலமாகக் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள்.
இந்தக் கோரிக்கையை துரிதமாக நிறைவேற்ற நம்முடைய அரசு
மத்திய அரசை வற்புறுத்த வேண்டும். அதோடு, நீலகிரி
எக்ஸ்பிரஸ் என்று பெயர் இருந்தும் அங்குள்ள மக்களுக்கு மிகக்
குறைந்த அளவுக்குத்தான் சீட்டுகள்' ஒதுக்கப்படுகின்றன.
குறைந்தது 50 சதவீதமாவது நீலகிரி மக்களுக்கு ஒதுக்கப்பட
மத்திய அரசை நம்முடைய அரசு வற்புறுத்துமா என்று அறிய
விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவர்வர்களே, டீசல்
எஞ்சினாக மாற்ற வேண்டுமென்ற நம்முடைய உணர்வு அவர்
களுக்குத் தெரிவிக்கப்பட்டு, அதை அவர்கள் ஏற்றுக்கொண்
டிருக்கிறார்கள். விரைவிலே செய்து முடிப்பார்கள் என்று
எதிர்பார்க்கலாம். அதைப்போன்று, சீட்டுகள் எத்தனை
சதவீதம் இப்போது ஒதுக்குகிறார்கள் என்ற கணக்கு தற்போது
என்னிடம் இல்லை. ஆனால் நீலகிரி மக்களுக்கு மட்டும்தான்
அந்த இரயில் ஓடுகிறது என்று சொல்ல முடியாது. இப்போது
எவ்வளவு பேர்களுக்கு ஒதுக்கப்படுகிறது, எவ்வளவு தேவைப்
படுகிறது என்பதைப் பார்த்து அந்த எண்ணிக்கைக்கு ஏற்ப
சீட்டுகளை ஒதுக்க வேண்டுமென்று நாம் கேட்கலாம்.

**திரு. வி. தங்கவேலு :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய வால்பாறைத் தொகுதியிலும் கிட்டத்தட்ட 40 ஹேர்பின் பெண்ட்ஸ் இருக்கின்றன. பயணிகளை சேரன் போக்குவரத்துக் கழகம் ஏற்றிச்செல்லுகின்றபோது அங்கே பஸ்ஸில் உட்கார்ந்து பயணம் செய்ய முடியாத வகையில் இரண்டு பக்கமும் பெண்கள் அதாவது தாய்க்குலத்தினர் வாந்தி எடுத்து பஸ்ஸையே அசிங்கப்படுத்திவிடக்கூடிய நிலைமை இருக்கிறது. அப்படிப்பட்ட சூழ்நிலையில் இன்றைக்கு நிறைய பயணிகள் வால்பாறைக்கு சுற்றுலாவாக வந்த வண்ணம் இருக்கிறார்கள். எனவே அந்த வால்பாறைப் பகுதியில் . . . .

(முற்பகல் 9-20)

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மூலக் கேள்வி நீலகிரியைப் பற்றியது. எனவே வால்பாறையைப் பற்றிக் கேட்டால் பதில் கிடைக்காது.

## விருதுநகரில் இரயில்வே மேம்பாலம்

**227 — (* வினா எண். 3798-ஏ) : திரு. ஏ. எஸ். ஏ. ஆறுமுகம் :** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விருதுநகர் இரயில்வே லெவல் கிராஸிங்கில் மேம்பாலம் கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், வேலை எப்பொழுது துவங்கும்?

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** (அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

**திரு. என். எஸ். வி. சித்தன் :** பேரவைத் தலைவர் அவர்களே, வளர்ந்து வருகின்ற வணிக நகரான விருதுநகரைப் பொறுத்த வரையில் இரண்டு இடங்களில் இரயில் பாதை செல்கிறது. எனவே இந்த இரண்டு இடங்களில் இல்லாவிட்டாலும் கூட ஒரு இடத்தில் கட்ட வேண்டியது மிகவும் அவசியமாகும். அதாவது விருதுநகருக்குத் தெற்கே இரண்டு வழித்தடங்கள், ஒன்று தூத்துக்குடிக்கும், மற்றொன்று திருநெல்வேலிக்கும் செல்கின்ற



வழித்தடங்கள் இருப்பதால் ஏற்கெனவே போக்குவரத்து நெரிசல் அதிகமாக உள்ள சூழ்நிலையில் அந்த இரயில் பாதைகள் வேறு அடிக்கடி மூடப்பட்டுவிடுகின்ற காரணத்தால் பெருத்த சிரமம் ஏற்படுகிறது. எனவே இதற்கு முன்னுரிமை கொடுத்து எடுத்துக் கொள்ளப்படுமா? அப்படி என்றால் எப்போது எடுத்துக் கொள்ளப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** பேரவைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு மேம்பாலம் பற்றியும் பேசுகிறபோது அந்தந்தப் பகுதியைச் சேர்ந்த உறுப்பினர்கள் அதன் முக்கியத்துவம் பற்றித் தெரிந்திருக்கிற காரணத்தால் அதை வலியுறுத்து கிறார்கள். எனவே எப்படியாவது அவற்றை நிறைவேற்ற வேண்டும் என்ற வகையில் ஆண்டுக்கு 14, 15 இடங்களில் அவ்வாறு அமைக்க வேண்டும் என்று நாம் பரிந்துரை செய் கிறோம். அந்தந்த இடங்களைப் பொறுத்த வரையில் முன்னுரிமை கொடுத்து எடுத்துக் கொள்ள வேண்டுமென்ற உணர்வு ஒவ்வொருவருக்கும் இருப்பதால் அவற்றைப்பற்றி யாராவது எடுத்துத் தெரிவித்துக் கொண்டுதான் இருக்கி றார்கள். ஆனால் எங்கே அதிகமான எண்ணிக்கையில் அந்தக் கடவுகளைக் கடந்து இரயில் போகின்ற சூழ்நிலை இருக் கிறதோ அந்த எண்ணிக்கைக்கேற்ப நாம் படிப்படியாக அவற்றை எடுத்துச் செயலாக்குவோம். (குறுக்கிடு) சில மாவட்டத் தலைநகரங்களைப் பொறுத்தவரையில் இரயில் கூட இல்லை. எனவே எங்கெங்கே அதிகமான எண்ணிக்கையில் அவற்றை இரயில் தாண்டிச் செல்கிறதோ அந்த எண்ணிக்கைக் கேற்ப எடுத்துச் செய்யவேண்டும் என்று நாம் சொல்லியிருக் கிறோம். இப்போது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லி யிருக்கிற அந்த முக்கியத்துவத்தை உணர்ந்து நிலைமைக்கேற்ப நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. இரா. தாமரைக்கனி :** பேரவைத் தலைவர் அவர்களே, விருதுநகர் காமராஜ் மாவட்டத்தின் தலைநகரமாக இருக்கிறது. அங்கே இரயில் பாதையை கிராஸ் பண்ணித்தான் பல இடங் களுக்கு வரவேண்டியிருக்கின்றது. அதாவது நியூமுத்து டாக்கீஸ் பக்கத்தில் இருக்கின்ற இரயில் பாதையைக் கடந்துதான் டி.எம்.ஓ. ஆபீஸ் போன்ற முக்கியமான ஆபீஸ்களுக்குச் செல்ல

வேண்டி இருக்கிறது. அங்கே மாவட்ட ஆபீஸ் மற்றும் அலுவலகங்கள் எல்லாம் இருக்கின்றன. அவற்றுக்கு வர வேண்டும் என்றால் இரயில் பாதையைக் கடந்துதான் வரவேண்டி இருக்கிறது. எனவே இரயில் போகும்போது கிராஸ் பண்ணி வர முடியவில்லை. மணிக்கணக்கில் காத்துக் கிடக்கவேண்டிய நிலைமை இருக்கிறது. அங்கே அந்த மேம்பாலத்தைக் கட்ட வேண்டும் என்றாலும் இடவசதி இல்லாமல் இருக்கிறது. அந்த அளவுக்கு அது மிகவும் குறுகலான இடமாக இருப்பதால் அடிக்கடி விபத்துக்கள் ஏற்படுகின்றன. எனவே அந்த இடத்தை எல்லாம் ஆர்ஜிதம் செய்து அங்கே பெரிய பாலமாகக் கட்ட உரிய நடவடிக்கையை அரசு எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி**: பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே சொன்னபடி நிதிநிலைமைக்கேற்ப நாம் நடவடிக்கை எடுக்க வேண்டி இருக்கும். அந்த அடிப்படையில் எவ்வளவு இடம் தேவை இருக்கிறதோ அவ்வளவு இடத்தை அங்கே ஆர்ஜிதம் செய்துதான் செய்ய வேண்டி இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. ஆர். ரெங்கசாமி**: பேரவைத் தலைவர் அவர்களே, விருது நகர் காமராஜ் மாவட்டத்தின் தலைநகராகும். அங்கே இரயில்வே கிராஸிங் இருக்கிறது. இரண்டு இடங்களில் அவ்வாறு இருக்கிறது. அங்கே இரயில் போகும்போது கதவுகளை மூடிவிடுகிற காரணத்தால் அதிக நேரம் காத்து இருக்க வேண்டி இருக்கிறது. இதனால் மக்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். அங்கேயுள்ள எல்லா ஹெட்குவார்ட்டர்ஸ் அலுவலகங்களுக்குப் போகவும் மிகவும் கஷ்டமாக இருக்கிறது. ஆகவே முன்னுரிமை கொடுத்து அங்கே மேம்பாலம் அமைக்கின்ற வகையில் அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி**: பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே நான் சொன்னபடிதான் — அதாவது முன்னுரிமை கொடுக்க வேண்டும் என்று ஒவ்வொன்றையும் நாம் சொல்கிறபோது மத்திய அரசு ஒரு சிலவற்றுக்குத்தான் அனுமதி கொடுப்பதால், எது முக்கியமாக இருக்கிறதோ, எது பிரச்சினைக்



குரியதாக இருக்கிறதோ அந்த இடத்தை எடுத்துக் கொள்கிறோம். அடுத்து அவர்கள் கொடுப்பதில் இது முன்னுரிமை கொடுக்கப்பட்டு வருமேயானால் அது சேர்த்துக்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. செ. ஆறுமுகம்**: பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை — மதுரை நெடுஞ்சாலையில் அதாவது செங்கற் பட்டிலே உள்ள லெவல் கிராஸிங்கில் . . . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: இது விருதுநகர் லெவல் கிராஸிங் பற்றிய கேள்வி. எனவே வேறு கேள்விகள் கேட்டால் பதில் இருக்காது.

**திரு. சா. ஜெயச்சந்திரன்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இரயில் மேம்பாலம் கட்டுவதற்கு மத்திய அரசின் அனுமதி தேவை என்று கூறினார்கள். சில சந்தர்ப்பங்களில் மத்திய அரசின் அனுமதியைப் பெறுவதற்கு இரண்டு வருடங்களுக்கு மேலாகக்கூட ஆகிவிடுகிறது என்கிறார்கள். எனவே முக்கியமான இடங்களில் மத்திய அரசின் அனுமதி இல்லாமலே கட்டுவதற்குரிய வகையில் இந்த அரசு தனியாக சட்டம் இயற்றுமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: மத்திய அரசை எதிர்த்து ஒரு சட்டம் கொண்டுவர முடியுமா ?

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசின் அனுமதி இல்லாமல் கட்டுவது சரியாக இருக்காது. அப்படிக் கட்டுவது நாம் முறைக்கு மாறாக தவறாக அரசாங்கமே நியதியை மீறக் கூடியதாகும். மத்திய அரசின் அனுமதியை எதிர் பார்ப்பது மத்திய அரசு அதற்கு நிதி உதவி செய்ய வேண்டும் என்ற உணர்வில் தான் எதிர்பார்க்கிறோம். மத்திய அரசின் அனுமதியும் நிதி உதவியும் இரண்டும் இருந்தால்தான் நம்மால் செய்ய முடியும்.

**திரு. ஈ. வே. கி. ச. இளங்கோவன்**: பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ரெயில்வே லெவல் கிராஸிங்கில் மேம்பாலங்கள் கட்டும்போது அதற்கு ஆகக்கூடிய செலவை மத்திய அரசு ஏற்றுக்கொள்கிறதா? அல்லது மாநில அரசு ஏற்றுக் கொள்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** பேரவைத் தலைவர் அவர்களே, ஆகிற செலவில் 50 சதவிகிதத்தைத்தான் மத்திய அரசு ஏற்றுக்கொள்கிறது. மீதம் இருக்கிற 50 சதவிகிதத்தை மாநில அரசு ஏற்றுக் கொள்கிறது. நாம் கேட்பதெல்லாம் இப்போது 14 பாதைகளுக்கு பரிந்துரை செய்திருக்கிறோம். இந்த 14 இடங்களுக்கும் நாமே பாதிப்பணத்தை உடனடியாகக் கூட ஏற்றுக் கொள்ளத் தயாராயிருக்கிறோம். முழுமைக்கும் அனுமதி கொடுத்தால் நாம் அந்த வேலையைத் துவக்கத் தயாராயிருக்கிறோம். மத்திய அரசு 50 சதவிகிதத்தைத்தான் ஏற்றுக் கொள்கிறது. நகராட்சிகளின் எல்லைக்குள் வருமானால் நகராட்சி 25 சத விகிதம் மீதம் உள்ள 25 சதவிகிதத்தை மாநில அரசும் மேற்கொள்கிறது. அப்படியல்லாத இடங்களில் வசதி இருக்காது என்ற காரணத்தால் பலயிடங்களில் நகராட்சிகள் தவிர மற்ற இடங்களில் வசதி இருக்காது என்ற காரணத்தினால் அரசாங்கமே மீதமுள்ள 50 சத விகிதத்தையும் ஏற்றுக்கொள்கிறது. உறுப்பினர் அவர்கள் ஆர்வத்தோடு இதைக் கேட்டிருக்கிற காரணத்தினால் ஏதோ ஒரு நல்ல காரியத்தை அவர்கள் செய்வதற்கு முயற்சி எடுக்க வேண்டும் என்ற உணர்வோடு கேட்டிருக்கிறார்கள் எனக் கருதுகிறேன். 50 சதவிகிதத்தைத்தான் அவர்கள் கொடுக்கிறார்கள். மத்திய அரசு அதை உடனடியாகக் கொடுத்தால், எல்லாவற்றிற்கும் கொடுத்தால் என்ன என்று மத்திய அரசுக்கு அவர்கள் எல்லாம் ஒரு கடிதம் எழுதினால் நல்லதாயிருக்கும் என்று கருதுகிறேன்.

### சென்னை—பெங்களூர் சாலையில் கிருட்டிணகிரி அருகே புறவழிச்சாலை.

**228 — (*வினா எண். 3958) திரு. க. இரா. சின்னராசு :** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தர்மபுரி மாவட்டம் கிருட்டிணகிரி நகருக்கு வடபுறம், சென்னை—பெங்களூர் தேசிய நெடுஞ்சாலையில் புறவழிச்சாலை ஏற்படுத்தும் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது அமைக்கப்படும்?

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** (அ) கிருட்டிணகிரி நகருக்கு வடபுறம் புறவழிச்சாலை ஏற்படுத்தும் திட்டம் ஏதும் இல்லை.

(ஆ) வினாவுக்கு இடமில்லை.





(ஆ) வினாவுக்கு இடமில்லை.

**டாக்டர் கே. சமரசம் :** பேரவைத் தலைவர் அவர்களே, தர்மபுரி மாவட்டத்தில் இந்த கிருஷ்ணகிரி நகர் என்பது பாண்டிச்சேரி, தமிழ்நாடு, ஆந்திரா, கர்நாடகா ஆகிய எல்லா மாநிலங்களுக்கும் அங்கு வழி பிரிந்து செல்லக்கூடிய ஒரு சிறந்த கூட்டுப்பாதையாக கிருஷ்ணகிரி வடபுறத்தில் ஒரு புறவழிச் சாலை அமைத்தால் மிகுந்த குறைவான தூரத்தில் எல்லா விதமான போக்குவரத்துக்களும் அங்கு சீர்பட வழி இருக்கும். ஆகவே இதை அமைத்துக் கொடுப்பது பல்வேறு வகைகளில் இலாபகரமாகயிருக்கும் என்ற காரணத்தினால் அரசாங்கம் அதை மறுபரிசீலனை செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** பேரவைத் தலைவர் அவர்களே, இந்த முக்கியத்துவத்தையெல்லாம் உணர்ந்துதான் இரண்டு புறவழிச்சாலைகளை அந்தப் பக்கம் ஏற்பாடு செய்திருக்கிறோம், அதாவது கிருஷ்ணகிரியில். அந்த நிலைமைகளை உணர்ந்து தான் தற்போது இல்லை என்று சொல்லியிருக்கிறேனே தவிர பின்னால் நிச்சயமாக தேவையான நேரத்தில் அந்தத் தேவை இருக்குமானால் அதன்மீது நடவடிக்கை எடுக்கப்படும்.

**திரு. டி. எம். வெங்கடாசலம் :** பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது கிருஷ்ணகிரி புறவழிச்சாலையைப் போடுவதற்கு ஏற்ற வகையில் முதலில் அங்கே ரோடு இருக்கிறது. அந்த ரோடை விரிவுபடுத்தியாவது அந்தப் பகுதியில் போக்குவரத்து நெரிசலைத் தவிர்க்க அந்தப் பாதையை நல்ல முறையில் சீராக்கித் தருவார்களா?

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாதைகள் எங்கெங்கே சீர்கெட்டிருக்கிறதோ, சீர்கெட்டிருப்பதை சீர் செய்வதை நம்முடைய கடமையாக ஏற்றுக்கொள்ள வேண்டும். நிதிநிலைமைக்கேற்ப நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

[1986 மார்ச் 31

## கோவையில் வீட்டுவசதி வாரியப் பணிகள்

315 — (*வினா எண் 4161) **திரு. கு. ரமணி:** மாண்புமிகு வீட்டு வசதித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவையில் ரூபாய் 5 கோடி செலவில் 2,600 வீடுகள் கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அது குறித்த விவரம் என்ன ?

**மாண்புமிகு திரு. என். நல்லுசாமி:** (அ) இல்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

**திரு. கு. ரமணி:** பேரவைத் தலைவர் அவர்களே, கோவை மாநகரத்தை விஸ்தரிப்பு செய்து கொண்டிருக்கிறோம். அதை உணர்ந்து அரசாங்கத்தின் சார்பில் ஏராளமான, ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்கள் ஆர்ஜிதம் செய்யப்பட்டுள்ளன. அண்மையில் அங்கே ஒரே ஒரு வீட்டு அமைப்பு உருவாக்கியிருந்ததைத் தவிர மற்றவை எல்லாம் பல ஆண்டுகளுக்கு முன்னர் உருவாக்கப்பட்ட வீடுகளாகும், சாதாரண மக்களுக்கு உருவாக்கப்பட்ட வீடுகள் புதிதாக ஆர்ஜிதம் செய்யப்பட்ட இடங்களில் வீடுகள் கட்டும் திட்டம் அரசின் ஆலோசனையில் இருக்கிறதா ? ஆமெனில் எவ்வளவு செலவில் எவ்வளவு வீடுகள் கட்டப்படும் ? இது பற்றிய செய்தி பத்திரிகையில் வந்ததே, அது உண்மையா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. என். நல்லுசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, கோவை நகரைப் பொறுத்தவரையில் இந்த உப்பிலி பாளையம் பகுதியில் இப்போது 543 வீடுகள் கட்டப்பட்டு வருகிறது. எல்.ஐ.ஜி. யைச் சார்ந்த வீடுகள். வருங்காலத்தைப் பொறுத்தவரையில் கட்டப்படவுள்ள கோவைபுதூர், கோவையில் வளர்ந்து வருகிறது ஒரு பகுதியாக இருப்பதால்



1986 மார்ச் 31]

87 எம்.ஐ.ஜி. அல்லது மற்றும் எச்.ஐ.ஜி. என்று இரண்டு வகையான வீடுகள் இப்போது கட்டப்படுவதற்கு எல்லா ஏற்பாடுகளையும் செய்திருக்கிறோம்.

(முற்பகல் 9-30)

**திரு. கு. ரமணி:** தலைவர் அவர்களே, ஒரு சில ஆயிரம் வீடுகளே அரசாங்கத்தின் சார்பிலே கோவை மாநகரத்திலும், அதன் சுற்று வட்டாரத்திலும் கட்டப்பட்டுள்ளன. ஆயினும், ஆசிரியர் சமுதாயத்திற்கு என்று எந்த விதமான அமைப்பும், காலனி மாதிரி ஆசிரியர்களுக்கு வீடு கட்டும் எந்தத் திட்டமும் இது வரைக்கும் அரசு அவர்களுக்காக சிந்திக்கவில்லை. அரசு ஊழியர்களுக்கு அந்த மாதிரி என்.ஜி.ஓ. காலனி போன்றவை இருக்கின்றன. ஆகவே, ஆசிரியர்களுக்கு அப்படி ஒரு காலனி மாதிரி வீடுகள் கட்டித் தந்து, நியாயமான குறைந்த வாடகையில் கொடுப்பதற்கோ அல்லது அவர்கள் அந்த வீடுகளைச் சொந்தமாக்கிக் கொள்வதற்கான ஒரு திட்டத்தை அரசு முன்வைக்க முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. என். நல்லுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய தமிழக அரசு ஆசிரியர்களுக்கு என்று வீடு கட்டுவதற்கு ஒரு தனி வாரியமே அமைத்திருக்கிறது. எனவே ஆசிரியர்களுக்கு வீடுகள் கட்டுகின்ற திட்டங்கள் அந்த வாரியத்திடம் இருக்கின்றன.

**திரு. வி. பி. சிந்தன்:** தலைவர் அவர்களே, ஆண்டுதோறும் 'ஹட்கோ' நிறுவனத்தின் மூலமாக தொழிலாளர்களுக்கும் மற்றும் வருமானம் கம்மியாக வாங்குகின்றவர்களுக்கும் வீடுகள் கட்டுவதற்கு ஒதுக்குகின்ற தொகை இந்த மாநிலத்தில் முழுமையாகப் பயன்படுத்தாமல், திருப்பித் தருகின்ற சூழ்நிலையை அமைச்சர் அவர்கள் அறிவார்களா ? கொடுக்கப்படுகின்ற உதவியைப் பயன்படுத்தி, அவர்களுக்கு வீடுகள் கட்டுகின்ற திட்டங்களை அமுல் படுத்துவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. என். நல்லுசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம் இந்திய துணைக் கண்டத்தைப் பொறுத்தவரை நம மாநிலம் ஹட்கோ நிறுவனத்திடமிருந்து அதிக நிதி உதவி பெறுவதில் இன்றையதினம் இரண்டாவது இடத்தை வகிக்கின்றது. அந்த அடிப்படையில் பெறுகின்ற போது, அங்கேயிருந்து, எவ்வளவு நிதித் தரப்படுகின்றதோ அந்த நிதியை திருப்பித் தரும் சூழ்நிலை தமிழகத்திலே இல்லை.

**திரு. மா. சின்னராசு :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை புறநகர் பகுதியில், கவுண்டன்பாளையம், தெலுங்குப் பாளையம் போன்ற கிராமங்களில் ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்கள் வீட்டு வசதி வாரியத்தினால் வீடுகள் கட்டு வதற்கு நில ஆர்ஜித நடவடிக்கை இருந்து வருகிறது. பல ஆண்டுகளாக நோட்டீஸ் கொடுக்கப்பட்ட பின்னரும், வீடு கட்டு கின்ற பணி தாமதப்படுகின்ற காரணத்தினால், சுற்றியிருக்கின்ற வீட்டு மனைகளின் விலை அளவிட முடியாத அளவுக்கு உயர்ந் திருக்கிறது. ஆகவே, அதை கருத்தில் கொண்டு, தேவையான அளவுக்கு வீட்டு வசதி வாரியம் வீடுகள் கட்டுகின்ற நிலத்தை வைத்துக் கொண்டு, மீதியை வீட்டு மனை இல்லாதவர்களுக்கு பிளாட்டாகப் பிரித்து, நியாயமான விலையில் கொடுப்பதற்கு வீட்டு வசதி வாரியம் முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. என். நல்லுசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதில் இரண்டு கருத்துக்கள் இருக்கின்றன. தமிழக வீட்டு வசதி வாரியத்தைப் பொறுத்தவரையில், ஒவ்வொரு நகரத்திலும் 100 அல்லது 200 ஏக்கர் அளவிற்கு திட்டம் இருக்கிறதென்றால், சரியாக 200 ஏக்கர் நிலம் என்று எடுத்தால், நீதிமன்றத்திற்குச் சென்று தடை வாங்குவதினால், அந்தத் திட்டம் பாதிக்கப் படுகிறது. ஆகவே, 1000, 1,500 ஏக்கர் அளவிற்கு நிலம் எடுத்தால்தான், அந்த இடத்தில் அரசுக்கு கிடைப்பது 300, 400 ஏக்கர் நிலம் கிடைக்கும். இரண்டாவதாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டுக் கொண்டது, அந்த மனைகளை பிளாட்டாக ஆக்கி விற்பனையில் ஈடுபட வேண்டுமென்பது. அது ஏற்கனவே அரசின் பரிசீலனையில் இருக்கிறது. அது நல்ல கருத்து. அரசு அதை ஏற்றுக் கொண்டிருக்கிறது.



**காட்டுமன்னார்கோயிலில் வீட்டு வசதி வாரியப் பணிகள்.**

316—(*வினா எண் 4851) **திரு. சா. ஜெயச்சந்திரன் :** மாண்புமிகு வீட்டு வசதித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்னாற்காடு மாவட்டம் காட்டுமன்னார்கோயிலில் தமிழ் நாடு வீட்டு வசதி வாரியத்தின் மூலமாக வீடு கட்டும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

**மாண்புமிகு திரு. என். நல்லுசாமி :** (அ) இல்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

**திரு. சா. ஜெயச்சந்திரன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காட்டுமன்னார்கோயில் பகுதி மிகவும் பின்தங்கிய பகுதி, அந்தப் பகுதியில் சுமார் 3 லட்சம் பேர்கள் வசித்து வருகிறார்கள். காட்டுமன்னார்கோயில் தாலுகாவாகி சுமார் 14 ஆண்டுகள் ஆகின்றன. அங்கே பல அரசு அலுவலகங்கள் செயல்படுகின்றன. ஆகவே, அங்கே வருகின்ற நிதி ஆண்டிலாவது நமது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வீட்டு வசதி வாரியத்தின் மூலமாக வீடுகள் கட்டி விநியோகிக்க முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன் ?

**மாண்புமிகு திரு. என். நல்லுசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாரியத்தைப் பொறுத்தவரை எந்தப் பகுதியிலே இருந்து அதிகமான கோரிக்கைகள் வருகின்றதோ, அதை ஆராய்கின்றது. அப்படி ஆராய்ந்து தெரிந்து கொள்வதற்காக, எந்தெந்தப் பகுதிகளுக்கு இத்தகைய வசதிகள் தேவை என்று வேண்டுகோள் விடுக்கிறோம். அந்த அடிப்படையிலே பார்க்கின்றபோது, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னபடி காட்டுமன்னார்கோயிலிலிருந்து அதிகப் படியான விண்ணப்பங்கள், வீடுகள் கட்டித் தர வேண்டுமென்ற மனுக்கள் அரசுக்கு வரவேண்டும். அப்படி மனுக்கள் வந்தால், அவற்றை ஆராய்ந்து, அதன் அடிப்படையில் வீடுகள் கட்டுவதற்கான திட்டங்களைத் தொடங்குவது பற்றி பரிசீலனை செய்யலாம்.

**திரு. துரை அன்பரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தென்னாற்காடு மாவட்டத்தில் தமிழ் நாடு வீட்டு வசதி வாரியத்தின் மூலமாக பயன் பெற்ற நகரங்கள் எத்தனை? அதற்காக ஒதுக்கப்பட்ட தொகை எவ்வளவு? எதிர்காலத்தில் வீட்டு வசதி வாரியத்தின் மூலமாகப் பயன்பெறப் போகும் நகரங்கள் எவை என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களின் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. என். நல்லுசாமி:** மாண்புமிகு தலைவர் அவர்களே, சின்னக் கேள்வி, ஆனால் பெரிய பதிலைத் தர வேண்டிய பொறுப்பில் இருக்கிறேன். கிட்டத்தட்ட 13 நகரங்கள்—சிதம்பரம், கடலூர், விழுப்புரம், விருத்தாசலம் போன்ற நகரங்களில் எல்லாம் ஏற்கெனவே வீட்டு வசதி வாரியத்தின் மூலமாக கட்டப்பட்டிருக்கின்றன. சேலம் பகுதியைப் பொறுத்த வரையில் குடிசை மாற்று வாரியத்தின் மூலமாக—அந்த வகையில்—117 வீடுகள் கட்டப்பட்டிருக்கின்றன. மற்றப் பகுதிகளிலும் வீட்டு வசதி வாரியத்தின் மூலமாக கட்டப்படும். பொருளாதாரத்தில் பின்தங்கிய வகுப்பைச் சேர்ந்தவர்கள்—எக்கனாமிக்கலி பேக்வார்டு—என்ற வகையில் 146 வீடுகளும், எல்.ஐ.ஜி.—குறைந்த வருவாய் உள்ளவர்கள்—என்ற அடிப் படையில் 899 வீடுகளும், எம்.ஐ.ஜி. மற்றும் எச்.ஐ.ஜி.—என்ற வகையில் 59 வீடுகளும், அரசு அலுவலர்களுக்கு 674 வீடுகளும் ஏற்கெனவே கட்டப்பட்டிருக்கின்றன. தற்போது கிட்டத்தட்ட 59 குடியிருப்புகள் சிதம்பரம், கடலூர் பகுதியிலே 59 லட்சம் ரூபாயில் கட்டப்படவிருக்கின்றன. வருங்காலத்தைப் பொறுத்த வரையில் சிதம்பரம், காட்டுமன்னார்கோயில், கடலூர், விருத்தாசலம் பகுதிகளில் வீட்டு வசதி வாரியத்தின் மூலமாக வீடுகள் கட்ட திட்டங்கள் இருக்கின்றன.

**திரு. பரிதி இளம்வழுதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியில் பொதுவாக குடிசை மாற்று வாரியத்தின் மூலமாக குடியிருப்புகள் கட்டுகின்ற எண்ணம் அரசின் ஆய்வில் இருக்கிறதா? ஆம் எனில் எந்தெந்தப் பகுதியில் என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. என். நல்லுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர்களுடைய தொகுதி, இவர்களுடைய தொகுதி என்று தனியாகக் குறிப்பிட்டு கணக்கு எதுவும் இல்லை. சென்னையைப் பொறுத்தவரையில் குடிசை மாற்று வாரியத்தின் மூலமாக பல்வேறு இடங்களில் கட்டப் பட்டிருக்கின்றன. அது பற்றிய விவரங்கள் தற்போது இல்லை.



**திரு. ஏ. தங்கராசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லுகிறபோது தென்னாற்காடு மாவட்டத்தில் சில இடங்களில் தமிழ் நாடு வீட்டு வசதி வாரியத்தின் மூலமாக வீடுகள் கட்டப்பட்டிருப்பதைப் பற்றிச் சொன்னார்கள். வருகிற ஆண்டில் சில இடங்களில் கட்ட ஆரம்பிக்கப் போவதாகவும் சொல்லியிருக்கிறார்கள். குறிப்பாக நெய்வேலி தொழிலாளர்கள் பணிபுரிகின்ற பகுதியில் இருந்து, தமிழ் நாடு வீட்டு வசதி வாரியத்தின் மூலமாக வீடுகள் கட்டித் தரவேண்டும் என்ற கோரிக்கை அரசுக்கு வந்திருக்கிறதா? அந்த தொழிலாளர்களுக்கு வீட்டு வசதி வாரியத்தின் மூலமாக எம்.ஐ.ஜி, எச்.ஐ.ஜி. போன்ற பிரிவுகளில் கட்டித் தந்தால், அந்த நிர்வாகத்திடமிருந்தே அதற்கான பணம் பெற வாய்ப்பு இருக்கிறது. ஆகவே அந்தக் கருத்தை வைத்து, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வருகின்ற ஆண்டில் தமிழ் நாடு வீட்டு வசதி வாரியத்தின் மூலமாக நெய்வேலி பகுதி தொழிலாளர்களுக்கு, அந்த வாய்ப்பினை ஏற்படுத்தித் தருவார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. என். நல்லுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோரிக்கைகளின் எண்ணிக்கையைப் பொறுத்துத்தான் அரசு இதில் முடிவு எடுக்கும்.

**திரு. கே. ஆர். கணபதி:** மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு வீட்டு வசதித் துறை அமைச்சர் அவர்கள் பதில் அளிக்கின்ற நேரத்தில் சிதம்பரம் பகுதி வீடு கட்டும் திட்டத்தில் எடுக்கப்படயிருப்பதாகச் சொன்னார்கள். எத்தனை லட்ச ரூபாய் திட்டத்தில் அது எடுக்கப்படும் என்பதையும், மீண்டும் குடிசை மாற்று வாரியத்தின் மூலமாக சிதம்பரம் பகுதியில் வீடுகள் கட்டும் திட்டம் உள்ளதா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

[1986 மார்ச் 31

**மாண்புமிகு திரு. என். நல்லுசாமி:** அரசு குடியிருப்பு வீடுகளாக 204 வீடுகளை சிதம்பரம் பகுதியில் கட்டுவதற்கு அரசு முடிவு எடுத்திருக்கிறது. குடிசை மாற்று வாரியத்தின் மூலமாக வீடு கட்டும் திட்டம் தற்போது சிதம்பரம் பகுதிக்கு இல்லை.

### ஆதி திராவிடர் இறுதிச் சடங்கிற்கு நிதி உதவி.

**317 — (* வினா எண். 1620) திரு. சைதை. சா. துரைசாமி:** மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆதி திராவிடர்களுக்கு இறுதிச் சடங்கிற்கான நிதி உதவி செய்வதில் காலதாமதம் ஆவது ஏன்?

(ஆ) விரைவில் நிதியுதவி கிடைத்திட அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. எ. அருணாசலம்:** (அ) ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு இறுதிச் சடங்கிற்காக நிதியுதவி வழங்குவதில் காலதாமதம் எதும் செய்யப்படுவதில்லை

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

**திரு. சைதை சா. துரைசாமி:** மாண்புமிகு தலைவர் அவர்களே, அரிசனங்கள், ஆதித் திராவிடர், மற்றும் பழங்குடி மக்கள் இறந்தால் அவர்களின் ஈமச் சடங்குகளுக்காக 50 ரூபாய் உதவித் தொகை வழங்கப்படுகிறது. அதில் காலதாமதம் ஆகிறது. ஆனால் அமைச்சர் அவர்கள் பதிலில் அதுபோன்று காலதாமதம் இல்லை என்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால் அதிகாரிகள் அவருக்கு தந்திருக்கும் தகவல்கள் உண்மைக்கு மாறான தகவல்கள் என்று கருதுகிறேன். அங்கே அதற்கான 3 மாத காலம் 4 மாத காலம் என்றுகூட காலதாமதம் ஆகிறது. அவர்கள் அப்படி வேண்டுமென்றே செய்கிறார்களா, அந்த நிதி உதவி அம்மக்களுக்கு என்ன அடிப்படையில் வழங்கப்படுகிறது. இப்படி காலதாமதம் ஆவதற்கான காரணங்களை ஆராய்ந்து இனிமேலாவது அப்படி ஆகாமல் நடவடிக்கை எடுப்பார்களா?



1986 மார்ச் 31]

**மாண்புமிகு திரு. எ. அருணாசலம்:** தலைவர் அவர்களே, ஆதி திராவிட பழங்குடி மக்கள் இறந்து விட்டால் அவர்கள் ஈமச் சடங்கிற்காக 50 ரூபாய் கொடுக்கிற திட்டத்தை 1978 ஆம் ஆண்டிலிருந்து மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்கள் நிறைவேற்றிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் இறந்து 30 நாட்களுக்குள் அந்த உதவித் தொகை போய் சேர வேண்டும். அதற்கு அவர்கள் விண்ணப்பம் செய்திருக்க வேண்டும். இப்படி அவர்கள் கேட்டு எங்கே காலதாமதம் ஏற்பட்டிருக்கிறது என்று சொன்னால் அதன் மேலே நடவடிக்கை எடுக்கப்படும். கீழ்க்கண்ட அதிகாரிகள் இதிலே செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஊரக வளர்ச்சி இயக்குநர், நகராட்சி இயக்குநர், பேரூராட்சி இயக்குநர், மாநகராட்சி ஆணையர்கள் ஆகியவர்கள் மூலமாக அது கொடுக்கப்படுகிறது. இந்த அதிகாரிகள் அந்த உதவித் தொகையைக் கொடுக்க காலதாமதம் செய்கிறார்கள் என்றால், அது குறித்து குறிப்பிட்டுச் சொல்வார்களானால் அந்த அதிகாரிகள் மீது நடவடிக்கையெடுக்க வசதியாக இருக்கும்

(முற்பகல் 9-40)

**திரு. சைதை சா. துரைசாமி:** தலைவர் அவர்களே, சென்னை மாநகராட்சியில் வட்டங்கள் தோறும் இருக்கிற மாநகராட்சி பொறியியல் என்ஜினியர்கள் வழங்குகிறார்கள். கிராமப்புறங்களில் கோட்டப் பொறியாளர்கள் வழங்குகிறார்கள் என்று சொல்கிறார்கள். இப்போது பஞ்சாயத்து, ஊராட்சி ஒன்றியத் தலைவர்கள் எல்லாம் வந்து விட்டார்கள். கிராமப்புறங்களில் பஞ்சாயத்து தலைவர்களே வழங்குகிற முறையிலும், மாநகராட்சியில் அந்த வட்டத்தின் பொறியாளர் வழங்குகிற முறையிலும் செய்யலாம். அவர்களிடத்தில் தொகையில்லையென்று சொல்கிறார்கள். ஆகவே முன்கூட்டியே அந்தத் தொகையை ஒதுக்கி. ஒவ்வொரு வட்டத்திற்கும் இவ்வளவு தொகை என்று செய்துவிட்டால் அவர்கள் உடனடியாக தொகையை வழங்கி காரியங்களைச் செய்வதற்கு உதவியாக இருக்கும். அடுத்து இப்போது வழங்கப்படுகிற 50 ரூபாய் என்பது போதாது. ஆகவே, இந்த 50 ரூபாய் என்பதை அதிகரித்து 100 ரூபாயாகவோ, 200 ரூபாயாகவோ, உயர்த்துகிற செயல்குறிப்பு ஏதுவும் அரசின் பரிசீலனையில் இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

[1986 மார்ச் 31

**மாண்புமிகு திரு. எ. அருணாசலம்:** தலைவர் அவர்களே, காலதாமதம் ஏற்படுகிற சூழ்நிலையில் அதன் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவிக்க கடமைப் பட்டிருக்கிறேன். அதைப்போல இந்த 50 ரூபாய் என்பது போதாது என்கிற வகையில் இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்கள் ஒன்றைத் தெரியப்படுத்தி இருக்கிறார்கள். ஆகவே வருகிற நிதி ஆண்டில் இந்த 50 ரூபாயினை 100 ரூபாயாக உயர்த்துவதற்கு செயற்குறிப்பு அரசின் தீவிர பரிசீலனையில் உள்ளது.

**திருமதி டி. யசோதா:** தலைவர் அவர்களே, தற்போது அரிசன மக்கள் இறந்துவிட்டால் அவர்களின் ஈமச் சடங்கிற்காக 50 ரூபாய் கொடுக்கப்படுகிறது. ஆனால் இடுகாட்டிலே 150 ரூபாய் கேட்கிறார்கள். கார்ப்பரேஷனில் வரவு வைத்து 15 ரூபாய்க்கு ரசீது கொடுக்கிறார்கள். ஆனால் 150 ரூபாய் கேட்கிறார்கள். இதனைத் தடுப்பதற்கு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா? அல்லது அதற்கேற்றாற்போல தொகையை அதிகரிப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எ. அருணாசலம்:** தலைவர் அவர்களே, இதனை 50 ரூபாயிலிருந்து 100 ரூபாயாக உயர்த்துகிற செயல் குறிப்பு அரசின் பரிசீலனையில் இருக்கிறது. இந்த அரசைப் பொறுத்தவரையில் 1978–79 ஆம் ஆண்டிலிருந்து 1985 ஆம் ஆண்டு வரையில் கிட்டத்தட்ட இரண்டு கோடியே 41 லட்சத்து 32 ஆயிரம் ரூபாய் செலவழிக்கப்பட்டுள்ளது. இதிலே உதவி பெற்றவர்கள் நான்கு லட்சத்து 82 ஆயிரத்து 640 பேர்கள் ஆகும். நிதிநிலைமைகளுக்கு ஏற்ப இந்த திட்டத்தை மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் செயல்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். அந்தத் தொகை போதவில்லையென்றால் 100 ரூபாயாக உயர்த்தியதற்குப் பிறகு மேற்கொண்டு உயர்த்துவதைக் குறித்து பரிசீலித்து நடவடிக்கை எடுக்கலாம்.

**திரு. கே. பாலாஜி:** தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் வைகை துரைசாமி அவர்கள் கூறியது உண்மையாகும். கிராமப் பகுதிகளில் அந்தப் பணத்தை வழங்குகிற அதிகாரிகள் அவர்களுடைய தேவையை பூர்த்தி செய்யவில்லையென்றால் இந்த 50 ரூபாய் வழங்குவதில் காலதாமதம் செய்கிறார்கள் என்பது



1986 மார்ச் 31]

உண்மை. அப்படிப்பட்ட அதிகாரிகளைக் கண்டுபிடித்து— இதற்காக 100 ரூபாய் வழங்க இருக்கிறோம் என்று அமைச்சர் அவர்கள் தெரிவித்ததற்கு நன்றி. அந்த அதிகாரிகள் மீது உடனடியாக நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எ. அருணாசலம்:** தலைவர் அவர்களே, எந்த அதிகாரிகள் என்று குறிப்பிட்டு எழுதிக் கொடுப்பார்களானால் அவர்கள் மீது நடவடிக்கையெடுக்கத் தயாராக இருக்கிறோம்.

**திரு. கு. ரமணி:** தலைவரவர்களே, தாழ்த்தப்பட்ட மக்களில் ஒருவர் இறந்துபோனால் 50 ரூபாய் ஈமச் சடங்கிற்காக கொடுக்கப்படுகிறது. அதில் அந்தக் காரியங்களை நடத்துவது என்பது சாத்தியமில்லை. அந்தத் தொகையை உயர்த்த வேண்டும். நான் என்ன சொல்ல விரும்புகிறேன் என்றால் அமைச்சர் அவர்கள் முதலில் சொன்ன தகவல் சரியானதல்ல. கோவை மாநகராட்சியில் ஒரு ஆண்டு, 1½ ஆண்டு, 2 ஆண்டுகள் வரையில் கூட அந்தப் பணம் கிடைக்கவில்லை. பல விண்ணப்பங்கள் அனுப்பி, நேரடியாக கமிஷனரிடம் நானே சொல்லி, கேட்டும் அவர்களுக்கு அந்தப் பணம் கிடைக்கவில்லை. அதற்கு நான் ஆதாரங்களைத் தரத் தயாராக இருக்கிறேன். பணம் கொடுப்பதற்கு, அந்த வருஷம் சாங்க்சன் ஆகி நிதி இலாக்காவிலேயிருந்து முனிசிபாலிட்டிக்கு நிதி வரவில்லை என்று சொல்கிறார்கள். அப்படியானால் நிதி இலாக்கா மீது நடவடிக்கை எடுக்க வேண்டும். கமிஷனர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும். இதற்கு ஆதாரங்களைத் தர நான் தயாராக இருக்கிறேன். எனவே அமைச்சர் அவர்கள், இதைப் பற்றி பரிசீலனை செய்து, அவர்கள் இறந்த உடனே அவர்களுக்கு அந்தக் காசு கிடைப்பதற்கு ஏற்பாடு செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எ. அருணாசலம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொன்னதைப் போல இப்படிப்பட்ட தவறுகள் நடந்திருந்தால், அந்த அதிகாரிகள் மீது கட்டாயமாக நடவடிக்கை எடுக்கிறேன். இன்னொன்று இப்படிப் பட்ட பிரச்சனைகளைப் பற்றி அவர்கள் [illegible]

அதன் மேல் நடவடிக்கை எடுப்பதற்குத் தயாராக இருக்கிறோம். ஏதாவது ஒரு சில இடங்களில் இப்படிப்பட்ட தவறுகள் நடந்திருந்தால், அதைப் பற்றி தகவல் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். ஆதி திராவிடர்கள் இறந்தவுடன் அந்த 50 ரூபாயை இறந்தவர் குடும்பத்திற்கு 30 நாட்களுக்குள் கொடுத்துவிட வேண்டும். ஆனால் அப்படிக் கொடுக்காமல் யாராவது தவறுகள் செய்திருந்தால் கட்டாயமாக அவர்கள் மீது நடவடிக்கை எடுப்போம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்):** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நல்ல நோக்கத்துடன் அரசு செய்கின்ற ஆதி திராவிடர்கள் இறந்து விட்டால் அவர்கள் உடல் அடக்கத்திற்கு ரூ. 50 செலவுக்கு கொடுக்கிறது. ஆனால் இதைப் பெறுவதைப் பொறுத்தவரையில் நிர்வாக சிக்கல்களினால் கால தாமதங்கள் ஏற்படுகின்ற சூழ்நிலை இருக்கிறது. கிராம நிர்வாக அதிகாரிகளிடம் இறந்ததற்காக மரணச் சான்றிதழ் வாங்க வேண்டும். பிறகு அங்கே உள்ள கிராம சேவக்கைப் பார்த்து, பிறகு ஊராட்சி ஒன்றிய ஆணையர் அவர்களைப் பார்த்த பின், அவர் அந்த ஊராட்சி ஒன்றியத்திலே உள்ள ஊராட்சி எழுத்தருக்கு உத்தரவு போட வேண்டும் என்ற நிர்வாக சிக்கலான சூழ்நிலை இருக்கிறது. இதற்குள் அவர்கள் 10, 20 ரூபாய் செலவழிக்க வேண்டிய நிலைமை இருக்கிறது. எனவே இதற்காக உள்ள அரசு ஆணையை மாற்றி, ஒரு ஆதி திராவிடர் இறந்து விட்டார் என்றால், அந்த கிராம நிர்வாக அதிகாரிகளிடம் பதிவு செய்கிறபோதே அந்த ஊராட்சி மன்றத்திற்கு அல்லது ஊராட்சி ஒன்றியத்திற்குத் தகவல் தெரிவிக்க வேண்டிய அந்தப் பொறுப்பையே, அந்த வருவாய்த் துறை அதிகாரிகளிடம், அந்த கிராம நிர்வாக அதிகாரிகளிடம் ஒப்படைத்தால், எளிதாக இருக்கும். அதற்காக நடவடிக்கையை அரசு மேற்கொள்ளுமா? என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எ. அருணாசலம்:** தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொன்னதை அரசு பரிசீலிக்கும்.



## அயோத்தியாப் பட்டணம் ஒன்றியத்தில் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்.

318—(*வினா எண் 4711) **திரு. சீ. சிவப்பிரகாசம்:** மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம் பனைமரத்துப்பட்டி தொகுதியில் உள்ள அயோத்தியாப் பட்டணம் ஊராட்சி ஒன்றியத்திலுள்ள பெரிய கவுண்டபுரம் சருகுமலை பகுதியில் LAMP சங்கம் அமைக்கும் கோரிக்கை அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அரசு எப்போது செயல்படுத்தும்?

**மாண்புமிகு திரு. எ. அருணாசலம்:** (அ) இல்லை.

(ஆ) இவ் வினா எழவில்லை.

**திரு. சீ. சிவப்பிரகாசம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மாவட்டத்தில் உள்ள பனைமரத்துப்பட்டி தொகுதியில் உள்ள அயோத்தியாப்பட்டணம் ஊராட்சி ஒன்றியத்தில் பல்வேறு இடங்களில் மலைவாழ் மக்கள், பல்வேறு வகைகளில் சிதறுண்டு சிறிய சிறிய கிராமங்களில் வாழ்ந்து வருகிறார்கள். இவர்கள் எந்தவிதமான கடன் வசதியும் பெற முடியாத நிலைமையில் இருந்து கொண்டிருக்கிறார்கள். ஆகவே அந்தப் பகுதியில் வசிக்கின்ற சுமார் 22 ஆயிரம் மலைவாழ் மக்களுக்காக, அவர்களுடைய வாழ்க்கையில் பொருளாதார முன்னேற்றத்தை கொண்டு வருவதற்காக, அந்தப் பகுதியில் புதிய லேம்ப் சங்கத்தை வருகின்ற ஆண்டிலாவது அமைக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எ. அருணாசலம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சருகுமலைப் பகுதியில் 920 மலைவாசிகள் உள்ளனர். அதிலே 400 பேர்கள் விவசாயக் கூலியாக உள்ளனர். அந்தப் பகுதியில் நீர்ப்பாசன உதவியுடன் 30 ஏக்கர்களும், மானாவாரியாக 90 ஏக்கர் நிலமும் பயிரிடப்பட்டு வருகிறது. தற்சமயம் கெஜ்ஜல் நாயக்கன்பட்டி விவசாயி சேவை கூட்டுறவுச் சங்கத்தின் செயல் எல்லையில் மேற்படி சருகுமலைப் பகுதி உள்ளது. அந்தச் சங்கத்தின் மூலமாக அவர்களுடைய தேவை

பூர்த்தி செய்யப்பட்டு வருகிறது. அதனால், தனியாக ஒரு லேம்ப் சொசைட்டியை சருகுமலைப் பகுதியில் அமைப்பதற்கான சாத்தியக்கூறு இல்லை.

**திரு. சீ. சிவப்பிரகாசம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும் போது சருகுமலைப் பகுதியை மட்டும் சொன்னார்கள். சருகுமலைப் பகுதியிலும், அதன் சுற்றுப்புறத்திலும், 13 மலைவாழ் பகுதிகள் உள்ளன, அதில் சுமார் 12 ஆயிரம் மக்கள் வாழ்ந்து வருகிறார்கள் என்று சொன்னேன். எனவே தயவுசெய்து அமைச்சர் அவர்கள், சருகுமலைப் பகுதி மையப் பகுதியாக இருக்கிற காரணத்தால், அதன் சுற்றுப்புறத்திலே இருக்கிற கிராமங்களை ஒருங்கிணைத்து, வருகின்ற நிதியாண்டில் அதை ஏற்படுத்துவதற்கு பரிசீலிக்கும்படி அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. எ. அருணாசலம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிதி நிலைமைக்கேற்ப வருகின்ற ஆண்டில் பரிசீலிக்கப்படும்.

### வெள்ளார் உயர்நிலைப் பள்ளி ஆதி திராவிட மாணவர் விடுதி.

**319—(* வினா எண் 5168) திரு. செ. செம்மலை :** மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், மேட்டூர் வட்டம், வெள்ளார் உயர்நிலைப் பள்ளியில் பயிலும் ஆதி திராவிட மாணவருக்காக மாணவர் விடுதி அமைக்க அரசுக்கு கோரிக்கை வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

**மாண்புமிகு திரு. எ. அருணாசலம் :** (அ) ஆம்.

(ஆ) சேலம் மாவட்டம், மேட்டூர் வட்டம், வெள்ளாரில் விடுதி திறக்க போதிய சாத்தியக்கூறுகள் இருப்பின், தகுந்த முன்மொழிவு அனுப்பி வைக்கும்படி, சேலம் மாவட்ட ஆதி திராவிட நல அலுவலர் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளார்.



இதற்கான செயற்குறிப்பு பெற்ற பின்னர் தேவை மற்றும் நிதிநிலைமை ஆகியவற்றை உத்தேசித்து வெள்ளாரில் ஆதி திராவிட மாணவர் விடுதி திறப்பது குறித்து வரும் ஆண்டுகளில் பரிசீலனை செய்யப்படும்.

### பாடி அன்னப்பன்பேட்டை மீனவர்களுக்கு வீடுகள்.

**320—(* வினா எண். 4750) திரு. ஏ. தங்கராசு :** மாண்புமிகு பிற்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்னாற்காடு மாவட்டம் குறிஞ்சிப்பாடி தொகுதியில் உள்ள அன்னப்பன்பேட்டையில் இருக்கும் மீனவர்களுக்கு வீடு கட்டும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. எம். ஆர். கோவேந்தன் :** (அ) ஆம்.

(ஆ) அறுபது வீடுகளுக்கு கட்டுமான பணி நடந்து வருகிறது.

(முற்பகல் 9-50)

**திரு. ஏ. தங்கராசு :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்கிறபோது 60 வீடுகள் கட்டுவதாகச் சொன்னார்கள். அன்னப்பன் பேட்டையிலிருக்கிற மீனவர்களுக்கு மொத்தம் எத்தனை வீடுகள் அனுமதிக்கப்பட்டது. 60 வீடுகள் மாத்திரம் செய்வதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். மீதமுள்ள வீடுகள் என்ன நிலைமையில் இருக்கின்றன. ஆகவே, அதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பாரா?

**மாண்புமிகு திரு. எம். ஆர். கோவேந்தன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தென் ஆற்காடு மாவட்டம், குறிஞ்சிப்பாடி தொகுதியில் உள்ள அன்னப்பன்பேட்டை மீனவ கிராமத்தில் கட்டப்பட வேண்டிய 60 வீடுகளும் மற்றும் மேற்படி கிராமத்தையொட்டியுள்ள ரெட்டியார்பேட்டை மீனவ கிராமத்தில் 40 வீடுகளுமாக மொத்தமுள்ள 100 வீடுகளும் கட்டும்பொருட்டான பணி ஒரே ஒப்பந்தக்காரரிடம் 2—4—1984 அன்று ஒப்படைக்கப் பட்டது. இதுவரையிலும் அன்னப்பன்பேட்டையில் கட்டப்பட

வேண்டிய பணி முழுமையாக நிறைவேற்றப் பெறாமல் 31 வீடுகள் கூரைமட்ட அளவிலும், 12 வீடுகள் தள மட்ட அளவிலும் உள்ளன. எஞ்சியுள்ள 57 வீடுகளின் பணி துரிதப்படுத்தப்பட்ட காரணத்தினால் முடிவு செய்யப்பட்ட ஒப்பந்தப் புள்ளி ரத்து செய்யப்பட்டது. அனைத்துப் பணிகளை மேற்கொள்ளும் பொருட்டான பணி, புதிய ஒப்பந்தக்காரரிடம் ஒப்படைக்கப் பட்டுள்ளது. பணி முழுமையாக பூர்த்தியடைய சுமார் 6 திங்கள் ஆகலாம். அன்னப்பன்பேட்டையில் கட்டப்பட வேண்டிய வீடுகள் 60 என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. ஏ. தங்கராசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அன்னப்பன்பேட்டை கிராம மீனவர்களுக்கு அனுமதிக்கப்பட்ட வீடுகள் 100 வீடுகள் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். அதிலும் பாதி வீடுகள் தான் முடிக்கப்பட்டிருக்கிறது என்பதை வெளிப்படுத்தி இருக்கிறார்கள். ஆகவே நான் அறிய விரும்புவது மீதமுள்ள 57 வீடுகள் கட்ட இன்னும் ஆரம்பிக்கப்படவில்லை; ஆகவே அதனுடைய மதிப்பீடுகளும் கம்மியாக இருக்கிற காரணத்தினாலே ஆரம்பிக்கப்படவில்லை என்று அந்தப் பகுதியில் இருக்கிறவர்கள் சொல்கிறார்கள். ஆகவே மீதமுள்ள மீனவர்களின் வீடுகளை இந்த ஆண்டு புதிய மதிப்பீடு தயார் செய்து உடனடியாக இந்த ஆண்டே முடிப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்வாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எம். ஆர். கோவேந்தன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதலிலேயே நான் சொன்னேன். அன்னப்பன்பேட்டையில் 60 வீடுகளும், ரெட்டியார் பேட்டையில் 40 வீடுகளுமாக மொத்தம் 100 வீடுகள் என்று. இந்த வேலைகளை எடுத்திருந்த ஒப்பந்தக்காரர்கள் சரியாக வேலை செய்யவில்லை என்பதையும் அதனால்தான் காலதாமதம் ஏற்பட்டது என்பதையும் நான் சட்ட மன்ற உறுப்பினர்களுக்கு சொன்னேன். ஒட்டுமொத்தமாக இந்த நேரத்தில் சட்ட மன்ற



[illegible] சென்னை-600 009. 136/46

உறுப்பினர்களுக்குச் சொல்லிக்கொள்வேன், [illegible] பணிகள் நடைபெறுவதற்கு ஒப்பந்தக்காரர்கள் இடையூறாக இருக்கிறார்கள். அந்தத் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டால் அங்கே உள்ள மக்கள் உறுப்பினர்கள் மீதுதான் பற்றும் பாசமும் வைப்பார்கள். எனவே நீங்களே ஒரு நல்ல ஒப்பந்தக்காரரை ஏற்பாடு செய்து தருவதன் மூலம் குறிப்பிட்ட காலத்தில் அந்த வீடுகள் கட்டும் பணியை முடிப்பதற்கு நீங்கள் உதவ வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்

**திரு. செ. இரத்தினவேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக அரசு இதுவரையிலும் மொத்தம் எத்தனை கடல் மீனவர்களுக்கு வீடு கட்டுவதற்கு அனுமதி அளித்திருக்கிறது? முடிக்கப்பட்ட வீடுகள் எத்தனை என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எம். ஆர். கோவேந்தன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய புரட்சித் தலைவருடைய அரசு கடல் மீனவர்களுக்கு, ஆதி திராவிடர் வீட்டு வசதி மேம்பாட்டுக் கழகம் மற்றும் மீன்வளத் துறையின் மூலம் முந்தைய மாதிரி வடிவமைப்பில் 11,400 வீடுகள் கட்டுவதற்கு ஒப்பளிக்கப்பட்டு இதுவரைக்கும் 9,738 வீடுகள் கட்டி முடிக்கப் பட்டுள்ளன. மீதமுள்ள 1,662 வீடுகளைக் கட்டுகின்ற பணி தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

**பின்தங்கிய வகுப்பு மாணவர்களுக்கு பட்டயக் கணக்கர் தேர்வு எழுத உதவி**

**321 – (*வினா எண் 4945) மாண்புமிகு திரு [illegible] (பேரவைத் துணைத்தலைவர்) மாண்புமிகு பிற்பட்டோர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—**

**மாநிலத்தில் Chartered Accountancy பயிற்சி பெற்று தேர்வு எழுதும் பின்தங்கிய பிரிவு மாணவர்களுக்கு அரசு செய்யும் உதவிகள் என்னென்ன?**

[1986 மார்ச் 31

மாண்புமிகு திரு. எம். ஆர். கோவேந்தன்: மாநிலத்தில் பட்டயர் கணக்கு (Chartered Accountancy) பயிற்சி பெறும் பிற்படுத்தப்பட்டோர் வகுப்பு மாணவர்களுக்கு கீழ்க்கண்டவாறு உதவித் தொகைகள் வழங்கப்படுகிறது.

ஆர்டிகல் கிளார்க் பயிற்சி 3 ஆண்டுகள்

| | படிப்புக் கட்டணம் மற்றும் பதிவு கட்டணம்.. | சில்லரை செலவினம் மாதம் ரு 10 வீதம். | புத்தக கட்டணம் | மொத்தம் |
|---|---|---|---|---|
| முதல் வருடம் | ரூ. 155 | ரூ. 120 | ரூ. 200 | ரூ. 475 |
| இரண்டாம் வருடம் | ரூ. 150 | ரூ. 120 | இல்லை | ரூ. 270 |
| மூன்றாம் வருடம் | ரூ. 150 | ரூ. 120 | இல்லை | ரூ. 270 |
| | ரூ. 455 | | | |

தணிக்கை குமஸ்தா பயிற்சி 4 ஆண்டுகள்

| | படிப்புக் கட்டணம் மற்றும் பதிவு கட்டணம். | சில்லரை செலவினம் மாதம் ரூ. 10 வீதம். | புத்தக கட்டணம். | மொத்தம் |
|---|---|---|---|---|
| முதல் வருடம் | ரூ. 115 | ரூ. 120 | ரூ. 200 | ரூ. 435 |
| இரண்டாம் வருடம் | ரூ. 115 | ரூ. 120 | இல்லை | ரூ. 235 |
| மூன்றாம் வருடம் | ரூ. 115 | ரூ. 120 | இல்லை | ரூ. 235 |
| நான்காம் வருடம் | ரூ. 110 | ரூ. 120 | இல்லை | ரூ. 230 |
| | ரூ. 455 | | | |

**மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : (பேரவைத் துணைத் தலைவர்) :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த சார்ட்டர்டு அக்கவுண்டென்சி பயிற்சி பெறும் பிற்படுத்தப்பட்டோர் மாணவர்களுக்கு படிப்புக் கட்டணம், சில்லரை செலவினம் மற்றும் புத்தக கட்டணம் மட்டும் வழங்கப்படுகின்றன என்ற அரசு தரப்பு உதவிகளை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே குறிப்பிட்டார்கள். இன்று இந்த படிப்பு படிப்பது ஒரு கவர்ச்சிகரமான தொழிலுக்கு போகிற ஒரு வாய்ப்பு இருக்கிறது. ஐ.ஏ.எஸ். படிப்புக்கு அடுத்து இது இருக்கிறது என்ற நிலை இருக்கிறது. இதில் பின்தங்கிய மாணவர்கள் வெற்றி பெறுகிற வாய்ப்பு குறைந்து இருக்கிறது. அதற்கு முழு காரணம் இவர்கள் படித்தால் மட்டும் போதாது. ஒரு ஆண்டு, இரண்டு ஆண்டுகள் என்று இதற்காக பயிற்சி பெற வேண்டியிருக்கிறது. இதில் குறிப்பிட்ட ஒரு சிலர் இந்த பொறுப்புக்கு வந்து இவர்கள் அங்கே பயிற்சியாளர்களாக சேருவதில் பல சிக்கல்கள் இருக்கின்றன. அது ஒரு முக்கியமான காரணமாக இருக்கிறது. எனவே, பின்தங்கிய மாணவர்களுக்கு அரசின் பொது நிறுவனங்களில் அதாவது போக்குவரத்துக் கழகம் போன்ற நிறுவனங்களில், அதேபோல் மாவட்ட தலைநகர்களில் இருக்கின்ற பொது நிறுவனங்களில், நாம் சார்ட்டர்டு அக்கவுண்டெண்டுகளை பயன்படுத்துகிறோம் அல்லது அவர்களை நியமித்து இருக்கிறோம். இப்படிப்பட்டவர்களிடம் இந்த பின்தங்கிய மாணவர்களுக்கு இத்தனை பேர்களுக்கு பயிற்சி அளிக்க வேண்டும் என்று சொல்லக்கூடிய ஒரு நிலையை அரசு எடுக்குமா என்ற விவரத்தை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எம். ஆர். கோவேந்தன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது நல்ல யோசனையாக இருக்கிறது. இதை அரசு பரிசீலிக்கலாம்.

### காட்பாடியில் தோண்டப்பட்ட ராட்சதக் கிணறுகள்.

322—(* வினா எண் 1771) **திரு. கோ. இரகுபதி :** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காட்பாடி தொகுதியில் தோண்டப்பட்ட ராட்சதக் கிணறுகள் சம்பந்தப்பட்ட துறையிடம் ஒப்படைக்கப்பட்டதா?

[1986 மார்ச் 31

(ஆ) ஆம் எனில், அக்கிணறுகள் மக்களுக்கு எந்த அளவுக்கு பயன்பட்டு வருகின்றன?

**மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப்:** (அ) & (ஆ) 1981-82 ஆம் ஆண்டு ஏற்பட்ட வறட்சியின்போது வறட்சி நிவாரணப் பணியாக காட்பாடி ஊராட்சி ஒன்றிய எல்லைக்குள் தோண்டப்பட்ட 2 கிணறுகள் முடிவு பெற்று காட்பாடி ஊராட்சி ஒன்றியத்திடம் ஒப்படைக்கப்பட்டு மக்களின் உபயோகத்தில் உள்ளன. 1983-84-இல் ஏற்பட்ட வறட்சிக்காக 5 கிணறுகள் அங்கீகரிக்கப்பட்டு 2 கிணறுகள் முடிவுற்ற நிலையில் உள்ளன. மற்ற 3 கிணறுகளில் ஆழப்படுத்தும் பணிகள் நடைபெற உள்ளன.

**திரு. கோ. இரகுபதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காட்பாடி தொகுதியில் தோண்டப்பட்ட ராட்சதக் கிணறுகள் பஞ்சாயத்து யூனியனிடம் ஒப்படைக்கப்பட்டதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அங்கே அந்த ராட்சதக் கிணறுகள் தோண்டப்பட்டதன் முக்கிய நோக்கம் அங்கே ஏற்பட்டுள்ள வறட்சியால் அங்குள்ள விவசாய பெருங்குடி மக்களையும், குடிநீர் பிரச்சினையை தீர்ப்பதற்காகத் தான் இந்த ராட்சக் கிணறுகள் தோண்டுவதற்காக திட்டம் தீட்டப்பட்டது. ஆனால் அந்த திட்டப்படி அந்த பஞ்சாயத்து யூனியனிடம் கேட்டால் எங்களுக்கு பொதுப் பணித் துறையிலிருந்து அந்த கிணறுகளை ஒப்படைக்கவில்லை என்றும் அது எவ்வாறு பயன்படுத்துவது என்று எங்களுக்கு அறிவிக்கவில்லை என்றும் ஆகவே நாங்கள் அதை பயன்படுத்தவில்லை என்றும் சொல்லுகிறார்கள். தற்போது அதனுடைய நிலையை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. யா. சை மு. யூசுப்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக பொதுப் பணித் துறை நில இயல் பிரிவால் தோண்டப்படுகிற இந்த ஆழ்கிணறுகளைப் பொறுத்தவரையில் அதனுடைய ஆய்வுக்குப் பிறகு அதை அந்த சம்பந்தப்பட்ட ஊராட்சி மன்றங்களுக்கு, உள்ளாட்சி மன்றங்களுக்கு ஒப்படைக்க வேண்டும் என்ற விதிமுறையை அரசு விதித்து இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டியதுபோல் ஏற்கனவே இந்த துறையால்



1986 மார்ச் 31]

தோண்டப்பட்ட கிணறுகள் எல்லாம் நான் மூலக் கேள்விக்கு விடை சொல்லும்போது சொன்னது போல் சம்பந்தப்பட்ட ஊராட்சி ஒன்றியத்திடம் ஒப்படைக்கப்பட்டு இருக்கிறது. 1981-82 ஆம் ஆண்டில் தோண்டப்பட்ட. இந்த இரண்டு ராட்சதக் கிணறுகள் காட்பாடி ஊராட்சி ஒன்றியத்திடம் 6—11—1982-ல் ஒப்படைக்கப்பட்டு இருக்கிறது. அதனால் திருவலம், ஜெம்புராஜ புரம். கரிஹரி ஆகியவை பயனடைந்து வருகின்றன.

(முற்பகல 10-00)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் அனுமதியுடன் வினாக்கள்—விடைகள் நேரம் நீட்டிக்கப் பெறுகிறது.

**திரு. கோ. இரகுபதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒப்படைக்கப்பட்டதாக மாண்புமிகு அமைச்சரவர்கள் தெரிவித்தார்கள். அந்த ஒப்படைக்கப்பட்ட. கிணறுகள் எவ்வாறு, எதற்குப் பயன்படுத்தப்படுகிறது? அதைப் பயன்படுத்துவதற்கான நிலை என்ன என்று அறிவிப்பதோடு, சில கிணறுகள் முடிவடைந்துவிட்டன என்று தெரிவிக்கப்பட்டும், முடிவடையாமல் இருக்கின்றன. அப்படி முடிவடைந்து விட்டதாக சொல்கின்ற வகையில், கே. வி. குப்பத்தில், முடிவடையாமல், ஒரு கிணறு விடப்பட்டிருக்கிறது. கே. வி. குப்பத்திலுள்ள கிணறு இதுவரையில் பஞ்சாயத்திடம் ஒப்படைக்கப்படவில்லை. 1982-83-ல் வறட்சிப் பணிகளில் நிறைவேற்றப்பட வேண்டிய காரியங்கள் 1986 ஆம் ஆண்டிலும் கூட முடிக்கப்படாது இருப்பதன் காரணம் என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப்:** தலைவர் அவர்களே, ஏற்கனவே ஒப்படைக்கப்பட்ட அந்தக் குழாய்க் கிணறுகளை எப்படிப் பயன்படுத்த வேண்டும் என்ற ஒரு முடிவினை சம்பந்தப் பட்ட ஊராட்சி மன்றங்கள் தான் எடுக்க வேண்டுமேயொழிய, பொதுப் பணித் துறை எடுக்காது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இது நீங்கலாக கே. வி. குப்பத்தினைப் பொறுத்த வரையில் 1983-84 ஆம் ஆண்டு வறட்சியின்போது தோண்டப்பட வேண்டிய கிணறுகள் இன்னும் முடியவில்லை என்று சொன்னார்கள். 1983-84 ஆம் ஆண்டு வறட்சிப் பணிகளுக்கான நிதி அந்த ஆண்டில் இறுதியில் ஒதுக்கீடு செய்யப்பட்டு, அடுத்த ஆண்டில்தான் பணிகள் துவக்கப்படும் என்பதை மாண்புமிகு

உறுப்பினர்களும் மற்றவர்களும் அறிவார்கள். 1982 ஆம் ஆண்டு தோண்டப்பட்ட அந்தக் கிணறுகள் சம்பந்தப்பட்ட பணி முடிவடையும் தருவாயில் இருக்கிறது. முடிவடைந்தபின் விரைவிலே கே. வி. குப்பம் ஊராட்சி ஒன்றியத்திடம் ஒப்படைக்கப் படும்.

**திரு. வே. கு. சின்னசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுப் பணித் துறையின் மூலம் வறட்சி நேரத்திலே, வறட்சிப் பணிகளில் தோண்டப்பட்ட கிணறுகளில் எல்லாம் தண்ணீர் வசதிகள் நிறைய இருக்கின்றன. அப்படி இருக்கின்ற நேரங்களில் அவைகள் கிராமங்களை விட்டு தள்ளி தோண்டப்பட்டிருக்கின்றன. வறட்சி ஏற்பட்ட நேரத்தில், ஊராட்சி ஒன்றியத்திலே எடுக்கப்பட்டாலும் போதுமான நிதி இல்லாத காரணத்தால், கிணற்று நீரை குடிநீராக பயன்படுத்த முடியாமல் இருக்கிறது. மாண்புமிகு அமைச்சரவர்கள் கிணற்றில் இருக்கின்ற தண்ணீரைப் பயன்படுத்துவதற்கு, அதிக அளவில் நிதி ஒதுக்கீடு செய்து, குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலமாக, அல்லது மற்ற நிர்வாகத்தினரிடம் ஒப்படைப்பதற்கு, நிதியாதாரம் கிடைப்பதற்கு அமைச்சரவர்கள் ஏற்பாடு செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்

**மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் :** தலைவர் அவர்களே, குழாய்க் கிணறுகள், குடிநீர் திட்டத்திற்காகவும், பாசனத் திட்டத்திற்காகவும் அமைக்கப்படுகின்ற குழாய்க் கிணறுகள் அல்ல. ஒவ்வொரு ஊராட்சியிலும், அந்த ஊராட்சிக்கு உட்பட்ட வருவாய்க் கிராமங்களில் இருக்கின்ற நிலத்தின் தன்மையும், அந்த நிலத்திலே கிடைக்கக் கூடிய நிலத்தடி நீரையும், எந்த அளவில் கிடைக்கிறது, எதற்குப் பயன்படுத்தலாம், அந்த நீரின் தன்மை என்ன என்பதை ஆராய்ச்சி செய்து, ஆய்வுக் குறிப்புகளைத் துறை வைத்திருக்கிறது. அந்தக் காரணத்திற்காக தோண்டப்படக் கூடிய அந்தப் பணிகள் நிறைவேறிய பிறகு, தேவையில்லாமல் ஆய்வு செய்துவிட்டு, சும்மா விட்டு விட வேண்டாம் என்பதற்காக அந்தக் குழாய்க் கிணறுகளை சம்பந்தப்பட்ட ஊராட்சி மன்றங்களிடத்திலே ஒப்படைக்கின்றோம். அந்த ஊராட்சி ஒன்றியங்கள் அந்தத் தண்ணீரை குடிதண்ணீராகவோ, அல்லது





வேறு காரியங்களுக்காகவோ பயன்படுத்தி வருகிறது. அந்த முறையிலே குழாய்க் கிணறுகள் தோண்டப்படுகின்ற நேரத்திலே, அந்த குழாய்க் கிணறுகளில் தண்ணீர் எங்கே கிடைக்கிறது என்று தான் பார்க்க முடியுமே தவிர, ஊருக்குப் பக்கத்தில் இருக்கிறதா, இல்லையா என்று பார்த்து தோண்டக் கூடிய நிலையில் துறை இல்லை. குடிநீர் வடிகால் வாரியத்திற்கும், பொதுப்பணித் துறைக்கும் தனியாக நிதி ஒதுக்கீடுகள் இருக்கின்றன. ஆகவே அதற்கும் பொதுப்பணித் துறைக்கும் எந்தவித சம்பந்தமும் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

காணை கிராமத்திற்கு சாத்தனூர் அணையிலிருந்து தண்ணீர்.

.323—(* வினா எண். 3514) திரு. எம். இராசரத்தினம் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விழுப்புரம் தாலுக்கா காணை கிராமம் 'காணை ஏரி'க்கு சாத்தனூர் அணை தண்ணீர் வருவது நின்றுவிட்டது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா ?

(ஆ) மீண்டும் அந்த ஏரிக்கு சாத்தனூர் அணையின் தண்ணீரை விடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா ?

**மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் :** (அ) சாத்தனூர் அணைக்கட்டின் மூலம் காணை ஏரிக்கு நீர் கிடைக்காது.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

முத்து முதலைவாரி மற்றும் சோலைவாரி திட்டங்கள்.

324—(* வினா எண். 6459) திரு. பொ. உத்திரபாதி : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டம் செங்கிபட்டிக்கு அருகாமையில் முத்து முதலைவாரி திட்டம், சோலைவாரி திட்டம் அமைக்க மதிப்பீடு செய்யப்பட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

[1986 மார்ச் 31

**மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப்:** (அ) & (ஆ) ரூ. 410 லட்ச மதிப்பீட்டு செலவு கொண்ட முத்து முதலைவாரி திட்டம், ஒருங்கிணைந்த காவிரி டெல்டா சீரமைப்புத் திட்டம் முதல் பகுதியில் (மதிப்பீட்டு செலவு ரூ. 123 கோடி) சேர்க்கப்பட்டு மத்திய நீர் குழுவின் ஒப்புதலுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

சோளகம்பட்டிவாரித் திட்டம் தலைமைப் பொறியாளரின் (பாசனம்) ஆய்வில் உள்ளது.

**திரு. பொ. உத்திராபதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்திலே செங்கிபட்டிக்கு அருகாமையில் உள்ள முத்துமுதலைவாரித் திட்டம், சோலை வாரித் திட்டம் ஆகிய திட்டங்கள் 1921 ஆம் ஆண்டே அறிவிக்கப் பட்டிருக்கின்றன. 1961 ஆம் ஆண்டு வரை படம் தயாரிக்கப் பட்டிருக்கிறது. 1985 ஆம் ஆண்டு அமைச்சர் அவர்கள் அந்த இடத்தை நேரிலே வந்து பார்த்து தஞ்சை மாவட்டத்திற்கு முக்கியமான இடம்தான் என்று ஏற்றுக்கொண்டு, இந்தத் திட்டத்தை உருவாக்கி மத்திய அரசுக்கு அனுப்பப் பட்டிருப்பதாகச் சொன்னார்கள். இந்தத் திட்டத்தை இந்த ஆண்டில் அதாவது 1986-87-லோ அல்லது 1987-88 ஆம் ஆண்டிலோ துவக்குவதற்கு நடவடிக்கையை அமைச்சர் அவர்கள் எடுப்பார்களா?

**மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சரியாகச் சுட்டிக்காட்டியதைப் போல் வரைபடம் தயாரிப்பதற்கும் ஆரம்பக் கட்டப் பணிகளை மேற்கொள் வதற்காகவும் 65 ஆண்டுகள் பிடித்திருக்கிறது. அதற்குப் பிறகு 1985 ஆம் ஆண்டுக்குச் சற்று முன்பு, 1984 ஆம் ஆண்டு இறுதி என்று நான் கருதுகிறேன். நேரிலே அந்த இடத்தைப் பார்வையிடுவதற்கான வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. அதற்குப் பிறகு தயாரிக்கப்பட்ட ஒருங்கிணைந்த காவிரி டெல்டா சீரமைப்புத் திட்டத்தில் அதனையும் சேர்க்க வேண்டுமென்ற முறையிலே உரிய அறிவுரைகள் வழங்கப்பட்டன. அதற்குரிய நடவடிக்கைகளை துறை மேற்கொண்டது. மத்திய அரசு ஒருங்கிணைந்த காவிரி டெல்டா சீரமைப்புத் திட்டத்தின் ஒரு பகுதியை மட்டுமே 7-வது ஐந்தாண்டுத் திட்டக் காலத்திலே உலக வங்கியின் உதவியைப் பெறுவதற்கு அறிக்கையைத் தயாரிக்கக்



1986 மார்ச் 31]

கோரியிருக்கிறார்கள். அந்த முறையிலே அறிக்கை தயாரிக்கப் பட்டிருக்கிறது. அதிலே முத்து முதலைவாரித் திட்டம் உள்பட அந்த அறிக்கை தயாரிக்கப்பட்டிருக்கிறது. முத்து முதலைவாரி நீர்த் தேக்கத் திட்டத்திற்கு 410 லட்ச ரூபாய் செலவாகும் என்ற சூழ்நிலை உருவாகும். அதை ஒருங்கிணைந்த காவிரி டெல்டா சீரமைப்புத் திட்டத்திலே சேர்த்திருக்கிறோம். அந்த முறையிலே 123 கோடி ரூபாய் மதிப்பீட்டுச் செலவிலே திட்டம், நீர் ஆணைக் குழுவிற்கு அனுப்பப்பட்டு இருக்கிறது. நீர் ஆணைக் குழுவிலிருந்தும் மற்ற இடங்களிலிருந்தும் அறிக்கை ஒப்புதல் பெற்று வந்தவுடன், மேற்கொண்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. பொ. உத்திராபதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டம் 65 ஆண்டுக் காலமாக தாமதிக்கப் பட்டு இப்போது 1984-85 இல் துவக்கப்பட்டிருக்கிறது. இந்த முத்து முதலைவாரித் திட்டம் என்ற திட்டத்தை நிறைவேற்றினால் புதுக்கோட்டை, திருச்சி மாவட்டங்களிலிருந்து வரக்கூடிய—மழையாலும் வெள்ளத்தாலும் பெருகி வரக்கூடிய—தண்ணீரைத் தேக்கி வைக்க முடியும். அப்படித் தேக்கி வைக்கப்படுகிறபோது கடைமடைப் பகுதிகள் பாதுகாக்கப்பட முடியும், அது மட்டுமல்ல, அதற்குப் பிறகும் தண்ணீர் பற்றாக்குறை இருக்குமானால் தேக்கி வைக்கப்பட்ட நீரை விவசாயிகளுக்குக் கொடுக்கக் கூடிய முக்கியமான திட்டமாக இருக்கிறது. இப்போது காவிரிப் பிரச்சினை இருக்கிற இந்த நேரத்திலே தஞ்சை மாவட்ட விவசாயிகளுக்காக இந்தத் திட்டத்தைத் துரிதமாக நிறைவேற்றுவதற்கு அமைச்சர் உறுதியளிப்பாரா என்று கேட்டுக் கொள்வதோடு இத் திட்டத்தில் எவ்வளவு உயரம், அகலம் ஆகியவற்றில் அந்த அணையின் உருவம் இருக்கும் என்பதையும் அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா?

**மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதைப் பற்றிய விவரங்கள் என்னிடத்தில் தற்போது இல்லை. எனினும் அந்த விவரங்களைச் சேகரித்து தனியாக அது மாண்புமிகு உறுப்பினருக்குத் தரப்படும்.

[1986 மார்ச் 31

**திரு. துரை கோவிந்தராசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூத்து முதலைவாரித் திட்டத்தைக் கொண்டுவர 65 ஆண்டுக் காலம் ஆகிவிட்டது என்றும் இப்போது நாலே கால் கோடி மதிப்புள்ள இந்தத் திட்டம் மத்திய அரசிற்கு அனுப்பி வைக்கப்பட்டிருக்கிறது என்றும் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அனுப்பியதற்கு நான் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஒரு பழமொழி சொல்வார்கள், மூன்முனையிலே 3 குளம் வெட்டி அதிலே இரண்டு பாழ், ஒன்றில் தண்ணீர் இல்லை என்று சொல்வது உண்டு. அதைப்போன்று இன்று நாலே கால் கோடி ரூபாய் மதிப்பிலே அந்தத் திட்டம் அறிவிக்கப் பட்டிருக்கிறது. அது குறிப்பாக தஞ்சாவூர் மாவட்டத்தில் வெள்ளப் பெருக்கு ஏற்படும்போது எல்லாம் மூத்து முதலை வாரித்திற்கு வந்து விவசாயிகளுக்கு ஆண்டுதோறும் பெரிய நட்டத்தை ஏற்படுத்துகிறது, அதைத் தடுக்கிற நிலையிலே

(முற்பகல் 10-10)

அதோடு வறண்ட பகுதியில் இருக்கின்ற அந்த மக்கள் குடிநீர் பிரச்சனைக்காக குளங்களைப் பெருக்கிக் கொள்ளத் தக்க வகையில்—விவசாயத்தையும் பெருக்கிக் கொள்ளும் வகையில் அமையும் இந்தத் திட்டம் பற்றி இத்தனை ஆண்டுக் காலமாக செய்ய முடியாத நிலை இருந்தாலும், இப்பொழுது மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டிருக்கிற இந்தத் திட்டம் விரைவில் ஒன்றேகால் கோடி ரூபாய் மதிப்பிற்குள்ள இந்தத் திட்டம் உடனடியாகத் துவங்கப்பட்டால் இரண்டு நன்மைகள் கிடைக்கும். அதில் ஒன்று, வெள்ளத் தடுப்பு: இரண்டாவது, தண்ணீரைத் தேக்கி வைத்துக் கொள்வதன் மூலம் விவசாயத்தைப் பெருக்கும் திட்டம். இந்தத் திட்டத்தை இந்த அரசு உடனடியாகக் கவனத்திற் கொண்டு—காங்கிரஸ் ஆட்சிக் காலத்திலே இந்தத் திட்டம் தொடங்கி வைக்கப்பட்டு, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்திலே அது நிறுத்தி வைக்கப்பட்டு இன்றைக்கு அது அனுப்பப்பட்டிருக்கிறது. இதைக் கொஞ்சம் கவனமாகப் பரிசீலித்து தஞ்சை மாவட்டத்து மக்கள் மீது கவனம் கொண்டு விரைவில் திட்டத்தைச் செய்ய முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

1986 மார்ச் 31]

**மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப்:** பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்தின் மீது தனி அக்கறை செலுத்த வேண்டுமென்பதுதான் இந்த அரசின் எண்ணம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். மாண்புமிகு புரட்சித் தலைவரவர்களே, தஞ்சை மாவட்டத்தில் விவசாயம் மட்டுமே அந்தப் பகுதி மக்களுடைய தேவையான — அவர்களுடைய வருவாய்க்கு உகந்த ஒரு சாதனமாக இருக்கிறது என்பதைக் கருதித்தான் தஞ்சை மாவட்டத்து விவசாயிகளுக்குத் தேவையான அத்தனை வசதிகளையும் செய்து தர வேண்டுமென்பதற்காகத் திட்டங்களைப் படிப்படியாகத் தீட்டிக் கொண்டு இந்த அரசு செயல்படுத்திக் கொண்டு வருகிறது. குறிப்பாக, முத்து முதலைவாரித் திட்டத்தைப் பொறுத்தவரையில், இந்தத் திட்டம் ஒரு பக்கத்தில் வெள்ளத் தடுப்பாகவும், இன்னொரு பக்கத்தில் பாசனப் பணிகளுக்குப் பயன் கிடைக்கின்ற அளவிலேயும் இருக்கும் என்பதை நாங்களும் அறிவோம். அதற்காகத்தான் மேற்கொண்டு ஒப்புதல் பெறுவதற்காக 410 இலட்சம் ரூபாய்க்கான திட்ட மதிப்பீட்டில் ஒரு திட்டத்தை மைய அரசுக்கு—மத்திய நீர் ஆணைக் குழுவிற்கு அனுப்பியிருக்கிறோம். அந்த அறிக்கை விரைவில் கிடைக்கும் என்ற நம்பிக்கை இருக்கிறது. அதில் காலதாமதமானால், நம் துறையின் அலுவலர்களை வைத்து, விரைவுபடுத்தி, விரைந்து ஒப்புதல் பெறுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளலாம். அப்படி ஒப்புதல் பெற்ற பிறகு, தொடர்ந்து செய்ய வேண்டிய பணிகளை இந்த அரசு செய்யும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. ப. ந. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேற்றில் கால் மிதித்து, செந்நெல் விதை விதைத்து, நாற்றெடுத்து, பயிராக்கி நஞ்சை வளம் கொழிக்கும் தஞ்சை மாவட்டத்தில், மகாராஜ சமுத்திரம் ஆறு, அக்னி ஆறு, கண்ணனாறு, நசுவினியாறு, பாட்டுவனாச்சி, மாலையிட்டான் வாரி, வேதபுரி ஆறு, காட்டேரிவாரி என்று இப்படிப்பட்ட பல்வேறுபட்ட காட்டாறுகள் ஓடிக் கொண்டிருக்கின்றன. நீரை சிறு அணைகளைக் கட்டித் தேக்கினால், தஞ்சை மாவட்டத்து விவசாயிகளுக்கு மேட்டூர் தண்ணீரை நம்ப வேண்டிய அவசியம் ஏற்படாது. இதை மனத்தில் கொண்டு, தமிழக அரசு, உலக வங்கி அல்லது வேறு நிறுவனங்களின் மூலம் கடன்களைப் பெற்று, மாஸ்டர் பிளான் என்று சொல்லும்

அளவில் திட்டத்தைத் தீட்டினால் அது விவசாயிகளின் பாதிப்பைக் குறைக்கும்; அங்குள்ள மக்களுக்கும் உதவியாக இருக்கும். எனவே, இதற்காக பெரிய திட்டத்தைத் தீட்டி அரசு செயல்படுத்துமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இலக்கியச் சுவையான கேள்விக்கு மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சரவர்கள் இங்கே இருந்திருந்தால் சரியான பதிலைத் தந்திருப்பார்கள். என்னைப் பொறுத்தமட்டிலும், நான் சொல்லிக் கொள்வதெல்லாம், இப்படிப்பட்ட விவரங்களையெல்லாம் அறிந்துதான் மாஸ்டர் பிளான் என்று சொல்லப்படும் பெரிய திட்டத்தை ஏற்கனவே தயாரித்து, அதில் ஒரு பகுதியாகத்தான் ஏழாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் ஒரு பகுதியை மட்டும் இந்தத் துறை மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கும் அளவிற்குத் தொடர்ந்து பணிகளை ஆற்ற வேண்டுமென்ற மத்திய அரசின் அறிவுரையை ஏற்றுத்தான் இப்பொழுது பணிகள் மேற்கொள்ளப்பட்டுக் கொண்டு வருகிறது. 36 ஆறுகள் இருக்கின்றன; இந்த 36 ஆறுகளையும் சேர்த்து—அணைகள் கட்டக்கூடிய சாத்தியக் கூறுகள் தஞ்சை மாவட்டத்திலே எங்கேயும் இல்லை என்பதை தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் அறிவார்கள். ஆகவே, அந்த முறையில் இல்லாவிட்டாலும்கூட, தேவையான இடத்தில் எங்கெங்கு முடியுமோ அங்கே தண்ணீரைத் தேங்க வைத்து தஞ்சை மாவட்டத்து மக்கள் பாசன வசதிக்காகப் பயன்படுத்திக் கொள்ளத் தக்க வகையில் நடவடிக்கைகளை இந்த அரசு தொடர்ந்து மேற்கொண்டு வருகிறது, மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. ந. சிவஞானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூத்து முதலைவாரித் திட்டம் 65 ஆண்டுக் கால சரித்திரம் படைத்தது என்று மாண்புமிகு அமைச்சரவர்கள் தெரிவித்தார்கள். அந்தச் சரித்திரம் இல்லாமல், இப்பொழுது அமைச்சரவர்கள் பதில் சொல்லும்பொழுது உலக வங்கி உதவியுடன் நிறைவேற்றப்படும் என்று சொல்லியிருக்கிறார்கள். எனக்குத் தெரிந்த தகவல், உலக வங்கி கடன் கிடைக்காது என்பது தான். காவேரி நதி நீர்ப் பங்கீட்டு ஒப்பந்தம் புதுப்பிக்கப்படாத காரணத்தால் உலக வங்கி கடன் கிடைக்காது என்று



சொல்லப்படுகிறது. ஆகவே, மைய அரசு உதவியுடன், மாநில அரசு உதவியுடன், இந்த ரூ. 4.1 கோடிக்கான திட்டத்தை நிறைவேற்றி, விரைவாக, நீண்டகாலப் பிரச்னையைத் தீர்ப்பதற்கு அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப்:** பேரவைத் தலைவர் அவர்களே, மனிதன் நம்பிக்கையில் வாழ வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறான். உலக வங்கி கடன் தராது என்று நாமாகவே கருதிக்கொள்வது சரியாக இருக்காது. உலக வங்கி, கடனைத் தருவதற்காக ஒரே ஒரு நிபந்தனைதான் விதித்திருக்கிறது. இந்தக் காவேரியைப் பயன்படுத்துகிற கர்நாடக மாநிலத்திடமிருந்துகூட இந்தத் திட்டத்திற்கான மேலெழுந்தவாரியான ஒப்புதல் பெற வேண்டுமென்பதுதான் பல்வேறு கருத்துக்களிலே ஒன்றாகும். அதற்காகத்தான் ஒப்புதலைப் பெறுவதற்காக கர்நாடக அரசோடு நாம் தொடர்பு கொண்டிருக்கிறோம். கர்நாடக அரசுக்கு இந்தத் திட்டத்திற்கு, ஒப்புதல் வழங்குவதிலே எந்த விதமான இடையூறும் கிடையாது. காரணம் காவேரியின் வசதியைப் பெறுகின்ற விவசாயப் பெருங்குடி மக்களுக்கு தேவையான தண்ணீர் கிடைக்கக்கூடிய அளவுக்குத்தான் இந்தத் திட்டம் உருவாக்கப்படுகிறதே ஒழிய, பாசனப் பகுதியை அதிகப்படுத்துவதற்காக அல்ல என்ற முறையில், கர்நாடக மாநிலம் இதற்கு அனுமதி வழங்காமல் இருக்காது என்ற நம்பிக்கையோடு, நிச்சயமாக இந்தத் திட்டம் நிறைவேறும் என்று நான் கருதுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உடுக்குறியிட்ட வினாக்கள் விடைகள் முடிவுற்றன.

### (ஆ) உடுக்குறியிடாத வினாக்கள்.

### 1. நடைபாதைக் கடைகள் மூலம் வருமானம்.

**வினா 460—திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை மாநகராட்சியால் வாடைக்கு விடப்படும் நடைப்பாதைக் கடைகளால் மாநகராட்சிக்கு 1980 முதல் 1984 முடிய எவ்வளவு வருமானம் கிடைத்துள்ளது?

(ஆ) நடையாதை கடைகள் எந்த விதிமுறை, எந்த அடிப்படையில் வாடகைக்கு விடப்படுகின்றன?

விடை—

(அ) மாநகராட்சி நடைபாதைகளில் கடைகளை கட்டி வாடைகக்கு கொடுப்பதில்லை. ஆனால் சென்னை மாநகராட்சி பல்வேறு இடங்களில் நடைபாதைகளில் உள்ள இடங்களை உடல் ஊனமுற்றோர்கள், விதவைகள், படித்து வேலை இல்லாத பட்டதாரிகள், முன்னாள் இராணுவத்தினர், பர்மா அகதிகள், ஆகியோர்களுக்கு குத்தகைக்கு விடப்பட்டிருக்கின்றன. இவ்வாறு குத்தகைக்கு விடப்பட்டதின் மூலம் 1980 முதல் 1984 வரை கிடைத்த வாடகைத் தொகை ரூ. 8,40,240.

(ஆ) சென்னை மாநகராட்சி பராமரிப்பிலுள்ள சாலையின் நடைபாதையிலுள்ள இடங்களை சென்னை மாநகராட்சி சட்டத்தின் 225 (5) பிரிவின்படி மூன்று வருடங்களுக்கு உடல் ஊன முற்றோர்களுக்கும், விதவைகளுக்கும், படித்து வேலை இல்லாத பட்டதாரிகளுக்கும்; பாத அணி செய்வோர்களுக்கும், பெட்டிக் கடை வைத்து சிறு தொழில் செய்ய இயக்குநர், சமூகநலத்துறை, இயக்குநர், வேலைவாய்ப்புத் துறை, தலைமை நிர்வாக அதிகாரி, தமிழ்நாடு காதி, கிராம கைத்தொழில் வாரியம் ஆகியோரின் பரிந்துரையின்மூலம் குத்தகைக்கு விடப்படுகின்றன. மேலும் மேற்கண்ட துறைகளின் மூலம் பரிந்துரைக்கப்பட்ட மனுக்களில் கேட்கப்பட்ட இடத்தை சம்பந்தப்பட்ட மாநகராட்சி அலுவலர், ஆய்வு செய்து, போக்குவரத்திற்கு எவ்வித இடையூறும் இல்லை என அறிந்த பிறகு மனுதாரர் கேட்ட இடத்தை சென்னை மாநகராட்சி சிறப்பு அதிகாரி நகரமைப்பு அபிவிருத்தி வரிவிதிப்பு நிலைக்குழுக்கள் மற்றும் மன்றத்தின் ஒப்புதல் பெற்று மனுதாரருக்கு இட ஒதுக்கீடு ஆணை பிறப்பிக்கப்படுகிறது. நடைபாதைகளில் போக்குவரத்து நாளுக்குநாள் அதிகரித்து வருவதை முன்னிட்டு பெட்டிக்கடைகள் நடத்த இடத்தை குத்தகைக்கு விடுவது 1-5-1985- முதல் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

**2. தஞ்சாவூர் மாவட்டத்தில் குடிமனைப்பட்டா கேட்டு வரப் பெற்ற மனுக்கள்.**

வினா 1457—திரு. கோ. வீரய்யன்: மாண்புமிகு நிதியமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

**1-1-1980 முதல் 31-3-1985 முடிய தஞ்சாவூர் மாவட்டத்தில் குடிமனைப்பட்டா கேட்டு அரசுக்கு வந்துள்ள மனுக்கள் எத்தனை? தாலுக்கா வாரியாக.**



விடை—

தஞ்சாவூர் மாவட்டத்தில் 1—1—80 முதல் 31—3—85 முடிய குடிமனைப் பட்டா கேட்டு 43,748 மனுக்கள் வரப்பெற்றன. தாலுக்கா வாரியாக வரப்பெற்ற மனுக்களின் விவரம் கீழே வருமாறு:—

| | | |
|---|---|---|
| 1. | தஞ்சாவூர் .. | 3,404 |
| 2. | ஒரத்தநாடு .. | 1,604 |
| 3. | திருவையாறு .. | 3,163 |
| 4. | கும்பகோணம் .. | 1,717 |
| 5. | திருவிடைமருதூர் .. | 1,658 |
| 6. | பாபநாசம் .. | 1,479 |
| 7. | வலங்கைமான் .. | 1,093 |
| 8. | மயிலாடுதுறை .. | 1,347 |
| 9. | சீர்காழி .. | 1,709 |
| 10. | தரங்கம்பாடி .. | 1,366 |
| 11. | நாகப்பட்டினம் .. | 900 |
| 12. | திருவாரூர் .. | 1,382 |
| 13. | நன்னிலம் .. | 1,360 |
| 14. | குடவாசல் .. | 1,426 |
| 15. | மன்னார்குடி .. | 2,499 |
| 16. | திருத்துறைப்பூண்டி .. | 5,316 |
| 17. | வேதாரண்யம் .. | 1,476 |
| 18. | பட்டுக்கோட்டை .. | 5,573 |
| 19. | பேராமங்கலம் .. | 2,947 |
| 20. | பேராவூரணி .. | 2,329 |
| | மொத்தம் .. | 43,748 |

[1986 மார்ச் 31

3—

வனவிலங்கு சரணாலய அபிவிருத்திக்கு அந்நிய உதவிகள்.

வினா 1746—திரு. குமரி அனந்தன்: மாண்புமிகு செய்தி மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வனவிலங்கு சரணாலய அபிவிருத்திக்கு அந்நிய உதவிகள் கிடைக்கின்றனவா?

(ஆ) ஆம் எனில் எவ்வளவு?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

4—

தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரிக்கு தலைவர் காமராசர் பெயர் வைத்தல்.

வினா 1878—திரு. கி. கிருஷ்ணமூர்த்தி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரிக்கு தலைவர் காமராசர் பெயரை வைக்கும் கருத்தாரு ஏதும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.



1986 மார்ச் 31]

5—

களங்கை ஆற்றில் கட்டப்பட்ட அணையின் மதகுகள்.

வினா 1940—திரு. மெ. ஆண்டி அம்பலம்: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

(அ) நத்தம் தொகுதி, சானார்ப்பட்டி யூனியன், மருதூத்து கிராமம் புது ஆவளிப்பட்டியில் கரந்தைமலையிலிருந்து களங்கை ஆற்றில் கட்டப்பட்ட அணையின் கதவுகள் பழுதடைந்து உள்ளது அரசுக்கு தெரியுமா?

(ஆ) ஆம் எனில், பழுதுபார்த்து பாசன வசதி செய்துதர அரசு முன்வருமா?

விடை—

(அ) ஆம்.

(ஆ) நத்தம் தொகுதி சானார்பட்டி ஊராட்சி ஒன்றியம் புது ஆவளிப்பட்டியில் கரந்தை மலையிலிருந்து களங்கை ஆற்றில் கட்டப்பட்டுள்ள அணையின் மதகுகள் பழுதுபார்க்கும் பணிக்கான மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளன. பணி விரைவில் மேற்கொள்ளப்பட்டு முடிக்கப்படும்.

6—

வடக்கு ஆவாரங்காடு மற்றும் மேலமங்கலத்தில் பாலர் பள்ளிகள்.

வினா 2140—திரு. ஆர். எஸ். ஆறுமுகம்: மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஓட்டப்பிடாரம் வட்டம், ஓட்டப்பிடாரம் ஒன்றியம் வடக்கு ஆவாரங்காடு பொது மக்களிடமிருந்தும் கயத்தாறு ஒன்றியம் மேலமங்கலம் பொது மக்களிடமிருந்தும் பாலர் பள்ளிகள் திறப்பதற்கான கோரிக்கைகள் வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அவைகள் மீது அரசு எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் என்ன?

விடை—

(அ) ஓட்டபிடாரம் ஒன்றியம் வடக்கு ஆவராங்காடு பொதுமக்களிடமிருந்து பாலர் பள்ளி திறக்க கோரிக்கை ஏதும் வரவில்லை.

மேலமங்கலம் கிராமப் பொது மக்களிடமிருந்து பாலர் பள்ளி திறக்க கோரிக்கை வந்துள்ளது.

(ஆ) வடக்கு ஆவராங்காடு மற்றும் மேலமங்கலம் ஆகிய கிராமங்களில் புதிய குழந்தைகள் மையங்கள் திறக்க தேவையான குழந்தைகளும், இடவசதியும் இல்லாததால் அவ்விடங்களில் புதிய மையங்கள் திறக்கப்படவில்லை.

7—

**கே. புதுப்பட்டி அரசு மருத்துவமனைக் கட்டிடம்.**

வினா 2149—திரு. த. புஷ்பராசு: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டை மாவட்டம், கே. புதுப்பட்டி அரசு மருத்துவமனைக் கட்டிடத்தை பழுதுபார்க்கவும் விரிவுப் படுத்தவும் திட்டம் உள்ளதா?

விடை—

புதுக்கோட்டை மாவட்டம், கே. புதுப்பட்டி அரசு மருத்துவமனைக் கட்டிடத்தில் தற்போதுள்ள சென்னை அமைப்பான மேற்கூறை தளத்தை கான்கிரீட் மேற்கூறைத் தளமாக மாற்ற வேண்டியும் தண்ணீர் விநியோகத்தில் ஏற்பட்டுள்ள செப்பனிடுகளை நிறைவேற்றவும் ரூ. 86,500-க்கான செலவு மதிப்பீடுகள் அரசிற்கு வரப்பெற்று பரிசீலனையில் உள்ளன. அம்மருத்துவமனையை விரிவுபடுத்தும் திட்டம் ஏதும் தற்சமயம் அரசின் பரிசீலனையில் இல்லை.



8—

**தரங்கம்பாடியை சுற்றுலா மையமாக அறிவித்தல்.**

வினா 2287—திரு. என். விஜயபாலன்—மாண்புமிகு செய்தி மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தரங்கம்பாடியை சுற்றுலா மையமாக அறிவித்து, ஆக்கப்பணிகளை அரசு மேற்கொள்ளுமா?

விடை—

தற்சமயம் இல்லை.

9—

**மேலூர் அரசு மருத்துவமனையில் படுக்கைகளின் எண்ணிக்கை.**

வினா 2316—திரு. க. வே. வீரானம்பலம்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேலூர் தொகுதி மேலூர் அரசு மருத்துவ மனையில் பிரசவ வார்டில் படுக்கைகளின் எண்ணிக்கைகளை அதிகப்படுத்த செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் விவரம் என்ன?

விடை—

(அ) மற்றும் (ஆ) தற்சமயம் இல்லை.

10—

**தஞ்சை மாவட்டத்தில் காடுகள் வளர்த்தல்.**

வினா 2435—திரு. எஸ். இராசாராமன்: மாண்புமிகு செய்தி மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சமுதாயக் காடுகள் வளர்க்கும் திட்டத்தின்கீழ் தஞ்சை மாவட்டத்தில் காடுகள் வளர்க்கப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், எங்கெங்கு எவ்வளவு பரப்பில் என்னென்ன மரங்கள் வளர்க்கப்படுகின்றன?

விடை—

(அ) ஆம்.

(ஆ) நடப்பாண்டில் புறம்போக்கு சமவெளி மற்றும் ஏரி குளக்கரைகளில் சுமார் 500 எக்டேரில் கருவேலன் மற்றும் வெல் வேலன் மரங்களும், சாலையோரம் மற்றும் ஆற்றுக் கால்வாய் கரைகளில் சுமார் 127 கி.மீ. தூரத்தில் புளி மற்றும் புங்கன் முதலிய மரங்கள் நடவும் உத்தேசிக்கப்பட்டுள்ளன.

11—

### தஞ்சை இராசா மிராசுதார் அரசினர் மருத்துவமனை.

வினா 2455—திரு. எஸ். இராசாராமன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை இராசா மிராசுதார் அரசினர் மருத்துவ மனையில் எக்ஸ்ரே பிரிவில் போதிய அளவுக்கு எக்ஸ்ரே இல்லாமல் இருப்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதைப்போக்க அரசு தீவிர நடவடிக்கை எடுக்க முன் வருமா?

விடை—

தஞ்சை இராசா மிராசுதார் அரசினர் மருத்துவமனையில் எக்ஸ்ரே பிரிவில் தேவையான போட்டோ பிலிம்ஸ், டெவலப்பர் மற்றும் பிக்சர் ஆகியவைகள் மருத்துவ நிலையத் தலைவரால் திருவாளர் இந்துஸ்தான் போட்டோ பிலிம்ஸ் அவர்களிடமிருந்து நேரடியாகவும்; இயக்குநர் (விநியோகம் மற்றும் வழங்குதல்) மூலமாகவும் ரேட் காண்டிராக்ட் முறைப்படி வாங்கப்பட்டு வருவதால் இவ்வினங்கள் போதிய அளவு உள்ளன என்று மருத்துவக் கல்வி இயக்குநர் தெரிவித்துள்ளார்.



12—

### வேலை வாய்ப்பற்றோர் நிவாரணத் திட்டம்

வினா 2751—திரு. கி. கிருஷ்ணமூர்த்தி: மாண்புமிகு மது வாழ்வு மற்றும் வேலைவாய்ப்புத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

30—4—1985 முடிய படித்து வேலை வாய்ப்பற்றோருக்கு பண உதவித் திட்டத்தின் கீழ் திட்டம் துவக்கப்பட்டு எத்தனை பேருக்கு எவ்வளவு தொகை வழங்கப்பட்டுள்ளது? மாவட்ட வாரியாக?

விடை—

30—4—1985 வரை வேலைவாய்ப்பற்றோர் நிவாரணத் திட்டத்தின் கீழ் திட்டம் துவக்கப்பட்ட முதல் பயனடைந்தவர்களின் எண்ணிக்கை 62,269 ஆகும். இவர்களுக்கு வழங்கப்பட்ட தொகை ரூபாய் 4,23,16,852 ஆகும். மாவட்ட வாரியாக பயனடைந்தவர்கள் வழங்கப்பட்ட தொகை முறையே இணைப்பில் * கொடுக்கப்பட்டுள்ளது.

13—

### மயிலாப்பூர் சித்திரக் குளத்தைப் புதுப்பித்தல்

வினா 2826—திருமதி பா. வளர்மதி— மாண்புமிகு செய்தி மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மயிலாப்பூரில் உள்ள சித்திரைக் குளத்தைப் புதுப்பிக்க அரசிடம் திட்டம் உள்ளதா?

விடை—

சென்னை மயிலாப்பூர் அருள்மிகு ஆதிகேசவப் பெருமாள் மற்றும் பேயாழ்வார் திருக்கோயிலுக்குச் சொந்தமான சித்திரைக் குளத்தினைப் புதுப்பிக்கும் திட்டம் இந்து சமய அறநிலையத் துறையின் ஆய்வில் உள்ளது. இத்திட்டம், மழைக்காலத்தில்

---

*779—781ம் பக்கங்களில் I இணைப்பு ஆக அச்சிடப் பெற்றுள்ளது.

[1986 மார்ச் 31

சித்திரைக் குளத்தைச் சுற்றியுள்ள தெருக்களில் ஓடும் தண்ணீரும், அத்தெருக்களில் உள்ள வெள்ளக் கால்வாய்களில் ஓடும் தண்ணீரும் சித்திரைக் குளத்தில் நிரம்ப வழிவகுக்கிறது.

14—

### காடுகளை அழிப்பதற்கான குத்தகை

வினா 3035—திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு செய்தி மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

காடுகளை அழிக்கும் குத்தகைகளைத் தனியாருக்குக் கொடுப்பதை விடுத்து அரசே ஏற்று அழிக்கும் திட்டம் ஏதும் உள்ளதா?

விடை—

வினாவின் அடிப்படைக் கருத்தே தவறானது. ஏனெனில் வனங்களை 'அழிக்கும்' திட்டமே கிடையாது. இயற்கை காடுகள் எதுவும் மரங்கள் வெட்ட அரசால் குத்தகைக்கு விடப்படுவதில்லை. இயற்கைக் காடுகளில் விறகுக் கூப்புக்கள் குத்தகைக்கு விடுவதுகூட, 1982-ம் ஆண்டிலிருந்து நிறுத்தப்பட்டு விட்டது. மூங்கில் கூப்புக்களும் தனியாருக்கு குத்தகைக்கு விடப்படுவது இல்லை. வனத் துறையினரால் உண்டாக்கப்பட்ட மரக்கூழ் மர வகைகளும், அதுவும் பல இடங்களில் முன்பு புல்வெளி நிலங்களாக இருந்த இடத்தில் நட்ட மரங்கள், மற்றும் கூப்புக்கள் Coupes ) விஞ்ஞான முறையில் (According o scientific working plant ) வனத்துறையை நம்பியுள்ள தொழிலாளர்களுக்குத்தான் திட்டப்படி அரசால் ஒதுக்கீடு செய்யப்படுகிறது. மற்றபடி காப்புக் காடுகளில் உள்ள சவுக்குத் தோட்டங்களும், சமூக நலக்காடு திட்டத்தின் கீழ் ஏரி, குளம், முதலான பகுதிகளில் உண்டாக்கப்படும் கிராம நலத் தோட்டங்களும் மட்டுமே பொது ஏலம் மூலம் குத்தகைக்கு விடப்படுகின்றன. இக்கிராம நலத் தோட்டங்களும் அருகாமையில் உள்ள உள்ளூர் கூட்டுறவு சங்கம்/பஞ்சாயத்து/கிராம நலக் கமிட்டி ஆகியோர் தேவையில்லை என தெரிவித்த பின்னரே பொது ஏலம் மூலம் குத்தகைக்கு விடப்படுகின்றது.



1986 மார்ச் 31]

15—

### சென்னை கடற்கரையில் பொதுக் கூட்டங்களுக்கு தனி அரங்கம்.

வினா 3107—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை கடற்கரையில் அரசியல் கட்சிகள் பொதுக் கூட்டம் நடத்த வசதியாக மேலும் ஒரு அரங்கம் கட்டும் செயற்குறிப்பு ஏதும் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அது பற்றிய விவரம் யாது?

விடை—

இல்லை.

16—

### பிச்சைக்காரர்கள் மறுவாழ்வு நிலையங்கள்

வினா 3119—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பிச்சைக்காரர் மறுவாழ்வு நிலையத்திலிருந்து வெளியே வருபவர்கள் மீண்டும் பிச்சை எடுக்காமலிருக்க அரசு மேற்கொள்ளும் முயற்சிகள் என்ன?

(ஆ) பிச்சைக்காரர் மறுவாழ்வு நிலையங்கள் தமிழகத்தில் எங்கு உள்ளன?

(இ) மாவட்டந்தோறும் பிச்சைக்காரர் மறுவாழ்வு நிலையம் அமைக்கப்படுமா?

விடை—

(அ) பிச்சைக்காரர்கள் மறுவாழ்வு நிலையத்திலிருக்கும் போதே அவர்களுடைய தொழுநோய்க்கு சிகிச்சை அளித்தும் மேலும் தேவையானவர்களுக்கு ரண சிகிச்சை மூலம் தொழுநோயினால் பாதிக்கப்பட்ட, கை, கால்களும் குணப்படுத்தப்பட்டும் வருகிறது. மறுவாழ்வு இல்லங்களில் இருக்கும் தொழு

[1986 மார்ச் 31

நோய்ப் பிச்சைக்காரர்களுக்கு தேவையான சிகிச்சை அளிப்பதுடன் கீழ்க்கண்ட கைத்தொழில்களில் பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன :—

1. பாய் முடைதல்.
2. செருப்பு (காலணி) தைக்கும் தொழில்.
3. துணி நெய்தல்.
4. விவசாயத் தொழில்.
5. தையற் தொழில்.
6. தச்சுக்கூட தொழில்.
7. அம்பர் சர்க்கா மூலம் நூல் நூற்றல்.
8. தபால் கவர்கள் தயாரித்தல்.
9. லேத் தொழிலில் பயிற்சி அளித்தல்.
10. மண்பாண்டம் தயாரிக்கும் பயிற்சி அளித்தல்.

மேற்கண்ட தொழிலில் சேகரிக்கப்படும் சம்பளம் அவர்கள் விடுதலையாகும்போது இல்லவாசிகளுக்கு மொத்த தொகையாக வழங்கப்படுகிறது. இந்தத் தொகையை முதலீடாக பிச்சைக்காரர்கள் வைத்து சொந்த ஊருக்கு சென்று தனக்குத் தெரிந்த தொழிலை சுயமாக செய்கிறார்கள். இல்லவாசிகள் எந்த மாவட்டத்தைச் சார்ந்தவரோ அம்மாவட்ட ஆட்சித் தலைவர் மூலம் வங்கிக் கடன் பெற்று பெட்டிக்கடை, கோழிப்பண்ணை, தையல்கடை, சைக்கிள் கடை, முடி திருத்தம் செய்யும் நிலையம் போன்ற தொழில்களை ஆரம்பிக்க உதவிகள் செய்யப்படுகின்றன. இதுவன்றி, விடுதலையான பிச்சைக்காரர்களின் திறமைக்கு ஏற்றவாறு அரசு கடன் வழங்கி அவர்களை மீண்டும் பிச்சை எடுக்காத அளவுக்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இன்னும் நிர்வாக அலுவலர்கள் உதவியுடன் தென்னை நார் கயிறு திரிக்கும் தொழில் கூடம், மற்ற தொழிற் கூடங்களிலும் அலுவலகங்களிலும் வேலையில் சேர்வதற்கு உதவியும் செய்யப்படுகிறது. காட்பாடி, திருச்சி மற்றும் சென்னை ஆகிய ஊர்களில், பரனூர் அரசு மறுவாழ்வு இல்லத்தின் லேத் தொழிற் கூடத்தில் பயிற்சி பெற்றவர்கள் வேலைக்கு அமர்த்தப்படுகிறார்கள். பிச்சைக்காரர்கள் விடுதியிலிருந்து குணமடைந்தவர்களையும், ஆர்வமுள்ளவர்களையும் மாவட்ட மருத்துவ அலுவலர் சுகாதாரப் பணியாளர்களாக தேர்வு செய்து பணியில் நியமிக்கிறார்கள்.



1986 மார்ச் 31]

(ஆ) பிச்சைக்காரர்கள் மறுவாழ்வு இல்லங்கள் கீழ்க்கண்ட ஊர்களில் தற்போது இயங்கி வருகின்றன :—

1. பரனூர், செங்கை மாவட்டம்.
2. உளுந்தூர்ப்பேட்டை, தென் ஆற்காடு மாவட்டம்.
3. பர்கூர், தர்மபுரி மாவட்டம்.
4. புதுக்கோட்டை, புதுக்கோட்டை மாவட்டம்.
5. மனையேறிப்பட்டி, தஞ்சை மாவட்டம்.
6. யா. புதுப்பட்டி, மதுரை மாவட்டம்.
7. மல்லவாடி, வட ஆற்காடு மாவட்டம்.
8. தேவியாக்குறிச்சி, சேலம் மாவட்டம்.
9. வின்னப்பள்ளி, பெரியார் மாவட்டம்.
10. செல்லியம்பட்டி, தர்மபுரி மாவட்டம்.
11. மேல்பாக்கம், செங்கை மாவட்டம்.

(இ) மாவட்டம் தோறும் பிச்சைக்காரர்கள் மறுவாழ்வு இல்லம் அமைப்பது குறித்த செயற்குறிப்பு ஏதும் தற்போது இல்லை

17—

**மதுரை மீனாட்சியம்மன் ஆலயத்திலுள்ள பொற்றாமரைக்குளம்.**

வினா 3254—திரு. கே. முத்துவேல் : மாண்புமிகு செய்தி மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அருள்மிகு மதுரை மீனாட்சி அம்மன் ஆலயத்தில் அமைந்துள்ள பொற்றாமரைக் குளத்தில் தண்ணீர் நிரந்தரமாக இருக்கத்தக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டு பொற்றாமரை இன்றும் மிதந்து கொண்டிருக்கிறதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

விடை :—

(அ) மற்றும் (ஆ) அருள்மிகு மதுரை மீனாட்சி அம்மன் ஆலயத்தில் உள்ள பொற்றாமரைக் குளத்தில் நிரந்தரமாகத் தண்ணீர் இருக்க ரூபாய் 68,000 செலவில் மதுரை மாநகராட்சி

மூலம் தினம் 10,000 லிட்டர் விதம் தண்ணீர் நிரந்தரமாக பெற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மேலும் திருக்குளத்திற்கு சிறப்பு மராமத்துப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வேலைகள் நடைபெறுகின்றன. இந்த வேலைகள் முடிந்த பின்னரே குளத்தில் பொற்றாமரையின் மாதிரி மிதக்க விடப்படும்.

18—

**கூனி மலைப் பகுதிக்கு கன்னடியன் கால்வாய் புதிய மடை.**

**வினா 3286—வேடசந்தூர் திரு. வி. பி. பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம் கூனியூர் கிராமத்தில் கன்னடியன் கால்வாய்ப் பகுதியில் மிகவும் மேடான கூனி மலைப்பகுதி பயன் பெறும் வகையில் புதிய மடை ஒன்று அமைத்துத் தரும் திட்டம் ஏதும் ஆய்வில் உள்ளதா?

விடை—

இல்லை.

19—

**புதுக்குளம் கால்மேல்குளம் மராமத்துப் பணி.**

**வினா 3291—வேடசந்தூர் திரு. வி. பி. பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

"திருநெல்வேலி மாவட்டம், பாப்பாக்குடி கிராமம், புதுக்குளம் முக்கூடல் பகுதி புதுக்குளம் கால்மேல்குளம் மராமத்துப் பணி எப்போது மேற்கொள்ளப்படும்?"

விடை—

"திருநெல்வேலி மாவட்டத்தில், பாப்பாக்குடி கிராமத்திலுள்ள புதுக்குளம் கால்மேல்குளத்திற்கு மராமத்துப்பணிக்கான மதிப்பீடு ரூபாய் 42,000-க்கு தயார் செய்யப்பட்டுள்ளது.



நிதி நிலைப்பற்றாக்குறையினால் இவ்வாண்டில் இப்பணி எடுத்துக் கொள்ளப்படவில்லை. என்றாலும் இப்பணி அடுத்த நிதி ஆண்டில் மேற்கொள்ளப்படும்.

20—

**சென்னை மெரினா கடற்கரையில் குடிநீர் குழாய்கள் அமைத்தல்.**

**வினா 3316—வேடசந்தூர் திரு. வி. பி. பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னை மெரினா கடற்கரையில் பொது மக்கள் வசதிக்கென குடிநீர் குழாய்கள் அமைக்கும் உத்தேசம் உள்ளதா?

விடை—

சென்னை மெரினா கடற்கரையில் பொது மக்கள் வசதிக்கென மூன்று இடங்களில் குடிநீர் குழாய் அமைப்புடன் கூடிய நீர் ஊற்றுக்கள் உள்ளன. எனவே, மேற்கொண்டு குடிநீர் குழாய் அமைப்பு நீர் ஊற்று ஏற்படுத்த வேண்டிய அவசியமில்லை என கருதப்படுகிறது.

21—

**வக்ப் நிறுவனங்களின் சொத்துக்களுக்காக தொடரப்பட்ட வழக்குகள்.**

**வினா 3328—வேடசந்தூர் திரு. வி. பி. பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வக்ப் நிறுவனங்களுக்குச் சொந்தமான நிலங்கள் சொத்துக்களைத் திரும்பப் பெறுவதற்கு தொடரப்பட்ட வழக்குகள் எத்தனை?

(ஆ) அதில் முடிவடைந்த வழக்குகள் எத்தனை?

(இ) நீதிமன்றத்தில் இன்னும் தொடர வேண்டிய வழக்குகள் எத்தனை?

விடை—

(அ) 11,077.

(ஆ) 5,326.

(இ) 1,005.

22—

**திருநெல்வேலி மாவட்டத்தில் காற்றரிப்பு தடுப்பு திட்டத்தில் மரக் கன்றுகளை பராமரிக்கும் தினக்கூலிகள்.**

வினா 3438—திரு. எஸ். என். இராமசாமி: மாண்புமிகு செய்தி மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டத்தில் காற்றரிப்பு தடுப்பு திட்டத்தில் மரக் கன்றுகளை பராமரிக்கும் தினக் கூலிகளுக்கு மாவட்ட வருவாய் அதிகாரிகளால் நிர்ணயிக்கப்பட்ட தினக்கூலி எவ்வளவு?

(ஆ) நிர்ணயிக்கப்பட்ட தொகை வழங்கப்படுகிறதா?

விடை—

திருநெல்வேலி வன மண்டலத்தைப் பொறுத்து, காற்றரிப்புத் திட்டத்தின் கீழ் மரக்கன்றுகள் பராமரிக்கப்படவில்லை. எனினும், வனத்துறையைப் பொறுத்தமட்டில் சூழ்நிலைக்கு ஏற்றவாறும் வேலைகளு மற்றும் திறன்களை கொண்டு வனப் பாதுகாவலரால் ஒப்பளிக்கப்படும் வன விகிதப் பட்டியலில் F.S.R. கண்டவாறு ஒவ்வொரு வேலைக்குத் தகுந்தவாறு கூலி ஆட்களை வேலைக்கு அமர்த்தி கூலிகள் அளிக்கப்பட்டு வேலைகள் முடிக்கப்பட்டு வருகின்றன. 1985-86 ஆம் ஆண்டு வன விகிதப் பட்டியல்படி கீழ்க்கண்டவாறு கூலி விகிதம் அளிக்கப்பட்டு வருகின்றது. மாவட்ட வருவாய் அதிகாரிகளால் அம் மாவட்ட சூழ்நிலைக்குத் தக்கவாறு, வளங்களைத் தவிர்த்து, மாவட்ட ஆட்சியாளரால் நிர்ணயிக்கப்படுகின்றன. நிர்ணயிக்கப்படுகிற தினக் கூலி விகிதங்கள் வனத்துறை வேலைகட்கு பொருந்துவதில்லை. அதனைக் கடைப்பிடிப்பதும் இல்லை.



| | தினக் கூலி விகிதம். |
|---|---|
| **திருநெல்வேலி மாவட்டம்.** | |
| முதல்தர கூலி ஆட்கள் | ரூ. 11.00 |
| இரண்டாம்தர கூலி ஆட்கள் | ரூ. 9.00 |
| மூன்றாம்தர கூலி ஆட்கள் | ரூ. 8.00 |

23—

**நெல்லை மாவட்டம் ஆத்தூரில் அணை கட்டும் திட்டம்.**

வினா 3442—திரு. எஸ். என். இராமசாமி: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நெல்லை மாவட்டம் ஆத்தூரில் ஓர் அணை கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அத்திட்டம் எப்போது எடுத்துக் கொள்ளப்படும்?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

24—

**குற்றாலம் அருவிக் கரைகளை சீர்படுத்துதல்.**

வினா 3485—திரு. டி. ஆர். வேங்கடரமணன்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குற்றாலத்தின் அருவிக் கரைகளில் ஏற்பட்ட இடிபாடுகள் அகற்றப்பட்டு சீர்படுத்தப்பட்டு விட்டதா?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

விடை—

(அ) ஆம்.

(ஆ) 4—3—1984 அன்று போருவியில் வந்த வெள்ளத்தின் காரணமாக போருவி உடைமாற்றும் அறை மற்றும் சுற்றுப்புறப் பகுதிகள் சேதம் ஏற்பட்டது. போருவி உடைமாற்றும் அறையை இடித்துவிட்டு மேற்படி வேலை பொதுப்பணித்துறையிடம் ஒப்படைக்கப்பட்டு ரூ. 1.85 இலட்சம் மதிப்பீட்டில் புதிய உடைமாற்றும் அறை கட்டப்பட்டு கட்டிடம் முடியும் தருவாயில் உள்ளது. மேற்படி பழைய கட்டிடத்திலிருந்து இடித்து எடுக்கப்பட்ட கழிவுகளும் மற்றும் சுற்றுப்புறப் பகுதிகளில் உள்ள சேதமாக்கப்பட்ட இடிபாடுகளும் அகற்றப்பட்டு சீர் செய்யப்பட்டுள்ளது.

25—

சாவாமேடு கிராமம் அருகிலுள்ள பாலம்.

வினா 3515—திரு. எம். இராசரத்தினம்: மாண்புமிகு போக்குவரத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விழுப்புரத்திலிருந்து கண்டமானடி செல்லும் சாலையில் சாவாமேடு கிராமம் அருகில் உள்ள பாலம் பழுதடைந்து போக்குவரத்து பாதிக்கப்பட்டிருப்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அது குறித்து அரசு எடுத்துள்ள நடவடிக்கை யாது?

விடை—

(அ) மற்றும் (ஆ) சாவாமேடு கிராமம் அருகே அமைந்துள்ள வலுவிழந்த குழாய் பாலத்தை வலுவான பாலமாகக் கட்டுவதற்காக பிரேரணைகள் பரிந்துரை செய்யப்பட்டு தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் அங்கீகாரம் பெறப்பட்டு தற்சமயம் மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு வருகின்றன. மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்டதும் மேற்படி பாலம் வலுவான பாலமாகக் கட்டப்படும்.



26—

கூடலூர் வட்டத்திலுள்ள மலையாள மொழி கற்றுத்தரும் பள்ளிகள்.

வினா 3581—திரு. கே. உச்சி: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீலகிரி மாவட்டம் கூடலூர் வட்டத்தில் எத்தனை பள்ளிகளில் மலையாள மொழி கற்றுத் தரப்படுகிறது?

(ஆ) மலையாள ஆசிரியர்கள் இல்லாத பள்ளிகள் ஏதேனும் உண்டா?

(இ) ஆம் எனில், காலியிடங்களை நிரப்ப மேற்கொண்ட நடவடிக்கை யாது?

விடை—

(அ) 45 பள்ளிகளில் கற்றுத் தரப்படுகிறது.

(ஆ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

27—

கோவில்பட்டி நகராட்சிப் பகுதிக்கு சோடியம் விளக்குகள்.

வினா 4106—திரு. ஆர். ரெங்கசாமி: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவில்பட்டி நகராட்சியில் சோடியம் விளக்கு போடும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது போடப்படும்?

விடை—

(அ) மற்றும் (ஆ) இல்லை.

28—

கள்ளிப்பட்டியில் பெண்கள் கழிப்பிடம் கட்டுதல்.

வினா 4138—திரு. ஈ. வே. கி. ச. இளங்கோவன்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரியார் மாவட்டம் டி. என். பாளையம் ஒன்றியத்தில் உள்ள கள்ளிப்பட்டியில் பெண்கள் கழிப்பிடம் கட்டப்படுமா?

(ஆ) ஆம் எனில், எந்த இடத்தில் கட்டப்படும்?

விடை—

(அ) ஆம்.

(ஆ) கள்ளிப்பட்டி ஊராட்சி அலுவலக வளாகத்துக்கு அருகாமையில் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

29—

## தொழிலாளர் நல அமைச்சர்கள் மாநாட்டில் எடுக்கப்பட்ட முடிவுகள்.

வினா 4163—திரு. கு. ரமணி: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மே மாதம் (1985) 11, 12 தேதிகளில் டில்லியில் நடைபெற்ற மாநில தொழிலாளர் நல அமைச்சர்கள் மாநாட்டில் எடுக்கப்பட்ட முடிவுகளின் விவரம் இவ்வரசுக்கு வந்துள்ளதா?

(ஆ) தொழிலாளர்களுக்கு போனஸ் கொடுக்க ரூ. 1,600 உச்ச வரம்புள்ளதை நீக்கிவிட மாநாட்டில் ஒப்புதல் ஏற்பட்டுள்ளதா?

விடை—

(அ) ஆம், வந்துள்ளது.

(ஆ) இது பற்றி மாநாட்டிற்கான பொருள்வகைப் பட்டியலில் சேர்க்கப்படாததால், இந்தப் பொருள் மாநாட்டில் பேசப்படவில்லை.



30—

## சொக்கம்புதூர்—பொன்னையராஜபுரம் சாலை.

வினா 4345—திரு. ஆ. நடராசன்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பேரூர் தொகுதி கோவை மாநகராட்சிக்கு உட்பட்ட சொக்கம்புதூர்—பொன்னைராஜபுரத்திற்கு செல்லுகிற பாதையை அகலப்படுத்த திட்டம் உண்டா?

(ஆ) ஆம் எனில், அதன் மதிப்பு என்ன?

விடை—

(அ) மற்றும் (ஆ) நகரமைப்புத் திட்டம் 17 மற்றும் 18-ன் கீழ் பொன்னைராஜபுரத்திலிருந்து சொக்கம் புதூர் செல்லும் தற்சமயம் உள்ள பாதையை 60 அடி அகலமாக அகலப்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் தற்போது தயாரிப்பு நிலையில்தான் உள்ளது. விதிமுறைகள்படி தயாரிக்கப்பட்டு நகர் மற்றும் ஊரமைப்பு இயக்குநரின் அங்கீகாரம் பெற்ற பின்னர் மேலே குறிப்பிடப்பட்ட சாலையை விரிவுபடுத்த இயலும்.

31—

## சொக்கம்புதூர் பள்ளிக் கட்டிடம்.

வினா 4346—திரு. ஆ. நடராசன்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பேரூர் தொகுதி கோவை மாநகராட்சிக்குட்பட்ட சொக்கம்புதூரில் உள்ள பள்ளிக் கட்டிடம் பழுதடைந்து உள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில் அதன் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை யாது?

விடை—

(அ) மற்றும் (ஆ) ஆம். சொக்கம்புதூரில் உள்ள துவக்கப் பள்ளிக் கட்டிடம் பழுதுபார்த்தல் பணி தற்போது முடிக்கப்பட்டு விட்டது. மேலும் இந்தப் பள்ளிக்குப் பாதுகாப்பாக மதிற்சுவர் கட்டும் பணியும் செய்து முடிக்கப்பட்டுள்ளது.

32—

**மதுக்கரை ஒன்றியத்தில் தன்னிறைவுத் திட்டப் பணிகள்.**

வினா 4349—திரு. ஆ. நடராசன்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பேரூர் தொகுதி மதுக்கரை ஒன்றியத்தில் தன்னிறைவுத் திட்டத்தில் நிறைவேற்றிய பணிகள் எவை?

(ஆ) அதன் மதிப்பீடு என்ன?

விடை—

(அ) மற்றும் (ஆ) பேரவை முன் விவர அறிக்கை * ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

33—

**பொன்னமராவதியில் நெசவாளர்களுக்கு வீடு கட்டிக்கொடுக்கும் திட்டம்.**

வினா 4596—திரு. த. பஷ்பராசு: மாண்புமிகு ஆயத்தீர்வை, கைத்தறி மற்றும் நெசவாலைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை மாவட்டம் பொன்னமராவதியில் நெசவாளர்களுக்கு வீடுகட்டிக் கொடுக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

* 782-ம் பக்கத்தில் இணைப்பு II ஆக அச்சிடப் பெற்றுள்ளது.



விடை—

(அ) இல்லை.

(ஆ) இவ் வினா எழவில்லை.

34—

**சென்னைக்கு பேருந்துகள் விடும் போக்குவரத்துக் கழகங்கள்.**

வினா 4639—திரு. மு. இராமநாதன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாவட்டங்களில் இயங்கும் ஒவ்வொரு போக்குவரத்துக் கழகமும் சென்னைக்கு பேருந்துகள் விடுகின்றனவா?

(ஆ) ஆம் எனில், எந்தெந்த இடங்களில் எந்தெந்த கழகங்கள் பேருந்துகள் விடுகின்றன?

விடை—

(அ) ஆம்.

(ஆ) அவ்விவரங்கள் பின் வருமாறு:

| போக்குவரத்துக் கழகம். | பேருந்து எண்ணிக்கை. | வழித்தடம். |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1 கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகம். | 2 | திருநெல்வேலி-சென்னை. |
| 2 மருது பாண்டியர் போக்குவரத்துக் கழகம். | 2 | காரைக்குடி-சென்னை. |
| 3 நேசமணி போக்குவரத்துக் கழகம். | 2 | நாகர்கோவில்-சென்னை. |

[1986 மார்ச் 31

| போக்குவரத்துக் கழகம். | பேருந்து எண்ணிக்கை. | வழித்தடம். |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 4 ஜீவா போக்குவரத்துக் கழகம். | 1 | ஈரோடு-சென்னை |
| | 1 | திருப்பூர்—சென்னை. |
| 5 அண்ணா போக்குவரத்துக் கழகம். | 2 | சேலம்—சென்னை. |
| | 1 | தர்மபுரி—சென்னை. |
| | 1 | கிருஷ்ணகிரி—சென்னை. |
| 6 சோழன் போக்குவரத்துக் கழகம். | 2 | கும்பகோணம்—சென்னை. |
| | 1 | தஞ்சாவூர்—சென்னை. |
| | 1 | மயிலாடுதுறை—சென்னை. |
| 7 சேரன் போக்குவரத்துக் கழகம். | 2 | கோவை—சென்னை. |
| | 2 | பொள்ளாச்சி—சென்னை. |
| 8 தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகம். | .. | இக்கழகத்தின் தலைமையிடம் சென்னைக்கு அருகில் உள்ள விழுப்புரம் என்பதால் இக் கழகம் 89 பேருந்துகளை தென்னார்காடு மாவட்டத்திலுள்ள பல்வேறு இடங்களிலிருந்து சென்னைக்கு இயக்கி வருகிறது. |



1986 மார்ச் 31*]

| போக்குவரத்துக் கழகம். | பேருந்து எண்ணிக்கை. | வழித்தடம். |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 9 தீரன் சின்னமலை போக்குவரத்துக் கழகம். | 2 | திருச்சி—சென்னை. |
| | 1 | பெரம்பலூர்—சென்னை. |
| 10 பாண்டியன் போக்குவரத்துக் கழகம். | 2 | மதுரை—சென்னை. |
| | 2 | திண்டுக்கல்—சென்னை. |
| 11 பட்டுக்கோட்டை அழகிரி போக்குவரத்துக் கழகம். | .. | இக்கழகத்தின் தலைமையிடம் சென்னைக்கு அருகில் உள்ள வேலூர் என்பதால் இக்கழகம் பல பேருந்துகளை வட ஆற்காடு மாவட்டத்திலுள்ள பல்வேறு இடங்களிலிருந்து சென்னைக்கு இயக்கி வருகிறது. |
| 12 பல்லவன் போக்குவரத்துக் கழகம். | | |
| 13 திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகம். | .. | சென்னையையே தலைமையிடமாகக் கொண்டு இயங்குவதால் மேற்கண்ட விவரங்கள் இக் கழகங்களிலிருந்து பெறப்படவில்லை. |

35—

### கோவை தியாகி குமரன் மார்க்கெட்டை நவீனப்படுத்தும் திட்டம்.

**வினா 4609—திரு. மு. இராமநாதன் :** மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை நகரிலுள்ள தியாகி குமரன் மார்க்கெட்டை நவீனப்படுத்தும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

**விடை—**

(அ) தியாகி குமரன் மார்க்கெட்டை நவீனப்படுத்தும் திட்டம் தற்போது இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

36—

### இந்து சமய அறநிலையத்துறை மூலம் ஆதி திராவிட மணமக்களுக்கு நடத்தி வைக்கப்பட்ட திருமணங்கள்.

**வினா 4764—திரு. ப. ந. இராமச்சந்திரன் :** மாண்புமிகு செய்தி மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இந்து சமய அறநிலையத்துறை மூலம் ஆதி திராவிட மக்களுக்கு 1984-ம் ஆண்டு நடத்தி வைக்கப்பட்ட திருமணங்கள் எத்தனை?

(ஆ) தற்சமயம் அது நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதா?

**விடை—**

(அ) இந்து சமய அறநிலையத்துறை மூலம் 1984-ம் ஆண்டில் 84 ஆதி திராவிட மணமக்களுக்கு திருமணம் நடத்தி வைக்கப்பட்டது.

(ஆ) இல்லை. இத் திருமண திட்டம் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.



37—

### பட்டுக்கோட்டை நவீன அரிசி ஆலைக் கழிவு நீர்.

**வினா 4761—திரு. ப. ந. இராமச்சந்திரன் :** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பட்டுக்கோட்டை நவீன அரிசி ஆலையின் கழிவு நீரால் அப்பகுதியில் துர்நாற்றம் ஏற்படுவது மற்றும் அருகில் உள்ள இரண்டு குளங்கள் குடிக்க, குளிக்க தகுதியற்றதாக மாறுவது அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதைத் தடுக்க அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது.

**விடை—**

(அ) அரசு அறியும்.

(ஆ) தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தின் மூலம் தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

38—

### மருத்துவத்துறையில் கட்டிடங்களை பழுது பார்க்கத் தனிப்பிரிவு

**வினா 4816—திரு. க. சோலைராசு :** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மருத்துவத்துறையில் வாகனங்களை பராமரிக்க தனிப்பிரிவு உள்ளதுபோல, கட்டிடங்களை பழுதுபார்க்கவும் ஒரு தனிப்பிரிவினை ஏற்படுத்தும் செயற்குறிப்பு உள்ளதா?

**விடை—**

தற்சமயம் அரசின் பரிசீலனையில் உள்ளது.

39—

### திருப்பூர் மத்திய பேருந்து நிலையம்.

**வினா 4843—திரு. கு. சுப்பராயன் :** மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் மத்திய பஸ் நிலைய விரிவாக்கப்பட்ட கட்டிடப்பகுதி எப்போது கட்டி முடிக்கப்படும்?

(ஆ) அதற்கான திட்ட மதிப்பீடு என்ன?

விடை—

(அ) 31—7—1986-க்குள் முடிக்கப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது.

(ஆ) ரூ. 36 இலட்சம் (ரூபாய் முப்பத்தாறு இலட்சம்).

40—

**அரசு மருத்துவமனைகளுக்கு ஜெனரேட்டர்கள் விநியோகம்.**

**வினா 4984—திரு. க. வெ. வீராணம்பலம்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசு மருத்துவமனைகளுக்கு ஜெனரேட்டர்கள் விநியோகம் செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

(அ) ஏற்கனவே நடவடிக்கை எடுக்கப்பட்டு செயற்படுத்தப்பட்டு வருகின்றது.

(ஆ) 1984-85, 1985-86 ஆம் ஆண்டுகளின் பகுதி 2-ஆம் திட்டத்தில் 20 அரசு மருத்துவமனைகளுக்கும் 75 கே.வி.ஏ. சக்தி கொண்ட மின் உற்பத்தி இயந்திரங்கள் வழங்க அரசால் அனுமதி அளிக்கப்பட்டது.

(2) 1986-87 ஆம் ஆண்டு பகுதி இரண்டாம் திட்டத்தில் மேலும் சில மருத்துவ மனைகளுக்கு 75 கே. வி. ஏ. சக்தி கொண்ட மேற்படி இயந்திரங்கள் வழங்கும் திட்டம் பரிசீலனையில் உள்ளது.

(3) மேலும் தாலுக்கா மருத்துவமனைகளுக்கு 2.5 கே.வி.ஏ. சக்திகொண்ட இலகுவாக எடுத்துச் செல்லும் மின் உற்பத்தி இயந்திரங்கள் வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இது தவிர ஒவ்வொரு மாவட்டத்திற்கும் குடும்ப நலத் திட்டத்தின் கீழ் குடும்பநல அறுவைச் சிகிச்சைக்கு மட்டுமே பயன்படுத்த 6 கே.வி.ஏ. சக்தி கொண்ட மின் உற்பத்தி இயந்திரம் குடும்பநல இயக்குநரால் ஒப்பளிக்கப்பட்டுள்ளது.



41—

**தமிழகத்தில் கருப்புக் கற்கள் வெட்டி எடுத்தல்.**

**வினா 5012—திரு. கே. எம். தங்கமணி:** மாண்புமிகு தொழிற் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் கருப்புக்கற்கள் எத்தனை இடங்களில் 'டாமின்' மூலம் வெட்டி எடுக்கப்படுகிறது?

(ஆ) தனியார் மூலம் வெட்டப்படுவதை அரசு தடை செய்யும் உத்தேசம் உண்டா?

விடை—

(அ) ஜெயங்கொண்டம் நகரில் உள்ள பேருந்து நிலையத்தை விரிவுபடுத்தும் திட்டம் உள்ளதா?

(ஆ) 1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு சிறுகனிம சலுகை விதிகளில் விதி 8 (சி) யின்படி தனியாருக்கு கரும்பாறைகள் வெட்டியெடுக்கும் உரிமம் வழங்குவது தடை செய்யப்பட்டுள்ளது. . . இவ்விதி பட்டா நிலங்களுக்குப் பொருந்தாது என உச்சநீதி மன்றம் தீர்ப்பளித்துள்ளதால், பட்டா நிலங்களில் கரும்பாறைகளை வெட்டியெடுக்க அந்த நிலத்தின் சொந்தக்காரர்களுக்கு சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சித்தலைவர்களால் அனுமதி வழங்கப்பட்டு வருகிறது.

42—

**ஜெயங்கொண்டம் பேருந்து நிலையம்.**

**வினா 5071—டாக்டர் ந. மாசிலாமணி:** மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஜெயங்கொண்டம் நகரில் உள்ள பேருந்து நிலையத்தை விரிவுபடுத்தும் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், திட்டத்தின் மதிப்பீடு எவ்வளவு?

விடை—

(அ) தற்பொழுது இல்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

43—

**காட்டூர் மக்களுக்கு வீட்டு மனைப் பட்டாக்கள் வழங்கல்.**

**வினா 5163—திரு. செ. செம்மலை:** மாண்புமிகு நிதியமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம் மேச்சேரி ஒன்றியம் விருத்தாசம்பட்டி கிராமம் காட்டூர் மக்களுக்கு வீட்டுமனைப் பட்டாக்கள் எப்போது வழங்கப்படும்?

விடை—

சேலம் மாவட்டம், மேட்டூர் வட்டம், விருத்தாசம்பட்டி கிராமம், காட்டூர் மக்கள் ஒப்படை கோரும் புல எண். 248/1ல் உள்ள 3.19.5 ஹெக்டேர் பரப்பளவுள்ள நிலம், மேற்படி கிராமத்தைச் சேர்ந்த மூத்துசாமி என்பவரின் பட்டா நிலமாக இருப்பதால் இந்நிலத்தை வீடுகள் கட்டி ஆக்ரமணம் செய்துள்ள நபர்களுக்கு, வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்க இயலாது.

44—

**மேச்சேரி பேருந்து நிலையம்.**

**வினா 5170—திரு. செ. செம்மலை:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், மேச்சேரி நகர பஞ்சாயத்து புதிய பேருந்து நிலையத்தை ஐ.யு.டி.பி. திட்டத்தின் கீழ் கட்டும் திட்டம் எந்த நிலையில் உள்ளது?

(ஆ) அத்திட்டத்திற்கான மொத்த மதிப்பீடு எவ்வளவு?

விடை—

(அ) மேச்சேரி தேர்வு நிலை பேரூராட்சியில் ஐ.யு.டி.பி. திட்டத்தின்கீழ் ரூ. 20 இலட்சம் மதிப்பீட்டில் பேருந்து நிலையம் அபிவிருத்தி செய்ய, மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு, டெண்டரும் அழைத்து வேலைகள் மேற்கொள்ள அங்கீகாரம் அளிக்கப்பட்டுள்ளது. முதல் தவணையாக ரூ. 5.00 இலட்சம் சென்னை நகர் வளரமைப்பு இயக்குநரால் ஒதுக்கப்பட்டுள்ளது.



(ஆ) இத்திட்டத்திற்கான மொத்த மதிப்பீடு ரூ. 20 இலட்சம் ஆகும்.

45—

**கெத்தவாச்சேரி—குண்டியமல்லூர் சாலையில் பாலங்கள் கட்டும் திட்டம்.**

**வினா 5256—திரு. ஏ. தங்கராசு:** மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்னாற்காடு மாவட்ட குறிஞ்சிப்பாடி தொகுதியில் கெத்தவாச்சேரிக்கும், குண்டியமல்லூருக்கும் இடையில் உள்ள சாலையில் பாலம் கட்டும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் அதன் விவரம் என்ன?

விடை—

(அ) மற்றும் (ஆ) வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள பாலம் கட்டப்படவேண்டிய சாலை குறிஞ்சிப்பாடி ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த ஊராட்சி சரள் சாலையாகும். இச்சாலையில் குறுக்கிடும் பெருமாள் ஏரியின் கலங்கல்களிலிருந்து வெளியேறும் உபரிநீர் மூன்று இடங்களில் குறுக்கிட்டு மழைக்காலங்களில் போக்குவரத்துக்கு பாதிப்பை ஏற்படுத்துவதால், பரிசல்கள் மூலம் மக்கள் இக்குறுக்கீட்டைக் கடக்கின்றனர். ஆகவே மூன்று இடங்களில் கி.மீ. 1/10, ¼ மற்றும் ⅛ ல் மூழ்கு பாலம் கட்ட இச்சாலையை தரம் உயர்த்தி, தார்ச்சாலையாக மேம்பாடு செய்து மூழ்குபாலங்கள் அமைப்பதற்கு ரூ. 30 இலட்சம் தேவைப்படுகிறது. இப்பணி அரசின் அங்கீகரிக்கப்பட்ட திட்டங்கள் எதிலும் இதுவரை இடம் பெறவில்லை. எனினும் அரசின் நிதிவளம், பணியின் முக்கியத்துவம் இவற்றைக் கருத்தில் கொண்டு, எதிர்வரும் ஆண்டுகளில் எடுத்துச் செய்யப் பரிசீலிக்கப்படும்.

46—

**புதிய மேல் நிலைப் பள்ளிகள்.**

**வினா 5487—திருமதி டா. வளர்மதி:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1984-85 ஆம் ஆண்டு தமிழகத்தில் அரசு எத்தனை மேல்நிலைப் பள்ளிகளை ஆரம்பித்தது?

(ஆ) அதில் ஆண், பெண் பள்ளிகள் எவ்வளவு?

விடை—

(அ) 1984-85 ஆம் ஆண்டில் 38 அரசு மற்றும் உதவி பெறும் உயர்நிலைப் பள்ளிகளும், 10 மெட்ரிகுலேஷன் உயர் நிலைப் பள்ளிகளும் மேல்நிலைப் பள்ளிகளாக உயர்த்தப்பட்டுள்ளன.

(ஆ) அரசு மற்றும் உதவி பெறும் உயர்நிலைப் பள்ளிகள்:

| | |
|---|---|
| ஆண் | 29 |
| பெண் | 9 |
| மொத்தம் | 38 |

மெட்ரிகுலேஷன் உயர்நிலைப் பள்ளிகள்:

| | |
|---|---|
| ஆண் | 9 |
| பெண் | 1 |
| மொத்தம் | 10 |

47—

தஞ்சாவூர்—கபிஸ்தலம் நகரப் பேருந்துப் பணி.

வினா 5502—திரு. எஸ். இராசாராமன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர்—பாபநாசம் தடம் எண் 25 சோழன் நகரப் பேருந்தை கபிஸ்தலம் வரை நீட்டிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

தஞ்சாவூர்—பாபநாசம் (தடம் எண் 25) வழித்தடத்தில் இயங்கிக் கொண்டிருக்கும் நகரப் பேருந்தினை கபிஸ்தலம் வரை நீட்டித்து இயக்க சோழன் போக்குவரத்துக் கழகம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. கூடிய விரைவில் நகர வழித்தடம் எண் 25 கபிஸ்தலம் வரை 3 நடைகள் சென்று திரும்பும்.



48—

கோவையிலுள்ள மார்க்கெட்டுகளை இடம் மாற்றல்.

வினா 5558—திரு. மு. இராமநாதன்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கோவை மாநகர வளர்ச்சி கருதி, பழைய மார்க்கெட், மீன் மார்க்கெட் ஆகியவற்றை வேறு இடங்களுக்கு மாற்றி அமைக்கும் திட்டம் எந்த நிலையில் இருக்கின்றது?

விடை—

பழைய மார்க்கெட்டிலுள்ள மீன் மார்க்கெட்டை உக்கடம் லாரிபேட்டையில் உள்ள காலி இடத்திற்கு மாற்ற இடம் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. அதற்கான வடிவமைப்புகள் தயாரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

மேலும், பழைய மார்க்கெட்டிற்கு செல்லும் பாதையிலுள்ள கடைகளை பழைய மாநகராட்சி பணிமனை இடத்திற்கு மாற்ற, அங்கு கடைகள் கட்ட வடிவமைப்பில் ஒப்புதல் பெற, நகரமைப்பு துணை இயக்குநருக்கு (Deputy Director of Town Planning) அனுப்பப்பட்டுள்ளது. ஒப்புதல் பெற்ற பின்னர் மேல் நடவடிக்கை எடுக்கப்படும்.

49—

கோவை — மதுரை — நெல்லை இரயில் பாதையை அகல இரயில் பாதையாக்கல்.

வினா 5627—திரு. மு. இராமநாதன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை — மதுரை — நெல்லை மீட்டர் கேஜ் இரயில் பாதையை பிராட் கேஜ் இரயில் பாதையாக மாற்றிட மாநில அரசு மத்திய அரசிற்கு பரிந்துரை ஏதேனும் செய்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், இதன் விபரம் என்ன?

விடை—

(அ) மற்றும் (ஆ) கோவை—மதுரை—நெல்லை மீட்டர் கேஜ் இரயில் பாதையை அகல இரயில் பாதையாக மாற்றும் திட்டம் எதும் தற்போது இல்லை. எனினும் கரூரிலிருந்து தெற்கே திண்டுக்கல்—மதுரை—திருநெல்வேலி வழியாக தூத்துக்குடி வரை நேரடி அகல இரயில் பாதை அமைக்கும் திட்டம் ஏற்றுக் கொள்ளப்பட்டு இப்பணியும் நடைப்பெற்று வருகிறது.

50—

**பரிவிலிக்கோட்டை அரசினர் உயர்நிலைப் பள்ளியை மேல் நிலைப் பள்ளியாக்கல்.**

**வினா 5645—திரு. ஆர். எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஒட்டப்பிடாரம் தாலுக்கா, பரிவிலிக்கோட்டை அரசினர் உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக உயர்த்த அரசு முடிவு செய்துள்ளதா?

விடை—

இல்லை.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 2. தகவல் கோரல்.

### (அ) ஊராட்சி ஒன்றிய வாக்காளர் பட்டியல்.

**மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்):** பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சரிடமிருந்து ஒரு சிறு விவரத்தைத் தெரிந்துகொள்வதற்காக இதை எழுப்புகிறேன். உள்ளாட்சி மன்றத் தேர்தல்களுக்கான வாக்காளர் பட்டியலிலிருந்து பல இடங்களில் பெருவாரியான வாக்காளர்கள் விடுபட்டிருக்கிறார்கள் என்ற உண்மையான கருத்து நிலவி வருகிறது. இந்தச் சூழ்நிலையில் வேட்பாளர்கள் மரணத்தின் காரணமாக, சில ஊராட்சிகளிலும் ஊராட்சி ஒன்றியங்களிலும் தேர்தல்கள் ஒத்தி வைக்கப்பட்டிருக்கின்றன. அதேபோல, நீதிமன்றத்தி



னுடைய தடையாணைகளின் காரணமாக, சில இடங்களில் ஊராட்சி மன்றத்திற்கும் ஒன்றியத்திற்கும் தேர்தல்கள் ஒத்தி வைக்கப்பட்டிருக்கின்றன. எனவே, இப்படி ஒத்தி வைக்கப்பட்டு, விரைவில் நடத்தப்பட இருக்கிற தேர்தலுக்கு முன்னால் அந்த ஊராட்சி, ஊராட்சி ஒன்றியப் பகுதிகளிலே விடுபட்ட வாக்காளர்கள் சேர்வதற்கான வாய்ப்பினை அரசு உருவாக்கித் தருமா என்ற விவரங்களை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** பேரவைத் தலைவர் அவர்களே, இதுகுறித்து அரசு ஏற்கனவே, சட்டத் துறையைக் கலந்தாலோசித்து, பரிசீலனை செய்து கொண்டு வருகிறது. சட்டப்படி அது சாத்தியமானால் அதைச் செய்வதற்கு அரசுக்கு எந்த விதத் தடங்கலும் இருக்காது.

### (ஆ) பஞ்சாலைத் தொழிலாளர்கள் போராட்டம்.

**திரு. க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றையதினம் தமிழ்நாட்டில் ஏறத்தாழ 8 பஞ்சாலைகள் மூடிக் கிடப்பதன் காரணமாக, 100 தொழிலாளர் தலைவர்கள் கடந்த ஒரு மாத காலமாக, சென்னை நகரத்திற்கு ஊர்வலமாக வந்து, இன்றையதினம், மறியல் போராட்டத்திலே ஈடுபடப் போவதாக அறிவிக்கப்பட்டு, அவர்கள் எல்லாம் இங்கே வந்திருக்கிற நேரத்தில், அரசாங்கத்தினுடைய கொள்கையின்படி இது மாறுபாடு இல்லாத வகையில் இருந்தாலும்கூட, அரசு செயல்படுத்தாததன் காரணமாக . . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நாளைக்கு இது ஒரு 'கால் அட்டென்ஷன்' ஆக வருகிறது.

**திரு. க. அன்பழகன்:** இதுவும் கவன ஈர்ப்புத்தான், மறைமுகமாக தலைவர் அவர்களே, அப்படி ஒரு நிலைமை இன்றைக்கு ஏற்பட்டிருப்பதன் காரணமாக, அரசாங்கம் எந்த வகையில் தீவிரமான நடவடிக்கையை எடுத்து, அந்த ஆலைகளைத் திறக்கவிருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாளை இதுபற்றிய தகவல் அவைக்கு அளிக்கப்படும்.

**திரு. பொ. உத்திராபதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாயிண்ட் ஆப் ஆர்டர். இந்த 8,000 பஞ்சாலைத் தொழிலாளர்கள் பல்வேறு கோரிக்கைகளை அரசாங்கத்திற்கு வைத்து, அது இன்னும் நிறைவேறாத காரணத்தாலும் . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பாயிண்ட் ஆப் ஆர்டரிலே, ரொம்ப டீடெயில்ஸ் வேண்டாம். இதை நாளைக்கு எடுத்துக் கொள்ளலாம் என்று சொல்லிவிட்டேன்.

**திரு. பொ. உத்திராபதி:** ஒரே ஒரு கருத்து. நீண்டகாலமாக கோரிக்கை வைத்து, இன்னும் சரியாக நிறைவேற்றப் பெற வில்லை. அதனாலே, பஞ்சாலைகளை எடுத்துக்கொள்ளவும், சர்க்காரிலிருந்து இடைக்காலத்திலே அவர்களுக்கு உதவி செய்யவும் . . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இவை பற்றியெல்லாம் நாளைக்குத் தெரிவிக்கலாம்.

(முற்பகல் 10-20)

**(இ) பேரவைக் கூட்டம் நடந்துகொண்டிருக்கும்போது மாவட்ட வளர்ச்சி மன்றங்களின் கூட்டத்தையும் கூட்டுவது.**

**திரு. கே. கல்லன்:** தலைவரவர்களே இந்தப் பேரவையை அவமதிக்கும் வகையிலும் சட்டமன்ற உறுப்பினர்களின் உரிமை யைப் பாதிக்கும் வகையில் இருக்கிற ஒரு நிகழ்வினைக் குறித்து அவையின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். சாதா ரணமாக பேரவைக் கூட்டம் நடந்துகொண்டிருக்கும்போது பேரவை உறுப்பினர்கள் கலந்துகொள்ளுகின்ற மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டங்களை நடத்தக்கூடாது என்று பலமுறை தெரி விக்கப்பட்டிருந்தும் அதற்கு மாறாக எங்கள் மாவட்டத்தில் இன்று மாலை 3-00 மணிக்கு மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டம் கூட்டப்படவுள்ளது. நாங்கள் எழுத்து மூலமாகவும், நேரடி யாகவும் பலமுறை மாவட்ட ஆட்சித் தலைவரிடம் சொல்லியும் அவர் செவி சாய்க்காமல் மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டத்தை நடத்தவுள்ளார். அந்தக் கூட்டத்தில் நாங்கள் கலந்துகொள்ள விரும்பினால் அவைக் கூட்டத்தில் பங்குகொள்ள முடியாது. பேரவைக் கூட்டத்தில் பங்கொண்டால், மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டத்தில் பங்குகொள்ள முடியாது. எனவே, எங்க ளுடைய உரிமை பறிக்கப்பட்டிருக்கிறது . . . .





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவை நடக்கும்போது இப்படி மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டங்களை நடத்துவது நல்லதல்ல, கூட்டம் நடத்துவதை தவிர்க்க வேண்டும்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** பேரவைத் தலைவரவர் களே, சட்டமன்றக் கூட்டம் நடக்கும்போது மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டங்களை நடத்துவது சரியல்ல. மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அரசு இதைத் தெரிவிக்கும். அந்தக் கூட்டம் ஒத்தி வைக்கப்படும்.

**(ஈ) நடைபெற்றுள்ள உள்ளாட்சிமன்றத் தேர்தலின் விளைவாக ஆங்காங்கே மோதல் ஏற்படுவதைத் தவிர்ப்பது.**

**திரு. டி. ஆர். வேங்கடரமணன்:** தலைவரவர்களே, பஞ்சாயத்து தேர்தல் நடந்து முடிந்து ஒரு மாதத்திற்கு மேலாகியும் ஆங்காங்கே சிறு சிறு சலசலப்பு நடந்துகொண்டிருப்பது வருந் தத்தக்கது. குறிப்பாக என்னுடைய தொகுதியில் இரண்டு ஜாதிக்காரர்களுக்கிடையே தகராறு இருந்து கொண்டிருக்கிறது. அது சம்பந்தமாக தந்தி மூலமாகவும் டெலிபோன் மூலமாகவும் எனக்கு செய்தி வந்துகொண்டிருக்கிறது. இப்படிப்பட்ட பிரச் சனைகள் முற்றி, பெரிதாகி, ஒரு பெரிய கலவரமாக மாறி, அதன் காரணமாக ஏற்படுகிற பின் விளைவுகளைச் சந்திப்பதற்குப் பதிலாக ஆரம்பத்திலேயே தீர்வு காண்பது நல்லது. இப்படிப் பட்ட பிரச்சனைகளில் இரு சாராரையும் அழைத்துப் பேசி, ஒரு நல்ல நிலையை ஏற்படுத்தி, மேலும் பிரச்னைகள் உருவாகாமல் இருக்க அங்கே குறைந்த அளவுக்காவது போலீசை நிறுத்தி, மக்களுக்கு பாதுகாப்பு கொடுக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவரவர் களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எழுப்பிய பிரச்சனை யைப் பொறுத்தமட்டில் அந்தப் பகுதியில் கலவரங்கள் ஏற்படாமல் தடுக்கவும், பாதுகாப்பு அளிக்கவும், அமைதி ஏற் படுத்தவும், நியாயங்கள் வழங்கவும் என்னென்ன நடவடிக்கைகள் எடுக்க இயலுமோ அத்தனையையும் அரசு எடுக்கும். அவர்கள் குறிப்பிட்ட பிரச்சனையின் முழு விவரங்கள் தற்போது இல்லை என்றாலும் அதை அரசு கவனித்து தக்க நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(உ) தேவதானப்பட்டி துப்பாக்கிச்சூடு குறித்து ஐ.ஜி. அறிக்கை வெளியிட்டிருப்பது.

**திரு. அ. ரகுமான்கான் :** தலைவரவர்களே, சட்டமன்றம் நடந்து கொண்டிருக்கும்போது, நாங்கள் கொடுக்கின்ற ஒத்திவைப்புத் தீர்மானம் சம்பந்தப்பட்ட பிரச்சனைகள் உங்கள் முன்னால் இருக்கும்போது, அதிகாரிகள் அதுசம்பந்தமான தகவல்களை அமைச்சர்களுக்குக் கொடுத்து, அமைச்சர்கள் மூலமாக இங்கே தெரிவிக்கப்படுவது நியாயம், வழக்கம். ஆனால் ஐ.ஜி.யாக இருக்கின்ற திரு. ஸ்ரீபால் அவர்கள் தேவதானப்பட்டி காவல் நிலையத்தில் சென்ட்ரியை கொலை செய்ய நடந்த முயற்சியின்போது தான் துப்பாக்கிச்சூடு நடந்தது என்று அறிக்கை கொடுத்திருக்கிறார். அதுபற்றி ஏற்கெனவே நாங்கள் ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறோம். ஆனால் அந்த ஒத்திவைப்புத் தீர்மானம் இங்கே எடுத்துக்கொள்ளப்படாமல் இருக்கின்ற நிலையில் வெளியே அறிக்கை கொடுக்கிறார். அந்த அறிக்கை ஆளும் கட்சிப் பத்திரிகையிலே வெளியிடப்பட்டிருக்கிறது. ஆகவே, இதுபற்றி நீங்கள் உரிமைப் பிரச்சினை தீர்மானம் கொடுக்க வேண்டுமென்று சொன்னால், நாங்கள் கொடுக்கத் தயாராக இருக்கிறோம். இல்லை என்றால் நீங்கள் இதுபற்றி தீர்ப்பு வழங்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அதுபற்றி பார்த்துவிட்டுச் சொல்கிறேன்.

**திரு. அ. ரகுமான்கான் :** மேலும், அந்தத் துப்பாக்கிச் சூட்டினால் இரண்டு பேர் செத்திருக்கிறார்கள். இது ஒரு மிக முக்கியமான பிரச்சனை. இருந்தபோதிலும் நாங்கள் கொடுத்திருக்கிற ஒத்திவைப்புத் தீர்மானம் அவையில் எடுத்துக்கொள்ளப்படாமல் இருக்கிறது. அதற்கு . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பட்ஜெட் விவாதத்தில் ஒத்திவைப்புத் தீர்மானங்களை எடுக்க வேண்டாம் என்று முடிவு செய்திருக்கிறோம். முக்கியமான பிரச்சனையை எடுத்துக் கொள்ளலாம் என்றால், அதுபற்றி அலுவல் ஆய்வுக் குழுவில் விவாதித்து, பட்ஜெட் விவாதத்திலும் ஒத்திவைப்புத் தீர்மானத்தின் முக்கியத்துவத்தைக் கருதி எடுத்துக்கொள்ள வேண்டுமென்று முடிவு செய்தால், எடுத்துக்கொள்ளலாம்.



**திரு. வி. பி. சிந்தன் :** தலைவரவர்களே, சட்டத்தில் அப்படி ஏதாவது உண்டா என்பதை நான் தெரிந்துகொள்ள வேண்டும். சபாநாயகர் உறுப்பினர்களின் உரிமையைப் பறிப்பது சரியல்ல.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இது மரபுதான். அலுவல் ஆய்வுக் குழுவில் இதுபற்றிப் பேசலாம். அலுவல் ஆய்வுக் குழு முடிவுப்படி அவையை நடத்திச் செல்லவேண்டியது என் பொறுப்பு.

**திரு. என். எஸ். வி. சித்தன் :** தலைவரவர்களே, பொது விவாதத்தின்போது எல்லாப் பிரச்சினைகளையும் எழுப்பி, எழுப்பப்பட்ட பிரச்சினைகளுக்கு எல்லாம் பதில் சொல்ல முடியாது. அதனால்தான் இப்படிப்பட்ட முக்கியமான பிரச்சினைகள் குறித்து தனிக் கவனத்தை ஈர்ப்பதற்காக ஒத்திவைப்புத் தீர்மானங்களைக் கொடுக்கிறோம். பிரச்சினையின் முக்கியத்துவத்தைக் கருதி எடுத்துக்கொள்ளலாம் என்பது எல்லோரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒன்றுதான். அதற்கு தங்களுடைய தீர்ப்பு வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** ஜெனரல் டிஸ்கஷனிலே வேண்டாம் என்று நாம் முடிவெடுத்திருக்கிறோம். எனவே இது பிஸினஸ் அட்வைஸரி கமிட்டியில் எடுக்கப்பட்ட முடிவுதான். (குறுக்கீடு) வேண்டுமானால் பிஸினஸ் அட்வைசரி கமிட்டியில் மீண்டும் இதுபற்றி விவாதித்து முடிவெடுத்துக்கொள்ளலாம். இந்த அவையைத் தயவுசெய்து பிஸினஸ் அட்வைசரி கமிட்டியாகக் கருதவேண்டாம் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிதிநிலை அறிக்கையின்மீது பொது விவாதமாக நடைபெறுகிற சூழ்நிலை ஏற்பட்டதன் காரணமாக பொது விவாதத்தில் கலந்து கொள்கிற மாண்புமிகு உறுப்பினர் பெருமக்கள் நாட்டிலே நடைபெறுகிற நடப்புகளையும், பல்வேறு நிகழ்ச்சிகளையும் பற்றி எடுத்துக் கூறுவதற்கான வாய்ப்புக் கூறுகள் இருக்கிற காரணத்தால் பொது விவாதத்தின்போது கூடுமான வரையில் ஒத்திவைப்புத் தீர்மானத்தை எடுத்துக்கொள்ளவேண்டிய அவசியம் இல்லை என்று அலுவல் ஆய்வுக் குழுவில் நாம் முடிவு செய்திருப்பது

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1986 மார்ச் 31

உண்மை. இன்றோடு பொது விவாதம் முடிகிற காரணத்தால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுகிற இந்தப் பிரச்சினையை நாளை எடுத்துக்கொள்ளலாம் என்பதை நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

**திரு. உ. சுப்பிரமணியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாங்கள் சொன்னதிலிருந்து ஒரு தவறான கருத்து ஏற்படக்கூடாது என்பதற்காகச் சொல்கிறேன். ஒத்திவைப்புத் தீர்மானம் எடுத்துக்கொள்வதற்கெல்லாம் பிஸினஸ் அட்வைஸரி கமிட்டிதான் முடிவு செய்யவேண்டும் என்பது சரியான முன் மாதிரியாக இருக்க முடியாது. ஒத்திவைப்புத் தீர்மானத்தைப் பொறுத்தவரையில் சமீப காலத்தில் நிகழ்வாக இருக்கவேண்டுமென்று குறிப்பிடுகிறீர்கள். சிலசமயங்களில் கொஞ்சம் நாட்கள் கடந்துவிட்டால்கூட இட் இஸ் நாட் எ ரீசன்ட் அக்கரன்ஸ் என்று சொல்லி தள்ளிவிடுகிறீர்கள். எனவே இந்தத் தடவை சரி, இனிமேலாவது இந்த விஷயத்தை பிஸினஸ் அட்வைஸரி கமிட்டிக்கு நீங்கள் ரெஃபர் செய்யாமல் அதன் முக்கியத்துவத்தை உணர்ந்து அவ்வப்போது அவை முன்னவருடன் கலந்து உசிதம் போல் நீங்கள் அனுமதிக்கலாம் என்பது எங்களுடைய கருத்து.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இனிமேல் அம்மாதிரி ஃபாலோ பண்ணுகிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

### 3. கவன ஈர்ப்புகள்.

### (அ) போதிய தண்ணீர் விடாததால், காவிரி பாசனப்பகுதி விவசாயிகள் பாதிக்கப் பெற்றுள்ளது.

**திரு. மா. மணிமாறன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "காவிரியில் பாசனப் பகுதியில் போதிய தண்ணீர் வராததால் தாளடி பயிர், சம்பா பயிர் ஆகியவை பாதித்துள்ளதால், சுமார் 150 கோடி ரூபாய் அளவிற்கு விவசாயிகளுக்கு ஏற்பட்டுள்ள இழப்பு குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன் :



1986 மார்ச் 31] [டாக்டர் கா. காளிமுத்து]

### அறிக்கை.

வழக்கமாக ஜூன் 12-ம் நாளன்று மேட்டூர் நீர்த்தேக்கத்திலிருந்து பாசனத்துக்கு நீர் திறந்துவிடப்படவேண்டும். ஆனால், 1985-ம் ஆண்டு இத்தேதியில் மேட்டூரில் 11.5 டி.எம்.சி. அளவுக்கு நீர் இருந்தது. அப்போது காவிரி நீர்ப் பிடிப்பு பகுதியில் தென்மேற்கு பருவமழை தீவிரமடையவில்லை. எனவே, மேட்டூர் நீர்த்தேக்கம் திறப்பது தள்ளி வைக்கப்பட்டது.

25—6—1985 முதல் கபினி நீர்த்தேக்கத்திலிருந்து உபரி நீர் மூலம் மேட்டூர் நீர்த்தேக்கத்திற்கு நல்ல நீர் வரத்து ஏற்பட்டு, நீரிருப்பில் முன்னேற்றம் காணப்பட்டதால், குறுவைப்பயிர் வேலைகளைத் தொடங்குவதற்கு வசதியாக மேட்டூர் நீர்த் தேக்கத்திலிருந்து நீர் விரைவில் திறந்து விடவேண்டுமென்று விவசாயிகள் கோரினர். ஏனெனில் காலந்தாழ்த்தி திறப்பதனால் அறுவடைக் காலத்தின்போது வடகிழக்கு பருவ மழை மூலம் பயிர் அழிந்துவிடுவதற்கு ஏதுவாகும். பருவ மழை தீவிர மடைந்து மேட்டூருக்கு வழக்கமாக வரும் நீர்வரத்து இருக்கு மென்று எதிர்பார்த்து 8—7—1985 அன்று பாசனத்திற்கு மேட்டூர் நீர்த்தேக்கம் திறந்துவிடப்பட்டது. அப்போது மேட்டூரில் இருந்த நீரிருப்பு 32 டி.எம்.சி. ஆகும்.

நீர்த் தேக்கத்திலுள்ள நீர் விரைவில் குறைந்துவிடுவதை தடுப்பதற்காக தொடக்கத்திலிருந்தே நீர் கட்டுப்படுத்தப்பட்டு விடப்பட்டது. சிக்கனமாக நீரைப் பயன்படுத்தும்படி விவசாயிகளும் அறிவுறுத்தப்பட்டனர்.

மேட்டூரில் இருந்து விடப்படும் நீரின் அளவு 26—7—1985 வரை 7,500 கன அடியாகவும், பின்னர் 12,000 கன அடியாகவும் உயர்த்தப் பட்டது. 26—7—1985 முதல் முறைப்பாசனம் அமுலுக்கு கொண்டு வரப்பட்டது. மேட்டூரின் நீரிருப்பு நாளுக்கு நாள் குறைந்ததோடு நீர்வரத்தும் தொடர்ந்து மிகக் குறைவாக இருந்ததால், பொதுப் பணித்துறை அமைச்சரும், பொதுப்பணித்துறை செயலாளரும் மீண்டும் 13—8—1985 அன்று பெங்களூருக்குச் சென்று நீரை விடுவிக்குமாறு கர்நாடக அரசிடம் கோரினர். கிருஷ்ணராஜ சாகரக்கிலிருந்து 21—8—1985 முதல் 25—8—1985 வரையிலான காலத்தில் 5 டி.எம்.சி. நீரை அவர்கள் விடுவித்துள்ளார்கள்.

காவிரி டெல்டாவில் எல்லாப் பகுதிகளிலும் நீர் பெறப்பட்டு, விவசாய வேலைகளை தொடங்குவதற்காக மேட்டூர் நீர்த் தேக்கத்திலிருந்து விடப்படும் நீரின் அளவு 19—8—1985-லிருந்து 15,000 கன அடியாக உயர்த்தப்பட்டது. உழவர் பெருமக்கள் கூட்டம் ஒன்றை 6—9—1985 அன்று தஞ்சாவூர் மாவட்ட ஆட்சித் தலைவர் கூட்டினார். வேளாண்மைத்துறை அமைச்சர், வேளாண்மை இயக்குநர் மற்றும் பொதுப்பணித்துறை அதிகாரிகள் இக்கூட்டத்தில் கலந்து கொண்டனர். மேட்டூரில் நீரிருப்பு நிலைமை விவசாயிகளிடம் எடுத்துக் கூறப்பட்டது. நீரைச் சிக்கனமாக உபயோகித்து குறுகிய கால பயிர்களை மட்டுமே பயிரிடுமாறு அவர்களிடம் கேட்டுக்கொள்ளப்பட்டது. மேட்டூரின் நீரிருப்பு மிக விரைவாக குறைந்ததால், பவானிசாகரில் இருந்தி 14—9—1985 முதல் 26—9—1985 வரை சுமார் 5.8 டி.எம்.சி. நீர் காவிரி பாசனத்திற்கு அளிக்கப்பட்டது

இதற்கிடையில் பயிரிடப்பட்ட பயிர்களை காப்பாற்ற, 30 டி.எம்.சி. நீரை கர்நாடக அரசு விடுவிக்க, அவ்வரசை இணங்க வைக்குமாறு கோரி, தமிழக முதல்வர் அவர்கள் பாரதப் பிரதமர் மற்றும் மத்திய பாசன அமைச்சர் அவர்களை 31—8—1985 நாளிட்ட கடிதத்தில் கேட்டுக்கொண்டார்கள். இது தொடர்பாக கர்நாடக முதல்வருக்கும் கடிதம் எழுதப்பட்டது. தமிழகப் பொதுப்பணித்துறை அமைச்சர் 10—9—1985 அன்று கர்நாடகத்திற்கு நேரில் சென்று விரைவில் நீரை விடுவிக்குமாறு கேட்டுக்கொண்டார். இம்முயற்சிகளின் விளைவாக கர்நாடக அரசு, 19—9—1985-லிருந்து 25—9—1985 வரை கபினி நீர்த் தேக்கத்திலிருந்து 5 டி.எம்.சி. நீரை அனுப்பியது. 23—11—1985 அன்று சென்னையில், தமிழகம் மற்றும் கர்நாடக முதல்வர்களுக் கிடையே காவிரி நீர் பற்றி நடைபெற்ற இரு தரப்புப் பேச்சு வார்த்தையின்போதும் கர்நாடக நீர்த்தேக்கத்திலிருந்து மேற்கொண்டும் நீரை விடுவிக்கவேண்டிய அவசியம் குறித்து தமிழக முதல்வரால் வலியுறுத்தப்பட்டது.

காவிரி டெல்டாவில் 23—9—1985 முதல் 1—12—1985 வரை பெய்த மழையின் காரணமாக மேட்டூர் நீர்த்தேக்கத்திலிருந்து விடப்படும் நீரின் அளவு குறைக்கப்பட்டது. முடிந்த அளவுக்கு



நீரிருப்பு நிலைமை உயர் அளவில் வைத்துக்கொள்ள முயற்சிக்கப் பட்டது. 5—12—1985-க்கு பிறகு பயன்தரத்தக்க விதத்தில் மழை பெய்யவில்லை.

மேட்டூருக்கு நீர்வரத்து மிகவும் குறைந்ததால், நீரிருப்பு விரைவாகக் குறைந்து 23—12—1985 அன்று மேட்டூர் நீர்த் தேக்கத்தின் நீர்மட்ட அளவு 16 அடிக்கு வந்தது. நீரிருப்பும் 3 டி.எம்.சி. ஆகிவிட்டது. இதனால், மேற்கொண்டு நீரை விடுவிக்க இயலவில்லை. எனவே, 23—12—1985-லிருந்து 31—12—1985 வரை பவானிசாகரிலிருந்து 4.7 டி.எம்.சி. அளவுக்கு நீர் டெல்டா பாசனத்திற்கு விடப்பட்டது.

இதற்கிடையில் தமிழக முதல்வர் சார்பில் 18—12—1985 அன்று தமிழக நிதி அமைச்சரும், பொதுப்பணித்துறை அமைச்சரும் கர்நாடக முதல்வரை நேரில் அணுகி, உடனடியாக 10 டி.எம்.சி. நீரை விடுவிக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டனர். கர்நாடகத்தில் வறட்சி நிலைமை நிலவுவதாகக் கூறி கர்நாடகம் மேலும் நீரை விடுவிக்க மறுத்ததால், நிதி அமைச்சரும், பொதுப் பணித்துறை அமைச்சரும் 20—12—1985 அன்று மத்திய நீர் வள அமைச்சரை நேரில் சந்தித்து, கர்நாடக அரசிடம் 10 டி.எம்.சி. நீரை உடனே விடுவிக்க வற்புறுத்துமாறு கேட்டுக் கொண்டார்கள்.

எதிர்பாராதவிதத்தில் வறட்சியும், மின்சாரத் தட்டுப்பாடும் இருந்தும், கபினியிலிருந்து 5 டி.எம்.சி. நீரை விடுவிக்க கர்நாடக முதல்வர் ஒத்துக்கொண்டார்கள். இதனால், கர்நாடகத்திற்கு ஏற்படும் மின்சார இழப்பை ஈடு செய்ய தமிழக அரசு உறுதி யளித்த பின்பே மேற்கண்டவாறு நீரை விடுவிக்க அவர் இசைந்தார். கபினியிலிருந்து நீர் விடுவிக்கப்பட்டு, காவிரி டெல்டாவில் மீண்டும் 2—1—1986-லிருந்து 8,000 கன அடி வீதத்தில் நீர் வழங்கப்பட்டது.

பொதுப்பணித்துறை அமைச்சரும், பொதுப்பணித்துறை செயலாளரும் காவிரி டெல்டாவிற்கு நேரில் சென்று விவசாயி களிடம் பேச்சு வார்த்தைகள் நடத்தினர். நீரைப் பெற அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் அவர்களுக்கு விளக்கிக் கூறப்பட்டு நீர்த் தட்டுப்பாட்டு நிலைமையை சமாளிப்பதில்

[டாக்டர் கா. காளிமுத்து] [1986 மார்ச் 31

ஒத்துழைக்குமாறு அவர்களிடம் கேட்டுக்கொள்ளப்பட்டது. இருக்கும் நீரையும் சிறந்த முறையில் கட்டுப்படுத்தி நியாயமாக வழங்குவதற்கு மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளும் அவர்களிடம் எடுத்துக் கூறப்பட்டது.

நிதி அமைச்சரும், பொதுப்பணித்துறை அமைச்சரும் 2—1—1986 அன்று மத்திய வேளாண்மைத்துறை அமைச்சரைச் சந்தித்து காவிரி டெல்டாவில் பயிர்களுக்கு ஏற்பட்டுள்ள தண்ணீர் தட்டுப்பாடு நிலைமையை விளக்கிக் கூறி 10 டி.எம்.சி. நீரை கர்நாடக அரசு விடுவிக்குமாறு அவ்வரசுக்கு வேண்டுகோள் விடுக்குமாறு கேட்டுக்கொண்டார். காவிரி டெல்டாவில் சாகுபடி செய்யப்பட்ட பயிர் முழுவதையும் காப்பாற்ற 20 முதல் 25 டி.எம்.சி. நீரையோ, இல்லாவிடில், நன்கு வளர்ந்த நிலையிலுள்ள பயிர்களை காப்பாற்ற குறைந்தது 10 டி.எம்.சி. நீரையாவது விடுவிக்க கர்நாடக அரசை இணங்கச் செய்யவேண்டுமென கோரி தமிழக முதல்வர் அவர்கள் 7—1—1986 அன்று பிரதமர் சென்னை வந்தபோது அவரைச் சந்தித்து மனு அளித்தார். மேலும், பொதுப்பணித்துறை அமைச்சரும், செயலாளரும் கர்நாடக முதல்வரை புதுடெல்லியில் 10—1—1986 அன்று சந்தித்து நீரை விடுவிக்குமாறு கேட்டுக்கொண்டனர். பிறகும் தொடர்ந்து முயற்சிகள் நடந்தன.

நீர்வரத்து தொடர்ந்து குறைவாகவே இருந்ததால், மேட்டூர் கால்வாய், புதுக்கட்டளை மேல்நிலைக் கால்வாய், புள்ளம்பாடி கால்வாய் ஆகியவற்றின் கீழ் உள்ள 0.88 லட்சம் ஏக்கர் நிலங்கள் பாசனத்திற்கு திறந்துவிடப்படவில்லை. சுமார் 2 இலட்சம் ஏக்கர் குறுவை, 2 இலட்சம் ஏக்கர் சம்பா பயிர்களில் பாசன நீர் பற்றாக்குறை காரணமாக பயிர் சாகுபடி குறைந்துள்ளது. காவிரி பாசனப்பகுதியில் போதிய தண்ணீர் வராததால் தாளடிப்பயிர், சம்பா பயிர் ஆகியவை கீழ்க்கண்ட அளவிற்கு இழப்பு ஏற்பட்டுள்ளது :—



1986 மார்ச் 31] [டாக்டர் கா. காளிமுத்து]

சம்பா, தாளடி பயிர்கள் மட்டிலும் :

| | | |
|---|---|---|
| (அ) | சம்பா சாகுபடி பரப்பில் தென் ஆற்காடு, திருச்சி, புதுக்கோட்டை ஆகிய மாவட்டங்களில் எற்பட்ட குறைவு. .. | 0.28 இல ஹெக். |
| (ஆ) | தாளடி சாகுபடி பரப்பில் தென் ஆற்காடு, திருச்சி, புதுக்கோட்டை, தஞ்சாவூர் ஆகிய மாவட்டங்களில் ஏற்பட்ட குறைவு. | 0.90 ,, |
| | ஆக மொத்தம் .. | 1.18 |
| (இ) | எதிர்பார்க்கப்பட்ட உற்பத்தி 3.9 மெ. டன். நெல் ஹெக். (இலட்சம் மெ. டன்) | 4.60 இல மெ. டன். |
| (ஈ) | உற்பத்தி செலவினால் ஏற்படும் இழப்பின் மதிப்பீடு தோராயமாக. | ரூ. 81.42 கோடி. |

குறுவை, சம்பா, தாளடி பயிர்கள் சேர்த்து :

| | | |
|---|---|---|
| (அ) | இயல்பரப்பு குறுவையை சேர்ந்தது (இலட்சம் எக்டர்) .. | 8.20 |
| (ஆ) | இயல்பான உற்பத்தி 3.9 மெ. டன் நெல் ஹெக். (இலட்சம் மெ. டன்) | 31.98 |
| (இ) | உள்ளபடி பரப்பு (இலட்சம் ஹெக்டேர்) | 6.37 |
| (ஈ) | உள்ளபடி உற்பத்தி (இலட்சம் மெ. டன்) | 24.84 |
| (உ) | உற்பத்தியில் இழப்பு (31.98—24.84) | 7.14 |
| | தொகை .. | ரூ. 126.37 கோடி |

ஜனவரி மற்றும் பிப்ரவரி 1986-ல் பெய்த மழையின் மூலம், பெரும்பாலான பகுதிகளில் பயிரிடப்பட்டுள்ள சம்பா பயிர்கள் காப்பாற்ற முடிந்துள்ளது.

[1986 மார்ச் 31

**திரு. மா. மணிமாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேளாண்மைத்துறை அமைச்சர் அவர்களைப் பொறுத்தவரையில் அவர்களால் கொடுக்க முடிந்ததைக் கொடுத்து விட்டார்கள். ஆனால் விவசாயிகளைப் பொறுத்தவரையில் கொடுக்கப்படக்கூடிய உதவி போதுமானதாக இல்லை. உற்பத்திச் செலவைப் பொறுத்தவரையில் 1,200 ரூபாயிலிருந்து 1,400 ரூபாய் வரையில் ஒரு ஏக்கருக்கு ஆகிறது. அந்த அளவுக்கு உற்பத்திச் செலவு ஆகின்ற நிலைமையில் விளைவே இல்லாமல் ஒன்றும் இல்லாமல் இருக்கிற விவசாயிகளும், அவர்களை நம்பி இருக்கின்ற விவசாயத் தொழிலாளர்களும் எந்த அளவுக்குப் பாதிக்கப் பட்டுள்ளார்கள் என்பதை நாம் எண்ணிப்பார்க்க வேண்டும். வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களைப் பொறுத்த வரையில் பூச்சி மருந்து மற்றவைகளைத்தான் கொடுக்க முடிகிறது. ஆனால் வெள்ள நிவாரணம் மற்றும் பல நிவாரணங் களைப் பொறுத்தவரையில் வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் தான் செய்யவேண்டி இருக்கிறது. அந்த பாதிக்கப்பட்ட நிலங்களைப் பொறுத்தவரையில் அந்த விவசாயிகளுக்கு வாய்தா, கிஸ்தி போன்றவற்றைத் தள்ளுபடி செய்ய அரசு முன்வருகிறதா என்றால் இல்லை. எனவே பாதிக்கப்பட்ட விவசாயிகள் வாங்கி இருக்கக்கூடிய கூட்டுறவுக் கடன்களைத் தள்ளுபடி செய்வது பற்றி அரசின் பரிசீலனையில் இருக்கிறதா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

இன்றைக்கும் வயல்களில் சிவப்புக் கொடி கட்டி விவசாயி களைக் கேவலப்படுத்துகிற, அவமானப்படுத்துகிற நிலைமை தொடர்ந்து இருந்து வருகிறது. இந்த கவன ஈர்ப்பைப் பொறுத்த வரையில் வருவாய்த்துறை அமைச்சருக்குக் கொடுக்க வேண்டியதை . . . (குறுக்கீடு) . . . வேளாண்மைத் துறை அமைச்சரைப் பொறுத்தவரையில் பூச்சிமருந்து போன்றவற்றைக் கொடுத்துவிட்டார்கள். எனவே விவசாயிகளைப் பொறுத்த வரையில் அரசாங்கம்தான் உதவ வேண்டும். பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்குக் கடன் நிவாரணம் வழங்கப்பட வேண்டும். தஞ்சை மாவட்டத்தில் இருக்கிற விவசாயிகள் . . . . (குறுக்கீடு).



1986 மார்ச் 31] [திரு. மா. மணிமாறன்]

விவசாயிகளைப் பொறுத்தவரை வாய்தா, கிஸ்தி போன்றவற்றைத் தள்ளுபடி செய்து கொடுப்பதற்கு என்ன முயற்சி எடுக்கப் பட்டிருக்கிறது என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அதுபோன்று பாதிக்கப்படக்கூடிய நிலைமை இருக்குமேயானால் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் மூலமாக விவரங்களைக் கேட்டறிந்து உரிய நடவடிக்கையை அரசு எடுக்கும்.

**திரு. மா. மணிமாறன்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அப்படி நடவடிக்கை எடுப்பது உண்மை என்று சொன்னால் இப்போது வசூலித்துக் கொண்டிருக்கின்ற கிஸ்தி, வாய்தா போன்றவற்றைத் தள்ளுபடி செய்வதோடு, சிவப்புக் கொடி கட்டுதல் போன்றவற்றைத் தவிர்த்து கூட்டுறவுக் கடன் களையும் வசூலிப்பதை நிறுத்த வேண்டும். கூட்டுறவுச் சங்கத்தைச் சேர்ந்தவர்களைப் பொறுத்தவரையில் நோட்டீஸ், டெலிகிராம் போன்றவற்றைக் கொடுக்கவேண்டி இருக்கிறது. அப்படிப்பட்ட செலவுகள் இருப்பதோடு அரசுத் துறையிலும் பயணப்படி, போக்குவரத்து செலவு போன்றவற்றை செலவழிக்க வேண்டி இருக்கிறது. எனவே இவற்றை எல்லாம் பரிசீலித்து உடனடியாகத் தக்க நடவடிக்கை எடுத்து இந்த கிஸ்தி, கூட்டுறவுக் கடன் போன்றவற்றை வசூலிப்பதைத் தடுத்து நிறுத்துவதற்குரிய வகையில், ஒத்தி வைப்பதற்குரிய வகையில் அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 10-30)

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இருக்கிற நிதிநிலைமைக்கு ஏற்ப எப்படிச் செய்ய வேண்டுமோ, அந்த வகையில் செய்வதற்கு அரசு நடவடிக்கை எடுக்கும்.

**(ஆ) திருச்சி புறநகர்க் கிளையைச் சேர்ந்த கழகப் பேருந்து திருச்சி தடத்தில் விபத்திற்குள்ளானது.**

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திருவாளர்கள் வி. கங்கவேலு, இரா. தாமரைக்கனி, செ. இரத்தினவேலு ஆகியோர் ஒரே பொருள் குறித்த கவன ஈர்ப்புத் தீர்மானம்

கொடுத்துள்ளனர். அவர்களில் ஒருவர் மாண்புமிகு போக்கு வரத்துத் துறை அமைச்சரின் கவனத்திற்கு அதைக் கொண்டு வருவார்.

**திரு. வி. தங்கவேலு :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "திருச்சியை அடுத்த நொச்சியம் அருகே உள்ள திருவாசி என்ற இடத்தில் 10—3—1986 அன்று தீரன் சின்னமலை போக்குவரத்துக் கழக பேருந்தும், எதிரே வந்த லாரியும் மோதிக் கொண்டதால் பலர் இறந்தும், இருபதுக்கும் மேற்பட்டவர்கள் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இறந்தவர்களின் குடும்பத்தினர்களுக்கும் மற்றும் மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டுள்ளவர்களுக்கும் இதுவரை அரசால் எந்தவித நிவாரணமும் அளிக்கப்படாமையால் அம்மக்களுக்கு ஏற்பட்டுள்ள இன்னல்கள் குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு போக்கு வரத்துத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

**அறிக்கை.**

திருச்சி புறநகர்க்கிளையை சேர்ந்த பேருந்து டி.எம்.எல். 5602 சேலம்-திருச்சி தடத்தில் 10—3—1986 மதியம் 1-00 மணியளவில் சேலத்தில் டிரிப் எடுத்து திருச்சி நோக்கி வந்துகொண்டிருந்த டி.என்.ஜி. 225 என்ற தனியார் சுமை லாரியுடன் எதிரெதிரே மோதி விபத்திற்குள்ளானது. இந்த தகவல் அறிந்து நிர்வாகத் தரப்பில் கிளை மேலாளர், திருச்சி நகர்-2 சென்று உடனே ஆய்வு செய்து அறிக்கை சமர்ப்பித்தபடி, இந்த விபத்திற்கு காரணம் இரண்டு ஊர்திகளின் ஓட்டுநர்களின் கவனக் குறைவே என தெரிய வருகிறது.

மேலும் இந்த விபத்தில் ஆறு பயணிகள் ஸ்தலத்திலேயே இறந்தும், இரண்டு பயணிகள் மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லும் வழியில் இறந்துமுள்ளார்கள். இதில் ஆண் பயணிகள் 4, பெண் பயணிகள் 4, விபத்தில் காயமுற்றவர்களின் எண்ணிக்கை இரண்டு ஊர்திகளின் ஓட்டுநர்கள் உட்பட 17 பேர்கள்.



கழக ஓட்டுநர் திரு. என். விஸ்வநாதன், பணி எண் 8131 அவர்கள் உடனடியாக 10—3—1986-ந் தேதியிலிருந்து தற்காலிக வேலை நீக்கம் செய்யப்பட்டு, குற்றச்சாட்டு மெமோ வழங்கப் பட்டு, ஒழுங்கு நடவடிக்கை கோப்பு விசாரணை அதிகாரியிடம் நிலுவையில் உள்ளது.

காயமுற்றவர்களை உடனடியாக மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லவும், இறந்தவர்களின் குடும்பங்களுக்கு உடனே தகவல் தெரிவிப்பதிலும் காவல்துறை அதிகாரிகளின் துணை கொண்டு தீவிரமாக செயல்பட தீரன் சின்னமலை போக்குவரத்துக் கழக அதிகாரிகள் முழு மூச்சுடன் செயல்பட்டார்கள். மருத்துவ மனையிலும் சிறந்த சிகிச்சை பெற ஆவன செய்யப்பட்டுள்ளது.

மேலும் இந்த விபத்தில் கழக பேருந்தும், தனியார் லாரியும் சம்பந்தப்பட்டிருப்பதால், இரு ஓட்டுநர்களின் தவறுதலால் விபத்து ஏற்பட்டு உள்ளது என ஆய்வில் தெரிய வருவதாலும், நீதி மன்றம் தீர்மானிக்க வேண்டியிருப்பதால் போக்குவரத்துக் கழகம் உடனே நஷ்ட ஈடு வழங்குவது இயலாத நிலையில் உள்ளது.

**திரு. வி. தங்கவேலு :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இங்கு கொடுக்கப்பட்டிருக்கிற விவர அறிக்கையில் எட்டு பேர்கள் இறந்துள்ளார்கள் என்றும், அதில் நான்கு பயணிகள் ஆண்களாகவும், நான்கு பயணிகள் பெண் களாகவும் இருக்கிறார்கள் என்றும் உள்ளது. 17 பேர்கள் காயம் உற்று பாதிக்கப்பட்ட நிலைமையில் இருக்கிறார்கள் என்றும் உள்ளது. ஆக மொத்தம் 25 பயணிகள் (ஓட்டுநர்கள் உட்பட) இந்த தீரன் சின்னமலை போக்குவரத்துக் கழக பேருந்தால் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். தற்போது பல இடங்களிலும் இந்த தீரன் சின்னமலை போக்குவரத்துக் கழகம், சீரும் சின்னமலை யாகவே மக்களுக்கு தோன்றும் வகையில் நடந்துக் கொண்டிருக்கிறது.

அத்தோடு ஓட்டுநர் திரு. என். விஸ்வநாதன் அவர்களை தற்காலிக வேலை நிறுத்தம் செய்திருக்கிறார்கள். எந்த ஒரு விபத்து, போக்குவரத்துக் கழகங்களில் நடந்தாலும் உடனே ஓட்டுநரையும், பணம் பறி கொடுத்த கண்டக்டரையும் பதவியில்

இருந்து பணி நீக்கம் செய்வது, இந்த அரசு பாரம்பரியமாக கடைபிடித்து வரும் முறையாகவே இருக்கிறது. இப்படி அவர்களே பாதிக்கப்பட்ட நிலையில் உள்ளதால், அவர்களுக்கு வேறு ஒரு வேலை செய்ய, வேறு பணியில் அமர்த்தி வாய்ப்புக் கொடுத்து, அவர்கள் தங்கள் பணியைத் தொடரும்படிச் செய்வதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

அடுத்தாற்போல செத்துப்போனவர்களுக்கும், பாதிக்கப்பட்டவர்களுக்கும் போக்குவரத்துக் கழகத்திலே இருக்கக்கூடிய லீகல் டிபார்ட்மெண்ட் என்று சொல்லக்கூடிய துறை நிவாரணம் அளிக்கிறது. ஆனால் அந்த நிவாரணம் பாதிக்கப்பட்டவர்களுக்கும், இறந்து போனவர்களின் குடும்பத்திற்கும் உடனடியாக கிடைப்பது கிடையாது. அவர்கள் அதை வாங்க மூன்று ஆண்டுகள் கூட ஆகிறது. ஆகவே நிவாரணத் தொகையை உடனடியாக போர்க்கால நடவடிக்கையில் வழங்குவதற்கு அரசு நடவடிக்கை எடுக்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, ஓட்டுநர்களைப் பொறுத்தவரையில், அவர்களை தண்டிக்க வேண்டும் என்ற ஆசை எந்த நேரத்திலும் எந்த உணர்வின் அடிப்படையிலும் அரசாங்கத்திற்கு இல்லை. அவர்களை கவனமாக இருக்க வேண்டும் என்று தான் வலியுறுத்தி வருகிறோம். சின்ன விபத்துக்களை ஏற்படுத்துகிறபோது, அவர்களுக்கு அறிவுரை வழங்கப்பட்டு அவர்கள் கொஞ்சம் பொறுப்புணர்வோடு இருக்க வேண்டும் என்று அறிவுறுத்தப்படுகிறது. பல இடங்களில் அவர்களுக்கு தனியாக, போக்குவரத்துக் கழகங்களின் சார்பாகவே மீண்டும் பயிற்சி கொடுப்பதற்கான நடவடிக்கை கூட எடுக்கப்படுகிறது. ஆனால் இதுபோன்ற பெரிய விபத்துக்கள் ஏற்படுகிறபோதுதான், வேறு வழியில்லாமல், இதுபோன்ற விபத்துக்களை இனிமேலும் நிகழாமல் தடுக்க வேண்டும் என்ற அடிப்படையில், பொதுமக்கள் பாதுகாக்கப்பட வேண்டும் என்ற உணர்வின் அடிப்படையில், அந்த ஓட்டுநர்களின் மீது தவறு இருக்குமானால், அந்த தவற்றின் காரணமாக விபத்து நடந்திருக்குமானால், அவர்கள் மீது நடவடிக்கை எடுப்பதைத் தவிர வேறு வழியில்லை என்பதையும், அது ஏதோ அரசாங்கம் விரும்பக் கூடிய காரியம் அல்ல என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.





நிவாரணத் தொகையைப் பொறுத்தவரையில் எந்தப் போக்குவரத்துக் கழகத்திலே இப்படிப்பட்ட விபத்துக்கள் நடந்திருந்தாலும், அந்தப் போக்குவரத்துக் கழகம் உடனடியாக தேவையான பணத்தை என்னென்ன செலவு ஏற்படுகிறதோ அவைகளுக்காக ஒதுக்கிவிடுகிறது. குறிப்பாக பாதிக்கப்பட்டவர்களை மருத்துவமனைக்குக் கொண்டுசெல்வது, சம்பந்தப்பட்டவர்களுக்கு தகவல்கள் கொடுப்பது, சம்பந்தப்பட்டவர்களுடைய குடும்பத்திலிருந்து யாராவது வரவேண்டும் என்று சொன்னால் அவர்களை அழைத்து வருவது, மீண்டும் வீட்டிற்கு கொண்டு போய் விடுவது, இறந்து போனவர்களின் உடல்களை போலீஸ்காரர்களுக்கோ அல்லது சம்பந்தப்பட்டவர்களின் வீட்டிற்கோ கொண்டு போய் சேர்ப்பிப்பது போன்ற அத்தியாவசியமான பணிகளுக்கு என்ன செலவானாலும், எந்தவித பலனையும் எதிர்பார்க்காமல் மேற்கொள்கிறது. ஆனால் பின்னாலே அவர்களுக்கு இழப்பீடு கொடுக்கின்ற வகையில் வரும்போது, தீர விசாரித்து நீதி மன்றத்தினுடைய முடிவுக்கு ஏற்பதான் செய்ய வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. இறந்துபட்டவரின் குடும்பத்திலே அவருக்கு யார் வாரிசு என்பதை நேரிடையாக நிர்ணயிக்கக்கூடிய, முடிவு எடுக்கக்கூடிய வாய்ப்பு நமக்கு இல்லை. பல நேரங்களில் தவறானவர்கள் வெளியிலே இருந்து யாராவது வந்து வாங்கிச் செல்வார்களேயானால், என்ன செய்வது என்ற காரணத்தால், அதைத் தடுக்கின்ற வகையில் அவர்களுடைய நன்மையைக் கருதியே தான் இப்படிப்பட்ட காலதாமதம் ஏற்படுகிறது என்கிற உண்மையை நான் இங்கு சொல்லியாக வேண்டும். எனவே அந்த அடிப்படையிலே அவர்களுக்கு யார் நேரிடையாக வாரிசுதாரர்களாக இருக்கிறார்களோ அவர்களின் கையில் ஒப்படைக்க வேண்டுமென்ற உணர்விலும், அதைப்போல நீதிமன்றத்திலிருந்து சரியான தீர்ப்பு கிடைக்க வேண்டுமென்ற உணர்விலும்தான் காலதாமதம் ஏற்படுகிறது. எனவே இதில் அரசாங்கம் விரும்பி காலதாமதம் செய்யவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. இரா. தாமரைக்கனி:** தலைவர் அவர்களே, இறந்து போனவர்களுடைய குடும்பத்திற்கு விபத்து நிதி கொடுக்கப்பட்டுள்ளதா? அதுமட்டுமல்லாமல் மாண்புமிகு முதல்வர் அவர்களின் நிவாரண நிதியிலிருந்து உதவியளிக்க ஏற்பாடு

செய்யப்படுமா? நீதிமன்றத்தில் இறந்து போனவர்களுக்கு நஷ்டயீடு கொடுக்க கேஸ் பெண்டிங்காக இருக்கிறது என்று சொல்கிறார்கள். இறந்து போனவர்கள் பெரும்பாலும் ஏழை எளியவர்களாக இருப்பதால் கோர்ட் தீர்ப்பளிக்கிறபோது எப்படியும் ஒரு தொகையை கொடுக்க உத்தரவிடப் போகிறது. அப்படியிருக்கிறபோது அதற்கிடையில் ஏதாவது 10 ஆயிரமோ, 15 ஆயிரமோ வாரிசுதாரர்களுக்கு எழுதிவாங்கிக் கொண்டு கொடுத்து, பின்னாலே அதனைக் கழித்துக்கொள்கிற வகையில் ஒரு ஏற்பாட்டைச் செய்து அரசாங்கம் அவர்களுக்கு உதவி செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:** தலைவர் அவர்களே, சில விதிமுறைகளை நாம் கடைபிடித்துதான் காரியங்களைச் செய்ய வேண்டியிருக்கிறது. அவர்களுக்கு கொடுக்க வேண்டுமென்ற அந்த உணர்வோடு நாம் இருந்தாலும் கூட விதிமுறைகளுக்கேற்ப நாம் நடவடிக்கை எடுக்கவேண்டியிருக்கிறது என்பதால் இதனை உடனடியாகச் செய்ய முடியாத நிலை இருக்கிறது. எனவே சட்டப்படி, விதிமுறைகள்படி இதில் நடவடிக்கை எடுக்கப்படும்.

**திரு. செ. இரத்தினவேலு:** தலைவர் அவர்களே, ஓட்டுநர்கள் முறையாக பயிற்சி பெறாத காரணத்தினால்தான் இதுபோன்ற விபத்துகள் ஏற்படுகின்றன. ஆகவே போக்குவரத்துக் கழகங்களில் ஓட்டுநர்கள் பயிற்சி பள்ளிகளை அமைத்து, அதில் ஓட்டுநர்கள் பயிற்சி பெறச்செய்து அதற்கு பின்னாலே அவர்கள் ஓட்டுநர்களாக பணிபுரிய அனுமதிக்கப்படுவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:** தலைவர் அவர்களே, ஓட்டுநர்களைப் பொறுத்தவரையில் தரமானவர்களை தேர்ந்தெடுக்க வேண்டுமென்று போக்குவரத்துக் கழகங்கள் அதிலே அதிக அக்கறையை காட்டிக்கொண்டிருக்கிறது. அதிலும் இந்த ஓட்டுநர்களைத் தேர்ந்தெடுக்கிறபோது பல்வேறு கட்டுப்பாடுகளை வைத்து, விதிமுறைகளை வைத்து, அவர்கள் பேருந்துகளை ஒழுங்காக ஓட்டுகிறார்களா என்பதை கவனித்து தான் அதிகாரிகள் நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். சிறந்த ஓட்டுநர்களாக வருகிறவர்களைதான் 15 நாட்கள்,



20 நாட்கள் பயிற்சி கொடுத்து நேரிடையாக போக்குவரத்துக் கழகங்களில் அமர்த்திக்கொள்கிறோம். மற்றவர்களைப் பொறுத்த வரையில் ஒரு மூன்று மாதங்கள் பயிற்சிக் கொடுத்தால் போதுமென்ற நிலையில் இருக்கக்கூடியவர்களை மூன்று மாதப் பயிற்சியிலே சேர்த்துக் கொள்கிறோம். சிலநேரங்களில் சிறந்த ஓட்டுநர்கள் என்று அவர்கள் சொல்லக்கூடும். நல்ல முறையில் வண்டிகளை ஓட்டக்கூடியவர்களாக இருப்பார்கள். ஆனால் அவர்கள் எந்த நேரத்திலும் விபத்துக்களை உண்டாக்கக் கூடியவர்களாக இருப்பார்கள் என்று சந்தேகம் போக்குவரத்துக் கழக அதிகாரிகளுக்கு ஏற்படுமேயானால் அவர்களைத் தேர்ந்தெடுப்பதில்லை. எனவே பல வழிமுறைகளை வைத்துதான், முறையாகத்தான் ஓட்டுநர்களை நாம் தேர்ந்தெடுத்துக் கொண்டிருக்கிறோம். இருந்தாலும் ஓட்டுநர்கள் போதிய அளவிற்கு இல்லையென்ற நிலை தமிழகத்தில் இருந்து கொண்டுதான் இருக்கிறது. அதிகமாக பேருந்துகளை விட்டுக் கொண்டிருக்கிற நமக்கு அவற்றை இயக்குவதற்கு சரியான ஓட்டுநர்கள் கிடைக்கவில்லையென்பது யதார்த்தமான உண்மையாகும். இதை ஈடுகட்ட வேண்டுமென்ற காரணத்தால்தான் மாண்புமிகு முதல்வர் அவர்களின் ஆலோசனைபடி கடந்த சில ஆண்டுகளாக ஒவ்வொரு போக்குவரத்துக் கழகத்திலும் ஓட்டுநர்கள் பயிற்சி பள்ளியை நாம் படிப்படியாகத் துவங்கி வருகிறோம். அதற்கு முன்னாலே ஐ.ஆர்.டி. என்ற நிறுவனத்தின் சார்பாக ஒரு ஓட்டுநர் பயிற்சிப் பள்ளி இருந்து கொண்டிருக்கிறது. இந்த ஓட்டுநர் பயிற்சிப் பள்ளியிலே வருகிறவர்கள் முறையாகப் பயிற்சி பெறுகிற காரணத்தால் இந்தப் பிரச்னைகளை எதிர்காலத்தில் நாம் தீர்த்து விட முடியும். ஆனால் உடனடியாக இன்றைக்கே தீர்க்க முடியுமா என்றால் முடியாது. படிப்படியாக பயிற்சி கொடுத்து எதிர்காலத்தில் இரண்டு, மூன்று ஆண்டுகளுக்குள்ளாக போதிய ஓட்டுநர்களை உருவாக்கி விட முடியுமென்ற நிலையை இன்றைக்கு போக்குவரத்துக் கழகங்கள் எடுத்துக் கொண்டிருக்கின்றன.

[1986 மார்ச் 31

## 4. அரசினர் சட்ட முன்வடிவு.

### கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) இரண்டாம் திருத்த சட்ட முன்வடிவு, 1986.

**மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் :** துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

"1986 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) இரண்டாம் திருத்த சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்".

**திரு. என். எஸ். வி. சித்தன் :** துணைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு ஆண்டும் வருகிற கூட்டுறவுச் சங்கங்களின் தனி அலுவலர்கள் பதவி நீட்டிப்பு சட்ட முன்வடிவு இந்த ஆண்டும் வந்துவிட்டது. துணைத் தலைவர் அவர்களே உங்களுக்குத் தெரியும். சென்ற ஆண்டு இந்த அவை மெத்தப் பெருந் தன்மையோடு ஓராண்டு காலம் பதவி நீட்டிப்புக் கொடுத்தது. இந்த ஓராண்டு காலத்திற்குள்ளாக அரசு கூட்டுறவுத் துறையில் தேர்தலை நடத்தியிருக்கலாம். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்கிறபோது சொல்லலாம். ஊராட்சி மன்றத் தேர்தல்கள் நடைபெற்றிருக்கின்றன, இப்போது சட்டமன்றம் நடக்கிறது என்று சொல்லலாம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** அறிமுக நிலையில் விரிவாகப்பேச வேண்டியதில்லை. ஆய்வுநிலையில் விரிவாகப் பேசிக் கொள்ளலாம்.

(முற்பகல் 10-40)

**திரு. என். எஸ். வி. சித்தன் :** துணைத் தலைவர் அவர்களே, ஆகவே ஒரு ஆண்டுக்குள் நடத்தி இருக்கலாம். ஏன் நடத்த வில்லை என்பது நமக்குப் புரியவில்லை. ஆனால் இதிலே முக்கியமாக இந்தக் காரண நோக்க விளக்கத்திலே குறிப்பிட்டு இருப்பது மிகவும் வேடிக்கையாக இருக்கிறது. 1 ஆண்டுக்காலம் என்று சொன்னார்கள். ஆனால் அதற்கான விதிகளை இன்னும் ஏற்படுத்தி முடிக்காத காரணத்தால், ஓர் ஆண்டுக்காலம் வேண்டும்



1986 மார்ச் 31] [திரு. என். எஸ். வி. சித்தன்]

என்று சொல்கிறார்கள். 1983 ஆம் ஆண்டு கூட்டுறவுச் சங்கத்தினுடைய இந்தச் சட்டம் வந்துவிட்டது. 3 ஆண்டுக்காலமாக விதிகள் நிரப்பப்பட வில்லை அல்லது செய்யப்படவில்லை என்பது வேடிக்கையாக இருக்கிறது. இதிலே இன்னும் வேடிக்கை என்னவென்றால், 'இன்னும் சில காலம் ஆகும் என்பதால், அரசு தனி அதிகாரிகளுடைய காலத்தை ஓர் ஆண்டுக்கு நீடிக்கிறது' என்பதாகும். நான் சரித்திர மாணவன்; குப்தர்கள் காலம், பல்லவர்கள் காலம், பாண்டியர்கள் காலம் என்று சொல்வார்கள். 'இன்னும் சில காலம், இன்டெபனைட் டெர்ம்' என்றால், எவ்வளவு காலம் என்று சொல்ல முடியாது. ஆகையினாலே நான் உங்கள் மூலமாகக் கேட்டுக்கொள்வது, ஓர் ஆண்டுக் காலம் என்பது தேவையில்லை. இன்றைக்கே, தேதியை அறிவிக்க வேண்டும். 3 மாதம், 4 மாதம் அல்லது 6 மாதம் என்று அறிவிக்க வேண்டும். இப்படி தவணை இல்லாமல் அறிவித்துக்கொண்டு போவது நல்லதல்ல, எனவே நான் இந்தச் சட்டத்தை எதிர்க்கிறேன்.

**திரு. அ. ரகுமான்கான்:** மன்றத்தினுடைய துணைத் தலைவர் அவர்களே, தனி அலுவலர்களுடைய பதவிக் காலத்தில் மீண்டும் ஒரு ஆண்டுக்கு நீட்டிப்பது என்பது கண்டிக்கத்தக்கது. ஜனநாயக விரோதமானது. மக்கள் பிரதிநிதிகள் இந்த அமைப்பு களில் இருப்பதற்கு உடனடியாக ஆவன செய்ய வேண்டும். அவசர நிலை பிரகடனம் செய்யப்பட்டத்திலிருந்து; ஆளுநர் ஆட்சிக் காலத்திலிருந்து. உங்கள் ஆட்சிவந்த காலம் வரையிலும், ஏறக்குறைய 12 வருட காலமாக இந்தக் கூட்டுறவுத் துறையிலே மக்கள் பிரதிநிதிகள் இல்லாமல் இருக்கிறார்கள். ஆனால் அதேநேரத்தில் நீங்கள் ஒரு காம்ப்ரஹென்சிவ் லா, கூட்டுறவுச் சங்கத்திற்காக ஒரு சட்டம் கொண்டு வருகிறோம் என்று சொல்லி, ஏறத்தாழ 8 ஆண்டுகாலம் முடியப்போகிறது. மீண்டும் இதற்கான ரூல்ஸ் தயாரிப்பதற்காக அவகாசம் வேண்டும் என்று, தேர்தல் நடத்துவதற்கு அவகாசம் வேண்டும் என்று சொல்வது. இந்த அரசு இந்தத் தேர்தலை நடத்துவதற்கு விரும்பாத ஒரு போக்கைக் கடைப்பிடிக்கிறது என்பதை காட்டிக் கொண்டு இருக்கிறது. தேர்தல் நடத்தவேண்டும். மக்கள் பிரதிநிதிகள் இருக்க வேண்டும். தனி அதிகாரிகளுடைய பதவிக் காலம் நீட்டிக்கக் கூடாது என்பதற்குச் சொல்லப்படுகிற முக்கியமான காரணம், இந்தக் கூட்டுறவுத் துறையிலே ஏற்கெனவே பல

தவறான காரியங்கள் செய்யப்பட்டன, பெட்ரோல் தவறாக பயன்படுத்தப்பட்டது. அதுபோல, கார் தவறாக பயன்படுத்தப் பட்டது, விளம்பரங்கள் தப்பாகச் செய்யப்பட்டன என்றெல்லாம் எந்தக் குற்றச்சாட்டுக்கள் சொல்லப்பட்டதோ, எதற்காக பாரதி கமிட்டி போடப்பட்டதோ, அந்த ரிப்போர்ட் எதற்காக இன்னும் இங்கே வைக்கப்படாமல் இருக்கிறதோ, அந்த அடிப்படையிலே, அதே தப்பை தனி அதிகாரிகள், அமைச்சர் அவர்களுடைய ஆசிர்வாதத்தோடு கூட்டுறவுத்துறையிலே செய்கிறார்கள். . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நீங்கள் குற்றச்சாட்டு சொல்லிக்கொண்டு போனால் அமைச்சர் அவர்கள் பதில் சொல்வதற்கு வாய்ப்பு வேண்டும். அறிமுக நிலையில் இதையெல்லாம் சொல்ல முடியாது. நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு).

**திரு. பொ. உத்திராபதி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் தனி அதிகாரிகளுடைய பதவிக் காலத்தை நீட்டித்து, மீண்டும் ஒரு சட்டத்தை இங்கே அறிமுகப்படுத்தியிருக்கிறார்கள். நான் சொல்லிக் கொள்வதெல்லாம் இந்தத் துறையிலே தவறுகள் நடக்கக்கூடாது என்பதற்காக இருந்த அமைப்புகளை கலைத்துவிட்டு, ஒழுங்காக இந்த அமைப்புகள் உருவாக வேண்டும் என்ற காரணத்தினால், செலக்ட் கமிட்டிக்கு அனுப்பினார்கள். அந்த கமிட்டியும் பரிசீலனை செய்து, இதை நடத்தலாம் என்று முடிவு செய்துவிட்டார்கள். மேலும் இரண்டு ஆண்டுக்காலம் கடந்துவிட்டது. இப்போது அமைச்சர் அவர்கள் மேலும் தனி அதிகாரிகளுடைய பதவிக் காலத்தை நீட்டித்துக் கேட்டுக்கொள்வது, உண்மையிலே நல்ல நிர்வாகத்தை நடத்துவதற்கு அரசு தயாராக இல்லை என்பது தெரிகிறது. இப்போது அங்கே மிகப் பெரிய தவறுகள் நடந்து கொண்டு இருக்கின்றன. என்னென்ன தவறுகள் நடைபெறுகின்றன என்பதைப் பற்றி பி ஆய்வுக்கு வரும்போது பேசிக் கொள்ளலாம். எனவே நா அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்வது, செலக்ட் கமிட் சொன்னதற்குப் பிறகும், அரசாங்கம் இந்தத் தேர்தல் நடக்காமல் காலம்கடத்திச் செல்வது, அமைச்சர் அவ இங்கே தவறுகள் நடப்பதற்கு வாய்ப்பு அளிக்கிறார்கள் என்ற நிலை உருவாகாமல் தடுப்பதற்கு, இந்தச் சட்ட நீட்டிப்



செய்வதை உடனடியாக ரத்து செய்துவிட்டு, இந்த பில் அறிமுகப்
படுத்துவதை ரத்து செய்து, தேர்தல் நடத்துவதற்கான தேதியை
அறிவிக்க வேண்டும் என்று அமைச்சர் அவர்களைக் கேட்டு,
அறிமுகப்படுத்துவதை எதிர்த்து அமர்கிறேன்.

**திரு. ஜெ. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத்
தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள்
மீண்டும் ஒரு வருட காலத்திற்கு இந்தத் தனி அதிகாரி
களுடைய பதவிக் காலத்தை நீட்டிப்பதற்கான ஒரு
மசோதாவைக் கொண்டு வந்திருக்கிறார்கள். இந்த நேரத்
திலே நான் ஒன்றைச் சுட்டிக்காட்ட விரும்புவது, 1983 ஆம்
வருடம் இந்தக் கூட்டுறவுச் சட்டம் பற்றி இங்கே விவாதித்துக்
கொண்டிருக்கிற நேரத்திலே அன்றைய கூட்டுறவு அமைச்சர்
அவர்கள், 1983 ஜூலை மாதத்தில் ஒரு உறுதியை இந்த
அவைக்குக் கொடுத்தார்கள். ஆறு மாத காலத்திற்குள்ளே
சட்டத்தை உருவாக்கி, தேர்தல் நடத்தப்படும் என்று சொன்
னார்கள். அப்படி இந்த அவைக்குக் கொடுக்கப்பட்ட ஒரு
உறுதியை மீறி, இந்தச் சட்டம் இப்போது இங்கே கொண்டு
வரப்பட்டு, மீண்டும் ஒரு வருட காலத்திற்கு தனி அதிகாரி
களுடைய பதவிக் காலத்தை நீட்டித்துக் கேட்கிறீர்கள்.
இதற்கிடையில் நாங்கள் என்ன பார்க்கிறோம் என்றால், இந்த
அவைக்கு தேர்தல் வைப்பதற்கான நடவடிக்கைகளை நாங்கள்
எடுத்துக்கொள்கிறோம், அதற்காக அவகாசம் வேண்டும் என்று
கேட்கக்கூடிய அமைச்சர் அவர்கள், அல்லது இந்த அரசு, சென்ற
ஜனவரி மாதத்திலே இங்கே கொண்டு வந்து அங்கீகாரம் வாங்கி
னார்கள். ஏற்கனவே இருந்த விவசாயக் கூட்டுறவுச்
சங்கத்திலே உள்ள போர்டுகளை கலைத்துவிட்டு, அங்கே தனி
அதிகாரிகள். . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சட்ட முன்வடிவு
ஆய்வுக்கு வரும்போது விரிவாகச் சொல்லலாம். எதிர்க்கிறோம்
என்று சொல்லிவிட்டு உட்கார்ந்து விடுங்கள்.

**திரு. ஜெ. ஹேமச்சந்திரன்:** அதாவது ஏற்கனவே இருக்கக்
கூடிய தனி அதிகாரிகளின் பதவிக் காலத்தை நீட்டிப்பதில்
சட்டத்தைக் கொண்டுவந்துவிட்டு ஒரு பக்கத்திலே என்ன
நடக்கிறது என்றால், ஏற்கனவே இருக்கக்கூடிய போர்டுகளை
கலைத்துக் கொண்டு இருக்கிறார்கள். இது எப்படி நியாயம்?

[திரு. ஜே. ஹேமச்சந்திரன்] [1986 மார்ச் 31

ஏற்கனவே இந்த அவைக்கு கொடுக்கப்பட்டிருக்கிற அல்லாமல் என்னை மீறுவதாக இருக்கிறது இந்த நடவடிக்கை என்று நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். ஆகவே இந்தத் சட்டத்தை அறிமுகம் செய்வதை நாங்கள் கடுமையாக எதிர்க்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி:

"1986 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) இரண்டாம் திருத்தச் சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்: இச்சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

5. வரவு-செலவுத் திட்டம் 1986-87 பொது விவாதம் (தொடர்ச்சி).

திரு. க. அன்பழகன்: மாண்புமிகு பேரவையினுடைய துணைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு வரவு-செலவு திட்ட நிதிநிலை அறிக்கையின் மீது திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் என்னுடைய கருத்துக்களைத் தெரிவிப்பதற்காக வாய்ப்பினை வழங்கியதற்காக என்னுடைய உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த ஆண்டு நிதி நிலை அறிக்கை, இதற்கு முன்னாலே எப்படிப்பட்ட ஒரு முறையிலே இடம் பெறுமோ அந்த முறையிலே இடம் பெறாமல் மொத்த வரவு-செலவைப்பற்றி இந்த அறிக்கையில் அறிவித்து விளக்குகிற அந்த முறைக்குப் பதிலாக மொத்த வரவு-செலவை மதித்துக் கொள்ள வைத்து வரவு-செலவு திட்டத்தினுடைய விளைவுகளைப் பற்றி மட்டும் இந்த அறிக்கை தெரிவிக்கிறது. இருந்தாலும் தனியாகத்



1986 மார்ச் 31] [திரு. க. அன்பழகன்]

தரப்படுகின்ற குறிப்பேடுகளில் அதற்கான தொகை விவரம் இருக்கிறது. அந்த விவரப்படி வருவாய் கணக்கிலே வரவு, வருகிற ஆண்டில் 2,674 கோடி 11 இலட்சம் என்றும், செலவு 2,450 கோடி 86 இலட்சம் என்றும், உபரி 223 கோடி 25 இலட்சம் என்றும் அந்தக் கணக்கு காட்டப்படுகிறது. அதுபோல மூலதனக் கணக்கிலே வரவு 601 கோடி 26 இலட்சம், கடன் முன் பணம் ஆகிய வகைகளிலே செலவு 795 கோடி 88 இலட்சம்; பற்றாக்குறை 194 கோடி 62 இலட்சம், மொத்தம் நிகரமாக மிச்சம் இருப்பது 28 கோடி 63 இலட்சம் என்று இந்த விவரம் அரசின் சார்பிலே தரப்பட்டிருக்கிறது. அதற்கான நிதிநிலை குறிப்பிலே இந்த விவரம் காணப்படுகிறது. இந்த விவரத்தைக் காண்கிறபோது தமிழக அரசு கடந்த ஆண்டை விட 100 கோடி 150 கோடி அதிக வரவு செலவு செய்வதை பார்க்கிறபோது வரவு-செலவுத் திட்டத்திலே வளர்ச்சி இருப்பதாக கருதுகிற ஒரு எண்ணம், தோற்றம் ஏற்படுகிறது. உண்மையாகக் கூர்ந்து நோக்கினால், புள்ளி விவரங்களில் உயர்வு காணப்படுகிறதே தவிர நடைமுறையிலே உயர்வு இல்லை என்பதை அகில இந்திய அளவிலே இன்றையதினம் இன்ப்ளேஷன் என்பது பணவீக்கம் என்பது மிகப்பெரிய அளவில் கடந்த 4 ஆண்டு காலமாக உருவாகி வருகிறது என்ற செய்தியையும் அந்த இன்ஃப்ளேஷன் என்பதும் கேலப்பிங் இன்ஃப்ளேஷன் என்று சொல்லப்படுகிற அளவுக்குப் பாய்ந்து ஏறுகிற பணவீக்கம் என்று சொல்லப்படுகிற அளவுக்கு இருக்கிற காரணத்தினால் ஏறத்தாழ 8 சதவீதத்திலிருந்து 10 சதவீதம் வரையில் பணத்தினுடைய வீக்கம் காரணமாக நாம் செய்கிற மதிப்பீட்டினுடைய தகுதி குறைந்து போகிறது என்கிற உண்மையை நாம் எண்ணிப்பார்க்க வேண்டும். அந்த வகையிலே பார்த்தால் இந்த ஆண்டு வருவாய் கணக்கில் செலவு முதலியவற்றினுடைய நிலவரத்தை தந்திருக்கிற அந்தப் பகுதியில் கடந்த ஆண்டு 1985-86-ல் அது 2,314 கோடியாக இருந்து, திருத்த மதிப்பீட்டில் அது 2,356 கோடியாக இருந்து இன்றையதினம் மறுபடியும் வரவு செலவு மதிப்பீட்டில் 2,450 கோடி ஆகிறது என்றால், 2,300 கோடிக்கு ஒரு 100 கோடி உயர்வுதான் காணப்படுகிறது.

(முற்பகல் 10.50.)

2,300 கோடி ரூபாய்க்கு 100 கோடி ரூபாய் உயர்வு என்று சொன்னால் ஏறத்தாழ 5 சதவீதம் கூட அந்த உயர்வு மொத்த வரவு-செலவுத் திட்டத்தில் இல்லை. அதை 4 சதவீதம் என்று கணக்கிட முடியும். எனவே ஏறத்தாழ 8 சதவீத பண வீக்கத்தால் ஏற்படுகிற விளைவுகள் இருக்கும் போது மொத்த வரவு-செலவு 4 சதவீதம் உயர்வு தான் புள்ளிவிவரத்தால் காண முடியும் என்று சொன்னால் அது எந்த வகையில் இந்த மாநில அரசினுடைய வரவு-செலவுத் திட்டத்தில் வளர்ச்சியைக் காட்டுகிறது என்று நான் அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

ஒரு வேளை நான் சொல்லுகிற இன்பிளேஷன் 8 சதவீதம் இல்லை அது 6 சதவீதம் தான் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லக்கூடும். ஆனால் இந்த இன்பிளேஷன் காரணமாக நம்முடைய வரவு செலவுத் திட்டங்கள் வளர்ச்சியை பெறுகின்றது என்று சொல்லக்கூடிய அந்த வாய்ப்பை குறைத்து விடுகிறது என்பதை மறந்து விடக்கூடாது என்று நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

மற்றும் ஒன்று. பொதுவாகவே மிச்சம் இருக்கிற வரவு-செலவுத் திட்ட அறிக்கை தருகிறபோது புதிய வளர்ச்சித் திட்டங்களில் நாம் அதிகமாக கவனம் செலுத்தவில்லை என்ற எண்ணம் ஏற்படுகிறது. வேண்டுமானால் வரவு-செலவுத் திட்டத்தைப் பற்றி பேரறிஞர் அண்ணா அவர்கள் ஒரு முறை சொன்னதை நான் நினைவூட்ட விரும்புகிறேன். அது பற்றாக்குறை வரவு-செலவுத் திட்டமாக இருந்தால் வளர்ச்சிக்கு அதிகமான வாய்ப்பு இருக்கும். நிகர இருப்பு இருக்கிற வரவு-செலவுத் திட்டமாக இருக்குமானால் அது வளர்ச்சிக்கான வாய்ப்பை சற்று குறைக்கிறது என்ற பேரறிஞர் அண்ணா அவர்கள் கருத்து வெளியிட்டு இருக்கிறார்கள். எனவே அந்த வகையில் இது 'டெபிசிட் பற்றாக்குறை பட்ஜெட்டாக இல்லாமல் இது ஓரளவு மிச்சம் இருக்கிற வரவு-செலவுத் திட்டமாக இருப்பது வளர்ச்சிக்கு ஊக்கமோ என்று நான் சந்தேகப்படுகிறேன்.

அதேபோல் மூலதனச் செலவின் நிலவரத்தைப் பற்றி குறிப்பிடுகிறபோது 1983-84 ஆம் ஆண்டில் அப்படி ஒதுக்கப்பட்ட நிதி 182 கோடியே 51 லட்சம் ரூபாய். மூலதனச் செலவிற்கு அரசு, தொழில் துறையிலும் பல்வேறு துறைகளிலும் ஊக்கம் ஏற்படுத்துவதற்காக ஒரு குறிப்பிடத்தக்க அளவுக்கு நிதி வழங்கவேண்டும் என்ற அவசியம் இருக்கிற காரணத்தால்





1983-84-ல் 182 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டு இருக்கிறது. அது
1986-87-ல் 172 கோடி ரூபாய் தான் ஒதுக்கப்பட்டு இருக்கிறது.
ஆண்டுக்கு ஆண்டு 10 கோடி ரூபாய் அதிகமானாலே அந்த
10 கோடி ரூபாய் இன்பிளேஷன் காரணமாக அதனுடைய
தகுதியை இழந்து விடுகிறது என்ற நிலைமை இருக்கிறபோது
அகில இந்தியாவுக்கு ஒட்டுமொத்தமாக சொல்லக்கூடிய கருத்துத்
தான் அது என்று சொன்னாலும், நம்முடைய மாநில அளவிலே
அதை நான் எண்ணிப் பார்க்க கடமைப்பட்டவனாக இருக்
கிறேன். இந்த முறையிலே நாம் தொகையை ஏற்றி, உயர்த்தி
அறிவிக்கிற அறிவிப்பிற்கே பொருள் அற்றதாக போகிறபோது
இந்த ஆண்டு 1983-84 ஆம் ஆண்டை விட 10 கோடி ரூபாய்
குறைவாக தான் மூலதன செலவின் நிலவரம் இருக்கிறது
என்பதை நான் எடுத்துக் காட்ட கடமைப்பட்டவனாக இருக்
கிறேன்.

அது மட்டும் அல்ல, இப்படிப்பட்ட முறைகளை கையாண்டு
விட்டு தமிழகம் முன்னேறுகிறது. வருமானம் உயர்ந்து இருக்
கிறது என்று நாம் பேசிக்கொண்டு இருக்கிறோம். எனக்குக்
கிடைத்த ஒரு புள்ளி விவரத்தை நான் இந்த அவைக்குப்
படித்துக் காட்ட கடமைப்பட்டவனாக இருக்கிறேன். அந்த
புள்ளி விவரம் 'பர் கேப்பிட்டா இன்கம்' தனி நபர் வருமானம்
மாநிலங்கள் தோறும் எப்படி அமைந்து இருக்கிறது என்பதை
கடந்த ஒரு மாதத்திற்குள்ளாக அகில இந்திய புள்ளிவிவரம்
தெரிவிக்கிறது. அந்த புள்ளி விவரத்திலே, ஒரு ஆண்டுக்குத்
தனி நபர் சராசரி வருமானம் பஞ்சாப் மாநிலத்திலே 3,835
ரூபாய். அரியானா மாநிலத்திலே 3,286 ரூபாய், குஜராத்
மாநிலத்திலே 2,997 ரூபாய். கேரள மாநிலத்திலே 2,796 ரூபாய்
காஷ்மீரத்திலே 2,705 ரூபாய் ஆனால் தமிழ்நாட்டிலே, வருந்தத்
தக்க சூழ்நிலை உள்ள தமிழகத்திலே 2,070 ரூபாய். தமிழ்
நாட்டிலே 2,070 ரூபாய் தான் தனி நபர் வருமானம். பஞ்சாப்
பிலே 3,835 ரூபாய். அதற்காக அவர்களிடத்திலே எனக்கு ஒன்றும்
கோபம் இல்லை. பஞ்சாப் மாநிலத்தின் சூழ்நிலை அதனுடைய
வருமானம் ஏறத்தாழ 4 ஆயிரம், ஒரு மாதத்திற்கு 320 ரூபாய்.
அரியானாவிலே ஒரு மாதத்திற்கு 275 ரூபாய், குஜராத்திலே
ஏறத்தாழ 250 ரூபாய், கேரளாவிலே ஏறத்தாழ 233 ரூபாய்,
காஷ்மீரத்திலே ஏறத்தாழ 225 ரூபாய். "மந்த்லி பெர் கேப்

பிட்டா இன்கம்" தமிழ்நாட்டிலே 175 ரூபாய். இந்த நிலையில் தான் தமிழ்நாடு இருக்கிறது என்பதை எண்ணிப்பார்த்தால் வறுமைக் கோட்டுக்கு கீழே உள்ள மக்கள் அதிகமாவார்களா? குறைவார்களா? என்பதையும் தயவுசெய்து இன்னொரு வகையில் எண்ணிப் பார்க்க வேண்டும். ஏன் என்றால் கடந்த ஆண்டு தமிழ்நாட்டிலே வறுமைக் கோட்டுக்கு கீழ் உள்ள மக்கள் 58 சதவீதம் என்று தமிழக அரசின் சார்பிலே தெரிவிக்கப் பட்டது. 100-க்கு 58 பேர் வறுமைக் கோட்டுக்கு கீழ் இருக்கி றார்கள், 8 ஆண்டுக்கு முன்னால் அது 48 சதவீதம் 49 சதவீதம் இருந்தது. அதற்கு பின்னால் உயர்ந்து 58 சதவீதம் என்று புள்ளி விவரம் இங்கே தெரிவிக்கப்பட்டுள்ளது.

அண்மையில் நம்முடைய நிதியமைச்சர் நாவலர் அவர்கள் ஒரு இடத்திலே பேசியதாக நான் பார்த்தேன். 58 விழுக்காடு என்பது இப்போது 45, 42-ஆகக் குறைந்து விட்டது என்று அவர் பேசியதை ஒரு ஏட்டிலே பார்த்தேன். அந்தப் புள்ளி விவரத் தைப் பார்க்கிறபோது, ஒரு அமைச்சராக இருக்கிறார் என்பதற் காக கேட்கிறேன். நான் சொல்லக் கூடிய புள்ளிவிவரங்கள் தவறாக இருக்குமேயானால், நான் ஒரு ஏட்டைப் பார்த்துத்தான் சொல்ல முடியும் என்பதால் தவறு ஏற்படலாம். ஆனால் நிதி யமைச்சர் அவர்கள் வறுமைக் கோட்டிற்குக் கீழேயுள்ள மக்களின் எண்ணிக்கை குறைந்துவிட்டது. 58-ஆக இருந்தது இன்றைக்கு 45-ஆக, 42-ஆக, 38-ஆகக் கூட குறைந்திருப்பதாக அவர் சொல்லி யிருக்கிறார். அப்படிக் குறைந்திருப்பதற்கு நியாயமோ, சூழ் நிலையோ இடம் தரவில்லை. அமைச்சரவர்கள் உள்ளாட்சி மன்றத் தேர்தலில் வாக்காளர்களாக பதிவு செய்யப்பட வேண்டி யவர்கள் 50 இலட்சம் பேர்களை விட்டுவிட்டார்கள் என்று சொல்லியிருக்கிறார்கள். அப்போதே சொல்லாமல் இப்போது சொல்லியிருக்கிறார்கள். அதை வரவேற்கலாம். ஆனால் அப்போது இந்த 50 இலட்சம் பேர்கள் விடப்பட்டிருக்கிறார்கள் என்று சொல்ல வேண்டியவர்கள், பொறுப்பிலே உள்ள அமைச்சர்கள், அதிகாரிகளைக் கண்காணிக்க வேண்டியவர்கள்

1986 மார்ச் 31] [திரு. க. அன்பழகன்]

இப்பொழுது சொல்வதுதான் விசித்திரமாகும். அவர்கள் சொல்வதைப் போல் தமிழ்நாட்டிலே வறுமைக்கோட்டிற்குக் கீழே இருக்கிறவர்கள் எண்ணிக்கை குறைந்துவிட்டது என்ற கருத்து நிதியமைச்சரிடமோ, நிதியமைச்சகத்திடமோ இருக்கு மானால், அதற்கான விவரங்களை அவர்கள் இந்த அவைக்குத் தரவேண்டும். மாறாக தமிழ் நாட்டினுடைய விலைவாசி ஏற்றம் மக்களுடைய அன்றாட வாழ்க்கையை பாதிக்கிறது என்பதை இன்னொரு புள்ளிவிவரம் தெரிவிக்கிறது. அகில இந்திய ரீதியில் ரூபாயினுடைய மதிப்பு ஒரே விகிதாச்சாரத்திலே இறங்குவதில்லை. வெளி நாட்டிலே ரூபாயினுடைய மதிப்பு ஒரே விகிதாச்சாரத்திலே இறங்குகிறதே தவிர, நம்முடைய நாட்டில் ஊருக்கு ஏற்றாற்போல் ரூபாய் நாணயத்தினுடைய மதிப்பு குறைகிறது. ஒரு முறை மத்திய அமைச்சர் பேசி யிருந்தார், 17 பைசாவாகக் குறைந்திருக்கிறதென்று இன்னொரு குறிப்பிலிருந்து படித்தேன், 13 பைசாவாகக் குறைந் திருக்கிறது என்று. எது உண்மை என்று எனக்குத் தெரிய வில்லை. 100 பைசாவிற்கு 17 அல்லது 15 பைசாவாகக் குறைந்திருக்கிறது. அகில இந்தியப் பணமதிப்பு நம்முடைய கழுத்தை நெரிக்கக் கூடிய வகையில் தான் இருக்கிறது. வருமானத்தை கூலியாக பெறக் கூடியவர்கள் மாதச்சம்பளம் பெறக் கூடியவர்கள். ஒவ்வொரு மாதமும் பாதிக்கப்படக்கூடிய நிலையில், ரூபாயினுடைய மதிப்பு குறைந்து போய் அவர்களை படு பாதாளத்தில் வீழ்த்துகிற நிலையில் உள்ள ரூபாயினுடைய மதிப்பு கடந்த ஒரு மாதத்திற்கு முன்பு எவ்வளவு என்றால், டில்லியில் ஏறத்தாழ 18 பைசாவாக இருக்கிறது. பம்பாயில் ஏறத்தாழ 17 பைசா மதிப்பு. கல்கத்தாவில் 17.5 பைசா மதிப்பு. தமிழ்நாட்டில் 15.5 பைசா. இதிலே கூட ஒன்றிரண்டு புள்ளி வித்தியாசம் இருக்கலாம். நான் அந்தப் புள்ளி விவரத்தை எழுதி வைத்திருக்கவில்லை. என்னுடைய ஞாபகத்தில் இருந்துதான் சொல்கிறேன். ரூபாய் மதிப்பு கூடத் தமிழ்நாட்டிற்கு வந்தால் 15.5 பைசா. கல்கத்தா விற்குப் போனால் 17 பைசா, டில்லிக்குப் போனால் 18 பைசா வாகிறது. இங்கு விலைவாசி அந்த அளவிற்கு ஏறியிருக்கிறது. பிற மாநிலங்களை விட நம் மாநிலத்தில் மக்கள் அன்றாடம் உபயோகிக்கும் பொருட்களின் விலைவாசி ஏறியிருக்கிற காரணத்தால், சாதாரண வருமானமுள்ளவர்கள் பெரும்பாலும்

இதனால் பாதிக்கப்படுகிறார்கள். வறுமைக் கோட்டிற்குக் கீழே இருக்கக் கூடியவர்களின் எண்ணிக்கை அதிகமாகிக் கொண்டேபோகிறது என்பது அரசாங்கத்திற்கு கணக்கு வருகிறதோ, இல்லையோ நடுத்தர மக்கள் இன்று பாதிக்கப்பட்டு, கீழே போய்க்கொண்டிருக்கிறார்கள். மாத வருமானம் பெறு கின்ற, சாதாரண நிலையில் வருமானம் பெறுகின்ற மக்கள் பாதிக்கப்பட்டு வருகிறார்கள். எனவே நம்முடைய பொருளா தார வளர்ச்சிகள், மக்களுடைய வாழ்க்கையை உயர்த்த முடிய வில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இப்படிப்பட்ட அரசாங்கம் சுய வேலைவாய்ப்புத் திட்டத்தில் 24,000 பேர்களுக்கு இன்றைக்கு வேலைவாய்ப்பு தந்திருக் கிறது. சுய வேலைவாய்ப்புத் திட்டங்கள் என்றால், வங்கி களிலே கடன் பெறுவது, ஒரு தொழிலை நடத்துபவர்கள் நிதி பெறுவது. அந்தப் புள்ளி விவரத்தில் வந்திருக்கிற 24,000 பேர்கள் பற்றி நாம் ஒன்றும் ஐயுற வேண்டியது இல்லை. ஆனால் பெறவேண்டியவர்கள் தமிழ்நாட்டில் எவ்வளவு பேர்கள் இருக்கி றார்கள்? அரசாங்கத்திடம் பதிவு செய்து கொண்டு வேலை கிடைக்காமல் 17 இலட்சம் பேர் இருக்கலாம். ஒருவேளை 16 இலட்சம் பேர் இருக்கலாம். பதிவு செய்யாதவர்கள் ஏறத் தாழ இன்னும் 10 இலட்சம் பேர்கள் இருக்கிறார்கள். தமிழ் நாட்டில் வேலையில்லாமல் 25 இலட்சம் பேர்கள் தகுந்த வருமானத்தைப் பெறமுடியாமல், நாட்டினுடைய வருமானத்தை உயர்த்த அவர்களுடைய உழைப்பைப் பயன்படுத்த முடியாமல் ஓய்ந்து கிடக்கிற நிலையில், 24,000 பேர்கள் சுய வேலைவாய்ப்புத் திட்டத்தில் வேலைவாய்ப்பு பெற்றிருக்கிறார்கள். நூற்றுக்கு ஒருவர் வேலைவாய்ப்பு பெறுகிறார்கள், சுய வேலைவாய்ப்புத் திட்டத்தின் மூலமாக. அரசாங்கத்தின் சார்பாக வேலைவாய்ப்பு உருவாக்குவதற்கு வேண்டிய திட்டங்கள், தகுந்த அளவில் உள்ளதா என்றால், நான் படித்த வரையில், இந்த அறிக்கையில் தகுந்த அளவில் திட்டம் எதுவும் இல்லை.

(முற்பகல் 11-00)

இன்னும் சொல்லப் போனால் வேலை தருவதாகச் சொல்லப் பட்டவர்களுக்குக்கூட வேலை தரப்படவில்லை. பப்ளிக் சர்வீஸ் கமிஷன் என்று சொல்லப்படுகிற பொதுப் பணி தேர்வுக் குழு,





வேலைக்கு தேர்ந்தெடுத்து 2 ஆண்டுக் காலமாகியும் அவர்களுக்கு வேலை தராத நிலைமை இன்றைக்கும் இருக்கிறது. அதைவிடக் கண்டிக்கத்தக்க, வருந்தத்தக்க நிலை வேறு இருக்க முடியாது. தேர்ந்து எடுத்தவர்களுக்கு வேலை கொடுக்காமல் 2 ஆண்டுக் காலம் ஒரு அரசாங்கம் கடத்துமானால், என்னவென்று மதிப்பது? மேலும் தேர்வு எழுதியவர்களுக்கு முடிவுகளைச் சொல்வதற்கு 11 மாத காலம் எடுத்துக் கொள்கிற நிலையில் இந்தத் தேர்வு ஆணைக் குழு இருக்குமானால் இடையிலே என்ன என்ன நடைபெற்றிருக்குமோ எனக்குத் தெரியாது. தேர்வு முடிந்து 3 மாத காலத்திற்குள்ளாக முடிவுகளை அறிவித்து விட்டால் அவரவர்கள் அதன் பின்விளைவுகளை ஏற்றுக்கொள்ள முடியும். முடிவுகளை அறிவிப்பதற்கு ஆணைக் குழு 11 மாத காலம் அதாவது ஒரு ஆண்டுக் காலம் எடுத்துக் கொள்கிறது. பல்கலைக் கழகத்திலே கூட அப்படியாகிற பழக்கம் ஏற்பட்டுள்ளது. இப்படி வேலை தேடுகிறவன் படுகிற இன்னல்கள் சாதாரணமானவை அல்ல என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

அரசின் சார்பாக இன்றைக்குத் தரப்பட்டிருக்கிற விடைப் பட்டியலிலே கூட கடந்த 1985 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் வரையிலும் எவ்வளவு பேர்களுக்கு வேலையற்ற பட்டதாரி களுக்கு, படித்தோர்களுக்கு வேலையற்றோர் நிவாரணம் வழங்கப்படுகிறது என்ற புள்ளிவிவரம் தரப்பட்டிருக்கிறது. அப்படித் தரப்பட்டதில் 1980-81 ஆம் ஆண்டு தொடங்கி 1984-85 ஆம் ஆண்டு வரையிலே 62,229 பேர் என்று தெரிவிக்கப் பட்டிருக்கிறது.

அரசாங்கத்திலே வேலை கொடுக்காமல் பதிவு செய்தோர் ஏறத்தாழ 15 லட்சம், 15 லட்சம் பேர்கள் இருக்கிறார்கள். அவர்களிலே நீங்கள் தரக்கூடிய உதவி 62 ஆயிரம் பேர்களுக்குத் தான். அந்த உதவியைச் செய்வதற்காக நான் பாராட்டத் தயார். எவ்வளவு பேர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதை மறந்து விட்டு ஏதோ 62 ஆயிரம் பேர்களுக்கு உதவி செய்கிறோம் என்ற ஒரு புள்ளிவிவரத்தைச் சொன்னால் நிச்சயமாக வேலையில்லாத மக்களுடைய பிரச்சினைகளை தீர்த்துவிட்டதாக அது இருக்காது என்பதை நான் நினைவூட்ட விரும்புகிறேன்.

[திரு. க. அன்பழகன்] [1986 மார்ச் 31

பிரச்சினைகள் இப்படியெல்லாம் வடிவம் எடுக்கிறபோது தமிழ்நாட்டில் தொழில் வளர்ச்சியில் இப்போது இருக்கிற அரசாங்கத்தின் முயற்சியால் ஏற்பட்டிருக்கிற தொழில் வளர்ச்சி மிகக் குறைவு என்பதை திட்டவட்டமாக நான் தெரிவிக்க விரும்புகிறேன். ஏற்கெனவே 5 ஆண்டுகளுக்கு முன்னாலே, 8 ஆண்டுகளுக்கு முன்னாலே தொடங்கப்பட்ட, அரசாங்க முயற்சிகளினால் ஏற்பட்ட தொழில் வளர்ச்சி குறைந்து போய் அவரவர்கள் சுய முயற்சியினாலே தொடங்கப்பட்ட சிறு தொழில்களின் வளர்ச்சிதான் இங்கே ஓரளவுக்கு ஏற்பட்டிருக்கிறது.

அரசாங்கத்தினுடைய முயற்சியிலே நடைபெற்ற தொழில் வளர்ச்சி என்ற புள்ளிவிவரம் காட்ட அமைச்சரால் முடியாது என்பது என்னுடைய நம்பிக்கை. மாறாக மக்கள் ஏதாவது ஒரு தொழிலை செய்ய வேண்டாமா ? ஒரு தொழிலை சில காரணங்களால் நடத்த முடியாதபோது இன்னொரு தொழிலை நடத்துகிறார்கள். அப்படி மாறி மாறி ஏதோ சில தொழில்களை நடத்துகிற மக்களுடைய மொத்த வருமானத்திலிருந்துதான் அவர்கள் செய்கிற தொழில்கள் ஓரளவுக்கு உருவாகியிருக்கின்றன, அப்படிப்பட்ட தொழில்களுக்கு மத்திய அரசினுடைய பல்வேறு விதமான வரி போடுகிற முறைகளால் எக்சைஸ் வரி முறைகளால் தொழில் நடத்துகிறவர்கள் பாதிக்கப்படுகிறார்கள். இந்த அளவுக்குத் தொழில் நடத்துகிறவர்கள் மத்திய அரசினுடைய நிபந்தனைகளை நிறைவேற்ற வேண்டுமென்ற ஒரு ஆணை பிறப்பிக்கப்பட்டு இருப்பதன் காரணமாகத் தமிழ்நாட்டிலே ஏறத்தாழ 50 ஆயிரத்திலிருந்து லட்சம் வரையிலே சிறு தொழில்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றன. கடந்த மாதம் கோவையிலே அடையாளமாக ஒருநாள் மூடப்பட்டன, சென்னையிலே மூடப்பட்டன, மதுரையிலே மூடப்பட்டன. கோவையிலே 12 ஆயிரம் சுமால் பேக்டரிஸ் மூடப்பட்டன. சென்னையிலே 10,000, 15,000 தொழில்கள் அதைப்போலவே மதுரையிலே 2,000 தொழிற்சாலைகள் பாதிக்கப்பட்டு இருக்கின்றன. மொத்தத்திலே பார்த்தால் 50 ஆயிரம் சிறு தொழில்கள் பாதிக்கப்படக்கூடிய நிலைமை இருக்கிறது.



1986 மார்ச் 31] [திரு. க. அன்பழகன்]

தமிழ் நாட்டிலே பெரிய தொழில்களில் வளர்ச்சி இல்லை; சிறு தொழில்களில் ஏற்படக்கூடிய வளர்ச்சிதான் பொருளாதாரத்தில் ஓரளவுக்கு மக்கள் அன்றாட வாழ்க்கையை நடத்த அடிப்படையாக இருக்கிறது.

இப்படிப்பட்ட சிறு தொழில்களின் வளர்ச்சி இன்றைக்கு மத்திய அரசின் கொள்கை காரணமாகப் பாதிக்கப்பட்டிருக்கிறது. ஒரு காலத்திலே குஜராத் மாநிலத்திலே ஆலைத் தொழில் வளர்ந்தபோது தமிழ்நாடு கதர்த் தொழிலில் ஈடுபட்டு இருந்தது. அதை அறிஞர் அண்ணா அவர்கள் எடுத்துச் சொன்னபோது மகாத்மா காந்தியடிகள் பிறந்த மாநிலம் கைத்தறியிலே காட்டுகிற அக்கறையை விட ஆலையிலே காட்டுகிற அக்கறை அதிகம், தமிழ்நாட்டிலே நாம் கைத்தறி நெசவுத் தொழிலிலே கதர், கைராட்டினத்திலே அக்கறை காட்டுகிறோம், அதனால் இங்கே பொருளாதார வளர்ச்சி ஏற்படவில்லை என்று அறிஞர் அண்ணா அவர்கள் 1945 இல் 1946 இல் குறிப்பிட்டார்கள். இன்றைக்குப் பார்த்தால் அகில இந்தியாவில் பெரிய மூலதனம் போடுகிற தொழில்கள் வடக்கே. பெரிய மூலதனம் போடுகிற தொழில்கள் அதிகமாக வருவதற்குக் காரணம் கறுப்புப் பணத்தினுடைய சுழற்சி எங்கே இருக்கிறதோ அங்கேதான் அரசாங்கம் கூட பணிந்து கொடுக்கிறது. கறுப்புப் பணம் இல்லாத இடங்களில் அரசாங்கங்கள் ஒத்துழைப்பதாக எனக்கு நம்பிக்கை இல்லை. மாநில அரசாங்கமோ மத்திய அரசாங்கமோ பல்வேறு விதமான செல்வாக்கைப் பயன்படுத்தக்கூடிய வாய்ப்பை உடைய பெரிய முதலாளிகளிடத்திலே ஒத்துப் போகிற மனப்பான்மைக்கு ஆளாகிறது. தமிழ்நாட்டிலே எதிர்காலத்திலே சர்க்கரைத் தொழில்கள் அத்தனையும் கூட்டுறவுத் துறையிலே தான் நடைபெறும் என்று முன்னர் அறிவித்தவர்கள் நாம். இன்றைக்கு இந்த அரசாங்கத்தின் சார்பாக, முப்பது இடங்களில் தனியார்கள் சர்க்கரை ஆலை ஆரம்பிப்பதற்கு இந்த அரசு ஒத்துழைக்கும் என்ற கருத்து தெரிவிக்கப்படுகிறது. இருந்தாலும், அப்படியாவது தொழில்கள் வந்தால் வரவேற்கத்தக்கதுதான்; ஆனால் கொள்கை என்ன ஆயிற்று என்பதைத்தான் கேட்க விரும்புகிறேன்.

[திரு. க. அன்பழகன்] [1986 மார்ச் 31

இந்தச் சிறு தொழில்கள் எக்சைஸ் வரி காரணமாகப் பாதிக்கப்படுகின்றன. முப்பது இலட்சம் ரூபாய் வரையில் ஏற்கனவே விதிவிலக்கு பெற்றவர்கள் இன்றைக்கு ஐந்து இலட்சம் ரூபாய்க்கு உற்பத்தி செய்தாலும் அதற்கு அரசாங்கத்தினுடைய அனுமதி பெற வேண்டும் என்ற நிலையின் காரணமாக சிறு தொழில்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றன. இது அரசுக்கும் தெரியும். தமிழக அரசில் உள்ள நீங்கள், இதனால் மாநிலத்தில் எந்த வகையில் சிறு தொழில்கள் பாதிக்கப்படுகின்றன என்பதை மத்திய அரசுக்கு எடுத்துச் சொல்லி வலியுறுத்த வேண்டும். தமிழ்நாடு மிகப் பெரிய முதலாளிகளைக் கொண்ட மாநிலம் அல்ல; விரல் விட்டு எண்ணக்கூடிய அளவிற்குச் சிலர் வேண்டுமானால் இருக்கலாம். நடுத்தரத் தொழில்கள் ஓரளவிற்கு இருக்க முடியும். ஆனால் தமிழ் நாட்டின் தொழில் வளர்ச்சி சிறு தொழில்களையே பெரிதும் நம்பியிருப்பதால், அந்தச் சிறு தொழில்களுக்குப் பாதிப்பு ஏற்படாமல், மாநில அரசாங்கம் மத்திய அரசாங்கத்திடம் எடுத்துரைத்து வாதிட வேண்டுமென்பதை இந்த நேரத்தில் நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து நான் சொல்லவிரும்புவது, இன்று காலையில் எழுப்பப்பட்ட ஒரு பிரச்னையைப் பற்றி. எட்டு பஞ்சாலைகள் மூடப்பட்டிருக்கின்றன. ஏறக்குறைய எட்டாயிரம் தொழிலாளர்கள் 1981 ஆம் ஆண்டிலேயிருந்தும், 1983 ஆம் ஆண்டிலேயிருந்தும், 1984 ஆம் ஆண்டிலேயிருந்தும் வேலை வாய்ப்பை இழந்து திண்டாடிக் கொண்டிருக்கிறார்கள். அந்தத் தொழிலாளர்களின் சார்பாகத் திரும்பத் திரும்பக் குரல் எழுப்பப் பட்டிருக்கிறது. மத்திய நிதியமைச்சரவர்கள், மாநில அரசு விரும்புமேயானால், வேறு மாநிலத்திலே எப்படி உதவித் தொகை வழங்கினோமோ, அதைப்போல வழங்குவதற்குத் தயார் என்று கடந்த டிசம்பர் மாதம் அறிவித்திருக்கிறார்கள். அப்படி டிசம்பர் மாதம் அறிவிக்கப்பட்டிருந்தும்கூட, மூடிக் கிடக்கின்ற அந்தத் தொழிற்சாலைகளைப் பற்றி இந்த மூன்று, நான்கு மாத காலத்தில் இதற்கான முயற்சியை இது சம்பந்தமாகத் தமிழக அரசு எடுக்கவில்லை. இதனால் எட்டாயிரம் தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதை என்னால் நினைவூட்டாமல் இருக்க முடியவில்லை.



1986 மார்ச் 31] [திரு. க. அன்பழகன்]

தமிழ்நாடு அரசாங்கம் வரவு-செலவுத் திட்டத்தை இந்த அவையில் வைத்திருக்கிறது. இருந்தாலும் கூட, துணை மானியக் கோரிக்கை என்ற வகையில் கிட்டத்தட்ட நானூறு கோடி ரூபாய், நானூற்று ஐம்பது கோடி ரூபாய்க்கு நிதியமைச்சரவர்களால் இங்கே கொண்டுவரப்பட்டுள்ளது. அதுகுறித்து ஒரு கருத்தை நான் வலியுறுத்திக் கூறக் கடமைப் பட்டிருக்கிறேன். பல நேரங்களில் துணை மானியக் கோரிக்கை என்பது அர்த்தமில்லாத கோரிக்கைகளாக ஆகிவிடுகின்றன. துணை மானியக் கோரிக்கையில் கேட்டுப் பெறுகின்ற நிதி பெரும்பாலும் செலவழிக்கப்படுவதில்லை. ஒன்றிரண்டு காரியங்களில் செலவழிக்கப்பட்டு, துணை மானியக் கோரிக்கையில் கேட்கும் நிலையும் இருக்கிறது. பல நேரங்களில்,

Supplementary budget is an unnecessary budget

என்று சொல்லும் அளவிற்கு துணை மானியக் கோரிக்கையிலே கேட்கப்பட்ட பணம் நடைமுறையிலே செலவழிக்கப்படாமல் நின்றுபோய் விடுகின்றது என்பதை நினைவுபடுத்தக் கடமைப் பட்டிருக்கிறேன்.

ஒரு வகையிலே சில நேரங்களில் சப்ளிமெண்டரி பட்ஜெட்டில் கேட்கும் தொகையில் எவ்வளவு செலவழிக்கப்படாமல் இருந்தது என்றால், 1983-84-இல் அப்ரோபிரியேஷன் அக்கவுண்டிலே, பக்கம் 224-லே தெரிவிக்கப்பட்ட விவரங்களைச் சொல்கிறேன்.

Statement showing grant-wise details of recovery adjusted in the reduction of expenditure in the accounts for 1983-84. Administration of Department of Religious and Charitable Endowments Act, 1959.

என்னும் தலைப்பில் காணப்படுவது. பட்ஜெட் எஸ்டிமேட் 2 கோடியே, 9 இலட்சத்து, 77,000 ரூபாய்.

Actuals compared to the Budget Estimate more or less, less Rs. 2.09 crores

அந்தத் தொகை முழுவதும் அந்த வகையில் செலவழிக்கப் படவில்லை.

கல்வித் துறையிலே இரண்டு இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்ட ஒரு தனிக் குறிப்புக்கு ஒதுக்கப்பட்ட தொகை சரண்டர் ஆகியிருக்கிறது.

[திரு. க. அன்பழகன்] [1986 மார்ச் 31

விவசாயம் என்பதில் 3 கோடியே 49 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டு, 71 இலட்சத்து 98,000 ரூபாய் செலவழிக்கப்பட்டு, 2 கோடியே 77 இலட்சம் ரூபாய் திருப்பித் தரப்பட்டிருக்கிறது. திருப்பித் தரக் கூடாது என்று நான் சொல்லவில்லை. நல்லவேளையாகத் திரும்பி வந்ததற்காக நான் பாராட்டுகிறேன். ஆனால் எதற்காகச் செலவழிக்கப் போகிறோம் என்று சொல்லப்படுகின்றதோ, அந்த நோக்கத்திற்குச் செலவழிக்க முடியாதபடி திட்டவட்டமான அணுகுமுறை இல்லாமல், செயல்படுத்துகின்ற ஆற்றல் இல்லாமல் இருக்கிறது என்பதை எடுத்துக் காட்டுவதற்காகத்தான் இவைகளை நான் சொல்கிறேன். Urban Development என்பதற்கு 24 கோடியே 84 இலட்சம் ரூபாய் பட்ஜெட் எஸ்டிமேட்; ஆனால் திரும்பி வந்தது 24 கோடியே எஸ்டிமேட்; ஆனால் திரும்பி வந்தது 24 கோடியே 84 இலட்சம் ரூபாய். இப்படி ஒதுக்கியதோ 24 கோடியே 84 இலட்சம் ரூபாய்; திரும்பி வந்ததும் 24 கோடியே 84 இலட்சம் ரூபாய். இப்படிச் சொல்வதால் ஏதோ தனிப்பட்ட யாரையோ குறை சொல்வதாக எண்ணத் தேவையில்லை. ஆனால் நம்முடைய நிர்வாக இயந்திரம் எப்படிச் செயல்படுகிறது என்பதற்கு இது எடுத்துக்காட்டாக இருக்கிறது. என்ன குறைபாடு எங்கே இருக்கிறது என்று கண்டாக வேண்டும். ஒரு திட்டத்தைச் செயல்படுத்துவதற்காக நிதியை ஒதுக்கீடு செய்த பிறகு, ஒதுக்கப்பட்ட மொத்த நிதியும் அப்படியே திரும்ப வருகிறது என்றால், தூங்கியவர்கள் யாரோ? இன்னும் சொல்லப் போனால் இந்தக் கணக்கையே பார்க்காமல் போனவர்கள் யார் யாரோ? செய்ய வேண்டிய திட்டத்தில் அக்கறை காட்டாதவர்கள் யார் யாரோ? எதற்காக நான் இவைகளைச் சொல்கிறேன் என்றால், உண்மையிலேயே சப்ளிமெண்டரி பட்ஜெட் தொகை நடைமுறையில் செய்யப்படுவது இல்லை, பயனுக்கு உரியதாக்கப்படவில்லை என்பதை எடுத்துக்காட்டுவதற்காகத்தான்.



1986 மார்ச் 31] [திரு. க. அன்பழகன்]

அதே போல, காம்ப்ட்ரோலர் அண்ட் ஆடிட்டர் ஜெனரல் அவர்களுடைய ரிப்போர்ட் வழங்கப்பட்டிருக்கிறது. 1983-84-வது ஆண்டில், அரசாங்கத்தினுடைய புள்ளி விவரத்தினுடைய தகுதி எப்படி இருக்கிறது என்ற குறிப்புகள் பக்கம் 64-லே தரப்பட்டிருக்கிறது. அதிலே, அவர்கள் 'வாட்டர் போர்ட்' பற்றி குறிப்பிட்டுள்ளார்கள். முனிசிப்பல் அட்மினிஸ்ட்ரேஷன் அண்ட் வாட்டர் சப்ளை டிபார்ட்மென்ட் என்ற தலைப்பிலே அவர்கள் 64-வது பக்கத்திலே தெரிவித்திருக்கிற கருத்து இதுதான். ஆக்சுவல்ஸ்-எக்ஸ்பெண்டிச்சர் ஆஸ் பெர் அக்கவுண்ட்ஸ் என்பதிலேயும் எக்ஸ்பெண்டிச்சர் சர்ட்டிபைட் என்ற தலைப்பிலேயும் எவ்வளவு வேற்றுமை இருக்கிறது என்பதை எடுத்துக் காட்டுகிறார்கள். 1980-81-லே ஏறத்தாழ ரூ. 213 லட்சம் எக்ஸ்பெண்டிசர் ஆஸ் பெர் அக்கவுண்ட்ஸ்; ஆன் எக்ஸ்பெண்டிச்சர் ஆஸ் யுட்டிலைஸ்ட் ரூ. 387 இலட்சம். சர்ட்டிபை செய்யக்கூடிய அளவுக்கு கணக்குகளைப் பார்த்து வருகிறபொழுது ரூ. 387 இலட்சம்; கணக்கிலே இருப்பது ரூ. 213 இலட்சம். அப்படியானால், கணக்கிலே செலவழிக்கப்பட்ட ரூ. 213 இலட்சத்திற்குப் பதில், ரூ. 387 இலட்சம் செலவழிக்கப்பட்டுள்ளதாக சர்ட்டிபை பண்ணுவதற்கு என்ன நியாயம் இருக்கிறது, இடம் இருக்கிறது, யாருடைய பொறுப்பு?

(முற்பகல் 11-10)

அதே போல், இன்னொரு செய்தி, 1981-82-ல் ரூ. 298 இலட்சம் கணக்கிலே உள்ள தொகை, செலவழிக்கப்பட்டதாக அவர்கள் சொல்வது ரூ. 569 இலட்சம். எக்ஸ்பெண்டிச்சர் சர்ட்டிபைட் ஆஸ் யுட்டிலைஸ்ட் ரூ. 569 இலட்சம். ஆனால், செலவழிக்கப்பட்டதாக அக்கவுண்டிலே இருப்பது ரூ. 298 இலட்சம். இன்னொன்று எம்.என்.பி. என்ற தலைப்பில், ஸ்கீம்ஸ் பார் விச் சர்ட்டிபிகேட்ஸ் வேர் இஷ்யூட், எம்.என்.பி. ரூ. 332 இலட்சம். எக்ஸ்பெண்டிச்சர் ஆஸ் பெர் அக்கவுண்ட்ஸ் என்ற தலைப்பிலே எவ்வளவு என்று கேட்டால், ரூ. 1,300 இலட்சம். அதே போல், 1982-83-ல் ரூ. 473 இலட்சம், எக்ஸ்பெண்டிச்சர் ஆஸ் பெர் அக்கவுண்ட்ஸ். செலவழிக்கப்பட்டதாக, சர்ட்டிபை செய்யப்பட்டது ரூ. 856 இலட்சம். சர்ட்டிபை செய்யப் பட்டத்திலே, பாதிதான் செலவாகியிருக்கிறது என்றால், அப்படி ஒரு சர்ட்டிபிகேட் தரக் கூடிய நிலைமை எதனாலே உருவாகியிருக்கிறது? ரூ. 856 இலட்சத்திற்கு சர்ட்டிபிகேட்; செலவு ரூ. 478 இலட்சம். ரூ. 1,300 இலட்சம்,

[திரு. க. அன்பழகன்] [1986 மார்ச் 31

சர்ட்டிபிகேட், ரூ. 133 இலட்சம் செலவு. இது 1983-84. ஒருவேளை நான் சொல்கிற விவரம், விளக்கம் இல்லாத காரணத்தால் சொல்கிற விவரமாக இருக்குமானால், நிதி அமைச்சர் அவர்கள் அதுபற்றி ஆராய்ந்து, கூறவேண்டும். சர்ட்டிபிகேட் செய்வது ஒரு தொகை; செலவழிக்கப்படுகிற ஆக்ச்சுவல் அக்கவுன்ட் அதிலே பாதி. அப்படியென்றால், இதிலே என்ன நடைபெற்றது? அல்லது, முறைகளிலே என்ன குறையிருக்கிறது? அவற்றையும் ஆராய வேண்டும்.

இவற்றையெல்லாம் காணும்போது, எவ்வளவு தொகை அரசாங்கத்தினுடைய பட்ஜெட் என்பதைப்பற்றி நான் கவலைப்படுவதற்கு அவசியம் இல்லாமல் போகிறது. இதற்கு முன்னாலே, புள்ளி விவரங்களை வைத்துக் கொண்டு, சில நாட்களாவது இதற்காக செலவழிக்கும் பழக்கம் உண்டு. இப்பொழுது புள்ளியும் இல்லை, விவரமும் இல்லை, நமக்குத்தான் அவஸ்தை இல்லை என்று நான் இந்தப் புள்ளி விவரங்களில் அதிகம் அக்கறை காட்டுவதைக் குறைத்துக்கொள்ள வேண்டிய நிலைமைக்கு ஆளாகியிருக்கிறேன்.

தமிழகத்தைப் பொறுத்தவரையில், மத்திய அரசு, அவர்கள் ஏற்றுக்கொண்ட கடமைகளை நிறைவேற்றுவதற்குப் பலமுறை உறுதிமொழி கொடுத்தும், அவற்றைத் தாமதப்படுத்துவதைப் பற்றி, நம்முடைய அரசு மிக அதிகமாக வலியுறுத்தி, வாதாட வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறது. கரூர் — திண்டுக்கல் அகல ரெயில்பாதைக்கு 3, 4 ஆண்டுக்காலத்திற்கு முன்னாலே உறுதிமொழி கொடுத்து, 3 ஆண்டுக் காலத்தில் நிறைவேறும் என்று சொல்லி, ஆண்டிற்கு ரூ. 3 கோடி, ரூ. 2½ கோடி, ரூ. 3½ கோடி ஒதுக்கி, ரூ. 45 கோடி ரூ. 50 கோடி திட்டத்தை ஒத்திவைத்துக் கொண்டே போவதன் காரணமாக, எந்த அளவுக்கு அது பாதிக்கப்படுகிறது என்பதை மறந்துவிட முடியாது.

அதே போல, சென்னை மாநகர ராப்பிட் டிரான்சிட் சிஸ்டத்திற்கு ஏறத்தாழ ரூ. 60, 70 கோடி தேவை. மத்திய அரசு கல்கத்தாவிலே, டெல்லியிலே அல்லது வேறு நகரத்திலே, இத்தகைய ஒரு திட்டத்திற்கென்று எத்தனையோ கோடி செலவிட்டிருக்கிறது. ஆனால், நமக்கு இந்த ஆண்டு ஒதுக்கியிருக்கிற தொகை ரூ. 3½ கோடி. ஒரு ஆண்டிற்கு ரூ. 20 கோடி



1986 மார்ச் 31] [திரு. க. அன்பழகன்]

ஒதுக்கினால், 5 ஆண்டுக்காலத்தில் அந்தத் திட்டம் நிறைவேறும். இன்னும் சொல்லப் போனால், சில திட்டங்கள் நிறைவேற்றுவதிலே, ஒரு குறிப்பிட்ட கால்வரையறைக்குள்ளாக அந்தத் திட்டம் நிறைவேறாவிட்டால், 10 ஆண்டுகள் வரை நிறைவேறாவிட்டால், அந்தத் திட்டத்தினுடைய பயனே இல்லாமல் போய் விடுகிறது. ஒரு பக்கத்திலே பண வீக்கத்தாலே செலவு அதிகமாகும். இன்னொரு பக்கத்திலே பொருள் தட்டுப்பாடு; கிடைக்க வேண்டிய பொருள்கள் தடைப்படுகின்றன. இப்படி ஒரு திட்டத்தை ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள் நிறைவேற்றாவிட்டால், அதற்குப் பின்னாலே, கிடைக்கக்கூடிய பலன், 10 ஆண்டு 15 ஆண்டு என்று தள்ளிப் போய், கி.பி. 2005-ல் திட்டம் நிறைவேறுமானால், உலகத்தில் ராப்பிட் டிரான்சிட் சிஸ்டம் என்பதே வேறு ஒன்றாக ஆகிவிடும். அகல ரெயில் பாதை தேவை என்று கருதுகிற இந்தக் காலக் கட்டத்திலே, குறிப்பிட்ட காலத்திலே முடித்தாக வேண்டியது முடியாவிட்டால், அகல ரெயில் பாதையே பயன் இல்லாமல் போய் விடக்கூடும்.

அதைப்போன்று தூத்துக்குடி துறைமுகத் திட்டத்தை எடுத்துக்கொண்டால் இரண்டு கட்டமாக (ஸ்டேஜ்) நிறைவேற்றப்பட்ட திட்டம், மேலும் 25 கோடி ரூபாய் ஒதுக்கி, தொடர்ந்து நிறைவேற்றப்பட வேண்டிய அந்தத் துறைமுகத் திட்டம் 5, 6 ஆண்டு காலமாகத் தொடர்ந்து நிறைவேற்றப்படாத காரணத்தால் தூத்துக்குடி துறைமுகத்தின் முக்கியத்துவம் வளரக் கூடிய வாய்ப்பு குறைகிறது.

அதைப்போன்று, சேதுசமுத்திரக் கால்வாய்த் திட்டமிருக்கிறது. மத்திய அரசின் நிதி ஒதுக்கீட்டினால் நிறைவேற்றப்பட வேண்டிய அந்தத் திட்டத்தைப்பற்றிப் பலமுறை எடுத்துச் சொல்லியிருக்கிறோம். திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்த என்னுடைய அருமை நண்பர் திரு. கே. டி. கோசல்ராம் அவர்கள் ஒவ்வொரு முறையும் பாராளுமன்றத்தில் சேது கால்வாய், சேது கால்வாய் என்று வாதாடி வந்திருக்கிறார்கள். 25 ஆண்டுகளுக்கு முன்னால் இந்தத் திட்டம் மத்திய அரசால் பரிசீலனைக்கு ஒத்துக்கொள்ளப்பட்ட ஒன்று. நாடாளுமன்றத்தில் நானும் நண்பர் நாஞ்சில் மனோகரன் அவர்களும் இருந்தபோது ஏற்றுக்கொள்ளப்படுவதாகச் சொல்லப்பட்டது. அன்றைக்கு

[திரு. க. அன்பழகன்] [1986 மார்ச் 31

மத்திய அமைச்சராக இருந்தவர் திரு. கே. எல். ராவ் என்று கருதுகிறேன். அவர்கள் இந்தத் திட்டத்தை ஏற்றுக்கொள்ளும் வாய்ப்பு இருக்கிறது என்று சொல்லியும், இன்றுவரையில் இந்தத் திட்டத்திற்கு வழிவகைச் செய்யப்பட வில்லை. இதன் காரணமாக ஒருபக்கம் தமிழ்நாட்டில் பொருளாதார வளர்ச்சி பாதிக்கிறது. இன்னொரு பக்கம் இந்திய கடற்கரையோர வளர்ச்சி பொருளாதார ரீதியில் பாதிக்கிறது. அதுமட்டுமல்லாமல் இலங்கையினால் பல்வேறு வகையில் நாட்டின் பாதுகாப்பு பாதிக்கப் படுகின்ற ஒரு சூழ்நிலை இருக்கிறது. மொத்தத்தில் தமிழகத்தின் கடற்கரையோரப் பகுதி எந்த வகையில் பாதுகாப்புப் பெற வேண்டுமோ அந்தவகையில் கண்காணித்துப் பாதுகாக்கப்படக் கூடிய நிலைமை ஏற்படவில்லை. மத்திய அரசு முன்வந்து இந்த சேதுகால்வாய் திட்டத்தை, நம்முடைய நாட்டின் கண்காணிப்பு உணர்வோடு, நிறைவேற்ற முன்வந்திருந்தால் இத்தனை பாதிப்புகள் நமக்கு இன்றைக்கு ஏற்பட்டிருக்காது. இந்தத் திட்டத்தின் முக்கியத்துவத்தை எடுத்துச் சொல்லி நிறைவேற்ற வேண்டுமென்று தமிழக அரசு மத்திய அரசிடம் அதற்கு உரிய அளவுக்கு வாதாடவில்லை என்பது என்னுடைய கருத்தாகும்.

தமிழக மக்களின் நன்மையைக் கருதி, நிறைவேற்றப்பட வேண்டிய திட்டங்களுக்கு நல்ல முறையிலே வாதாட வேண்டும். இன்னும் சொல்லப் போனால் உறவுக்குக் கொடுத்த கையை முக்கியமாகக் கருதுகிறவர்கள் உரிமைக்கு குரல் கொடுக்க வேண்டுமென்றால் வேறு யாராவது குரல் கொடுப்பார்களா என்று எதிர்பார்க்கிறீர்கள். எதிர் தரப்பிலே இருக்கிற நாங்கள் குரல் கொடுத்தாலும் அதை உரிய முறையிலே எதிரொலிப்பதில் தயக்கம் காட்டுகிறீர்கள். உறவுக்கு கைகொடுக்கிற நீங்கள் உரிமைக்கு குரல் கொடுக்கவும் கடமைப்பட்டிருக்கிறீர்கள்.

இந்த நிதிநிலை அறிக்கையில் மாநில தன்னாட்சி பற்றி வலியுறுத்தியிருக்கிறீர்கள், வரவேற்கிறேன். மாநில தன்னாட்சியின் அவசியத்தை உணர்ந்திருக்கிறீர்கள். எந்த மாநிலமாக இருந்தாலும் மாநிலத்தின் வளர்ச்சிக்கு சுயாட்சி தேவை. சுயாட்சிக்கும் தன்னாட்சிக்கும் வேறுபாடு இருப்பதாக எனக்குத்



1986 மார்ச் 31] [திரு. க. அன்பழகன்]

தெரியவில்லை. எனவே இந்த மாநில தன்னாட்சிக்கு மாநில அரசு தொடர்ந்து வாதாட வேண்டும், வாதாடுவதை வரவேற்கிறோம். திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு இருக்கிற அக்கறை ஆளும் கட்சிக்கும் இருக்க வேண்டும். மாநில மக்களாட்சி வேண்டுமென்று கேட்கிறவர்கள் மாநில தன்னாட்சி வேண்டுமென்று கேட்கிறவர்கள், அதற்காக தொடர்ந்து வாதாட வேண்டும்.

அதே நேரத்தில், மாநில தன்னாட்சி கேட்கிறபோது இந்த அரசு சர்க்காரியா கமிஷனுக்கு கொடுத்த அறிக்கையை இந்த அவையில் வைப்பதற்கு ஏன் தயக்கம் காட்டுகிறது என்று தெரியவில்லை. அந்த விவரம் இந்த அவையிலே வைக்கப்பட்டால் மக்களுடைய கருத்துக்கள் அதிலே இடம் பெற்றிருக்கின்றனவா, சரியான முறையில் பிரதிபலிக்கப்பட்டிருக்கின்றனவா என்பதைத் தெரிந்துகொள்ள முடியும். மக்களுக்கும் ஒரு திருப்தி ஏற்படக் கூடிய வாய்ப்பு இருக்கும். அதன் காரணமாக நாம் கொண்டிருக்கிற இலட்சியம் வளரும் அல்லவா! ஏதாவது விடுபட்டிருந்தால் நாங்கள் அதை எடுத்துக் கூற ஒரு வாய்ப்பு ஏற்படும் அல்லவா! சர்க்காரியா கமிஷனுக்கு கொடுத்திருக்கிற அறிக்கையை இந்த மாமன்றத்தில் வைத்து, அவர்கள் கேட்டிருக்கிற விவரங்களையும் வைத்து, இங்கே கருத்துக்களை எடுத்துச் சொல்லுகின்ற நிலைமை ஏற்பட்டால், சர்க்காரியா கமிஷன் முடிவு வருவதற்கு முன்னால் நம்முடைய முழுமையான கருத்தை அவர்களுக்கு எடுத்துச் சொல்ல ஒரு நல்ல வாய்ப்பு ஏற்படும். அந்த வகையிலே ஒரு அரசியல் கட்சியைச் சேர்ந்த நீங்கள், இன்றைக்கு ஆட்சியிலே இருக்கிற நீங்கள் சர்க்காரியா கமிஷனுக்குக் கொடுத்த அறிக்கையை அவையிலே வைக்க தயக்கம் காட்டுவதைப் பார்க்கிறபோது எங்களுக்கு சந்தேகம் ஏற்படுகிறது.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, இப்போது விளக்கம் சொல்வது பொருத்தமாக இருக்கும் என்று கருதுகிறேன். இன்னும் சில நாட்களில் பின்னால் நானும் மறந்துவிடக் கூடும். அளிக்கப்பட்ட அறிக்கை இந்த சர்க்காரியா கமிஷனுக்கு அவையில் வைக்கப்பட்டுவிடும். அதுபற்றி பின்னால் விவாதிக்கலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. க. அன்பழகன் :** துணைத் தலைவர் அவர்களே, என்னுடைய பேச்சுக்கும் பலன் இருக்கிறது என்பதைத் தெரிந்துகொண்டேன், நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். அந்த அறிக்கையை இங்கே வைப்பதில் சிரமம் ஒன்றும் இல்லை என்றுதான் கருதுகிறேன். அரசாங்கத்தைக் குறை சொல்வதற்காக அந்த அறிக்கையை இங்கே வைக்க வேண்டு மென்று சொல்லவில்லை. கருத்துக்களைப் பரிமாறிக்கொள்ள லாம். மக்களுக்கு ஒரு மனநிறைவு ஏற்படும். பெரும் பாலும் எதிர்க்கட்சிகளில் இருக்கிறவர்களுடைய உணர்வுகள் பிரதி பலிக்கப்பட்டு, அதன் காரணமாக தமிழக மக்களுக்கு ஒரு புது நம்பிக்கை ஏற்பட வாய்ப்பாக இருக்கும் என்பதால் அந்த அறிக்கையை வைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(முற்பகல் 11-20.)

அடுத்து, இந்த நிதிநிலை அறிக்கையிலே நாவலர் அவர்கள் உள்ளாட்சித் தேர்தலைப்பற்றி குறிப்பிட்டிருக்க வேண்டும். வரவு-செலவுத் திட்டத்திற்கு உட்பட்டதுதான் உள்ளாட்சித் தேர்தலும். ஆகவே, நடைபெற்ற உள்ளாட்சித் தேர்தல்பற்றி குறிப்பிடாமல் என்ன காரணத்தால் விட்டுவிட்டார்கள் என்று தெரியவில்லை. உள்ளாட்சித் தேர்தல் மூலம் ஏற்பட்ட விளைவு களையோ முடிவுகளையோ நாம் அதிகம் வற்புறுத்த விரும்ப வில்லை. இருந்தாலும் அதிலே தி.மு.க. வெற்றிபெற்றுவிட்டது என்று சொல்வது தவறு என்றெல்லாம் ஆளும் கட்சி சார்பிலே பேசப்படுகிறது. அதிலே எனக்கு ஒன்றும் வருத்தம் இல்லை. தி.மு.க. வெற்றி பெற்றுவிட்டது என்ற வாதமே எப்போது எழுகிறது என்றால் தி.மு.க. இனிமேல் எழுந்திருக்காது என்ற வாதம் பிறந்த காரணத்தால்தான். அதனால்தான் தி.மு.க. வெற்றி பெற்றுள்ளது என்ற கருத்தைச் சொல்ல வேண்டிய அவசியம் எனக்கு ஏற்பட்டது. ஆனால் தி.மு.க. வெற்றி பெற்றதோ அல்லது வேறு எந்தக் கட்சி வெற்றி பெற்றதோ அது முக்கியமல்ல. மக்கள் வெற்றி பெற்றிருக்கிறார்கள். மக்கள் பெற்ற வெற்றி என்றால் 8 ஆண்டுக்காலம். 9 ஆண்டுக்காலம் இந்த மன்றங்கள் எல்லாம் இல்லாத காரணத்தால் மக்கள் அவ்வப்போது தங்கள் பிரச்சினைகளைக் கொண்டுபோய் யாரிடத்தில் முறை யிடுவது, எப்படி பிரச்சினையைத் தீர்ப்பது என்று தெரியாமல் தமிழ்நாடு முழுவதும் ஏங்கிக் கிடந்த மக்கள் ஏதோ இந்த அளவுக்காவது ஒரு வாய்ப்பைப் பெற்று இன்றையதினம்





உள்ளாட்சி மன்றங்களைப் பெற்றிருக்கிறார்கள். எனவே இது மக்களுடைய வெற்றி. அந்த வெற்றியிலே எங்களுக்கோ, ஆளும் கட்சிக்கோ, காங்கிரஸ் கட்சிக்கோ, மற்ற கட்சிகளுக்கோ எந்த அளவுக்கு பங்கு இருந்தாலும் அதுபற்றி அதாவது விகிதாச் சாரத்தைப் பற்றி நான் அதிகம் கவலைப்படவில்லை.

ஒரு மாநில அரசோ, மத்திய அரசோ மக்களுடைய தேவைகளை நிறைவேற்றுகிற ஆற்றல் பெற்ற அரசாக என்றைக்கும் இருக்க முடியாது. 1937, 38 ஆம் ஆண்டில் அன்றைக்கு இருந்த காங்கிரஸ் கட்சியினுடைய ஒரு பெரும் தலைவர் திரு. சத்தியமூர்த்தி அவர்கள் ஒரு கட்டுரையாகவே தீட்டியுள்ளார். மக்கள் பெறுகிற சுயராஜ்யம் என்பது மத்திய சர்க்காராலே வழங்கப்படுகிற ஒன்றல்ல; மத்திய சர்க்காருடைய அதிகாரத்தை வைத்துக்கொண்டு கிராமத்து மக்களுக்கு நன்மை செய்ய முடியாது; மாநில அரசுகளுக்கு இருக்கிற அதிகாரம் கூட மக்களுடைய தேவைகளை நிறைவு செய்யாது; மக்களுக்குத் தாங்கள் ஒரு சுதந்திர நாட்டில் வாழ்கிறோம் என்ற உணர்வு வரவேண்டும் என்றால் குடியாட்சியில், குறிப்பாக கிராம ஆட்சி ஏற்பட்டால்தான் அந்தக் குடியரசின் பயனைப் பெற முடியும் என்றெல்லாம் அன்றைக்கு வாதாடி எழுதினார்கள்.

எட்டு ஒன்பது ஆண்டுக்காலம் இப்படிப்பட்ட மன்றங்கள் இல்லாமல் இருந்து இன்றைக்கு உருவாகி இருக்கின்றன. எந்தக்கட்சியைச் சேர்ந்தவராக இருந்தாலும் ஒருவருக்கொருவர் ஒத்துழைக்கக் கடமைப்பட்டவர்கள். அந்த மனப்பான்மையை ஏற்படுத்த அரசாங்கமும் தன்னுடைய நல்லெண்ணத்தைத் தெரிவித்து அரசு ஒத்துழைக்கும் என்று தெரிவித்திருபார் களேயானால் அது வரவேற்கத்தக்கது. ஆனால் எப்படியோ நேற்றையதினம் ஆளும் கட்சி சார்பிலே அப்படி ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது அரசாங்கத்தின் சார்பிலே தெரிவிக் கப்படவேண்டிய கருத்து இது.

அதிகாரிகளாக மூன்றாண்டு, ஐந்தாண்டு என்று இருந்தவர்கள் இப்போது பொதுமக்களின் பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப்பட்டு வந்தபிறகு பொறுப்பை ஒப்படைக்கிற வேளையில் சிலபேர் ஊரைவிட்டே ஓடுகிறார்கள். சில பேர் விடுமுறையில் போகி றார்கள். இன்னும் சிலபேர், பழைய கணக்கை உங்களிடத்திலே நாங்கள் காட்ட முடியாது என்கிறார்கள். தேர்ந்தெடுக்கப்பட்ட

[திரு. க. அன்பழகன்] [1986 மார்ச் 31

வர்களின் கையிலே புதிய நோட்டுப் புத்தகமும், புதிய செக் புத்தகமும் தரப்படுகிறது. அதுபற்றி நாவலர் அவர்கள் தெரிவித்ததாக வந்த கருத்தை அவர்களே இங்கு மறுத்துவிட்ட தற்காக நான் நன்றி தெரிவிக்கிறேன். ஆனால் உண்மை என்ன வென்று கேட்டால் பல ஊராட்சி மன்றங்களில், பேரூராட்சிகளில் ஊராட்சி ஒன்றியங்களிலே இருந்து அவர்களுக்குக் கிடைக்க வேண்டிய பங்குத்தொகை மூன்றாண்டுக்காலமாக வரவு வைக்கப் படவில்லை. 1983-லேயிருந்து 1985 வரையில் அந்தத் தொகை வரவு வைக்கப்படவில்லை. மிச்ச நிதி இருப்பு இல்லாததற்குக் காரணம் வரவேண்டிய பங்குத் தொகை வரவில்லை. மாறாக மின்சாரக் கட்டணம் செலுத்த வேண்டியது 70 ஆயிரம், 80 ஆயிரம் ரூபாய் என்று ஒவ்வொரு பேரூராட்சியிலும். பாக்கி வைத்திருக்கிறார்கள். அதிகாரிகள் இருந்தபோது மின்சாரக் கட்டணம் செலுத்தாமல் இருந்துவிட்டு இப்போது பணம் மிச்சம் இல்லாத சூழ்நிலையில் ஒவ்வொரு ஒன்றியத் தலைவரும், பேரூராட்சித் தலைவரும் அவர் எந்தக் கட்சியைச் சேர்ந்தவராக இருந்தாலும் எப்படி நிர்வாகத்தை நடத்துவார்? இன்னும் சொல்லப்போனால் சில நகராட்சி மன்றங்களில் எந்தக் காரியமும் முறையாக நடக்காமல் அதிகாரிகள் ஏதோ விருந்து சாப்பிடுகிற வர்களாக இருந்துவிட்டுப் போய் இருக்கிறார்கள்.

லாரிகள் எல்லாம் பழுதுபட்டுக் கிடக்கின்றன. குப்பை வண்டிகள் எல்லாம் உடைந்து போய்க் கிடக்கின்றன. மாடுகள் எல்லாம் இளைத்துப் போய்க் கிடக்கின்றன. குப்பை பொறுக்கு வதற்குக் கூட, குப்பையைச் சேகரிப்பதற்குக் கூட தகுந்த வண்டிகள் இல்லை. அரசாங்கத்திற்கு இரண்டு ஆண்டுக்காலமாக மூன்றாண்டுக்காலமாக நாங்கள் கடிதம் எழுதி இருக்கிறோம் என்று கமிஷனர்கள் தெரிவிக்கிறார்கள். இந்த லாரிகளைப் பழுது பார்க்க 7, 8 ஆயிரம் ரூபாய் ஆகிறது; ஆனால் மூவாயிரம் ரூபாய்க்கு மேல் செலவழிக்க எங்களுக்கு அதிகாரம் இல்லை; எனவே நீங்கள் அனுமதி கொடுக்க வேண்டும் என்று அரசாங்கத் திற்கு 20 கடிதம் எழுதியும் அந்தத் துறையைச் சேர்ந்தவர்களின் சம்மதம் கிடைக்காத காரணத்தால் லாரிகள் பழுதுபட்டு, மக்கி இன்றைக்கு ஓட முடியாத அளவுக்கு ஆகிவிட்டன. பொதுச் சொத்து நாசம் அடைவதைப் பற்றி எவனும் கவலைப்பட வில்லை. அதிகாரிகள் கவலைப்படவில்லை என்றால் நான் [illegible]க்கொள்ள முடியாது. அதிகாரிகளில் சிலபேர் [illegible] கடமையாற்றுபவராக இருந்தாலும் [illegible]



1986 மார்ச் 31] [திரு. க. அன்பழகன்]

களுக்குத் தகுந்த ஊக்கம் அளிக்கப்பட்டால் தவிர அவர்களால் செயலாற்ற முடியாது. எனவே இந்த நேரத்தில் அமைச்சரை நான் கேட்டுக் கொள்ள விரும்புவது ஓடாத வண்டியை ஓட வைக்க வேண்டிய பொறுப்புக்கு இன்றையதினம் நகராட்சித் தலைவர்களும், ஒன்றியத் தலைவர்களும் ஆளாகி இருக்கிறார்கள். அந்த வண்டிகள் ஓடுவதற்கு, இயங்குவதற்கு அதிகாரிகளுக்கு அரசாங்கத்தின் சார்பில் ஆணை பிறப்பிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். 3,000 ரூபாய்க்கு மேற்பட்டு செலவை ஒரு நகராட்சி மன்றத்தில் லாரியைப் பழுதுபார்க்க செலவிட முடியாது என்றால் இரண்டு டையர்கள் வாங்கு வதற்குக் கூட அந்தப் பணம் போதாது. எனவே அந்தத் தொகையை உயர்த்துவதற்கு அரசாங்கம் உடனடியாக முன்வர வேண்டும்.

1972 ஆம் ஆண்டு எந்த அளவுக்கு துப்புரவுத் தொழிலாளர்கள் நகரசபையில் இருந்தார்களோ அதைவிடவும் இன்றைக்குக் குறைவாக இருக்கிறார்கள். அன்றைக்கு 60 பேர்கள் இருந்தார்கள் என்றால் இன்றைக்கு 45 பேர்தான் இருக்கிறார்கள். 15 பேர் ரிட்டையராகிவிட்டார்கள். இன்றைய நிலைமையில் எந்த அளவுக்குத் துப்புரவுத் தொழிலாளர்கள் தேவைப்படுகிறார்கள். எந்த அளவுக்கு நகர சுகாதாரத்தைப் பாதுகாப்பதற்கு ஆட்கள் தேவைப்படுகிறார்கள் என்பதைப் பார்த்து அவர்களை நியமிப் பதற்கும், அதிகப்படுத்துவதற்கும் அரசாங்கத்தின் ஒத்துழைப்பு வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். சில நகராட்சிகளில் புதிய லாரிகள் வாங்கவேண்டி இருக்கிறது. அப்படிப் பட்ட நிலைமை இருக்குமானால் கூர்ந்து கவனித்து அரசு அவர்களுக்கு கடன் தருவதற்கோ, அல்லது அந்த ஊராட்சி மன்றங்களுக்கு நிதி உதவி செய்வதற்கோ முன் வரவேண்டுமே தவிர, எந்தக் கட்சி வெற்றி பெற்று இருக்கிறது என்று ஆளும் கட்சியினர் அரசாங்கத்தார் பார்க்கக்கூடாது. அப்படி எந்தக் கட்சி வெற்றி பெற்றது என்பதையே அரசாங்கம் குறியாகக் கொள்ளுமானால், அங்கே வெற்றி பெற்று வந்திருப்பவர்கள், தங்கள் கட்சிக்காகத்தான் பிரச்சாரம் செய்வதிலே தீவிரமாக ஈடுபடுவார்களே தவிர, நியாயமான முறையிலே நடந்துக் கொள்ளக்கூடிய வாய்ப்பு குறையும். பிறகு அதனுடைய விளைவுகள் நாட்டுக்கு நல்லது ஆக அமையாது. எனவே அவைகளையும் கருத்திலே கொள்ள வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

[திரு. க. அன்பழகன்] [1986 மார்ச் 31

அதைப்போலவே தமிழகத்தினுடைய மிக முக்கியமான ஒரு பிரச்னை, காவிரி ஆற்றுத் தண்ணீர், முறைப்படி நமக்கு கிடைக்க வேண்டிய அளவுக்கு கிடைக்கவில்லை என்ற பிரச்னை. 1974 ஆம் ஆண்டு வரையிலே நீடித்த ஒப்பந்தம் மறுபடியும் திருத்தப்படாத நிலைமையிலே, அந்த ஒப்பந்தமே மறுபடியும் நீடிக்கப்பட வேண்டிய நிலைமை இருக்கிறது. திருத்தினால்தான் மாற்றப்படலாம். 1924 ஆம் ஆண்டு, கர்நாடக அரசாக அமைந்திருந்த மைசூர் அரசுக்கும், தமிழ்நாடு என்பதற்கு பதிலாக சென்னை மாநிலம் என்ற மெட்ராஸ் பிரசிடென்சிக்கும் ஏற்பட்ட ஒப்பந்தம்—24 ஆம் ஆண்டு செய்த ஒப்பந்தம் 74 ஆம் ஆண்டுக்குப் பின்னும் நீடிக்கப்படுவது என்பதுடன் அந்த ஷரத்து மறுபடியும் அதில் குறிப்பிட்டவாறு தேவையான வகையில் திருத்தப்பட இடம் உடையதே தவிர, முடிந்து போன ஒன்று அல்ல.

**மாண்புமிகு திரு. ப, உ. சண்முகம்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 50 ஆண்டு காலத்திற்கு பிறகு 1974 ஆம் ஆண்டு அது திருத்தப்படக்கூடிய ஒன்று என்று பேராசிரியர் அன்பழகன் அவர்கள் பேசுகிறார்கள். திருத்தப்படக் கூடியது கூட அல்ல. எவ்வளவு தண்ணீர் அதிகமாக வருகிறது என்று கண்டு பிடித்து, மேற்கொண்டு கூடுதலாக வருகிற தண்ணீரைத் தான் மூன்று மாநிலங்களும் பிரித்துக் கொள்ள வேண்டும் என்ற திருத்தத்தைத்தான் அந்த ஷரத்திலே சொல்லப்பட்டிருக்கிறதே தவிர, அந்தக் கண்டிஷனை திருத்துவதாகவே அந்த ஒப்பந்தத்திலே கிடையாது.

**திரு. க. அன்பழகன்:** துணைத் தலைவர் அவர்களே, அமைச்சருக்குப் பாராட்டு. அதை ஆளும் கட்சி உறுப்பினர்களுக்கெல்லாம் ஒரு சர்க்குலர் போட்டு தெரிவிக்க வேண்டும் என்று தான் கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** துணைத் தலைவர் அவர்களே, தேவைப்படாது. அது காலாவதியாகிவிட்டது என்று நாங்கள் சொல்லவே இல்லை. உயிரோடு இருக்கிறது என்று தான் சொல்லிக் கொண்டிருக்கிறோம்.

**திரு. க. அன்பழகன்:** துணைத் தலைவர் அவர்களே. அது உயிரோடு இருப்பதற்காக பாராட்டு. ஏனென்றால் இந்தக் கருத்திலே ஒருமித்த கருத்துத்தான் தமிழகத்திலே இருக்க முடியும். அதிலே கட்சி வேற்றுமைக்கும் இடம் இல்லை.



1986 மார்ச் 31] [திரு. க. அன்பழகன்]

ஆனாலும், அதுபற்றி, அந்த ஒப்பந்தத்தை வலியுறுத்தி கூடுதலாக கிடைக்கிற தண்ணீரைப் பங்கிட்டுக் கொள்வது பற்றி கர்நாடக மாநில அரசோடு, ஏதாவது ஒரு வகையில் நம்முடைய மாநிலத்தினுடைய உரிமையைக் கருதி நாம் எடுத்துக் கொண்ட நடவடிக்கை என்னவென்றால், இந்த அறிக்கையிலேயே சொல்லப்பட்டிருக்கிறது. "பேச்சு வார்த்தைகளின் மூலமாகத் தான் அதற்கான முடிவைத் தேட வேண்டும என்று தமிழக அரசு முயற்சி செய்கிறது. இதற்காகக் கர்நாடக முதல்வரும், தமிழக முதல்வரும் 1984 ஆம் ஆண்டு ஜனவரித் திங்களிலும், 1985-ல் நவம்பர் திங்களிலும் இப்பிரச்னை பற்றி கலந்துரையாடினார்கள்." இதிலே இருக்கிற வேகம் எப்படிப் பட்டது என்பதை தயவுசெய்து ஆளும் கட்சியினரும் அமைச்சரவையும் உணர வேண்டும் என்று கேட்டுக்கொள் கிறேன்.

முதலமைச்சர் அவர்களேதான் எல்லாவற்றிற்கும் போய் பேச வேண்டும் என்று நான் சொல்வதற்கு நியாயம் இல்லை என்பதை தான் உணர்கிறேன். ஆனால் முதலமைச்சரின் சார்பில் வாதாடக் கூடிய எந்த அமைச்சரும், கருத்துக்களை முதலமைச்சரின் சார்பாக எடுத்து வைத்து வாதாடியிருக்கலாம். 1984 ஜனவரி முதல் 1985 நவம்பர் வரையிலே 1¾ ஆண்டுக் காலம் ஒரு பேச்சு வார்த்தைக்கும் இன்னொரு பேச்சுவார்த்தைக்கும் இடையிலே காலம் போகுமானால், தஞ்சை மாவட்டத்திலும், திருச்சி மாவட்டத்திலும் விவசாயம் எந்த அளவுக்குப் பாதிக்கப்படும்?

இங்கே நன்னிலம் மணிமாறன் அவர்கள் காலையில் எழுப்பிய ஒரு பிரச்னையில் இந்த ஆண்டுக்கு 150 கோடி ரூபாய் அளவிற்கு தஞ்சை மாவட்டத்தில் விவசாயத்தில் இழப்பு ஏற்பட்டிருக்கிறது என்று சொன்னார்கள். ஒரு அதிகாரி தெரிவித்த அறிக்கையிலே 100 கோடி ரூபாய் அளவுக்கு மேலே இழப்பு என்று சொன்னார்கள். 1975-லேயிருந்து இந்த சிக்கல் ஏற்பட்டு விட்ட காரணத்தால், இதுவரையிலும் எண்ணிப் பார்த்தால் 10 ஆண்டுக் காலத்தில் ஏறக்குறைய ஆயிரம் கோடி ரூபாய் அளவுக்கு — ஏறக்குறையத்தான் சொல்கிறேன் ஒரு ஆண்டிலே 90 கோடி ரூபாய், ஒரு ஆண்டிலே 150 கோடி, ஒரு ஆண்டிலே 50 கோடி— என்று வருகிற காரணத்தாலே தமிழகத்திற்கு ஆயிரம் கோடி ரூபாய் விவசாயத் துறையிலே மட்டும் இழப்பு ஏற்படக் கூடிய நிலைமை என்றால், இதிலே மத்திய அரசு, நீங்கள் பேசி

[திரு. க. அன்பழகன்] [1986 மார்ச் 31

முடிவுக்கு வாருங்கள் என்று மட்டும் சொல்லிக் கொண்டிருப்பதில் அர்த்தம் இல்லை என்று நான் நிச்சயமாக மத்திய அரசுக்குத் தெரிவிக்க விரும்புகிறேன்.

மத்தியஸ்தம் செய்வதற்கு யோக்கியதை இல்லாத அரசாக இருக்குமானால் அது மத்திய அரசாக இருக்க முடியாது. மத்தியஸ்தம் செய்வது என்றால் நடுநிலைக் கோட்டிலே நின்று நியாயத்தை வழங்கி அதன் மூலமாக நீதியைப் பிறப்பிக்க அது தவறி விட்டது.

திருமதி இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் பிரதமராக இருந்தபோது, அப்போது அவர்கள் தமிழக ஆட்சிக்குத் தந்த உறுதிமொழியைக் காப்பாற்றவில்லை, இன்றைக்கு ஆளும் கட்சியிலே அமைச்சர்களாக இருக்கிற சில நண்பர்களுக்கு தெரியும். உச்ச நீதிமன்றத்திற்கு நீங்கள் வழக்காடுவதற்கு முனைய வேண்டாம். அந்த வழக்கை நீங்கள் கைவிட்டு விட்டால், விரைவிலே இந்தப் பிரச்னையை தீர்ப்பது எளிதாக இருக்கும் என்ற கருத்தை திருமதி இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் தெரிவித்தார்கள். ஒருவேளை அப்போது கர்நாடகத்திலே காங்கிரஸ் ஆட்சியிருந்த காரணத்தால், இந்தப் பிரச்னையில் இந்திரா காந்தி அவர்கள் தலையிட்டு நியாயம் வழங்கிட முடியும் என்ற நம்பிக்கை இருந்திருக்கக் கூடும். ஆனால் எதிர்பாராத நிகழ்ச்சிகள் நடைபெற்று விட்டதால் இன்றைக்கு நம் தமிழகத்திற்கு ஏற்பட்டு வரும் இழப்பை உடனடியாகத் தடுத்து நிறுத்த தமிழகத்திலே உள்ள விவசாயிகளைக் காப்பாற்ற தீவிரமாக செயல்பட்டு இருக்க வேண்டும் என்று தமிழகத்தினுடைய அமைச்சரவையையும்; அதைப்போல இப்படிப்பட்ட பிரச்னைகளை நீடிக்க விட்டுக் கொண்டிருப்பது அகில இந்தியாவிலும் குறைபாடுகளை வளர்ப்பதற்குத்தான் காரணமாக இருக்கும் என்பதை மத்திய அரசுக்கும் நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

(முற்பகல் 11-30)

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** துணைத் தலைவர் அவர்களே, காவிரி பிரச்னைப் பற்றி விரிவாகப் பேசியதால் நான் கேட்கிறேன். பேசுகிற பேராசிரியர் அன்பழகன் அவர்களிடத்தில் ஏதாவது புதிய திட்டமிருந்து அதனை அவர்கள்



1986 மார்ச் 31] [திரு. ப. உ. சண்முகம்]

தருவார்களானால் அதுவும் எங்களுடைய பேச்சுவார்த்தைக்கு உதவியாக இருக்கும். பேசுங்கள், முடியுங்கள் என்றால் பேசிக் கொண்டு தான் இருக்கிறோம். பேச்சுவார்த்தை நடந்து கொண்டுதான் இருக்கிறது. மத்தியஸ்தம் பண்ணுவதற்கு முடியாதவர்கள் மத்திய அரசாக இருக்க யோக்கியதை இல்லையென்றுச் சொன்னார்கள். அவர்கள் அவ்வளவு கடுமையான வார்த்தையைப் போடத் தேவையில்லை. மத்திய அரசு தலையிட்டு இதிலே எந்த அளவிற்கு செய்ய முடியுமோ அந்த அளவிற்கு செய்து கொண்டுதான் இருக்கிறார்கள். பேச்சுவார்த்தைகள் மூலமாகத்தான் தீர்க்க முடியுமே தவிர படையெடுத்து தீர்க்கிற பிரச்னையாக காவிரிப் பிரச்னை இல்லை. பேசித்தான் தீர்க்க முடியும். அதிலேதான் இந்த அரசாங்கம் மும்முரமாக ஈடுபட்டிருக்கிறது.

**திரு. க. அன்பழகன்:** துணைத் தலைவர் அவர்களே, இது படையெடுக்கிற பிரச்சினையல்ல என்பதை நான் உணர்ந்திருக்கிறேன். ஆனால் பேச வேண்டிய அளவிற்கு வலியுறுத்தி பேசப்படாமல் தயக்கம் காட்டப்பட்டு, தாமதம் ஏற்படுகிறது என்பதை உணர்த்துகிறேன். நான் சொன்ன யோக்கியதை என்பது பொறுப்புணர்ச்சி இல்லையென்பதே தவிர வேறல்ல. அதிலே ஒன்றும் மரியாதை குறைவு இருப்பதாக நான் கருதவில்லை. யோக்கியதை இல்லை என்றால் திறமை, ஆற்றல், பொறுப்புணர்ச்சி ஆகியவை இல்லையென்று நான் சொன்னதற்கு காரணம் இந்திரா காந்தி அவர்கள் கொடுத்த வாக்குறுதியை அதற்குப் பின்னாலே வந்தவர்களால் தொடர்ந்து நிறைவேற்ற முடியாத நிலைமை ஏற்பட்டு, வலியுறுத்த வேண்டிய ஒரு கட்டத்தில் நியாயத்தை வலியுறுத்தாத காரணத்தால் பிரச்னை நீடித்துக் கொண்டு போகிறது என்பது என்னுடைய கவலை. எனவே இதிலே வலியுறுத்தி நியாயம் பெற வேண்டுமென்று தான் சொல்கிறேன். ஒருவேளை மத்திய அரசைச் சொல்வது ஆளும் கட்சியிலே இருக்கிற அமைச்சர்களுக்கு வருத்தமாக இருக்குமானால் உள்ளபடியே என்னுடைய நிலைமையை மாற்றிக்கொள்ள. . . .

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** துணைத் தலைவர் அவர்களே, ஆளும்கட்சியின் சார்பிலே சொல்கிறேன். அதிலே எங்களுக்கு வருத்தம் கிடையாது. பேச்சுவார்த்தை நடந்து கொண்டிருக்கிறபோது தடிப்பான வார்த்தை வேண்டாமென்று

தான் சொன்னேன். அவர்களுடைய பிரியம் அதுவானால் தாராளமாகச் சொல்லலாம். இந்திரா காந்தி அவர்கள் வாக்குறுதி கொடுத்தார்கள், அதனால் வழக்கு வாபஸ் பெறப்பட்டது என்பது உண்மையல்ல.

**திரு. க. அன்பழகன் :** துணைத் தலைவர் அவர்களே, அப்போது அவர் அமைச்சராக இருந்தார்கள் என்று நம்புகிறேன். தமிழ்நாடு காங்கிரஸ் கட்சித் தலைவராக இருந்த மூப்பனார் அவர்களும், மன்னை நாராயணசாமி அவர்களும் மற்றவர்களெல்லாம் ஒரு குழு அமைத்துத்தான் அந்த வழக்கு கழகத் தோழர்கள் மூலமாக டெல்லியில் போடப்பட்டது. அதற்குப் பின்னாலே பிரச்னை சுமூகமாகத் தீர்வதற்கு உச்ச நீதிமன்ற வழக்கு தாமதமாகிவிடும் என்ற கருத்துத் தெரிவிக்கப் பட்டு, விரைவிலே தீர்த்துவிடலாம் என்று நம்பிக்கையூட்டப் பட்டுதான் அப்போது காங்கிரஸ் கட்சித் தலைவராக இருந்த மூப்பனார் அவர்களும் ஏற்றுக்கொண்டுதான் அந்த வழக்கை வாபஸ் பெற்றிருக்கிறோம். இருந்தாலும் இப்போது அந்த வழக்கை மறுபடியும் போட வேண்டிய அவசியம் ஏற்பட்டால் மாநில அரசு அதிலே அக்கறை எடுத்துக் கொண்டால் மறுபடியும் அந்த வழக்கை உச்ச நீதிமன்றத்தில் எடுத்துக்கொள்ளச் சொல்லி கேட்கக்கூடிய உரிமை நமக்கு இருக்கிறது. இருந்தாலும் பேச்சுவார்த்தைகளில் ஒரு அவசரம் காட்டாமலிருந்தால், பேச்சுவார்த்தை என்பது விருந்தோடு முடிந்து விட்டால் நமக்கு எப்படி பயன் ஏற்படும் என்பதற்காகத்தான் இதனை வலியுறுத்திச் சொல்கிறேன்.

அதைப்போல சென்னைக்குக் குடிதண்ணீர்த் திட்டத்தை நிறைவேற்ற வேண்டுமென்று கிருஷ்ணா நதித் திட்டத்தை தமிழக அரசு வரவேற்று ஆந்திரா அரசிற்கு முதல் கட்டமாக திருமதி இந்திரா காந்தி அவர்களின் முன்னிலையில் 47 கோடி ரூபாய் கொடுத்து அந்தத் திட்டத்தை விரைவாக நிறைவேற்ற வேண்டுமென்று விரும்பி செயல்பட்டு இன்றையதினம் அந்தத் திட்டம் ஆந்திர மாநில அரசு தன்னுடைய உரிமைகளின் அளவிற்கு உட்பட்டுத்தான் செயல்படுவதாகச் சொன்னாலும் கூட அவர்களுக்கு ஏற்கனவே கிடைத்த கிருஷ்ணா நதி நீர்ப் பங்கீட்டுத் தீர்ப்பின்படி ஆந்திர மாநில அரசு செயல் படுவதை மற்ற மாநில அரசுகள் அது தங்களுக்குள்ள



உரிமைகளைப் பாதிப்பதாகச் சொல்வதன் காரணமாக இன்றையதினம் சிக்கலுக்கு ஆளாகியிருக்கிறது. என்னைப் பொறுத்தவரையில் அந்த வகையிலே ஆந்திரா மாநில அரசினுடைய திட்டம் நிறைவேறி சென்னை நகரத்திற்கு குடிதண்ணீர்த் திட்டம் நிறைவேற்றப்படக்கூடிய நிலைமைகள் உருவானால் அதை வரவேற்கிறேன். மேலும் 45 கோடி ரூபாய் தருவதற்கு தமிழக அரசு இன்றையதினம் ஒதுக்கியிருக்கிறது. ஏறக்குறைய 90 கோடி ரூபாய் ஒதுக்கித்தரும் நிலைமைக்கு நாம் ஆளாகியிருக்கிறோம். ஆந்திரா அரசு எந்த அளவிற்கு நிதி ஒதுக்கியிருக்கிறது என்பது ஐயத்திற்குரியதாக இருக்கிறது. எல்லாவற்றையும் விட சென்னை மாநகர் குடிதண்ணீர்த் திட்டதிற்கு, மத்திய அரசு அதிக அக்கறை காட்டுவதற்கு கடமைப்பட்டிருக்கிறது. அதிலும் திருமதி இந்திரா காந்தி அவர்களால் துவங்கப்பட்ட திட்டத்திற்கு, மத்திய அரசு அதிகப் பொறுப்பெடுத்துக் கொண்டு, மாநில அரசுகளின் மறுப்புகளுக்கு என்ன காரணம் என்பதைப் பார்த்து, அதிலே நியாயம் இருக்கிறதா என்பதைப் பார்த்து, நீதிபதியாக இல்லாவிட்டாலும், நீதிபதி நிலையிலே நியாயம் வழங்க முன்வர வேண்டுமே தவிர, நியாயம் வழங்காமல் நதிகளை எல்லாம் தேசிய நதிகளாக, நேஷனல் வாட்டர்வேஸ் என்ற முறையிலே அவைகளின் நீரைக் கட்டுப்படுத்தும் உரிமையை எடுத்துக்கொள்ளலாம் என்று கருதுவதோ, அப்படி ஏதோ அவர்கள் பொறுப்பிலே வந்து விட்டால் உடனே பிரச்னை தீர்ந்துவிடும் என்று கருதுவதோ அவ்வளவு முறையல்லவென்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

சண்டிகார் கூட மத்திய அரசினுடைய பொறுப்பிலே நீண்ட காலமாக இருந்தது. அதனாலே சண்டிகாருக்கு ஏற்பட்ட பிரச்னை தீர்ந்துவிடவில்லை. எனவே நடுநிலை கொள்கை என்று ஒன்றை வகுத்து அந்தக் கொள்கை அடிப்படையிலே எந்த மாநிலமாக இருந்தாலும் அந்தக் கொள்கைக்கு ஏற்ப செய்ய வேண்டிய வல்லமையோ, ஏற்கனவே கொடுத்திருந்திற தீர்ப்புகளை நிறைவேற்றுகிற ஒரு மனப்பான்மையோ மத்திய அரசுக்கு இருக்குமானால் இந்தக் கிருஷ்ணா நதி நீர்த் திட்டம் மூன்று, நான்கு ஆண்டுகளுக்குள்ளாக கிடைக்க வாய்ப்பு ஏற்படலாம். இல்லையானால், பாசனத் திட்டம் நிறைவேற்றுவதிலே ஏற்படக்கூடிய தாமதத்தின் காரணமாக

நமக்காக ஏற்றுக்கொண்டுள்ள குடிநீர்த் திட்டம் பாதிக்கப் படலாம். அதையும் இந்த அரசு ஓரளவு உணர்ந்து இருக்கிற காரணத்தால்தான், கொற்றலையாறு திட்டத்திற்கு சென்னை நகரத்தை ஒட்டி வரக்கூடிய திட்டத்திற்கு 100 கோடி ரூபாய் ஒதுக்கியிருப்பதாக, அல்லது 99 கோடி அதற்கு தேவைப் படுவதாக ஒரு கருத்தை நான் காண்கிறேன். எனவே இந்த நிலைமையில் தமிழக அரசு ஆற்ற வேண்டிய கடமைகளை மிகத் தீவிரமாக ஆற்ற வேண்டும் என்று நான் வலியுறுத்துகிறேன். மாறாக இவைகளைச் செயல்படுத்தாத காரணத்தினால் நமக்கு ஏற்படக்கூடிய இழப்பு மிக அதிகமாக இருக்கிறது என்பதை நான் நினைவுபடுத்துகிறேன்.

அடுத்து, சென்னை நகரத்திலே கடந்த ஆண்டு மே மாதம் 29 ஆம் தேதி மூர்மார்க்கெட் எரிந்து போய்விட்டது. அது எரிந்து போய்விட்ட காரணத்தினாலே சில பேர்களுக்கு பூங்கா வைப்பதற்கு நல்ல வாய்ப்பாக இருக்கிறது. தீ விபத்து ஏற்பட்டதில் நோக்கங்கள் இருந்ததா, இல்லையா என்பதை இன்றைக்கு நான் நிரூபிக்க முடியாது. இருந்தாலும் எப்படியோ அது எரிந்து போய், முழுவதும் எரிந்து போய், சாம்பலாக ஆகி, அதிலே இருந்த இரும்பு கர்டர்கள் எல்லாம் போக வேண்டிய இடத்திற்குப் போய், காண்ட்ராக்ட் மூலமாகத் தான், சட்டப்படிதான் போய். . . .

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** இல்லை, இல்லை, தவறான கருத்து பரவிவிடக்கூடாது என்பதற்காகத்தான் நான் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த மூர் மார்க்கெட் மத்திய அரசாங்கத்திற்கு விலைக்கு கொடுத்தாகிவிட்டது. விலைக்குக் கொடுத்தாகிவிட்டதற்குப் பிறகு, காண்ட்ராக்ட் விடுவது மத்திய அரசினுடைய பொறுப்பே தவிர, மாநில அரசினுடைய பொறுப்பல்ல. மத்திய அரசிலேயிருந்துதான் காண்ட்ராக்ட்டுக்கு விட்டார்கள்.

**திரு. க. அன்பழகன் :** துணைத் தலைவர் அவர்களே, இதிலே யாருக்குப் பொறுப்பு இருந்தது என்பதைப் பற்றி நான் சொல்லவில்லை. நான் சொன்னது, அது எரிந்து போனதிலே, பூங்கா வருவதற்கு நல்ல வாய்ப்பாகிவிட்டது என்றுதான் நான் சொன்னேன். சென்ட்ரல் ஸ்டேசனுக்கு முன்னாலே அழகான பார்க்கை ஏற்படுத்துவதற்கு. பார்க் என்றால் பப்ளிக் பார்க்



அல்ல, எரிந்து போனது மூர் மார்க்கெட், அந்த எரிந்து போன இடத்திலே பார்க்கை ஏற்படுத்தப் போகிறார்கள். ஆனால் அந்த வியாபாரிகள் மிகுந்த வேதனைக்கு ஆளாகி யிருக்கிறார்கள். வியாபாரிகள் ஒரு கட்சியைச் சேர்ந்தவர்கள் அல்ல. எல்லாக் கட்சியைச் சேர்ந்தவர்களும் அங்கே இருக்கிறார்கள். எந்தக் கட்சியிலேயும் சேராதவர்களும் அங்கே இருக்கிறார்கள். 600 குடும்பங்கள் இதனால் பாதிக்கப் பட்டன. இன்னும் பலர் பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள். இதிலே ஏறத்தாழ 5, 6 பேர்கள் தங்களுக்கு ஏற்பட்ட அந்தத் துயரமிக்க சூழ்நிலையில் இருந்து மீட்சி பெறாமல் இறந்தே போய்விட்டார்கள். அந்த வியாபாரிகட்கு வேறு ஒரு இடத்தில் கட்டிடம் கட்டித் தருவதற்கு அரசாங்கம் ஏற்றுக்கொண்டது. தமிழக அரசு 1 கோடியே 40 லட்சம் ரூபாய் ஒதுக்கியிருக்கிறது. 6 கோடி ரூபாயிலே அந்தத் திட்டம் நிறைவேற வேண்டும். அதற்காக ஒரு வரைபடம் வரைந்து தந்த சில கம்பெனிகள், தாங்கள் இப்படிப்பட்ட கட்டிடத்தை அமைத்துத் தருவதாகச் சொல்லி, அது மாநகராட்சிக்கு அரசாங்கத்திற்கு, வந்து, அதிலே ஏதோ ஒரு வரைபடம் ஏற்றுக்கொள்ளப்பட்டு, ஏற்றுக் கொள்ளப்பட்ட அந்த படத்தை வரைந்த கம்பெனியுடன், அதைக் கட்டுவதற்கான ஒரு ஒப்பந்தம் ஏற்பட்டு, இடையிலே அது ஒரு மாற்றம் அடைந்திருக்கிறது. இதைப் பற்றிக் கூட மாண்புமிகு அமைச்சர் ப. உ. ச. அவர்கள் மேலவையிலே சொல்கிறபோது, முதலிலே ஒரு படம், நல்ல படம் என்று ஒரு வரைபடம் ஏற்றுக்கொள்ளப்பட்டது, இருந்தாலும் அந்தப் படத்தை விட, இன்னொரு படம் நன்றாக இருக்கிறது என்று பின்னாலே அது ஏற்கப்பட்டதாக ஒரு கருத்து தெரிவிக்கப் பட்டது.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** துணைத் தலைவர் அவர்களே நான் விளக்கம் சொல்லிவிடுகிறேன். மொத்தம் 12, அல்லது 13 பேர்கள் என்று நினைக்கிறேன், வரைபடம் தந்திருந் தார்கள். அதிலே ஒரு வரைபடம் கொண்டு வந்து முதல் அமைச்சரிடத்திலே காட்டப்பட்டது. அதைப் பார்த்துவிட்டு, அதிலே சில திருத்தங்கள் செய்ய வேண்டும் என்று முதலமைச்சர் அவர்கள் சொல்லியிருந்தார்கள். இன்னும் சில வரைபடங்கள் இருக்கின்றன என்று நான் தெரிவித்ததற்குப் பிறகு, அவைகளைக் கொண்டு வரும்படி சொன்னார்கள். இதற்கிடையிலே முதல்

வரைபடம் வரைந்தவர்களிடத்திலே ஒரு ஒப்பந்தத்தை அவர்கள் செய்துவிட்டார்கள். அது அரசாங்கத்தைக் கட்டுப்படுத்தாது. அரசாங்கத்தின் ஒப்புதல் இல்லாமல் மாநகராட்சி ஒப்பந்தம் செய்ய முடியாது. செய்யக்கூடாது அது தனியான விவகாரம். தனியாக நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கிறது. மற்ற வரைபடங்கள் கொண்டுரப்பட்டு அதை முதலமைச்சர் அவர்கள் பார்வையிட்டார்கள். பார்த்ததற்குப் பிறகு இன்னொரு வரைபடத்தை, மாடல் நன்றாக இருக்கிறது, அதிலே திருத்தங்கள் செய்யுங்கள், அதையே முடிவாக, பைனலாக, இறுதியாக எடுத்துக்கொள்ளுங்கள் என்று ஆணை பிறப்பித்தார்கள். அதன் மேல் அரசு ஆணை பிறப்பித்து இருக்கிறது. அதன் மேல் நடவடிக்கையை மாகநராட்சி எடுத்து வருகிறது.

**திரு. க. அன்பழகன்:** துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் சொல்கிற அந்த விவரத்தின் அடிப்படையிலே, முதலிலே அதற்கான கட்டிடம் கட்டுவதற்கான கான்ட்ராக்ட் தங்களுக்குக் கிடைக்கப் பெற்றவர்கள் அதைமாற்றக் கூடாது என்று நீதிமன்றத்திற்குப் போய் இருப்பதாக நான் அறிகிறேன். நீதிமன்றத்திற்குப் போகக்கூடாது என்றோ, அல்லது நீதிபதியிடத்திலே நியாயம் கிடைக்காது என்றோ கருதுகிறவன் அல்ல நான். இதனால் ஏற்படக் கூடிய விளைவு, நீதிமன்றத்திலே அந்த வழக்குக்குத் தீர்ப்பு கிடைக்க தாமதம் ஆனால், இன்னும் 6 மாதம் ஆனால், பாதிக்கப்பட்ட மக்கள், வியாபாரிகள் எந்த அளவிற்குப் பாதிக்கப்படுவார்கள் என்பதைப் பார்க்க வேண்டும். எனவே அரசு இதிலே சம்பந்தப்பட்டவர்களை அழைத்துப்பேசுவதன் மூலமாகவோ நீதிமன்றத்திலே மேல் முறையிடு செய்வதன் மூலமாகவோ, விரைவில் இந்தப் பிரச்சனையைத் தீர்த்து, உடனே செயற்படுத்த வேண்டும். கட்டிடம் யாருடைய வரைபடத்தின்படி கட்டப்படுகிறது என்பது எனக்கு முக்கியம் இல்லை. கட்டிடம் கட்டுவதற்கான வாய்ப்பை விரைவில் உருவாக்க வேண்டும். அந்தக் கட்டிடம் வந்தால்தான், அந்த வணிகர்களுக்கு வாழ்வு கிடைப்பதற்கு, அவர்களுக்கு ஏற்பட்ட கோடிக்கணக்கான இழப்பை ஓரளவுக்கேனும் ஈடுகட்டுவதற்கு, அன்றாட வாழ்வுக்கான தொழிலைத் தொடங்குவதற்கு நல்ல வாய்ப்பு ஏற்படும் என்பதை நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.



(முற்பகல் 11-40)

அடுத்து நம்முடைய அரசு தலைமைச் செயலக ஊழியர்கள், அரசு அலுவலர்கள் பல்வேறு அலுவலர்கள் சங்கங்களை அமைத்துக்கொண்டு செயல்படுவதைப் போல, செயல்பட்டதினுடைய விளைவாக, அவர்கள் சில கோரிக்கைகளை வைத்து, உண்ணாவிரதம், போராட்டம் போன்றவற்றில் ஈடுபட்டதன் காரணமாக, அவர்களுடைய கோரிக்கை எவ்வளவு நியாயமாக இருந்தாலும் அவர்களுக்குக் கிடைக்கிற ஊதியங்கள் இன்றைய தினம் இந்தியாவிலே பல் மாநிலங்களோடு ஒப்பிடுகிற போது மிகக் குறைவாக இருக்கிறது என்று சொல்வதற்கு நியாயம் இருந்தாலும் கூட, அவர்கள், தங்களை எதிர்த்துப் போராடினார்கள் என்று அமைச்சர்கள் கருதுவதை விட, மேல் அதிகாரிகள் கருதியதின் விளைவாக, அமைச்சரவையை விட, அதிகாரிகள், இவர்கள் எல்லாம் நம்மை எதிர்த்துப் போராடினார்கள் என்று தவறாக எண்ணியதின் காரணமாக ஏறத்தாழ 40 பேர்கள் இன்னும் வேலைக்கு எடுத்துக்கொள்ளப்படாத நிலையில் வேலையில் இருந்து நீக்கி வைக்கப்பட்ட நிலைமை இருக்கிறது. நான் அரசாங்கத்திற்கு ஆலோசனையாகச் சொல்லக் கூடிய கருத்து இது. தலைமைச்செயலக சங்க அங்கீகாரத்தை நீங்கள் திரும்பவும் வழங்க வேண்டும். சங்கம் இருப்பது தேவைப்பட்டால் போராடுவதற்காக. போராடியதற்காக சங்கத்தினுடைய அங்கீகாரத்தை விலக்குவது என்பது அவ்வளவு முறையல்ல. இன்னும் சொல்வதானால், எனக்கு வேடிக்கையான ஒரு உதாரணம் தோன்றுகிறது. சில பேருக்கு கையிலே புண் வந்து விடும்; புண் வந்துவிடுமானால் அது அரிப்பு எடுக்கும்; அரிப்புக்காக, அந்தப் புண்ணுக்காக மிகக் கடுமையான மருந்துகள் சாப்பிட்டால்கூட அந்த அரிப்பு நிற்காது. அந்தப் புண் ஆறாது. பிறகு கடைசியில் ஆறி வருகிறபோது தோன்றுகிற அரிப்பு உணர்வு மனிதனை மறுபடியும் அதை எப்படியாவது புண்ணாக்கி விடத்தான் செய்கிறது. அதேபோல் குரங்குக் கை புண்ணாக பிரச்சனையை மேலும் தொல்லைக்கு ஆளாக்கக் கூடிய அளவுக்கு வளர்த்து விடக்கூடாது என்பதற்காக அந்த முறையினை கைவிட வேண்டும்.

**திரு. மா. சின்னராசு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பேராசிரியருடைய பேச்சிலே நான் குறுக்கிடுவதற்கு உள்ளபடியே வருந்துகிறேன். ஆனால் ஒரு விளக்கத்தை நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன். போராட்டம் நடத்திய ஊழியர்கள் கோட்டைக்குள்ளேயே ஊர்வலம் நடத்தினார்கள்; கோஷம் போட்டார்கள். பெரிய கண்டனக் கூட்டத்தை நடத்தினார்கள். இன்னும் சொல்லப்போனால், அன்று நான் புதிய கட்டடத்திலே இருந்தேன். ஊழியர்கள் உள்ளே உட்கார்ந்து இருந்தவர்களை கட்டாயப்படுத்தி வெளியே இழுத்து வந்தார்கள். ஆகவே எந்தக் கோரிக்கையை வைத்தார்கள், எந்தக் கோரிக்கை எந்தத் தேதியில் தெரிவிக்கப்பட்டது, அதை எப்படி அவர்கள் வாதிட்டார்கள் என்பதைப்பற்றி நான் பேசவில்லை. நடந்துகொண்ட முறையை பேராசிரியர் போன்றவர்கள் ஒப்புக்கொள்கிறார்களா என்பதைத்தான் நான் அறிய விரும்புகிறேன்.

**திரு. க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சூழ்நிலையின் விளைவாகத்தான் மனிதன் செயல் படுகிறான். அந்தக் குறிப்பிட்ட நேரத்தின் சூழ்நிலை காரணமாக சில காரியங்கள் நடைபெற்று இருக்கலாம். அதையே சொல்லிக் கொண்டிருப்பது என்பதும், அதற்குப் பழிவாங்குவது என்பதும் ஒரு அரசாங்கம் அனைவரையும் அணைத்துச் செல்லக்கூடிய, அதுவும் தன்னுடைய அலுவலர்களை முறையாக அணைத்துச் செல்லக்கூடிய செயல் ஆகாது; அரசாங்கத்தினுடைய கொள்கையிலே அப்படிப்பட்ட ஒரு அணுகுமுறை இருக்க வேண்டுமென்று தான் நான் வலியுறுத்துகிறேனே தவிர அவர்கள் செய்த காரியத்தை நான் மறுபடியும் செய்ய வேண்டுமென்று சொல்லவில்லை. ஆனால் அவர்கள் செய்ததாகச் சொல்லப்படுகிற காரியங்கள் எல்லாவற்றையும் நான் ஒப்புக்கொள்ளவில்லை. அதில் இரு சாராருடைய கருத்து இருக்கிறது. எனவே அரசு அலுவலர்கள் என்றைக்கும் அரசாங்கத்திற்காகப் பணியாற்ற வேண்டியவர்கள். அவர்கள் சில குறைபாடுகளுக்கு ஆளாகிறபோது, போராட்டத்திலே ஈடுபடுவார்களானால் அதை விரைவிலே தீர்த்து வைக்கிற கடமையைத்தான் அரசு மேற்கொள்ள வேண்டுமே தவிர அவர்களைப் பழிவாங்குகிற உணர்வை வளர்க்கக் கூடாது என்று கேட்டுக்கொள்கிறேன். நான் அதிகம் பேசவில்லை, சுருக்கமாக முடித்து விடுகிறேன்.



இன்றைக்கு இருக்கிற நிலைமையிலே அரசாங்கத்திற்கு தெரிந்த ஒரு உண்மை, சத்துணவுத் திட்டத்தில் ஊழல் 100-க்கு 25 மடங்கு இருக்கிறது என்பது. ஆடிட் ரிப்போர்ட்டில்கூட அவர்கள் பரிசீலனை செய்த அளவுக்குப் புள்ளிவிவரம் தந்திருக்கிறார்கள். நான் அவையினுடைய நேரத்தை எடுத்துக் கொள்ள விரும்பவில்லை. 100-க்கு 25 பங்கு ஊழல் நடைபெறுகிறது என்றால்; நீங்கள் 160 கோடி, 170 கோடி செலவிடுகிறீர்களேயானால், ஏறத்தாழ 30, 35 கோடி அதிலே பாழாகிறது. குறைபாட்டைப் போக்க என்ன வழி என்று நீங்கள் எண்ண வேண்டும். இன்னும் ஒருபடி மேலே போய் சொல்கிறேன்; நான் மட்டும் சொல்லவில்லை, அமைச்சர் நாவலர் நெடுஞ்செழியன் அவர்களே மூன்று திங்களுக்கு முன்னால் ஒரு பள்ளிக்கூட ஆண்டு விழாவிலே பேசுகிறபோது 200 பேருக்கு உணவு போடுவதாகச் சொல்லிவிட்டு 100 பேருக்குத் தான் போடுகிறார்கள் என்றும் இந்தக் குறைபாட்டை பொதுமக்கள்தான் கண்காணிக்க வேண்டுமென்றும் நாவலர் அவர்கள் பேசி, நான் அந்த பேச்சை படித்துப் பார்த்தேன். இந்தக் குறைபாட்டைப் போக்க என்ன வழி? இல்லையென்றால் நம்முடைய வரிப் பணத்திலே 170 கோடி, 180 கோடியில் 100-க்கு 20 ரூபாய் பாழாகிறது என்று சொன்னால் அது எவ்வளவு பெரிய ஏமாற்றம் என்பதையும், அதைச் சீர்படுத்த என்ன வழி என்பதையும் அமைச்சர் தெரிவிக்க வேண்டும். இன்னும் சொல்லப் போனால், உள்ளாட்சி மன்றங்கள், ஊராட்சி ஒன்றியங்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் எல்லாம் வந்திருக்கிறபோது அவர்களுடைய மேற்பார்வையிலே இயங்குவதற்கு வழிவகை செய்வதற்கு அரசு முன்வருமானால் அது பெருமளவுக்கு ஊழல் குறைபாடுகளைக் குறைக்க உதவும் என்று நான் நம்புகிறேன்.

சீருடை வழங்குவதிலும்கூட 30 கோடி, 40 கோடி செலவிடப்படுகிறதென்று சொல்கிறபோது, இராமநாதபுரத்தில் சீருடை வழங்குவதிலும் எப்படிப்பட்ட ஊழல் ஏற்பட்டது, சீருடை தெருவுக்கு வந்து விற்பனை ஆகிறது என்னும் செய்தியுடன் கலெக்டர் இடத்திலே, இன்னும்கூட சீருடை தைத்த ஏழை பெண்களுக்கு ஊதியம் கொடுக்காத காரணத்தால் 21 பேர், 31-ஆம் தேதிக்குள் எங்களுக்கு ஊதியம் கொடாவிட்டால் 1-ஆம்

[திரு. க. அன்பழகன்] [1986 மார்ச் 31

தேதி கூட்டுத் தற்கொலை செய்துகொள்வோம் என்று அறிவித்திருப்பதாக பத்திரிக்கையில் செய்தி வந்திருக்கிறது. சீருடையின் பெயரால் சமூகத்தை சீரழிக்கக்கூடாது; சீருடை. . . .

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பேராசிரியர் அவர்கள் நான் குறுக்கிடுவதைத் தவறாக நினைக்க வேண்டாம். சீருடையிலே குற்றம் இருக்கிறது என்று சொன்னார்கள். நான் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்; குற்றம், குறைகளை எடுத்துக் காட்டலாம், ஆனால் சீருடைகள் வழங்குவதை பழிக்க வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன். ஏழை மாணவர் களுக்குக் கொடுப்பதைப் பழிக்கக் கூடாது.

**திரு. க. அன்பழகன்:** துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் ப. உ. ச. அவர்கள் எனக்கு அறவுரை கூறியதற்காக அவருக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஏன் என்றால் அறவுரைகளை நினைவூட்டுகின்ற அவையத்தில் இன்றைக்கு நாங்கள் இருந்து கொண்டு இருக்கிறோம்.

நான் சீருடையைப் பழிக்கவில்லை. சீருடை என்ற பெயரால் சீர் அழிக்கின்ற காரியத்தில் பல பேர் ஈடுபட்டுக் கொண்டு இருக்கிறார்கள். உடையில் என்ன இருக்கிறது. துணியை மில்லில் தயாரிக்கிறான். அதை உடையாகத் தைப்பவன் தொழிலாளி. ஆனால் தரவேண்டிய கூலி தராத காரணத்தால் ஏழை சேவா சங்கத்தைச் சேர்ந்தவர்கள் பாதிக்கப்பட்டு இருப்பது மதுரை அல்லது இராமநாதபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் வரையில் வந்து இருக்கிறது. விவரம் பத்திரிகையில் இருக்கின்றது.

தமிழ் நாட்டில் கொத்தடிமை நிலைமையைப் பற்றி இந்த அறிக்கையில் தரப்பட்டு இருக்கின்றது. கொடைக்கானலில் இலங்கையிலிருந்து வந்தவர்கள் கடந்த 4 ஆண்டுகளாகப் பாடுபட்டவர்கள் எப்படிப்பட்ட நிலைமைக்கு ஆளாக்கப்பட்டு 3 மாதம், 4 மாதம் சம்பளம் தராத காரணத்தால், கூலி கிடைக்காத காரணத்தால் சப்-கலெக்டர் வரையில் அவர்கள் சென்று அதற்காக அந்த முதலாளி இருந்த 11 ஆயிரம் ரூபாய் [illegible] சொன்ன அந்தப் பணம் ஏழைகளுக்குத் [illegible]



1986 மார்ச் 31] [திரு. க. அன்பழகன்]

வேண்டிய கூலிக்காகத் தரப்பட வேண்டும் என்று சப்-கலெக்டர் அறிவித்தும் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் அதற்கு மாறாக உத்திரவிட்டு இருக்கிறார்கள் என்ற ஒரு செய்தி வந்துள்ளது. அகதிகள் இப்படி கொத்தடிமைகளாக நடத்தப் பட்டு ஏமாற்றப்பட்டு இருக்கக்கூடிய அந்த துக்ககரமான நிகழ்ச்சியே ஆட்சியில் இருப்பவர்களின் செல்வாக்கின் காரணமாக ஏற்பட்டது என்றும் மேலும் இந்த அநீதி ஒரு அமைச்சர் தலையிட்டு இந்த நிலைமை ஏற்பட்டது என்றும் எழுதியிருக்கிறார்கள். யார் அந்த அமைச்சர் என்று தெரியாது. அவர் 25 பேரில் ஒருவரோ, 11 பேரில் ஒருவரோ அதுவும் எனக்குத் தெரியாது. இருந்தாலும்கூட நான் உங்களை கேட்டுக்கொள்ள விரும்புவது, அப்படி ஒரு நிலைமை இருக்குமானால் அதிகாரிகள் இடத்தில் தலையிடுகிற முறைகேட்டைத் தடுத்து நியாயமான அடிப்படையில் நீதி வழங்கக் கூடிய அளவுக்கு இதனைத் தீர்த்து வைப்பதற்கு அரசு முன்வர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இறுதியாக ஈழத் தமிழர்களைக் காப்பாற்ற—(மணியடிக்கப் பெற்றது) (ஒரு நிமிடத்தில் முடித்து விடுகிறேன்) அவர்களுக்கு இழைக்கப்படுகிற கொடுமைகளிலிருந்து அவர்களை மீட்க மத்திய அரசு தீவிரமான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று ஓரளவு இங்கே தெரிவித்த நிதியமைச்சர் அவர்கள் நேற்றையதினம் ஆளும் கட்சி சார்பில் ஒரு தீர்மானம் போடுகிறபோது தீவிரமான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற கருத்துப்படி அங்கே தீர்மானத்தை ஆளும் கட்சிக் கூட்டத்தில் நிறைவேற்றி யிருக்கிறார்கள். அந்த தீவிரம் என்பதற்கு அல்லது அந்த வகையில் செயல்பட வேண்டும் என்று சொல்லுவதற்கு என்ன பொருள் என்று தெளிவாக தெரிவிக்கப்படவில்லை. ஏன் என்றால் இதுவரையில் பேச்சுவார்த்தை மூலமாக ராஜீவ் காந்தி அவர்கள் முயற்சி செய்து அதில் சோர்வு அடைந்து. இந்தப் பேச்சுவார்த்தை ஜெயவர்த்தனாவுக்கு அவருடைய இன நலனுக்கு, தன்னுடைய இனத்திற்கு பயன்படுகிற வகையில் கால நீட்டிப்புக்கு பயன்படுத் தமிழர்களை அழிப்பதற்கான அவருடைய தந்திரமான திட்டத்திற்கே இவை பயன்பட்டு வருகிற காரணத்தால் இனியும் பேச்சுவார்த்தையால் பயனில்லை என்ற நிலைமை ஏற்பட்டுள்ளது. அந்த வேறு வழி இல்லை என்ற நிலைமை ஏற்பட்டு இருப்பது இங்குள்ள ஆளும்கட்சி

உறுப்பினர்களும் உணர ஆரம்பித்து இருக்கிறார்கள். அப்படி உணர்ந்ததன் விளைவாகத்தான் ஆளும் கட்சி உறுப்பினர் ஒருவர் "பண்டாரியை அனுப்ப வேண்டாம், படையை அனுப்புங்கள்" என்றும், அதனை அனுப்ப வேண்டாம் துப்பாக்கியை அனுப்புங்கள் என்றும் (ஒரு உறுப்பினர்) இங்கே பேசக்கூடிய நிலைமை ஏற்பட்டது. இப்படிப்பட்ட உணர்வு ஏற்படும் இந்த சமயத்தில்தான் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த நண்பர் சித்தன் அவர்கள் பேசும்போது குறுக்கிட்டு தமிழ்நாடு என்ற உணர்வை நீங்கள் ஏற்றுக்கொள்கிறீர்களா என்றும், தனித் தமிழ்நாடு என்று ஒத்துக்கொள்கிறீர்களா என்றும் நாவலர் அவர்கள் கேட்டு இருக்கிறார்கள். இப்போது நான் நிதியமைச்சர் அவர்களை கேட்டுக் கொள்வது, அந்தத் தமிழர்களை காப்பாற்றுவதற்கு தீவிரமான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கூறும் நீங்கள், பேச்சுவார்த்தை என்பது பயன்படாது என்ற கட்டத்திற்கு வந்து விட்ட காரணத்தால் மத்திய அரசு பேச்சுவார்த்தைக்கு அடுத்த கட்டத்தில் என்ன செய்ய வேண்டுமோ அதைச் செய்ய வேண்டும் என்று வலியுறுத்த நீங்கள் தயாரா? என்பதுதான். இதற்கு விடை கேட்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

திரு. உ. சுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவையின் துணைத் தலைவர் அவர்களே, வழக்கம் போல குறளோடு துவங்கிய உரையில் நாவலர் அவர்கள், மிக்க பொருள் வளம் உடையதாகவும், எல்லோராலும் விரும்பத்தக்கதாகவும், எத்தகைய கெடுதலும் எய்தாததாகவும், மிகுந்த விளைபொருள் தருவதாகவும் அமைவதே நாடு என்ற வள்ளுவர் வாக்கை கேட்க சுவையாக இருந்தது.

மிகுந்த விளைப் பொருள் தருவதற்கு உதவியாக உழைக்கும் உழவர்கள் இந்த ஆண்டு மட்டும் அல்ல கடந்த 5 ஆண்டுக் காலமாக கடுமையான வறட்சி அல்லது பெரும் வெள்ளம் ஆகிய நிலைகளால் பெரும் பாதிப்புக்கு உள்ளாகி இருப்பதாகவும் கூறப்பட்டுள்ளது. ஆனால் அப்படி பாதிக்கப்பட்டவர்களுக்கு என்ன நிவாரணம் அளிக்கப்பட்டது என்பதற்குக் கூட எந்த விதமான கூற்றும் இதில் இல்லை. ஆகவே உதவி இல்லாதது

1986 மார்ச் 31] [திரு. உ. சுப்பிரமணியன்]

மட்டும் அல்ல, உபத்திரவமும் அங்கே ஏற்பட்டு இருக்கிறது என்பதை நான் அவர்களின் நினைவுக்கு கொண்டு வர விரும்புகிறேன். இந்த அவலமான நிலைக்கு ஆளான விவசாயிகளுக்கு அங்கே வரி வசூல், கடன் வசூல், ஜப்தி நடவடிக்கை எல்லாம் நடக்கிறது. இந்த இன்னல்களால் தமிழ்நாட்டிலுள்ள அத்தனை பகுதி விவசாயிகளும் பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள். ஆகவே அதற்காக உடனடியாக நடவடிக்கை எடுத்து அவர்களுக்கு உதவி செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இந்த நேரத்தில் 2 ஆண்டுகளாக தொடர்ந்து எங்கள் பகுதியில் குறிப்பாக பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டம் வறட்சி காரணமாக மிகவும் கடுமையான நிலையில் பாதிக்கப்பட்டு இருக்கிறது. வருவாய்த்துறை அதிகாரிகளிடம் சென்ற ஆண்டு நான் எடுத்துச் சொல்லியும் கூட ஏதோ மழை அளக்கும் கருவி இருக்கின்ற காரணத்தால் அங்கு அளக்கின்ற மழையின் அளவைக் கொண்டு இந்தப் பகுதி விளைந்துவிட்டது சிவகங்கை தாலுகா ஒன்றியத்தில் விளைந்துவிட்டது. ஆகவே அதை வறட்சியிலிருந்து நீக்கி விட்டார்கள் என்று கேள்விப்படுகிறோம். இந்த மாதிரி தவறுகள், ஒரு செய்தியில், தகவலில் பாதிக்கப்படுவது பெரும்பான்மையான விவசாய மக்கள் என்பதை உணர்ந்து அவர்களுக்கு எல்லாம் ஆவன செய்ய வேண்டுமென்று நான் மிகப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

(முற்பகல் 11.50)

நல்ல நோக்கத்தோடு கொண்டுவரப்படுகின்ற பல்வேறு திட்டங்களில் அவர்களுக்கு சிரமங்கள் ஏற்படுகின்றன. பல்வேறு அதிகாரிகள் கஷ்டங்களை உருவாக்குகின்றார்கள் என்பதற்கு எடுத்துக்காட்டாக இப்போது தமிழ்நாட்டில் நில உடைமைப் பதிவு மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், அநியாயமாக பல வழக்குகள், வம்புகளுக்கு மக்கள் ஆளாகியிருக்கிறார்கள் என்பதாகும். இந்த நேரத்தில், நேற்றைய தினம் திருச்சியில் இருக்கக் கூடிய உழவர்கள் சங்கத்தைச் சார்ந்தவர்கள் ஒரு தீர்மானத்தைப் போட்டிருக்கிறார்கள். அங்கு வருகின்ற சர்வேயர்கள் கேட்கக் கூடிய தொகையை கொடுக்காவிட்டால், யாரோ சம்பந்த

[திரு. உ. சுப்பிரமணியன்] [1986 மார்ச் 31

மில்லாதவர்களின் பெயர்களையெல்லாம் சேர்ந்து, கூட்டுப் பட்டாவாகப் போட்டு விடுகிறார்கள். இந்தத் தவறுகள் களையப்பட வேண்டுமானால், உரிய தனித் தாசில்தாரிடம் சென்று விண்ணப்பிப்பதற்கு தெரிந்திருக்காத காரணத்தால், அவர்களுடைய உடமைக்கும், அவர்களுடைய சொத்தை விற்ப தற்கோ, அவர்கள் அனுபவிப்பதற்கோ அவர்களுக்கு பல்வேறு விதமான கஷ்டங்கள் ஏற்படுகின்றன. ஆகவே இந்த நல்ல திட்டத்தை, நல்லமுறையில் அமல்படுத்துவதற்காக, எங்கெங்கு தவறுகள் நடைபெறுகின்றன, யார் யார் காரணமானவர்கள் என்று கண்டுபிடித்து, நல்லமுறையில் அமல்படுத்துவதற்கு அரசாங்கம் முன்வரவேண்டும்.

இந்திய ஒருமைப்பாட்டிற்கு மாநில தன்னாட்சி கேட்கும் நீங்கள், மாநில அரசின் கீழ் ஆளுகைக்குட்பட்ட உள்ளாட்சி நிறுவனங்களுக்கு என்ன அதிகாரங்கள் வழங்க திட்டமிட்டிருக் கிறீர்கள் என்பதை அறிய விரும்புகிறேன். ஏற்கெனவே சமுதாய நலத்திட்டங்கள், ஒப்பற்ற தலைவர்கள், நேருஜி அவர் களாலும், எஸ்.கே. டே. அவர்களாலும் கொண்டுவரப்பட்ட திட்டங்கள் கிராம மக்களுக்கு அதிகமான அதிகாரங்களை வழங்க வேண்டுமென்ற ஒரு ஏற்பாட்டைச் செய்கின்ற திட்டங்கள். இப்போது இந்தத் திட்டங்கள்,' கழுதை தேய்ந்து கட்டெறும்பான' கதை போல் ஒன்றியங்களுக்கு எந்தவித அதிகாரமும் இல்லை. இன்று அலங்காரமாக, அலங்காரப் புருஷர்களைப் போல், ஆங்கிலத்தில் சொல்வார்கள் 'இல்லை' ரேமவ் ஹெட்' என்று. அந்த நிலையில் தான் இன்றைக்கு இருக்கிறது. ஏற்கனவே அந்த அதிகாரங்கள். வெள்ள நிவாரண நிதி, பஞ்ச நிவாரண நிதி, புயல் நிவாரண நிதி போன்ற அரசாங்கம் கொடுக்கின்ற பல்வேறு பணிகளுக்காக நிதிகளைச் செலவு செய்கின்ற நிலையிலே தான் இருக்கிறது என்பதை சிந்தித்துப் பார்க்க வேண்டும். ஏற்கனவே அவர்களுக்கு அதிகாரம் இருந்தது. பள்ளி நிர்வாகம் இருந்தது, ஆசிரியர் நிர்வாகம் இருந்தது, வேளாண்மை நிர்வாகம் இருந்தது. சுகாதாரம் இருந்தது. இன்னும் இதுபோன்ற பல்வேறு துறை களில் எல்லாம் இருந்தது. இப்போது ஒன்றியங்களின் கீழ் இருந்தது எடுக்கப்பட்டு. அந்தக் காரியங்களிலிருந்து மாற்றப் பட்ட காரணத்தினால், அவர்கள் ஏதோ சென்றோம். இருந்தோம், அதிகாரிகள் மாதாமாதம் கூட்டும் வாங்க



1986 மார்ச் 31] [திரு. உ. சுப்பிரமணியன்]

கிறார்கள், நாமும் தேர்ந்தெடுக்கப்பட்டு, மூன்று ஆண்டுகள் பதவியில் இருந்தோம் என்று திருப்திபடுகின்ற நிலையிலே தான் இருக்கிறார்களே தவிர, உண்மையில் எந்தவிதமான நல்ல காரியங்களையும் செய்ய முடியாத சூழ்நிலையில், அந்த ஒன்றி யங்கள் இன்றைக்கு இருக்கின்றன. ஆகவே இந்த அரசைக் கேட்டுக்கொள்கிறேன். இதை மறுபரிசீலனை செய்து, ஏற்கனவே எடுக்கப்பட்ட அதிகாரங்களை மீண்டும் மக்களுக்கு சேவை செய்யக் கூடிய வகையில், ஒன்றியத் தலைவர்களுக்கும், தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளுக்கும் வழங்கவேண்டுமென் பதற்கான முறையில் நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

வெள்ள நிவாரணத்திற்காக சுமார் ரூ. 66.8 கோடியை மத்திய அரசு வழங்கியிருக்கிறது. அதில் ரூ. 45 கோடி செலவழிக்கப் பட்டிருக்கிறது என்று கூட சொல்லப்படுகிறது. ஆனால் நாங்கள் எல்லாம் சென்று பார்த்தபோது வெள்ளத்தால் பாதிக் கப்பட்ட பகுதிகளில் உள்ள அந்த மக்களின் அபலக் குரல் என்ன வென்றால், அவர்களுக்கு வெள்ளத்தால் ஏற்பட்ட கஷ்டத்தை விட, அந்தச் சமயத்தில் இரண்டு அரசாங்கங்களும் நல்ல மனதோடு கொடுத்த உதவிகளைச் சரியான முறையில் அதிகாரிகள் கொடுக்கவில்லை என்ற கஷ்டத்தைத் தான் சொன்னார்கள். அவர்களுக்கு இடையிலே இடைத் தரகர்கள், அதிகாரிகள், அதைக் கவர்ந்து செல்கிறார்கள். ஆகையால் உண்மையில் பாதிக்கப்பட்டவர்களுக்கு அதைக் கிடைக்கச் செய்யுங்கள் என்று தான் சொன்னார்கள். அந்த நிலைமை ஏற்படவேண்டும். ஏனென்றால், தமிழ்நாட்டில் இப்போது 'எரிகிற வீட்டில் பிடுங்கினது ஆதாயம்' என்று சொல்வார்களே, அதுபோல் பாதிக்கப்பட்ட மக்களுக்குக் கொடுக்கப்படுவதை, இடையிலே இருக்கின்றவர்கள், இடைத் தரகர்கள், இலாபம் சம்பாதிக்கின்ற முறையில் அடைகிறார்கள். இந்த முறை ஒழிக்கப்பட வேண்டும். அந்தத் தவறுகளை யார் செய்தாலும், அவர்கள் கடுமையாக தண்டிக்கப்பட வேண்டும். அவர்கள் கடுமையாக தண்டிக்கப்படுவார்கள் என்ற அச்ச உணர்வை ஏற்படுத்தினால், வருங்காலத்தில், தமிழ்நாட்டில் இந்தப் பணம் விரயம் ஆகாமல், நிச்சயமாக பாதிக்கப்பட்டவர்களுக்குப் போய்ச் சேரும் என்ற வாய்ப்பு ஏற்படும். 1985-86-ஆம்

ஆண்டிலே இந்தியாவில் மேற்கொள்ளப்படும் வளர்ச்சி நடவடிக்
கைகளுக்கு புதிய ஊக்கம் கொடுப்பதுடன் பல புதிய கொள்கை
களை, புதிய கல்விக் கொள்கை புதிய தொழில் கொள்கை, புதிய
நீண்டகால வரி விதிப்புக் கொள்கை ஆகியவற்றைக் குறிப்பிட்டு
புதிய கண்ணோட்டத்துடன் அணுகுவதில் மத்திய அரசு ஆர்வம்
காட்டி வருகிறது. அதற்கேற்ப, அதைக் கருத்தில் கொண்டு
தமிழகத்தில் தொழில்கள் முதலியன வளம்பெற கூட்டு முயற்சி
யில் ஈடுபடவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

சென்ற சில தினங்களாக இங்கே நடைபெற்ற விவாதத்தில்
தமிழகத்தில் தொழில்கள் சரியாக நடைபெறவில்லை. துவங்கப்
படவில்லை, துவங்கிய தொழில்கள் சரியாக நடத்தப்படவில்லை
என்று பரவலாகப் பேசப்பட்டது. ஆனால் அதற்கு யார்
காரணம் என்று பரஸ்பரம் குற்றச்சாட்டுக்களைக் கூறித்தான்
நேரத்தை நாம் வீணாக்கினோமே தவிர நாம் எப்படி ஆக்க
ரீதியில் செயல்பட வேண்டும் என்பதில் நிச்சயமாகக் கவனம்
செலுத்தவில்லை. இனியாவது தமிழகம் தொழில் வளர்ச்சி
பெறவேண்டுமென்பதிலே நாம் மிக கவனமாக இருக்கவேண்டு
மென்று கேட்டுக் கொள்கிறேன்.

தமிழ்நாட்டில் தொழில் வளர வேண்டுமானால் நிச்சயமாக
முட்டுக்கட்டையாக இருப்பது மின்சாரப் பற்றாக்குறைதான்
என்று தொழிலதிபர்கள் சொல்கிறார்கள், மற்ற விவரங்கள்
தெரிந்தவர்களும் சொல்கிறார்கள். மின்சாரப் பற்றாக்குறை
யைப் போக்குவதற்கு நாம் என்ன செய்யவேண்டும், என்ன
என்ன செய்திருக்கிறோம் என்பதை எல்லாம் நாம் சிந்தித்துப்
பார்க்க வேண்டும். அந்த நிலைமைக்கு நாம் ஆளாக்கப்பட்
டிருக்கிறோம். மின்சாரம் வேண்டும், மின்சாரம் வேண்டு
மென்று சொன்னால் மட்டும் போகாது. இருக்கின்ற அமைப்புக்
களின் மூலமாக அதிகமான மின்சாரத்தைப் பெருக்குவதற்கு
எந்த எந்த வகைகளில் முயற்சி செய்யவேண்டுமோ அதைச்
செய்ய வேண்டும். மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நான்
யோசனை கூறவேண்டிய அவசியம் இல்லை. ஏனென்றால்
அவர்களே எஞ்சினியராக வாழ்க்கையைத் துவங்கியவர்கள்.
இருந்தாலும்கூட மக்கள் பிரதிநிதி என்ற முறையிலே தமிழ
கத்தின் தேவை என்ன என்ன என்பதை எடுத்துச் சொல்ல





நமக்கு உரிமை இருக்கிறது. ஆகவே சொல்கிறேன். மின
வசையைப் பெருக்குவதற்கு கழககரணும் சில குறைகள்
காரணம் என்று சொல்லப்படுகிறது. அது தவறாக இருந்தால்
திருத்திக் கொள்ள வேண்டும். அது உண்மையாக இருந்தால்
மாற்றுவதற்கு முயற்சி எடுத்ததாக வேண்டும்.

மின்சார சர்வே செய்வதற்கு 2 கோடி ரூபாய் ஒதுக்கப்பட
வேண்டியது. இப்போது 1 கோடி ரூபாய்தான் ஒதுக்கீடு
செய்யப்பட்டு இருக்கிறது என்று சொல்லப்படுகிறது. புதிய
சேர்வலாறு திட்டம், 30 மெகாவாட் திட்டத்திற்கு 3.19 கோடி
ரூபாய் மதிப்பீட்டில் இந்த ஆண்டு செய்திருக்க வேண்டும்.
இன்னும் பயனுள்ள வகையில் ஒன்றும் நடைபெறவில்லை என்று
தெரிகிறது. காடம்பாறைத் திட்டம் என்பது ' ,V¢q unsa!
என்று
tind drestigeous scheme '
இந்தியாவில் அதுமாதிரி ஸ்கீம் இல்லையென்று
கருதுகிறேன்.
என்ற
கருதுகிறேன். Pumr .torage scheme
விரிவான விவரங்கள் உண்டு. அந்தத்
திட்டத்தைப் பற்றிய
நிச்சயமாக பீக் ஹவர்ஸிலே
திட்டத்தை நிறைவேற்றினால்
மின்சாரம் அதிகமாகத் தேவைப்படும் மின்சாரத்தை உற்பத்தி
செய்வதற்கு குறைந்த செலவில் உற்பத்தி செய்வதற்கு நவீன
யுக்தி, ஒரு வாய்ப்பு என்று சொல்லப்படுகிறது. அது வெற்றி
கரமாக அமைந்தால் 400 மெகாவாட் உற்பத்தி செய்யக்கூடிய
மின்நிலையமாக அது அமைய முடியும். அதைப்பற்றி
தம்முடைய நிதிநிலை அறிக்கையிலே சொல்லும்போது 7-வது
ஐந்தாண்டுத் திட்டத்தின் மொத்த ஒதுக்கீடு 5,550 கோடியில்
இத்துறைக்கு 2,000 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டு அதிலே 1986-87
இல் 395 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. வரவேற்
கிறோம். ஆனால் இங்கே சொல்லப்பட்டிருக்கிறது. நிறை
வேற்றப்பெறும் திட்டங்கள் சேர்வலாறு திட்டம், காடம்பாறை
நீரேற்று மின்திட்டம், கீழ் மேட்டூர் திட்டம், குந்தா மின் நிலையத்
திட்டம் ஆகியவை 7-வது ஐந்தாண்டுத் திட்டம் இறுதிக்குள்ளாக
தொடங்கப்படும் என்று அறிவித்து இருக்கிறார்கள். ஆனால்
காம்ப்ட்ரோலர் அன்ட் ஆடிட்டர் ஜெனரல் அவர்கள் இவை
ஏற்கெனவே தொடங்கப்பட்டு பல கோடி ரூபாய் செலவிடப்பட்
டிருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். இது முன்னுக்குப்
பின் முரணாக இருக்கிறது . . . .

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: துணைத் தலைவர் அவர்களே, மின் உற்பத்தி தொடங்கப்படும்.

திரு. உ. சுப்பிரமணியன்: துணைத் தலைவர் அவர்களே, அந்த மாதிரி பட்ஜெட்டிலே இல்லை. 7-வது ஐந்தாண்டுத் திட்ட இறுதிக்குள் தொடங்கப்படும் என்று தான் குறிப்பிடப்பட்டிருக் கிறது.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மொழி பெயர்ப்பிலே வேண்டுமானால் தவறாக இருக்கும். திட்டம் ஏற்கெனவே நடைமுறையில் இருந்து வருகிறது. திட்டம் துவங்கப்பட்டு வேலை நடை பெற்று வருகிறது.

திரு. உ. சுப்பிரமணியன்: மகிழ்ச்சி. அதன்மூலம் தமிழ் நாடு மின் பற்றாக்குறையை ஓரளவுக்குப் பூர்த்திசெய்யும் என்று கருதுகிறேன்.

(நண்பகல் 12.00)

அதைப்போல, சிறிய புனல் மின் நிலையங்களைப் பொறுத்த வரையில் மைக்ரோ ஐடல் ஸ்கீம் என்று ஒரு ஸ்கீம் இருக்கிறது. இத்தாலி, ஜப்பான், சுவிட்சர்லாந்து போன்ற வெளிநாடுகளிலே இப்படிச் செயல்படுத்தப்படுகின்றன. என்ஜினியர்களே இன்றி செயல்படும் சிறிய சிறிய திட்டங்கள் இவை. இவைகள் சிறிய அளவிற்கு உள்ள பகுதிகள் பயன் அடையத் தக்க அளவிற்கு இருக்கின்றன. அதற்கும் திட்டமிட்டு இருப்பதாகத் தெரி கிறது. ஆனால் எப்பொழுது அமல் நடத்தப்படும் என்பது தான் தெரியவில்லை. ஆகவே சிலயிடங்களில் என்ஜினியர்கள் இல்லாமல் அன்மேன்ட் ஸ்டேஷன்ஸ் என்று, ஆள் இல்லாமல் இயங்குகின்ற தன்மையிலே உள்ள இந்தத் திட்டங்களையெல்லாம் விரைவில் நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மேட்டூர் தெர்மல் பவர் ஓர்க்ஸ் என்பது, இரண்டரை கோடி ரூபாய் செலவில் செய்யப்படவேண்டியது இன்னும் எடுக்கப்பட வில்லை என்று தெரிகிறது.

வடசென்னையில் எண்ணூருக்கு அப்பால் 210 மெகாவாட் திறன் உள்ள நிலையம் எப்பொழுது எடுக்கப்படும் என்பதும் தெரியவில்லை.



பேசின் பிரிட்ஜ் பவர் ஹவுஸில் கேஸ் டர்பனாகச் செய்ய 47 கோடி ரூபாயில் உத்தேசம் இருக்கிறது. ஆனால் இடை யிலே ஒரு சந்தேகம் கிளப்பப்பட்டது. ஏற்கனவே ஒரு பக்கத் திலே இருந்த மின் நிலையத்தை விற்றதைப்போல இதையும் கன்டெம் செய்து விற்கக்கூடிய ஆபத்தான ஒரு சஜஷன் இருப்ப தாகச் சொல்கிறார்கள். அது எந்த அளவிற்குச் சரியானது என்பது தெரியவில்லை. மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சரவர்கள் அப்படி இல்லை என்று சொன்னால் அதை நான் மகிழ்ச்சியுடன் வரவேற்பேன்.

விவசாயத்தைப் பொறுத்தவரையில் எடுத்துக்கொண்டால், தமிழ்நாட்டில் இப்பொழுதுள்ள நிலவரப்படி நான்கு இலட்சம் மனுக்கள், பம்பு செட்டுகளுக்குக் கனெக்ஷன் வேண்டுமென்று கேட்டு வந்திருக்கின்றன. ஆனால் மின்வாரியத்திலிருந்து பத்து சதவீதம்தான், அதாவது ஆண்டுக்கு 40,000 பம்பு செட்டு களுக்குத்தான் கனெக்ஷன் கொடுப்போம் என்று சொன்னால், தமிழ்நாட்டில் உள்ள மொத்த பம்பு செட்டுகளுக்கும் கொடுப் பதோடு, புதிதாகத் தோண்டப்படும் கிணறுகளுக்கு வைக்கப் படும் பம்பு செட்டுகளுக்கும் எப்பொழுது கனெக்ஷன் கொடுக்கப் படும் என்பதை நினைத்துப் பார்த்தால் ஒரு அச்ச உணர்வே ஏற்படுகிறது.

ஆகவே, எல்லாவற்றிற்கும் தேவையான இந்த மின் திட்டங் களைப் பரிபூரணமாகப் பூர்த்தி செய்து, மிக விரைவில் தமிழ் நாடு தொழில் வளத்தைப் பெருகச் செய்ய வேண்டும், மக்களின் குறைகளைத் தீர்க்க வேண்டுமென்று பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

கல்வியைப் பொறுத்தவரையில் விரிவாகப் பேசப்பட வேண்டிய ஒரு விஷயம். ஆகவே, அதைப்பற்றி மானியத்திலே சொல்லலாம் என்று நினைக்கிறோம். இருந்தாலும்கூட நம்முடைய மொத்த வரவு-செலவுத் திட்டத்தில் கிட்டத்தட்ட நான்கில் ஒரு பங்கு பணத்தைச் செலவிடுகின்றோம். அந்தப் பணம் எந்த அளவிற்குச் செலவிடப்படுகிறது என்பதில் கண்ணுங் கருத்துமாக இருக்க வேண்டும். அந்தப் பணம் விரயம் ஆகாமல் பார்த்துக்கொள்ள வேண்டிய பொறுப்பு அரசுக்கு இருக்கிறது.

[திரு. உ., சுப்பிரமணியன்] [1986 மார்ச் 31

சிவகங்கை மன்னர் கல்லூரியைப் பொறுத்தவரையில் ஆசிரியர்களுக்குத் தரப்பட வேண்டிய சம்பள உயர்வு, பதவி உயர்வு போன்றவைகளுக்கு இன்னும் உத்தரவு பிறப்பிக்கப்படவில்லை. தனியாரால் நடத்தப்பட்ட அந்தக் கல்லூரியை அரசாங்கம் ஏற்று நடத்துவதில் தாமதம் ஏற்பட்டு, அதில் பல்வேறு கட்டங்களாகச் செயல்பட வேண்டியிருந்தாலும்கூட, பல ஆண்டுகளாகத் தாமதம் ஏற்படுவதால் அவர்களிடையே அமைதியற்ற ஒரு சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இராமநாதபுரம் கல்லூரியில் — ஆண்கள்-பெண்கள் கல்லூரியைப் பொறுத்தவரையில் இன்னும் அனுமதி தரப்படவில்லை புளியங்குடிச்சி கல்லூரியைப் பொறுத்தவரையில் வீட்டு வாடகைப்படி இல்லை. இப்படிப்பட்ட சிறுசிறு விஷயங்களில் கூட கல்வி இலாக்கா கவனம் செலுத்தவில்லை. ஆகவே, அந்தத் துறையில் இருப்பவர்களிடையே அதிருப்தி ஏற்படுகிறது.

தமிழ்நாட்டின் போக்குவரத்துக் கழகங்கள் நடப்பு ஆண்டில் பொதுவாக ஆதாயம் தரத்தக்க வகையில் செயற்பட்டு வந்திருக்கின்றன என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆனால் நம்முடைய நிறுவனங்கள் பற்றிய ஆடிட் ரிப்போர்ட்டைப் பார்த்தால் ஆச்சரியமாகவும் இருக்கிறது, சிலசமயங்களில் ஒன்றும் புரியாத நிலையிலேயும் இருக்கிறது. 31-3-1984 முடிய உள்ள ஆடிட் ரிப்போர்ட்டில், 1983-84-ல் 12 பொது நிறுவனங்களில் மட்டும் 12 கோடி ரூபாய் நஷ்டம் என்றும், குறிப்பாக சோழன் ரோட்வேஸ் – கார்ப்பரேஷனைப் பொறுத்தவரையில் 1.3 இலட்சம் செலுத்தப்பட்ட மூலதனம் என்றும் கூறப்பட்டு இருக்கிறது; மொத்தம் 60 இலட்சம் ரூபாய் என்றும் கூறப்பட்டிருக்கிறது. இது மகிழ்ச்சி தரத்தக்க விஷயம்தான். ஆனால் 1983-84-இல் நஷ்டம் 7 இலட்சம் ரூபாய் என்று சொல்லப்படுகிறது. இதற்குச் சொல்லப்படுகின்ற காரணத்தைப் பார்த்தால் விசித்திரமாக இருக்கிறது.

1986 மார்ச் 31] [திரு. உ. சுப்பிரமணியன்]

'Incurred less during 1983-84 mainly due to increase in costs of fuel, wages and salaries, accidents and cases of defalcations and also non-receipt of subsidy from the Government as in previous years.'

என்று சொல்லப்படுகிறது. இதே குறைபாடுகள் எல்லாக் கழகங்களுக்கும்தான் இருக்கின்றன என்பதைச் சிந்தித்துப் பார்க்கின்றபொழுது, இந்தக் கழகம் மட்டும் முதலாவது ஆண்டு 60 இலட்சம் ரூபாய் இலாபம் சம்பாதித்துவிட்டு, மறு ஆண்டில் இவ்வளவு அதிகமான அளவிற்கு நஷ்டம் வருவதற்கான காரணம் என்ன என்பது தெரியவில்லை.

அதைப்போல பல்லவன் டிரான்ஸ்போர்ட் கார்ப்பரேஷனைப் பார்த்தால் 1983-84-இல் செலுத்தப்பட்ட மூலதனம் 12 கோடி ரூபாய்; ஆனால் 1982-83-ஆம் ஆண்டில் ஏற்பட்ட நஷ்டம் 8.15 கோடி ரூபாய்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** விவாதம் நடக் இன்ற பொழுது உறுப்பினர்கள் நின்று கொண்டு இருக்கக் கூடாது. தயவு செய்து உட்காரும்படியாகக் கேட்டுக்கொள் கிறேன்.

**திரு. உ. சுப்பிரமணியன்:** ரூ. 12 கோடி மூலதனத்தில் ஏற்படுத்தப்பட்ட ஸ்தாபனத்திற்கு இதுவரையில் ஏற்பட்ட நஷ்டம் ரூ. 39 கோடி.

அதே போல, சதர்ன் பிரிக் ஒர்க்ஸ் லிமிடெட் என்ற ஸ்தாபனத்தில் மொத்த நஷ்டம் ரூ. 1.52 கோடி. இது செலுத்தப் பட்ட மூலதனத்தைப் போல், 5 மடங்கு. 5 மடங்கு என்றால், 500 சதவீதம். காரணம் என்ன சொல்லப்படுகிறது என்றால், போதிய உற்பத்தி இல்லை, மார்க்கெட்டில் விற்க முடியவில்லை என்று காரணம் சொல்லப்படுகிறது. அதுதான் எனக்கும் விளங்கவில்லை. செங்கல் செய்வதற்கு மூலப்பொருள் பணம் கொடுத்து வாங்க வேண்டிய அவசியம் இல்லை. பூமியிலே இருக்கக்கூடிய மண்தான் மூலப்பொருள். மண்ணை எடுத்துச் செய்கின்ற அந்த ஸ்தாபனம் இலாபகரமாக நடக்கவில்லை.

[திரு. உ. சுப்பிரமணியன்] [1986 மார்ச் 31

யென்றால், எங்கே, எப்படி, கோளாறு இருக்கிறது என்பதை ஆராய்ந்து பார்க்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். ஆகவே, பொது ஸ்தாபனங்கள் நல்லமுறையிலே நடப்பதற்கான முயற்சியில், அரசாங்கப் பணம் விரயம் ஆகாமல் இருப்பதற்கு, ஏதாவது ஒரு வகையில் செய்தால்தான், மக்களுக்குப் பொதுத் துறையின்மீது நம்பிக்கை ஏற்படும் என்று நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். [redacted]

குடிநீர் பொருத்தவரையில், இப்பொழுது பரவலாக, மிக அத்தியாவசியமாக பேசப்படுவது குடிநீர் பற்றாக்குறை. குடிநீர் வாரியம் பல இடங்களிலே குழாய்கள் போடுகிறார்கள். ஆனால், ஏற்கனவே இந்த மன்றத்திலே நாங்கள் சொல்லியிருக்கிறோம், எங்கெங்கு தேவை இருக்கிறதோ, அங்கேயெல்லாம் போடப் படாமல், வருகின்ற அதிகாரிகள், அல்லது லாரி டிரைவர்கள், அவர்கள் இஷ்டத்திற்கு எங்கோ போட்டுவிட்டு போய்விடு கிறார்கள். ஆகவே, மக்களுக்குப் பயன் உள்ள வகையில், அமையவில்லை, ஏராளமான பணம், கோடிக்கணக்கான பணம், மத்திய அரசாங்கமும் மாநில அரசாங்கமும் செலவு செய்தும் மக்களுக்குச் சரியான முறையிலே பலன் கிட்டவில்லையென்பது தான் எங்களுடைய குற்றச்சாட்டு. இப்பொழுதுகூட குறிப் பாக, தென் மாவட்டங்களில்—வட மாவட்டங்களிலும் அப்படித் தான் இருக்க முடியும் -- சென்ற ஆண்டு ஏற்பட்ட வறட்சி நிலைமையின் காரணமாக, விவசாயம் பழுதுபட்டது மட்டு மல்லாமல், இப்பொழுது குடிநீருக்கே கஷ்டமாக இருக்கிற நிலைமையை நாம் பார்க்கிறோம்.

கலெக்டர்களது மாநாட்டில் நம்முடைய மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் ஒரு உத்தரவிட்டதாக நாங்கள் எல்லாம் கேள்விப்பட்டோம். எங்கிருந்து புகார்கள் வந்தாலும் ஒரு வாரத்திற்குள் அந்த பம்ப்பை ரிப்பேர் செய்ய வேண்டுமென்று உத்தரவிட்ட செய்தியைக் கேள்விப்பட்டவுடனே நாங்கள் எல்லாம் அக மகிழ்ந்தோம், நல்ல காரியம் ஒன்று நடைபெற இருக்கிறது என்று. ஆனால், இப்பொழுது தேர்ந்தெடுக்கப் பட்ட பிரதிநிதிகள் வந்தபிறகு, அந்த ஒன்றியங்களில் உள்ள, சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் கேட்டால், 25 சதவீதம் குழாய்



1986 மார்ச் 31] [திரு. உ. சுப்பிரமணியன்]

களில் பல்வேறு காரணங்களுக்காகத் தண்ணீர் வரவில்லை, அடிக் குழாய் ரிப்பேர், மோட்டார் வேலை செய்யவில்லை, டாங்க் ஒழுகுகிறது, பைப் லைன் சீர் செய்ய வேண்டும், என்று இப்படிப் பல்வேறு காரணங்களைச் சொல்கிறார்கள்.

மேலும் அங்கே கேட்டால். அங்குள்ள அதிகாரிகள் சொல்கி றார்கள், எங்களிடம் ரிப்பேர் செய்கின்றவர், யூனியனுக்கு ஒருவர்தான் இருக்கிறார்; அந்த ஒருவர் ஒரு நாளைக்கு இரண்டோ, மூன்றோதான் பழுதுபார்க்க முடியும். ஆகவே, அவரால், நூற்றுக்கணக்கான குழாய்களை எப்படிச் சரி செய்ய முடியும்? ஆகவே, ஸ்பெஷல் ஸ்கீமாக, நீங்களே, அரசாங்கத் திடம் சொல்லி, அனுமதி வாங்கி வாருங்கள் என்று எங்களிடமே அந்தப் பொறுப்பைச் சொல்லக் கூடிய நிலைமை இருக்கிறது. மற்றவையெல்லாம் எப்படியிருந்தாலும் சரி, இந்தத் திட்டத்தை மட்டுமாவது வார் புட்டிங் என்று சொல்கின்றார்கள், யுத்தகால அடிப்படையில், செய்ய முயலவேண்டும். ஏனென்றால், உணவு இல்லாமல்கூட பல நாட்கள் இருந்துவிட முடியும். வேறு அடிப்படை தேவைகள் இல்லையென்றாலும்கூட இருந்து விட முடியும். குடி தண்ணீர் இல்லாமல், மணிக் கணக்காக, நாட் கணக்காக மக்கள் எப்படி இருக்க முடியும்? ஆகவே, நல்ல நோக்கத்தோடு செலவு செய்யப்படுகிற அந்தப் பணம், சமுதாயத் தில் உள்ள உரிய மக்களுக்கு, நிச்சயமாகச் செலவு செய்யப்பட வேண்டும், அந்த வசதி செய்து கொடுக்கப்பட வேண்டுமென்பதில், நிச்சயமாக இந்த அரசு கவனம் செலுத்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொன்று, பென்ஷனைப் பொறுத்தவரையிலே, தியாகிகள், ஐ.என்.ஏ. வீரர்களைப்பற்றி சொல்லாமல் இருக்க முடியாது. ஆண்டுதோறும் நாங்கள் எல்லாம் சொல்கிறோம், மாண்புமிகு அமைச்சர் நாவலரிடம் கூட நேரடியாகச் இருக்கிறோம். மறைந்தவர்கள் போக, இப்பொழுது எஞ்சியுள்ளவர்கள் விரல் விட்டு எண்ணக் கூடியவர்கள்தான் இருக்கிறார்கள். ஆகவே, எந்தவிதமான பிரதிபலனும் பாராமலும், அன்று நாட்டினுடைய விடுதலைக்காக போராடிய ஐ.என்.ஏ. வீரர்களுக்கும், இந்தத் தேசத்தினுடைய விடுதலைக் காகப் போராடிய, வெள்ளை ஏகாதிபத்தியத்தை எதிர்த்து

[திரு. உ. சுப்பிரமணியன்] [1986 மார்ச் 31

போராடிய எஞ்சியிருக்கிற தியாகிகளுக்கும் இப்பொழுது வழங்கியிருக்கிற ஓய்வு ஊதியம் மிகக் குறைவு. ஓரளவிற்கு அண்டை மாநிலமான, கேரளம், மற்றும் மகாராஷ்டிரம், குஜராத் போன்ற மாநிலங்களில் கொடுப்பது போல, குறைந்தபட்சம் ரூ. 300-வது கொடுக்க வேண்டும். நீங்கள் ரூ. 500 கொடுப்பீர்களானால், அவர்கள் சார்பாக, உங்களுக்கு நான் நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆரம்ப கட்டமாக, நிச்சயமாக, நீங்கள் ரூ. 300-வது இந்த பட்ஜெட்டில் வழங்க வேண்டுமென்று மிக்கப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

(பிற்பகல் 12-10)

அடுத்தபடியாக தன்னிறைவுத் திட்டம். இது ஒரு அருமையான திட்டம். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்ட ஒரு அற்புதமான திட்டம், பாராட்டுகிறேன், வரவேற்கிறேன். இந்தத் திட்டம் அவர் நினைத்தபடியே அந்த அளவுக்கு நிறைவேறியிருக்குமானால் தமிழ் நாட்டில் எந்தவிதமான குறைபாடும் இருக்க முடியாது. ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனுக்கும் 50 இலட்சம் ரூபாய் அளித்திருக்கிறார்கள்; சில பெரிய யூனியன்களுக்கு கொஞ்சம் கூடுதலாகவும் ஒதுக்கியிருக்கிறார்கள். ஆனால் கொடுக்கப்பட்ட பணம் எந்த அளவுக்குப் பயன்படுத்தப்பட்டது என்பதைச் சிந்தித்துப் பார்த்தால், கொடுக்கப்பட்ட பணத்தில் கால்வாசி, அரைக்கால்வாசி கூட மக்களுக்குப் போய்ச் சேரவில்லை என்பது தெரியும். அதை யாரும் மறுக்க முடியாது. எல்லோருக்கும் நன்றாகத் தெரியும். இவ்வளவு பெரிய தொகையைக் கொடுத்த பிறகு, அரசாங்கம் திட்டமிட்டு பணத்தைக் கொடுத்த பிறகு எதிர்பார்த்த பலன் ஏற்பட்டிருக்கிறதா என்றால் நிச்சயமாக இல்லை என்று சொல்வேன். பள்ளிக்கூடங்களுக்கு கட்டிடங்கள் இல்லை, குடிநீர் வசதி இல்லை, சாலை வசதி இல்லை என்று சொல்லுகின்ற நிலைமைதான் இருக்கிறது. ஆகவே இந்தப் பணம் எங்கே போயிற்று என்று சிந்தித்துப் பார்க்க வேண்டும். போனது எல்லாம் போயிற்று என்று வைத்துக் கொண்டாலும் வருங்காலத்தில் இந்த மாதிரியான தவறு நடக்காமல் இருக்க மக்களுடைய வரிப் பணம் பாழாகாமல் இருக்க என்ன செய்ய வேண்டும் என்று அரசாங்கம் சிந்திக்க வேண்டும். ஒதுக்குகின்ற பணத்தை ஒழுங்காக, முறைப்படி செலவு செய்தாலே புதிய வரி



1986 மார்ச் 31] [திரு. உ. சுப்பிரமணியன்]

தமிழ் நாட்டில் போட வேண்டிய அவசியம் இருக்காது. ஆகவே, தவறு செய்பவர்கள் யாராக இருந்தாலும் அவர்கள் கண்டிப்பாகத் தண்டிக்கப்பட வேண்டும். கடுமையான நடவடிக்கை எடுத்தால்தான் கோடிக்கணக்கான பணம் வீணாவது தடுக்கப்படும், அதன் காரணமாக கோடிக்கணக்கான மக்கள் பயனடைவார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, முதலமைச்சர் குழந்தைகள் மதிய சத்துணவுத் திட்டம். இதுபற்றி பல்வேறு கட்சியினர் பல்வேறு சந்தர்ப்பங்களில் பல்வேறுபட்ட கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறார்கள். 1986-87 ஆம் ஆண்டுக்கு இந்தத் திட்டத்திற்காக 168.92 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. நல்ல நோக்கத்தோடு கொண்டு வரப்பட்டிருக்கிற ஒரு சேமநலத் திட்டம் இது. ஆனால் நடைமுறையில் பார்க்கும்போது எந்த அளவுக்கு தவறு நடக்கிறது என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். ஆடிட் ரிப்போர்ட்டில் அதுபற்றி தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். காம்ப்ட்ரோலர் அண்ட் ஆடிட்டர் ஜெனரல் ரிப்போர்ட், பக்கம் 35-ல், 1983-84 ஆம் ஆண்டிற்கான ரிப்போர்ட்டில் சொல்லியிருக்கிறார்கள். உதாரணமாக ஒன்றை இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

வடாற்காடு மாவட்டத்தில் ஒரு பஞ்சாயத்து யூனியனில் மொத்தமாக தேவையான பலசரக்குகளை பலசரக்கு கடை மூலமாக வாங்கியிருக்கிறார்கள் 1982 ஆகஸ்ட் மாதம் முதல். அங்கே புளி வாங்கியிருக்கிறார்கள். ஆகஸ்ட் மாதம் ஒரு குழந்தைக்கு 70 கிராம் புளி வாங்கியிருக்கிறார்கள். ஆனால் அடுத்த மாதம், அதாவது செப்டம்பர் மாதம் 435 கிராம் வாங்கியிருக்கிறார்கள். இது என்ன கணக்கு என்று தெரியவில்லை. கிட்டத்தட்ட ஆறு மடங்குக்கும் அதிகமாக வாங்கியிருக்கிறதாகக் கணக்கு இருக்கிறது. புளியாகவே கரைத்துக் குடித்தால்கூட அந்த அளவுக்கு வராது. (குறுக்கீடு) பானகம் தயாரிப்பதற்கு வெல்லம் வேண்டும். அந்த அளவுக்கு பயன்படுத்த முடியாது. அடுத்து, அக்டோபர் மாதத்தில் 232 கிராம் வாங்கியிருக்கிறார்கள். மார்ச் மாதம் 480 கிராம் வாங்கியிருக்கிறார்கள். ஆக, இவ்வளவு வித்தியாசம் வருவதற்கு என்ன காரணம்? சாதாரணமாகப் பயன்படுத்துகின்ற புளியிலேயே இந்த அளவுக்கு வித்தியாசம் இருந்தால் எந்த

[திரு. உ. சுப்பிரமணியன்] [1986 மார்ச் 31

அளவுக்கு இந்தத் திட்டத்திலே தவறு நடந்திருக்கிறது என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும். அரசாங்கம் ஒரு குழந்தைக்கு நிர்ணயித்திருப்பது 90 கிராம். ஆனால் அவர்கள் வாங்கி யிருப்பதாகக் கணக்குக் காட்டியிருப்பது ஒரு மாதம் கூட 90-க்கு பக்கத்திலே வரவில்லை. அப்படி என்றால் இந்தப் பணம் போவது எங்கே என்று பார்க்க வேண்டும்.

அதைப்போன்று விடுமுறை நாட்களில் பொங்கல் போட வேண்டும், வெஜிட்டபிள் புலவு போட வேண்டும் என்று சொல்கிறார்கள். எத்தனை நாள் அதைப் போட்டு வைத்துக் கொள்ள முடியும்? பொங்கல், புலவு எல்லாம் ஊசிப்போகும். அதனால் வீண் விரயம்தான் ஏற்படும்.

அதைப்போன்று சாப்பிடுகிற குழந்தைகளின் கணக்கையும் தவறாக எழுதியிருக்கிறார்கள். 734 பேர்கள் சாப்பிடுகிறார்கள் என்றால் 824 குழந்தைகள் என்று தேவைக்கு அதிகமாகக் கொடுக்கப்பட்டதாக கணக்கு எழுதி வைத்திருக்கிறார்கள். இப்படிப்பட்ட தவறுகளை எல்லாம் தணிக்கையில் சுட்டிக்காட்டி யிருக்கிறார்கள். ஆகவே, இந்தத் திட்டம் ஒரு நல்ல திட்டமாக இருந்தாலும் விரயம் வருகிறது. யாருக்குப் போய்ச் சேர வேண்டுமோ அவர்களுக்குப் போய்ச் சேரவில்லை. இடையிலே எங்கோ சோரம் போகிறது என்பதை நீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டும்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

இந்தத் தவறு 1982-ல் நடைபெற்றது. இப்போது 1986 நடந்து கொண்டிருக்கிறது. இப்படிப்பட்டத் தவறுகள் 1986-லும் தொடர்ந்து நீடிக்குமானால் எப்படிப்பட்ட நல்ல திட்டங்களைக் கொண்டு வந்தாலும் அத்திட்டங்கள் மக்கள் நம்பிக்கையை இழக்கும்; எங்களைப் போன்றவர்களுடைய நம்பிக்கையை இழக்கும். இது தேவையில்லை. அரசாங்கத்தின் பணம் விரயம் தான் ஆகும் என்று சொல்ல வேண்டிய நிலைதான் வரும். ஆகவே இதுவரை நடந்திருந்தால் பரவாயில்லை. இனியாவது கட்டாயமாகத் தவறு எங்கும் நடைபெறக் கூடாது. படிக்கின்ற குழந்தைகள் முன்னேறி நல்ல பிரஜைகளாக வரவேண்டும்; ஆரோக்கியமாக இருக்க வேண்டும் என்ற வகையில் ஒரு அனுதாபத்தின் அடிப்படையில் நல்ல நோக்கத்தின்



1986 மார்ச் 31] [திரு. உ. சுப்பிரமணியன்]

அடிப்படையில் செய்யப்படுகின்ற திட்டமே மாற்றப்படுகிறது என்றால் அதற்கு சம்பந்தப்பட்ட அத்தனை பேரையும் ஒட்டு மொத்தமாக வெளியேற்றிவிட்டு புதிதாகக் கொண்டு வந்தால் கூட தவறு இல்லை என்று தான் நான் சொல்ல விரும்புகிறேன்.

ரூரல் டெவலப்மென்ட் ஸ்கீமிலே 1980 அக்டோபருக்குப் பிறகு டிஸ்ட்ரிக்ட் ரூரல் டெவலப்மென்ட் ஏஜென்சி என்ற அமைப்பை ஏற்படுத்தி, அதன் மூலமாக, நடைபெறுகிற காரியங்களை விமர்சனம் பண்ணுவதற்குரிய ஒரு திட்டம் இருப்பதாகத் தெரிந்தேன். ஆனால் இந்த மாதம் 21 ஆம் தேதிதான் இப்படி ஒன்று இருப்பதாகத் தெரிய வந்தது. காரணம் எங்களுடைய மாவட்டத்தைப் பொறுத்தவரையில் அது அமைக்கப்படவில்லை. அதாவது ஐ.ஆர்.டி.பி., என்.ஆர்.இ.பி., ஆர்.எல்.இ.ஜி.பி. போன்ற திட்டங்களின் மூலமாக எந்தெந்த வகையில் செலவு செய்யப் படுகிறது, எங்கெங்கு செலவு செய்யப்பட்டிருக்கிறது என்பதைப் பரிசீலனை செய்வதற்காக அமைக்கப்பட்ட அந்த அமைப்பு இதுவரையில் எங்கள் மாவட்டத்தில் மட்டும் அமைக்கப்பட வில்லை என்பது மட்டுமல்ல; நம்முடைய மாநிலத்திலேயே எங்கும் அமைக்கப்பட்டதாகத் தெரியவில்லை. அதற்கு என்ன காரணம் என்பது விளங்கவில்லை. உள்ளாட்சித் தேர்தலுக்கு முன்பாக அதாவது ஊராட்சி ஒன்றியத் தலைவர்கள் மற்றவர்கள் எல்லாம் இல்லாத சூழ்நிலையில் அதிகாரிகள் செய்த காரியங்களைப் பரிசீலனை பண்ணுவதற்குரிய வாய்ப்பு இல்லாமல் போய்விட்டது. நாங்கள் எல்லாம் அன்றைக்கே கேட்டோம். அன்று எங்களுக்குக் கொடுக்கப்பட்ட அஜண்டாவிலிருந்து கேள்வி கேட்கும்போது அதிகாரிகள் பல விவரங்களைச் சொல்ல முதலில் தயங்கினார்கள். சில சமயங்களில் மறுத்தார்கள். கடைசியில் நாங்கள் சொன்ன குற்றச்சாட்டை ஏற்றுக் கொண்டார்கள்.

செம்மறி ஆடு வழங்கப்பட்டது 3000-க்கு மேல் என்று சொல்கிறார்கள். வழங்கப்பட்டவர்களில் 100 பேர் ஆதி திராவிடர்கள், 50 பேர் பெண்கள் என்று சொல்கிறார்கள். அவர்கள் யார், யார் என்று நாங்கள் கேட்டால் அந்த விவரம் இல்லை என்று சொல்கிறார்கள். ஒன்றியத்தில்தான் அந்த விவரத்தைக் கேட்க வேண்டும் என்று சொல்கிறார்கள். இப்படி பொறுப்பைத் தட்டிக் கழிப்பது என்பது சர்வசாதாரணமான

[திரு. உ. சுப்பிரமணியன்] [1986 மார்ச் 31

ன்றாக இருக்கிறது. அதன் காரணத்தால் கோடிக்கணக்கால ரூபாய் வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ள மக்களுக்குச் சென்று சேர வேண்டியது, சேராத சூழ்நிலை இருக்கிறது. எந்த அடிப்படையில் நாம் திட்டங்களைப் போடுகிறோமோ அந்தப் பயன் கிடைக்காத சூழ்நிலைதான் இன்றைக்கு இருந்து கொண்டிருக்கிறது. எனவே தமிழ்நாடு முழுவதும் அந்த அமைப்பு அமைக்கப்பட்டிருந்தால் எத்தனை கூட்டங்கள் இதுவரையில் நடந்திருக்கின்றன என்ற விவரத்தைத் தெரிவிக்க வேண்டும். இல்லை என்றால் இனிமேலாவது எல்லா மாவட்டங்களிலும் அது நடைபெறக்கூடிய வகையில் உரிய முயற்சிகளை அரசாங்கம் செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

7-வது ஐந்தாண்டுத் திட்டத்தைப் பற்றி நாம் பேசும்போது மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் டெல்லியிலே வாதாடிப் பெற்றதைப் பற்றிச் சொன்னார்கள். இதைப் பொறுத்தவரையில் நாங்கள் ஒரு துரும்பாக இருந்து உதவிய ஒன்றையும் இங்கே நான் சொல்ல விரும்புகிறேன். காங்கிரஸ் நூற்றாண்டு விழாக் கொண்டாட்டத்திற்காக நாங்கள் எல்லாம் டெல்லி சென்றிருந்தோம். அந்தச் சமயத்தில் அங்கே நாவலர் அவர்களும், சீஃப் செக்கரட்டரி அவர்களும், ஏனைய நிதித் துறை அதிகாரிகள் எல்லாம் வந்து ஐந்தாண்டுத் திட்டத்தைப் பற்றிப் பரிசீலனை செய்து மத்திய அரசுடன் பேசியதில் அவர்கள் 4 ஆயிரம் கோடி ரூபாய்தான் உங்களுக்குக் கொடுப்போம் என்று இறுதியாகச் சொல்லிவிட்ட நிலைமையில் சற்று மனக் கசப்போடு, விரக்தியோடு சென்னைக்கு வந்து விட்டார்கள் என்ற செய்தி கிடைத்தது. அதன் பின்னர் டெல்லியிலே இருந்த தமிழ் நாட்டைச் சேர்ந்த, காங்கிரஸ் கட்சியின் சட்ட மன்ற உறுப்பினர்களும், பாராளுமன்ற உறுப்பினர்களும் ஒரு கூட்டத்தை எங்கள் கட்சியின் தலைவர் திரு. பழனியாண்டி அவர்கள் தலைமையில் கூட்டினோம். அக்கூட்டத்தின்போது இதுபற்றிய கருத்தினை நாங்கள் பிரதம அமைச்சர் அவர்களிடத்திலும், மற்றவர்களிடத்திலும் எடுத்துச் சொல்ல வேண்டும் என்று முடிவெடுத்து, ஒரு மகஜரையும் தயாரித்து அவர்களைச் சந்தித்து நாங்கள் சொன்னோம். தமிழ் நாட்டிற்கு 7-வது ஐந்தாண்டுத்



1986-மார்ச் 31] [திரு. உ. சுப்பிரமணியன்]

திட்டத்திற்காக நீங்கள் ஒதுக்கியுள்ள தொகை மிகவும் குறைவு என்று நாங்களும் கோருகிறோம்; எனவே நீங்கள் அந்தத் தொகையை அதிகப்படுத்த வேண்டுமென்று சொன்னோம்.

அது மட்டுமல்ல. நமது அருமை நண்பர் பேராசிரியர் அவர்கள் சொன்னார்களே, அந்த சேலம், கரூர் வழியாக தூத்துக்குடி செல்ல இருக்கிற அகல இரயில் பாதை வேலையை உடனடியாக நீங்கள் துவங்கி அதற்கான பணத்தையும், ஒதுக்க வேண்டுமென்று நாங்கள் எழுத்தின் மூலமாகச் சொல்லி யிருக்கிறோம்.

(பிற்பகல் 12-20)

அதுமட்டும் அல்ல சேலம் உருக்காலைக்கும் அதிகமான பணத்தை ஒதுக்க வேண்டும்; அதன் மூலம் அந்தப் பணிகள் விரைவாக நிறைவேற வேண்டும் என்று சொன்னதோடு, சேது சமுத்திரத் திட்டத்தையும் நிச்சயமாக நிறைவேற்ற வேண்டும் என்றும் அதன் மூலமாக இந்தியாவின் கடலோர பாதுகாப்பு நல்ல முறையில் வளர முடியும் என்றும் கேட்டுக் கொண்டோம். அதேபோல தமிழ் நாட்டில் தூத்துக்குடி துறைமுகம் சம்பந்தமாக அவர்கள் கேட்டதைச் செய்து கொடுக்க வேண்டும் என்றும் அதன் மூலம் சிறிய மற்றும் பெரிய துறைமுகங்கள் வளர்ச்சியடையவும், தமிழகத்தின் வளம் பெருகவும் வாய்ப்பு ஏற்படும், அதற்கு உதவ வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டோம்.

பேராசிரியர் அவர்கள் சொன்னதைப் போல, இலங்கையைப் பொறுத்தவரையில் அன்றாடம் வருகின்ற பல இன்னல்களை தவிர்ப்பதற்கு, நம்முடைய ஆளுகைக்கு உட்பட்ட நிலையில் உள்ள ஒரு இடத்தில் சேது சமுத்திரத் திட்டம் கொண்டு வருவீர்களேயானால், கோஸ்டல் கார்டு என்ற வகையில், கரையோரப் பாதுகாப்பு செய்வதாக அது அமையும் என்றும் எடுத்துச் சொல்லியிருக்கிறோம். இதை எல்லாம் ஏன் சொல்லு கிறேன் என்றால், நாங்கள் தமிழகத்தின் உயர்விற்கு, எந்தக் கட்சிக்காரர்கள் சொன்னார்கள் என்று பார்க்காமல் ஆளும் கட்சிக்காரர்களாக இருந்தாலும் சரி, எதிர் வரிசையிலே உள்ளவர்கள் சொன்னதாக இருந்தாலும் சரி, நீங்கள் தமிழகத்திற்காக செய்கிற அனைத்து நல்லக் காரியங்களிலும்

நாங்கள் உங்களோடு இணைந்து நின்று செயல்படுவோம், என்பதற்காகச் சொல்லுகிறேன், ஏற்கெனவே செயல்பட்டிருக்கிறோம் என்பதையும் இந்த சமயத்தில் உங்கள் மூலமாக ஞாபகப்படுத்த விரும்புகிறேன்.

மேலும் 1987 ஜனவரி மாதம் முதல் தேதியிலிருந்து பூரண மதுவிலக்கு தமிழ் நாட்டில் வரும் என்று சொல்லியிருக்கிறீர்கள். ஆனால் அதிலும் ஒரு சின்ன ஐயப்பாடு கூட தோன்றுகிறது. ஐயப்பாடு ஏன் வருகிறது என்றால், 78 கோடிக்கு மேல் இந்த மதுவிலக்கினால் ஏற்படும் இழப்பில் 50 சதவீத இழப்பை மத்திய அரசு ஈடு செய்ய வேண்டும் என்று கேட்பதாகத் தெரிகிறது. அது அப்படி ஒருக்கால் சாத்தியம் இல்லை என்றால், அதன் காரணமாக மதுவிலக்கை தளர்த்தி விட்டுவிடுவீர்களோ என்ற அச்சம் ஏற்படுகிறது. ஆகவே எந்தக் காரணத்தைக் கொண்டும் அதைக் கைவிட வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன். எந்த வகையிலாவது நாம் அந்த இழப்பை சரிகட்ட முடியும். அரசு நிர்வாகத்தில் ஏற்படுகின்ற தவறுகளைக் களைந்தாலே அல்லது ஊழல்களின் மூலமாக ஏற்படுகின்ற பொருள் விரயத்தை தவிர்த்தாலே இந்த இழப்பை ஈடுகட்ட முடியும் என்பதை நான் ஒரு சின்ன யோசனையாகக் கூடச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். ஆகவே அந்த நல்ல எண்ணத்தை தயவுசெய்து எக்காரணத்தைக் கொண்டு இழக்க வேண்டாம்.

ஒரு தலைமுறை மறந்து இருந்த தீமையை எப்படியோ தமிழ் நாட்டில் நுழைத்து விட்டதற்கு யார் யார் காரணம் என்று பேசிக் கொண்டிருப்பதை விட, மீண்டும் அந்த தீமையை அடியோடு ஒழிப்பதற்கு நடவடிக்கை எடுத்தீர்களேயானால், அத்துணை பேரும் ஒத்துழைப்பதற்கு தயாராக இருக்கிறார்கள் என்பதை அனைத்துக் கட்சி உறுப்பினர்களும் இங்கே பேசியவைகளிலிருந்து தெளிவாகிறது. ஆகவே அதை நீங்கள் கண்டிப்பாக அமல் செய்ய வேண்டும். அந்தப் பெருமையை நீங்கள் அடைய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து சமீபத்தில் நடைபெற்ற ஆசிரியர் போராட்டம். அதைப் பற்றி விரிவாக நான் ஒன்றும் சொல்ல விரும்பவில்லை. ஒன்றே ஒன்றைத்தான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். 500 கோடிக்கு மேல் அதிகமாக செலவு ஏற்படுகிற அந்தத் துறை





சம்பந்தப்பட்ட ஆசிரியர்களின் கோரிக்கைகள் நியாயமாகவும் இருக்கலாம், நியாயமற்றவையாகவும் இருக்கலாம். ஆனால் ஜனநாயக மரபுப்படி யார் எந்தக் கோரிக்கையைச் சொன்னாலும் கேட்க வேண்டும் என்பதுதான் என்னுடைய கருத்து. அந்தக் காலத்தில் கூட, தஞ்சை மாவட்டத்தில், திருவாரூரிலே ஆராய்ச்சி மணி கட்டப்பட்டு, ஒரு பசு வந்து தன்னுடைய கன்றிற்கு ஏற்பட்ட நிலை குறித்து முறையிட்டதாக கதையோ, புராணமோ, சரித்திரமோ, ஏதோ அப்படிப்பட்ட சம்பவம் ஒன்று எல்லோருக்கும் தெரியும். அதுபோல குறைகளைச் சொல்லும்போது கேட்பதற்கு நீங்கள் தயாராக இருக்க வேண்டும். சொல்லப்படுகிற குறைகளை முழுமையாக தீர்க்க முடியும் அல்லது முடியாது என்பது அல்ல. ஆங்கிலத்திலே சொல்வார்களே "give every man thy ears but few thy voice" அப்படி யார் எதைச் சொன்னாலும் நீங்கள் காது கொடுத்துக் கேளுங்கள் என்றுதான் கேட்டுக் கொள்கிறேன்.

அந்த வகையிலே இந்த ஆசிரியர் பிரச்னையிலே ஆரம்பத்திலேயே நீங்கள் கேட்டிருந்தீர்களேயானால், அது உச்ச கட்டத்திற்கு வந்திருக்க முடியாது. ஆயிரக்கணக்கான ஆசிரியர்கள் மனக் கஷ்டத்தோடு ஜெயிலிலே இருந்திருக்க முடியாது. அதனுடைய பின் விளைவுகளைக் கூட நாம் இப்போது அனுபவித்துக் கொண்டிருக்கிறோம் என்று நான் கருதுகிறேன். அதற்கு நீங்கள் உடன்படுகிறீர்களோ என்னவோ எனக்குத் தெரியாது. இருந்தாலும் அது சம்பந்தப்பட்ட ஒன் மேன் கமிஷன் ஒன்று திரு. கார்த்திகேயன் அவர்கள் தலைமையிலே நியமித்துள்ளார்கள். அவருடைய பரிந்துரைகளை விரைவிலே பெற்று, அந்த ஆசிரியர்களுடைய குறைகளைத் தீர்ப்பதற்கு முயற்சிகளை நீங்கள் விரைவாக எடுத்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இந்தச் சந்தர்ப்பத்தில் பேராசிரியர் அவர்கள் சொன்னதைப் போல நானும் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். அந்தச் சமயத்தில் அந்த ஆசிரியர் போராட்டத்தில் ஈடுபட்ட பலருக்கு ஆதரவாக ஆயிரக்கணக்கான செக்ரட்டேரியட் நூற்றுக்கணக்கான அலுவலர்கள் சம்பந்தமாக, பலரை கைது செய்து விடுதலை செய்துள்ளீர்கள். பலர் மீது குற்றச்சாட்டுகளை நீக்கியும் உள்ளீர்கள். ஆனால் இவர், குறிப்பிட்ட 40 பேர்கள் மட்டும்

[திரு. உ. சுப்பிரமணியன்] [1986 மார்ச் 31

என்று நினைக்கிறேன், அந்த 40 போகளை மட்டும் இன்னும் பணி நீக்கத்திலிருந்து விலக்களிக்காததால், அவர்கள் வேலையில்லாமல் கஷ்டப்படுகிற நிலைமை பரிதாபமாக இருக்கிறது. இதுவரையில் அவர்கள் அனுபவித்தது போதும். அவர்கள் பொருளாலும் மனத்தாலும் பல்வேறு சிரமங்களுக்கு ஆளாகி இருக்கிறார்கள். ஆகவே அந்த 40 போகளை தண்டிப்பதன் மூலமாக இந்த நாட்டிலே உள்ள அத்தனை அரசு ஊழியர்களுடைய அதிருப்தியும் தான் வளருமே தவிர வேறல்ல. ஆகவே இத்தனை லட்சம் ஊழியர்களுடைய நன்மதிப்பைப் பெறுவதற்கு இந்த ஊழியர்கள் மீது உள்ள நடவடிக்கையை ரத்து செய்து, அவர்களின் சங்கத்திற்கு அங்கீகாரம் வழங்குவதற்கு அரசு முன்வர வேண்டும்.

விற்பனை வரியைப் பொறுத்தவரையில் சிறிய அளவிலே 10 வகைப் பொருள்களுக்கு அறவே விற்பனை வரியை ரத்து செய்திருக்கிறீர்கள். சிறிய அளவிலே இருந்தாலும் கூட நான் அதனை வரவேற்கிறேன். அதே நேரத்தில் பல பொருள்களுக்கு பலமுனை வரியை ரத்து செய்து ஒருமுனை வரியாக மாற்றியிருக்கிறீர்கள். அப்படி செய்யும்போது வரியினுடைய விகிதத்தை கூட்டியிருக்கிறீர்கள். அது எந்த அளவிற்குச் சரியென்று நான் சொல்ல முடியாது. காரணம் பாதிக்கப்பட்ட வியாபாரிகள் தங்களுக்கு நிவாரணம் வேண்டுமென்று கேட்கும்போது அவர்களுக்கு நீங்கள் சலுகையாகச் செய்திருக்க வேண்டும். மேலும் வெல்லத்தைப் பொறுத்தவரையில் மாண்புமிகு உறுப்பினர் சித்தன் அவர்கள் கூறினார்கள். பலமுனை வரி ரத்து செய்யப்பட்டதே தவிர வேறு வகையில் கொள்முதல் வரியென்று புதுப் பெயரில் ஒரு வரி கொண்டு வரப்பட்டிருக்கிறது. கேரளாவிலிருந்து வருகிறவர்கள் வாங்கும்போது அதிகமான அளவிற்கு வரி செலுத்துகிற வகையில் மற்ற மாநிலங்களோடு போட்டியிட்டு விற்க முடியாத நிலையில் வியாபாரிகள் கஷ்டப்படுகிற சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. இதனை மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் ஆராய்ந்து பார்த்து அதற்கான நிவாரணத்தை வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து தாவர எண்ணெய்க்கு நீங்கள் ஒருமுனை வரி விதித்து இருப்பது சரி. ஆனால் பிண்ணாக்கிற்கு அந்த விலக்கை நீட்டிக்கவில்லை. தாவர எண்ணெய் சம்பந்தப்பட்ட



1986 மார்ச் 31] [திரு. உ. சுப்பிரமணியன்]

பொருள் தான் பிண்ணாக்கு. ஆகவே அதற்கும் விதிவிலக்கு அளித்தால் அந்த வியாபாரமும் பாதிக்கப்படாமல் இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து தமிழ் நாட்டில் நீதி நிர்வாகத்தைப் பற்றி அந்தத் துறை மானியம் வருகிறபோது விரிவாக பேசலாம் என்றாலும் இந்தச் சந்தர்ப்பத்தில ஒன்றை மட்டும் சொல்ல விரும்புகிறேன். தமிழ் நாட்டின் சரித்திரத்தில் மட்டுமல்ல, அகில இந்தியாவின் சரித்திரத்தில் கூட இல்லாத அளவில், பார் கவுன்சில் கூடி ஒரு தீர்மானத்தைப் போட்டது. தமிழ்நாடு பார் கவுன்சிலில்தான் முதல் தடவையாக நடந்தது என்று சொல்லப்படுகிறது. 1—3—1986 அன்று காலியாக உள்ள நீதிபதி ஸ்தானங்களுக்கு நீதிபதிகளை பூர்த்தி செய்ய வேண்டும். அவ்வாறு செய்யாமல் இருப்பதால் மிகவும் பாதிப்பு ஏற்பட்டிருக்கிறது. அப்படி விரைவிலே அரசு பணியிடங்களைப் பூர்த்தி செய்யாவிட்டால் 24—3—1986-லிருந்து தமிழ் நாட்டிலுள்ள, பாண்டிச்சேரியிலுள்ள அத்தனை வழக்கறிஞர்களும் போராட்டத்தில் ஈடுபடப் போவதாக கூறப்பட்டிருக்கிறது. இதைச் சாதாரணமாக அரசு கருதக் கூடாது. வாழ்க்கையில் மேல்தட்டில் இருப்பவர்களாக அவர்களைக் கருதக் கூடாது. இன்னொன்று 1965-லிருந்து மாஜிஸ்ட்ரேட்டுகளாக புதிய ரெக்ரூட்மெண்ட் இதுவரையில் செய்யப்படவில்லை. அதைப்போல 1975 ஆம் ஆண்டிலிருந்து டிஸ்ட்ரிக்ட் முன்சீப் பதவிகளுக்கு செய்யப்படும் ரெக்ரூட்மெண்ட் செய்யப்படவில்லை. இந்த நிலைமை நீடிக்குமேயானால் புதியதாக வருபவர்களுக்கு வாய்ப்பு ஏது?

மாலை நேர வகுப்பில் சட்டம் பயின்று சர்க்கார் துறைகளில் வேலை பார்க்கின்றவர்களுக்கு நேரிடையாக பதவி உயர்வு கொடுத்து நியமனம் கொடுக்கப்படுவதை அவர்கள் ஆட்சேபிக்கிறார்கள். ஆகவே முறையாக சட்டம் பயின்று வருகிறவர்களுக்கு இந்த வாய்ப்பு மறுக்கப்படுகிறது என்றும் சொல்கிறார்கள். ஆகவே இந்த முறையை கடைபிடிக்கக் கூடாது என்று கோரிக்கையை அவர்கள் வைத்திருக்கிறார்கள். இதையும் பரிசீலனை செய்து விரைவில் ஒரு முடிவெடுத்து தமிழ் நாட்டில் மேலும் படித்த மேல்தட்டிலே உள்ள வகுப்பினர் புதிய விவகாரத்தை உருவாக்குவதற்கு வழி செய்யாமல் விரைவில் முடிவு எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதைப்போல இன்றைக்கு பல விஷயங்களை மாண்புமிகு பேராசிரியர் அவர்கள் எனக்கு முன்னாலே பேசியதால் பேசி விட்டார்கள். கூறியதைக் கூறல் குற்றமென்று இலக்கணத்தில் இருந்தாலும் கூட இன்னும் அதனை வலியுறுத்திச் சொல்வதில் எனக்கும் பங்கிருக்கிறது என்ற முறையில் அதனை மீண்டும் சொல்வது தவறில்லையென்று கருதுகிறேன். கோவையிலிருந்து தொழிலாளர்கள் தலைவர்கள் அவர்களுடைய பிரச்னையை முன்வைத்து சென்னைக்கு பாத யாத்திரையாக வந்துள்ளார்கள். இருக்கும் பிரச்னையை சற்று சிந்தித்துப் பாருங்கள். தொழிலாளர்கள் பிரச்னைகளை வைக்கிறார்கள் என்றால் உடனே நீங்கள் அதனை ஒரு அலர்ஜியாக கருதக்கூடாது என்று பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

(பிற்பகல் 12-30)

கோவையிலே ஜனார்த்தனா மில்ஸ் என்பது 7—8—1983-லேயிருந்து மூடப்பட்டு இருக்கிறது. அங்கே தொள்ளாயிரம் தொழிலாளர்கள். வசந்தா மில்ஸ் 11—11—1984-ல் மூடப்பட்டு இருக்கிறது. அதிலே 1,400 தொழிலாளர்கள் இருக்கிறார்கள். 900 தொழிலாளர்களைக் கொண்ட ஹரி மில்ஸ் 8—4—1984-ல் இருந்து மூடப்பட்டு இருக்கிறது. 300 தொழிலாளர்களைக் கொண்ட தமிழ்நாடு ஸ்பின்னிங், திருப்பூரில் உள்ள மில் 1979-லேயிருந்து மூடப்பட்டு இருக்கிறது, 7 ஆண்டுகள் மூடப்பட்டு இருக்கிறது. 200 தொழிலாளர்களைக் கொண்ட பத்மா மில்ஸ், காளப்பட்டி, 1978-லேயிருந்து மூடப்பட்டு இருக்கிறது. 2500 தொழிலாளர்களைக் கொண்ட, மேட்டூர் டெக்ஸ்டைல்ஸ், மேட்டூர் அணையிலே உள்ளது, 16—7—1985-லேயிருந்து மூடப்பட்டு உள்ளது. அதேபோன்று 300 தொழிலாளர்களைக் கொண்ட, அலெக்சாண்டர் திரட் கம்பெனி 1984-லேயிருந்தும், 400 தொழிலாளர்களைக் கொண்ட ராமகிருஷ்ணா இண்டஸ்ட்ரிஸ் 1—8—1983 அன்று முதல் மூடப்பட்டு இருக்கின்றன. இப்படி பத்துக்கும் மேற்பட்ட ஆலைகள் மூடப்பட்டதன் காரணமாக சுமார் 8 ஆயிரம் தொழிலாளர்கள், அவர்களுடைய குடும்பங்கள் இன்றைக்கு கஷ்டப்பட்டுக் கொண்டு இருக்கிற நிலைமையில், நாம் கையைக் கட்டிக் கொண்டு பார்த்துக் கொண்டிருக்க முடியாது. இதனுடைய காரணத்தை எடுத்துச் சொல்வதற்காக நம்முடைய மாண்புமிகு உறுப்பினர்கள், இந்த [illegible] உறுப்பினர்





களாகவும், அதேநேரத்தில் தொழிலாளர் தலைவர்களாகவும் உள்ள, திருவாளர்கள் ரமணி, செங்காளியப்பன் போன்றவர்கள் எல்லாம், கோட்டையை நோக்கி ஊர்வலம் வர தேனாம்பேட்டை காங்கிரஸ் மைதானத்திலேயிருந்து புறப்படுவதற்கு எல்லா ஏற்பாடுகளையும் செய்திருந்தார்கள். ஜனநாயகத்திலே யாருக்கும் தங்களுடைய குறைகளை எடுத்துச் சொல்வதற்கு, அமைச்சர்களை பார்ப்பதற்கு அவர்களிடம் எடுத்து சொல்வதற்கு உரிமை உண்டு. ஆனால் என்ன காரணமோ தெரியவில்லை, சட்டமன்ற உறுப்பினர்களாக இருக்கிற காரணத்தினாலே ஏதும் பண்ணுவார்களோ அல்லது பயங்கரமான ஆயுதங்களைக் கொண்டு வருவார்களோ என்று பயந்தோ என்னவோ தெரியவில்லை, அந்த கமிஷனர் ஊர்வலம் புறப்படக்கூடாது என்று அடித்தளத்திலே அவர்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டு உடனடியாக அவர்களும் கைது செய்யப்பட்டு இருக்கிறார்கள் என்று செய்தி வருகிறது. ஆகவே தொடர்ந்து இந்த 10 மில்கள் மட்டுமல்ல, இதனுடைய விளைவு காட்டுத் தீ போல் பரவுவதற்கு வாய்ப்பு இருக்கிறது. எந்தத் தொழிலாளர்களாக இருந்தாலும், வேறு எந்தத் தொழிலில் ஈடுபட்டவர்களாக இருந்தாலும், நாம் பயப்படவேண்டிய அவசியம் இல்லை. ஏன் என்றால், இவ்வளவு ஆர்கனைஸ்டாக இருக்கின்ற ஒரு தொழிற்சங்கம் வேறு எந்தத் தொழில் துறையிலும் கிடையாது.

திரு. மா. சின்னராசு: பேரவைத் தலைவர் அவர்களே, நேரடியாகவே நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் என்.டி.சி. நிர்வாகம் இந்த ஆலைகளை எல்லாம் எடுத்துக் கொள்ளலாம் என்று மைய அரசுக்கு சிபாரிசு செய்துவிட்டால், இப்படிப்பட்ட சிரமங்கள் குறையும் என்று கருதுகிறேன். ஆனால் அதை ஏற்றுக்கொள்வதற்கு இல்லை என்று அவர்கள் சொன்னதாக தொழிலாளர் சங்கத் தலைவர்கள் சொல்லியிருக்கிறார்கள். இதைப்பற்றி எதிர்க்கட்சித் தலைவர் அவர்களிடமிருந்து விளக்கம் தெரிந்தால் நலமாக இருக்கும்.

திரு. உ. சுப்பிரமணியன்: பேரவைத் தலைவர் அவர்களே, இதை என்.டி.சி. எடுத்துக் கொள்கிறதா அல்லது வேறு யார் எடுத்துக்கொள்கிறார்கள் என்பது பிரச்னை அல்ல. 8 ஆயிரம் தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள். அவர்களுடைய குடும்பங்கள் பட்டினி கிடக்கின்றன என்பதுதான் பிரச்னை. இதை வலியுறுத்திச் சொல்வதற்கு, [illegible]

அரசுக்கு சொல்ல வேண்டும் என்றால் கூட நாங்கள் வருகிறோம், நல்ல, நியாயமான காரியத்தைப் பற்றி எடுத்துச் சொல்வதில் நாங்கள் பின்வாங்க மாட்டோம், தயங்கமாட்டோம், தயங்கியது இல்லை என்பதை இந்த நோக்திலே நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

ஆகவே இதன் விளைவு காட்டுத் தீ போல பரவுவதற்கு வாய்ப்பு இருக்கிறது, இதனால் ஒரு அபாயகரமான நிலைமை உருவாகும் என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். எனவே அரசாங்கம் ஏதாவது முயற்சி செய்து இதை ஒரு முடிவுக்குக் கொண்டுவரவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். இல்லை என்றால், இதைத் தொடர்ந்து கோயம்புத்தூர், பெரியார், சேலம் மாவட்டங்களில் உள்ள அத்தனை ஆலைகளிலும், 1-4-1986-லிருந்து 'இன்டெபனட் ஸ்ட்ரைக்' ஆரம்பிப்பதற்கான முயற்சியில் அவர்கள் இருக்கிறார்கள். ஆகவே இப்படிப்பட்ட விபரீதமான நிலைமைகள் ஏற்படாமல் அதைத் தடுக்கின்ற பொறுப்பு அரசாங்கத்திற்கு இருக்கிறது. லா-அண்ட் ஆர்டர் பிராப்ளம் இருக்கிறது. மேலும் இந்த நாட்டு மக்களிலே ஒரு பகுதியாக இருக்கிற தொழிலாளர்களுக்கு நன்மை செய்ய வேண்டும் என்று கருதுகின்ற இந்த அரசு, இதில் தலையிட்டு, அவர்களுக்கு நிவாரணம் செய்ய வேண்டும், அதற்கு முயற்சி செய்யவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

பட்ஜெட்டிலே நாம் நினைப்பதை எல்லாம் சொல்லிவிடுவது என்பது முடியாது. ஆகவேதான் மானியக் கோரிக்கைகளின் போது விரிவாகச் சொல்ல முடியும். எனவே இந்தச் சந்தர்ப்பத்தில் நான் ஒன்றை மட்டும் நாவலர் அவர்களுக்கு ஞாபகப் படுத்த விரும்புகிறேன். ஏன் என்றால், நான் சொல்லி, அவர்கள் குறள் தெரிந்துகொள்ள வேண்டிய அவசியம் இல்லை. அவர்கள் எப்படி குறளோடு ஆரம்பித்தார்களோ, அதைப்போல் நானும் அவர்களுக்கு ஒரு குறளை ஞாபகப்படுத்த விரும்புகிறேன். இங்கே எதிர்க்கட்சியிலே இருப்பவர்கள் சில சமயங்களிலே அதே போல் ஆளும் கட்சியிலே இருப்பவர்களுக்கு பல உதாரணங்களை நல்ல வகையில் எடுத்துக்காட்டுகின்ற வகையில் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே அவைகள் அத்தனையும் ஏதோ உடனடியாக ஆளும் கட்சியை கவிழ்ப்பதற்கோ அல்லது அதற்கு எதிர்ப்பு காண்பிப்பதற்கோ அல்லது அவர்கள் மீது ஒரு

அதிருப்தி மக்கள் மத்தியிலே ஏற்படுவதற்காக சொல்லப்பட்ட கருத்து அல்ல என்பதை நீங்கள் நிச்சயமாக உணர்வீர்கள் அதற்காகத்தான் நான் சொல்கிறேன். 'இடிப்பாரை இல்லாத ஏமரா மன்னன் கெடுப்பார் இலானும் கெடும்' என்ற வகையில், நாங்கள் உங்களுக்கு எடுத்துச்சொல்வது, நீங்கள் ஏதாவது தவறு செய்திருந்தாலும், அது களையப்படவேண்டும் என்ற நல்ல நோக்கத்தோடு சொல்வதாக நீங்கள் எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கூறி, எனக்கு பேச வாய்ப்பு அளித்த தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி முடிக்கிறேன். வணக்கம்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1985-86 ஆம் ஆண்டிற்குரிய திருத்த மதிப்பீடுகளைப் பொறுத்தும், 1986-87-ம் ஆண்டுக்குரிய வரவு-செலவு மதிப்பீடுகளைப் பொறுத்தும் 8 நாட்களாக நடைபெற்று வருகின்ற பொது விவாதத்தில் அவையின் எல்லாத் தரப்பினரும் எல்லாக் கட்சி உறுப்பினர்களும் தங்களுடைய கொள்கை, கோட்பாடுகளுக்கு ஏற்பவும், தங்கள் தங்கள் இயல்புகளுக்கு ஏற்பவும் தங்கள் தங்கள் போக்குகளுக்கு ஏற்பவும் கருத்துக்களை வழங்கி இருக்கின்றார்கள். மாண்புமிகு எதிர்க் கட்சி தலைவரையும் சேர்த்து 72 பேர் பொது விவாதத்தில் கலந்து கொண்டு இருக்கிறார்கள் என்பது உள்ளபடியே மகிழ்ச்சிக்குரிய ஒன்றுதான். தமிழகத்தினுடைய மேம்பாடு கருதியும், தமிழர்களுடைய வாழ்வு மலரவேண்டுமென்று கருதியும் அதற்கான வகைகளிலும், நிதி நிலை அறிக்கையில் கூறியுள்ள பல்வேறு கருத்துக்கள், கொள்கைகள், கோட்பாடுகள், திட்டங்கள், செயல்முறைகள் ஆகியவற்றில் சிலவற்றையோ அல்லது பலவற்றையோ ஆதரித்து தங்களுடைய ஒத்துழைப்பைத் தருகின்ற அளவுக்கு உரை ஆற்றிய உறுப்பினர்கள் அத்தனை பேருக்கும் நான் நன்றி தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். பல உறுப்பினர்கள் தங்கள் தங்கள் தொகுதிகளைப்பற்றிய பல்வேறு கருத்துக்களை இங்கே எடுத்துத் தெரிவித்தார்கள். பொது விவாதத்திலே சாதாரணமாக எடுத்துச்சொல்லப்பட்ட பொதுக் கருத்துக்களை எடுத்துச் சொல்லி இருக்கின்றார்கள் என்றாலும், பல்வேறு கருத்துக்களைப்பற்றி விரிவாக எடுத்துச்சொல்லி இருக்கிறார்கள், ஆற்ற வேண்டிய பணிகள் பற்றியும் எடுத்துச்சொல்லி இருக்கிறார்கள். அவற்றைப்

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1986 மார்ச் 31

பற்றி அந்தந்த துறையைச் சேர்ந்த மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் கவனித்து உரிய நடவடிக்கைகளை எடுப்பார்கள் என்பது மட்டுமல்லாமல் தொடர்ந்து மானிய கோரிக்கைகள் விவாதத்திற்கு வர இருக்கின்ற காலத்தில் அவை பற்றி விரிவாக எடுத்துச்சொல்லவும். அதற்கு விளக்கமான பதில் உரைகளை அளிக்கின்ற சூழ்நிலை ஏற்படுகின்ற காரணத்தினால் இந்த 8 நாட்களாக 72 உறுப்பினர் பெருமக்கள் எடுத்துச்சொன்ன கருத்துக்களுக்கு இங்கே விளக்கங்கள் தருகின்ற அத்தகைய சூழ்நிலைகள் ஏற்படுவதற்கில்லை என்பதை மட்டும் நான் குறிப்பிட்டு கூறிக்கொள்ள விரும்புகிறேன். ஆனாலும்கூட இங்கே எடுத்துச் சொல்லப்படுகின்ற கருத்துக்கள் அத்தனைக்கும் குறிப்பிட்ட அந்தந்த துறையைச் சார்ந்தவர்கள் அதைப்பற்றி ஆராய்ந்தறிந்து அவைபற்றி எடுக்க வேண்டிய நடவடிக்கைகளிலே, எடுத்துக்கொள்வதிலே முனைப்பு எண்ணம் கொண்டிருக்கிறார்கள் என்பதை மட்டும் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். எதிர்த்தரப்பிலே உள்ளவர்களானாலும் சரி, எதிர்க்கட்சி உறுப்பினர் என்ற உணர்வோடும் சரி, எதிரிக் கட்சி உறுப்பினர்கள் என்ற உணர்வோடும் சரி, இங்கே கருத்துக்களை பேசிய சிலர்கூட மாச்சரியத்தோடு கருத்துக்கள் பலவற்றை எடுத்துச் சொன்னார்கள். நான் மாச்சரியத்தை நீக்கி விட்டு மற்றவற்றை எடுத்துக்கொள்ளலாம் என்று கருதுகிறேன். கார சாரமாக சிலபேர் பேசினார்கள் என்றாலும் கூட அதிலே காரம் இருந்தால் தள்ளிவிட்டாலும், சாரமாக இருக்க வேண்டும். சில வற்றில் வெறும் காரம் மட்டும் இருக்கிறதே தவிர, சாரம் இல்லாத காரணத்தினால்தான் எனக்கு பயன்படுகின்ற அளவுக்கு அமைய வில்லை என்பதற்காக நான் வருந்த வேண்டியதிருக்கிறது. ஆனால் இந்த வருட நிதிநிலை அறிக்கையிலே உள்ளபடியே எதுவுமே இல்லை என்ற அளவுக்கு அவர்கள் எடுத்துச் சொல்கின்றார்கள் என்று சொன்னால், அப்படி சொல்வதற்கு அவர்களுக்கு உரிமை இருக்கிறது. ஆகவே எதுவுமே காணமுடியவில்லை: இது உதவாக்கரையான ஒன்று; இது எதற்கும் பயன்படுகின்ற ஒன்று அல்ல என்று எடுத்துச் சொல்கின்றார்கள் என்றால் எடுத்துச் சொல்வதற்கு அவர்களுக்கு உரிமை உண்டு. அந்த உரிமையை நான் தடுக்கவில்லை. ஆனாலும்கூட அது பயன் படுகின்ற அளவுக்கு இருக்குமா என்றால், பயன்படுகின்ற அளவுக்கு இருக்காது. ஆனால் மாற்றுக் கட்சித் தரப்பிலே



1986 மார்ச் 31] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

இருக்கின்ற எதிர்க்கட்சி உறுப்பினர்கள் அத்தனை பேரும் இதைப் பாராட்டவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளவும் இல்லை; இதனைபோற்றி வரவேற்கவேண்டுமென்று நான் சொல்லவும் இல்லை; ஆனால் லாலி பாட வேண்டுமென்றும் நான் சொல்லவும் இல்லை. நான் நிதிநிலை அறிக்கையில் குறிப்பிட் டிருப்பது உங்களுடைய ஒத்துழைப்பைத் தாருங்கள் என்று கேட்டிருக்கிறேனே தவிர இந்தத் திட்டங்களையெல்லாம் நடை முறைப்படுத்த வேண்டும் என்று கடப்பாடோடு இந்த அரசு பணியாற்றிக்கொண்டிருக்கிறபோது. உங்களுடைய ஒத்துழைப் பைத் தாருங்கள் என்கிறேன். லாலிபாடுவது என்பதுகூட தவறில்லை. எதிர்க்கட்சிகள் ஆளுங்கட்சிக்கு லாலி பாடி னாலும் சரி, ஆளும் கட்சி எதிர்க்கட்சிக்கு லாலி பாடினாலும் சரி, லாலி பாடுவது என்பது அன்பின் அறிகுறி தானே தவிர வேறு ஒன்றும் இல்லை. குழந்தையை தொட்டிலில் இட்டு தாய் லாலி பாடுகிறாள் என்றால் அடிமை காரணமாக லாலி பாடு கிறாள் என்று அல்ல, அன்பின் காரணமாகத்தான் லாலி பாடு கிறாள் என்று அர்த்தம். ஆக அப்படி லாலி பாடவும் சொல்ல வில்லை.

(பிற்பகல் 12-40)

மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் எடுத்துச் சொல்லுகிறபோது,

“இடிப்பாரை இல்லாத ஏமரா மன்னன்
கெடுப்பா ரிலானுங் கெடும்”

என்று சொன்னார்கள். வள்ளுவர் காலத்தில் அரசனை தலை வராகக் கொண்ட அரசாட்சி முறை தான் இருந்தது என்றாலும் கூட குடியாட்சிக்கு உரிய சில பல சிறப்புக்குரிய பணிகளை வள்ளுவப் பெருந்தகையார் தன்னுடைய குறள் மூலம் வற்புறுத்தி வந்ததற்கு எடுத்துக் காட்டாக ‘இடிப்பாரை இல்லாத ஏமரா மன்னன் கெடுப்பா ரிலானுங் கெடும்’ என்று சொல்லியிருக் கிறார்கள்.

நாட்டை ஆளுகின்ற அரசனுக்குப் பக்கத்தில் இருப்பவர்கள், அவன் செய்கின்ற காரியங்கள் அத்தனைக்கும் ஆதரவு அளித்தும், அனுமதி அளித்தும் செய்கின்ற தன்மைகள் வந்து, அவன் குறைகள் நிகழ்த்துகின்ற இடத்தில் அல்லது குற்றங்களை செய்கின்ற இடத்தில் அவனை இடித்துச் சொல்லி திருத்துகின்ற

அளவுக்கு ஒருவனை வைத்துக்கொள்ள வேண்டும். அப்படி வைக்கிற சூழ்நிலை இல்லாவிட்டால் அந்த நாட்டை அழிக்க மாற்றான் படை எடுத்து வரவேண்டிய அந்த அவசியம் இல்லை. அப்படி ஒரு நிலை இல்லாமல் இருப்பதே அந்த நாட்டை அழிந்துவிடும் என்ற கருத்தில் தான எடுத்துச் சொல்லியிருக்கிறார் வள்ளுவர் அவர்கள். ஆக அப்படி குற்றங் குறைகளை சுட்டிக்காட்டுவதற்காகத் தான் எதிர்க்கட்சிகள் இருக்கின்றன. அதை செய்ய வேண்டும் என்று தான் நானும் கூறுகிறேன். இடித்து உரைக்கத் தான் வேண்டும். அதற்காக கடித்துக் குதறக்கூடாது என்று தான் சொன்னேனே தவிர இடித்து உரைக்கலாம். இடித்து உரைக்கிற பண்போடு இருக்க வேண்டும், குற்றங்களை சுட்டிக்காட்ட வேண்டும் என்று தான் நான் அடிக்கடி சொல்லி வந்து இருக்கிறேன்.

கீழே எல்லா மட்டங்களிலும் நடைபெறுகின்ற எல்லா நிலைமைகளும் அமைச்சருடைய கவனத்திற்கு அல்லது உயர்மட்ட அதிகாரிகளின் கவனத்திற்கு வந்து விடுகிறது என்று சொல்ல முடியாது. அவைகளில் இருக்கின்ற குறைபாடுகளை, குற்றங்களை மன்ற உறுப்பினர்கள் எடுத்துச் சொல்லுகிறபோது தான் அதற்கு முக்கியத்துவம் ஏற்படுகிறது. அப்படி முக்கியத்துவம் ஏற்படுகிற போது அந்தக் குறைபாடுகளை களைவதற்கான முயற்சிகளை எடுத்துக் கொள்ளவேண்டும். அப்படி எடுத்துச் சொல்லுவதால் குற்றங்களை களைவதற்கான வழி ஏற்படுகிறது, அந்த வகையில் எடுத்துச் சொல்ல வேண்டும் என்பதைத் தான் நானும் கூறுகிறேன். இங்கே எடுத்துச் சொன்னவர்கள் தங்கள் தங்கள் இயல்புக்கு ஏற்ப எடுத்துச் சொன்னார்கள். ஒருவர் கூட கூறினார். இந்த வரவு-செலவுத் திட்டம் இருட்டு அறையாக இருக்கிறது, உள்ளே இருக்கிற ஒரு குருட்டு பூனையாக இருக்கிறது என்று சொன்னார். ஆக குருட்டு கண்ணாக இருப்பவருக்கு பொதுவாக வெளிச்சமாக இருக்கிற அறை கூட இருட்டாக இருக்கும். உள்ளே உள்ள வெள்ளை பூனை கூட. குருடாகத் தான் இருக்கும். அது அவர்களுடைய கண்ணில் ஏற்பட்ட கோளாறு தானே தவிர அறையினுடைய கோளாறு, பூனையினுடைய கோளாறு அல்ல. மாண்புமிகு உறுப்பினர் ரகுமான்கான் அவர்கள் கூட அவர்களுக்குரிய சில உவமைகளை அவருக்கு உள்ள இயல்பு படி எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அது அவருக்கு ஏற்ற உவமை.





நான் எனக்கு ஏற்ற முறையில் என்னுடைய உவமையை அதற்கு ஏற்ப வைப்பது பொருத்தமுடையதாக இருக்கும் என்று நானும் கருதுகிறேன். 1986-87 ஆம் ஆண்டு நிதி ஆணையை குமுறுகின்ற கொந்தளிக்கின்ற கடலாக மாற்றுகின்ற சூழ்நிலை ஏற்பட்டாலும் 1986-87 ஆம் ஆண்டை கடந்து செல்வதற்கான முறையில் இந்த அறிக்கை வலிவானதாகவும், உரம் மிக்கதாகவும் கரை சேர்க்கின்ற கப்பலாகத்தான் அமையும் என்பதை நான் திட்டவட்டமாக தெளிவாக எடுத்துக் கூறிக்கொள்ள விரும்புகிறேன். ஆனால் சில பேர் இங்கே 1986-87 ஆம் ஆண்டை பாலைவனம் ஆக்க நினைத்தாலும் கூட அப்படி பாலைவனம் ஆக்குகின்ற நிலையில் கூட தமிழகத்தை, தமிழர்களை ஏற்றிச் செல்லுகின்ற இளமையான, முறுக்கோடு கூடிய வளமான, வலிமையான ஒட்டகமாக இந்த அறிக்கை இருக்கும் என்பதை என் உவமானத்தில் எடுத்துச் சொல்ல விரும்புகிறேன்.

அது மட்டுமல்ல, அதை இருட்டடிப்பு செய்து இருள் நிறைந்த ஒன்றாக செய்ய வேண்டும் என்று சிலர் கருதினாலும் கூட ஒளி பாய்ச்சக் கூடிய அளவுக்கு அது சுடராகத்தான் விளங்கும் என்பதை நான் எடுத்துக் காட்ட விரும்புகிறேன். ஆக எல்லோரும் ஒத்துழைப்பு தரவேண்டும், அப்படி தராவிட்டாலும் கூட 1986-87 ஆம் ஆண்டு இந்த அறிக்கையில் குறிப்பிட்டு இருக்கிற திட்டங்களின் அடிப்படையில் தான் இந்த மாநில அரசு இந்த மாநிலத்தை நடத்திச் செல்லவேண்டும் என்ற அத்தகைய தன்மையில் இருக்கிறது என்பதை நாம் கண்கிறோம். அந்த வகையில் தான் இந்த அறிக்கையைப் பொறுத்தவரையில் பல பேர் பல கருத்துக்களை எடுத்துச் சொன்னாலும் கூட இந்த அறிக்கையில் குறிப்பிட்டு இருக்கிற அந்த தன்மையின் அடிப்படையில் தான் நாம் நடத்திச் செல்ல வேண்டியவர்களாக இருக்கிறோம். ஆக இதற்கு பக்கத்துணையாக, உறுதுணையாக நல்ல பணிகளை செம்மையாக ஆற்றுவதற்கு தங்களுடைய நல்ல ஒத்துழைப்பையும், ஆதரவையும் உறுப்பினர் பெருமக்கள் தொடர்ந்து தரவேண்டும் என்பதுதான் என்னுடைய மேலான விருப்பமும் ஆகும்.

இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் பல பேரும் எடுத்துச் சொல்கிறபோது தடைபெற்று முடிந்த உள்ளாட்சி மன்றத் தேர்தலைப் பற்றியெல்லாம் எடுத்துச் சொன்னார்கள். உள்ளாட்சி

மன்றத் தேர்தலைப் பொறுத்தவரையில், அது நீண்ட பெரும் காலமாக வரவேண்டுமென்பதுதான், விருப்பமும், எண்ணமுமாக இருந்து வந்த ஒன்று தான். ஆக எப்படியோ நடந்து முடிந்த திலே நமக்கு மகிழ்ச்சி. அதிலே மாண்புமிகு உறுப்பினர் அப்துல் சமத் அவர்கள் பேசுகின்றபோது கூட இப்போது உள்ளாட்சி மன்றத் தேர்தல்களை நடத்தி முடித்ததற்காக தன்னுடைய பாராட்டுதல்களை தெரிவிக்கிறேன் என்று கூட அவர்கள் சிறப்பாக எடுத்துத் தெரிவித்தார்கள். உள்ளாட்சிமன்றத் தேர்தல் நடைபெறவேண்டுமென்ற எண்ணத்திலே தான் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் தொடர்ந்து இருந்துகொண்டுவந்தது. ஆட்சிப் பொறுப்பேற்றது 1977 ஆம் ஆண்டு என்றாலும்கூட, உள்ளாட்சிமன்றத் தேர்தலை நடத்த வேண்டுமென்கிற முனைப்பு உள்ளத்தோடு, மதுரை மாநகராட்சிமன்றத் தேர்தலை 1978 ஆம் ஆண்டிலே நடத்தியது. அதற்குப் பிறகு நடத்துவதற்கான பல்வேறு முனைப்பு உள்ளங்கள் இருந்தாலும், ஏற்பட்ட நெருக்கடி நிலைமைகள், வெள்ளம், வறட்சி போன்றவைகள் வந்தது மட்டுமல்ல. 1979-லே ஆட்சி மாற்றங்கள், மத்தியிலே இருந்த ஜனதா ஆட்சி வீழ்ந்து, பிறகு சரண்சிங் வந்த நிலைமை, அதற்குப் பிறகு பொதுத்தேர்தல் ஏற்பட்ட நிலைமை. பொதுத் தேர்தல் ஏற்பட்டபிறகு, வந்த 2 மாதங்கள் கழித்து இந்த மாநில ஆட்சி கலைக்கப்பட்ட நிலைமை, கலைக்கப்பட்டதற்குப் பிறகு, 4, 5, 6 மாதங்கள் குடியரசுத் தலைவர் ஆட்சி இருந்த நிலைமை. அதற்குப் பிறகு மறுபடியும் 1980-லே தேர்தல் நடத்த வேண்டிய அவசியம் ஏற்பட்ட நிலைமை. அதற்குப் பிறகு புதிய தேர்தல் நடைபெற்றதற்குப் பிறகு ஆட்சிப் பொறுப்பை ஏற்று நடத்திக் கொண்டு வருகிற காலத்திலே, கடுமையான வறட்சியை 1982-83, 1983-84-ல் சந்திக்க வேண்டிய நிலைமை, மற்றவைகள் எல்லாம் ஒத்திப்போட வேண்டிய அளவிற்கு 'ட்ராஸ்டிக் சிவியர் ட்ராவுட்' என்று 72 ஆண்டுக்காலமாக தமிழகத்தினுடைய வரலாற்றில் இல்லாத அளவிற்குக் கடுமையான வறட்சியும், கொடுமையான தன்மைகளும் ஏற்பட்டதன் காரணமாக ஒத்திப்போட வேண்டிய அவசியம் எல்லாம் வந்து, அதற்கு இடையிலே 15 சதவீத இடங்கள், ஊராட்சி மன்றங்கள், நகராட்சி மன்றங்கள், மற்றவைகள் எல்லாம் பெண்களுக்காகவும், 18 சதவீதம் ஆதிதிராவிடர்களுக்





காகவும் ஒதுக்கவேண்டுமென்ற கருத்தை வைத்து. இந்த மன்றத்தில் அந்தச் சட்டத்தை நிறைவேற்றி, அதனால் பாதிக்கப்படுகின்ற சூழ்நிலை ஏற்படுகிறது என்கின்ற தன்மையை அடிப்படையாக வைத்து, பாதிக்கப்படுகிற சூழ்நிலை கூட அல்ல. இந்தக் குறிப்பிட்ட தொகுதியை இன்னாருக்கு ஒதுக்கக் கூடாது, அது பொதுவாக இருக்க வேண்டும், அது அப்படி இருக்க வேண்டும், இப்படி இருக்க வேண்டும் என்கிற அளவுக்கு பல 500-க்கும் மேற்பட்ட ரிட்களும், மற்றவைகளும் போட்டதன் காரணமாக காலதாமதம் ஏற்பட, ஆக அந்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்த முடியாத நிலையில் உச்ச நீதிமன்றத்திலும், உயர் நீதிமன்றத்திலும் பல வழக்குகள் இருக்க பிறகு மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர்கள், மற்றவர்கள் அத்தனை பேருடைய ஒத்துழைப்பு, ஆதரவின் அடிப்படையில் மறுபடியும் கூட்டத் தைக் கூட்டி, புதிய சட்டத்தைக் கொண்டு வந்து நிறைவேற்றி, அதனுடைய அடிப்படையிலே தேர்தலை நடத்தலாம் என்ற அளவுக்கு ஒரு முடிவிற்கு வந்த காரணத்தால் தான் காலத் தாழ்வு ஏற்பட்டதே தவிர, இப்படித் தள்ளிக் கொண்டு வந்த போதிலும் தற்போது உள்ளாட்சி மன்றத் தேர்தல்கள் நடைபெற்று முடிந்துவிட்டன.

இப்போது 98 நகராட்சி மன்றங்களில் 97 மன்றங்களினுடைய தலைவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள். 382 ஊராட்சி ஒன்றியங்களிலே 380 ஊராட்சி ஒன்றியத் தலைவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள். 626 பேரூராட்சி மன்றத் தலைவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள். 12,610 ஊராட்சி மன்றத் தலைவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள். ஆக அரசு என்கிற முறையிலே நான் திரும்பத் திரும்ப எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். இவர்கள் அத்தனை பேரும் தேர்ந்தெடுக்கப்பட்டு பொறுப்புகளை ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள் என்கிற நிலையில், அத்தனை பேருடைய ஒத்துழைப்பும் இந்த அரசுக்குத் தேவை. இந்த அத்தனை பேருக்கும் உதவி புரிய இந்த அரசு ஆயத்தமாக இருக்கிறது என்பதை நான் கூறிக் கொள்ள விரும்புகிறேன். தேர்தல் நடைபெறுகிற வரையில் தான், அரசியல் மாச்சரியங்கள், மற்றவைகள். ஆக எந்தக் கட்சியின் சார்பாக, எந்த அணியின் சார்பாக போட்டி போடுகிறோம் என்ற சூழ்நிலைகள் இருந்தாலும், மாண்புமிகு பேராசிரியர் அவர்கள் இங்கே எடுத்து தெரிவித்ததற்கிணங்க,

வேறு பல நண்பர்களும் எடுத்துத் தெரிவித்தற்கிணங்க, மத்திய அரசு போடுகிற திட்டங்களும், மாநில அரசு போடுகிற திட்டங்களும், மக்கள் கைக்கு நேரடியாகப் போய், சிற்றூர் புறங்களில் மககளுக்கு நேரடியாக போய், பேரூராட்சிகளை ஏற்றது மட்டுமல்லாமல், கண்காணித்து அவற்றையெல்லாம் நடைமுறைப்படுத்துகின்ற அளவிற்கு இருக்கின்ற சூழ்நிலை, மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் ஏற்கிறார்கள் என்ற சூழ்நிலை மகிழ்ச்சிக்குரிய, வரவேற்க வேண்டிய ஒரு சூழ்நிலையே தவிர, அதிகாரிகள் கையிலே, அதிகாரிகள் மட்டத்திலே இருந்து வருகிற ஒரு சூழ்நிலையை விட, அவர்களைக் கூட கண்காணிக்கின்ற ஒரு சூழ்நிலை ஏற்பட்டிருப்பது ஒரு வரவேற்கத் தகுந்த, ஆனால் தேவைப்படுகின்ற ஒரு சூழ்நிலையே தான். தேர்தல் நிலைமையில் ஏற்பட்டிருக்கிற சூழ்நிலை, மற்றவைகளின் காரணமாக போட்டி போடுகின்ற வகையில் அரசியல் மாச்சரியம், அரசியல் அணியின் போட்டி மற்றவைகள் எல்லாம் இருந்தாலும் கூட, பணியாற்றுகின்ற சூழ்நிலைகள் ஏற்படுகின்றபோது, உள்ளாட்சி மன்றங்களில் அரசியல் கட்சிகளுக்கு அப்பால் நின்று பணியாற்ற வேண்டிய ஒரு கட்டம் தான் இருந்து வருகிறது. அரசியல் கட்சிக் கருத்துர்களும், மற்றவைகளும் பொது மக்களுக்கான அன்றாடப் பணிகளைச் செய்கின்றபோது கட்சிக் கருத்துக்களையுடைய பணிகள் வராது.

(பிற்பகல் 12-50)

ஆனால் அரசியல் கருத்துக்களின் அடிப்படையில் தீர்மானங்கள் நிறைவேற்றுவதும் சட்டங்கள் செய்வதும் வாதப் பிரதிவாதங்கள் எழுப்புவதும் அதன் அடிப்படையில் சட்டங்களை நிறைவேற்றுவதும் சட்டமன்றங்களின், பாராளுமன்றத்தின் பணிகளாக இருக்கின்றன. உச்சவரம்புச் சட்டம் என்றால் கட்சிக்குக் கட்சி கொள்கை உண்டு. மொழிக் கொள்கை என்றால் கட்சிக்குக் கட்சி கொள்கை உண்டு. பொருளாதாரம் என்று வைத்துக் கொண்டால் பொதுவுடைமை ஆக்குவதா இல்லையா என்றால் கட்சிக்குக் கட்சி கொள்கை உண்டு. அந்தக் கொள்கையின் அடிப்படையில் இங்கே வீற்றிருக்கிற ஒவ்வொரு கட்சியும் அணுகுகிறார்கள். ஆனால் உள்ளாட்சி மன்றங்களிலே கட்சிக்குக் கட்சி எடுத்துக் கொண்டிருக்கிற பொறுப்புகளைப்

1986 மார்ச் 31] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

பொறுத்தவரையில் நடைமுறையில் எந்த கட்சி மாச்சரியமும் இல்லை. ஆகவே ஊராட்சி மன்றங்களையும் ஊராட்சி ஒன்றியங்களையும் நாம் கவனிப்போமானால்—இங்கே ஆளுங் கட்சி என்றும் எதிர்க்கட்சி என்றும் இருக்கின்றன. அந்த வாதங்களை சீர் செய்து, சரிசெய்து, ஒழுங்குபடுத்தி, ஒருமுகப்படுத்தி ஒரு முடிவைக் கொண்டு வருவதற்கு அவைத் தலைவரும், துணைத் தலைவரும், தற்காலிகத் தலைவர்களும் இருந்து கண்காணித்து வருகிறார்கள் என்ற சூழ்நிலை இருக்கிறது. ரூலிங் பார்ட்டி, அப்போசிஷன் பார்ட்டி என்று இருக்கிறது — அங்கே யூனியன்களிலேயும், நகராட்சி மன்றங்களிலேயும், ஊராட்சி மன்றங்களிலேயும், மற்றவைகளிலேயும் சேர்மேன் அண்ட் கவுன்சிலர்ஸ் என்றுதான் இருக்கிறது, பிரசிடெண்ட் அண்ட் மெம்பர்ஸ் என்றுதான் இருக்கிறதே தவிர ரூலிங் பார்ட்டி, அப்போசிஷன் பார்ட்டி என்று எந்த நகராட்சி மன்றங்கள் சட்டத்திலேயோ, ஊராட்சி ஒன்றியங்கள் சட்டத்திலேயோ, ஊராட்சி மன்றங்கள் சட்டத்திலேயோ இல்லை. ஆனால் உள்ளே சென்றவர்கள் வேண்டுமானால் பெஞ்ச்களை இப்படியும் அப்படியும் இழுத்துப் போட்டுக் கொண்டு உட்காரலாமே தவிர சட்டத்தின் அடிப்படையிலே எதிரும்புதிருமாக உட்கார வேண்டிய அவசியம் அங்கே இல்லை. (சிரிப்பு).

அங்கே யார் வந்தாலும் ஒன்று சேர்ந்து மக்கள் பொறுப்பை ஒப்படைத்திருக்கிறார்கள். அவர்கள் ஒத்துழைப்பின் அடிப்படையில் பணியாற்ற வேண்டுமென்ற முறையிலே மக்களின் அன்றாடத் தேவைகளை நிறைவேற்ற மாநில அரசு, மத்திய அரசு போடுகிற திட்டங்கள் அத்தனையையும் நிறைவேற்றுகிறபோது ஊராட்சி மன்றங்களோ, ஊராட்சி ஒன்றியங்களோ, நகராட்சி மன்றங்களோ அவைகள் அரசோடு ஒத்துழைக்க வேண்டும், அதைப்போல அரசினுடைய உதவியும் அவைகளுக்குத் தேவை. ஆகவே எந்தவிதமான பாரபட்சமும் இல்லாத முறையிலே இந்த அரசு பணியாற்றும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

தன்னிறைவுத் திட்டத்தை நிறைவேற்றுகிறபோதுகூட 371 ஒன்றியங்களிலேயும் 269 கோடி ரூபாய் வழக்கமாக கொடுக்கிற மானியத்தின் அடிப்படையில் இல்லாமல் தனியாக ஒதுக்கி அந்த அந்த ஒன்றியத்தின் தன்மையை, போக்கை, தேவையை கருதி 45 லட்சத்திலிருந்து 60, 70 லட்சம் வரையிலும்

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1986 மார்ச் 31

அந்த அந்த ஒன்றியங்களுக்கு நாம் தொகைகள் தந்தபோது எந்தத் தொகுதியைச் சார்ந்தது எந்தக் கட்சியைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர் தொகுதியைச் சேர்ந்தது என்று கணக்கிடாமல் அதற்கு யார் எம்.எல்.ஏ. என்பதைப் பற்றிக்கூட கவலைப்படாமல் மக்களுடைய நல்வாழ்வைக் கருதி 378 ஒன்றியங்களையும் ஒரு சார்பாக நினைத்து நாம் பணியாற்றினோம். அதைப்போன்று கருதி பணியாற்ற வேண்டுமென்ற எண்ணம்தான் இருக்கிறது. அரசியல் கருத்துக்கள் எந்த அரசியல் தன்மையுடையதாக இருந்தாலும் மக்களுக்கு நன்மைகள் செய்ய வேண்டுமென்பதில் நல்ல முனைப்புள்ளத்தோடு ஒத்துழைப்போடு எல்லாப் பணிகளும் செய்யப்பட்டால்தான் மக்களுடைய தேவைகள் நிறைவேற முடியும். ஏற்கெனவே இருக்கிற நடைமுறைகளிலே குற்றங் குறைகள் இருக்குமானால் மக்களுடைய பிரதிநிதிகள் அந்தக் குறைபாடுகளைக் கண்டுபிடித்துச் சொல்வார்களானால் எங்களுக்கு மகிழ்ச்சிக்குரிய ஒன்றுதான். அதைக் கண்டுபிடித்து அதற்குக் காரணமானவர்கள் மீது நடவடிக்கை எடுப்பதற்காக அவர்கள் அதைப் பற்றிச் சொன்னாலும்கூட அது மகிழ்ச்சிக்குரியதுதான், நல்ல ஜனநாயகம் பேணிக்காக்கப் படுவதற்கான வாய்ப்பும் வசதியும் உடையதாக அது இருக்கும். அரசியல் காழ்ப்புணர்ச்சியின் காரணமாக ஊருக்கு, நகரத்திற்கு, பேரூராட்சிக்கு மற்றப் பகுதிகளுக்கு நடைபெற வேண்டிய நல்ல பணிகள் நடைபெறாமல் போய்விடக் கூடாது என்ற காரணத்தினால்தான் இப்போதுகூட நாம் போட்டிருக்கிற கேளிக்கை வரியின் பெரும் பகுதி நகராட்சி மன்றங்களுக்கும், ஊராட்சி மன்றங்களுக்கும், ஊராட்சி ஒன்றியங்களுக்கும் அவைகளினுடைய நிதிக்குத்தான் போகிறது. இப்போது அதிலே 10 சதவீதம் கூடுதல் வரி போட்டிருக்கிறோம் என்றாலும் அதன் மூலம் வருகிற கூடுதல் வரி அவைகளுக்குச் செல்கிறவையாகதான் இருக்கும். ஒன்றை நாம் ஒப்புக் கொள்கிறோம். நகராட்சி மன்றங்கள், ஊராட்சி ஒன்றியங்கள், உள்ளாட்சி மன்றங்கள் ஆகியவற்றின் நிதி வருவாய் அவற்றிற்கு போதுமானதாக இல்லை. அவர்கள் எண்ணுகிற திட்டங்களையெல்லாம் அவர்கள் நிறைவேற்றக்கூடிய அளவுக்கு அவர்கள் வசூலிக்கிற பணமும் வரி மூலம் வருகிற பணம், வீட்டு வரி, சந்தை வரி வேறு பல வரிகள் கேளிக்கை வரி இவற்றின் மூலமாக வருகிற



1986 மார்ச் 31] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

வருமானத்தின் பெரும் பகுதி கிட்டத்தட்ட அதிலே 80 அல்லது 90 சதவீதம் நிர்வாகச் செலவுக்கே போகிற அளவுக்கும் அதிலே 10 அல்லது 5 விழுக்காடுதான் நிற்கிறது என்ற அளவுக்குத்தான் நிலைமைகள் இருக்கின்றன. அதன் வருவாயைப் பெருக்கி, வளத்தைப் பெருக்கி, வளர்ச்சித் திட்டங்கள், மக்கள் நல்வாழ்வுக்கான திட்டங்கள் இன்னும் மற்ற திட்டங்களில் என்னென்ன வசதிகள் ஏற்படலாம் என்பதை ஆராய்ந்து, கூட்டு முயற்சியின் அடிப்படையில் ஒத்துழைப்பு செய்கின்ற தன்மை இந்த அரசுக்கு உண்டு; அந்த வகையிலே இந்த அரசு ஒத்துழைக்கும். அந்த வகையிலேதான் தமிழக முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் இந்த மனப்பான்மையில் தான் இருக்கிறார்கள், அதைத்தான் வலியுறுத்தி வருகிறார்கள் என்பதை இந்த வாய்ப்பிலே கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவரவர்கள் சொல்லும் நேரத்தில் மாநிலத்திற்குத் தன்னாட்சி கேட்கின்ற நேரத்தில், உள்ளாட்சி மன்றங்களுக்கு அதிக அதிகாரங்களைக் கொடுக்க வேண்டாமா என்று கேட்டார்கள்.

State Government, Central Government மற்றவைகள் லோக்கல் போர்ட்ஸ். ஆகவே, மாநில அரசு, மத்திய அரசு என்று வருகின்றபொழுது ஒரு அதிகார வரம்பிற்குள் வருகின்ற தன்மைகளும், மற்றவைகளும் இருக்கின்றன. அது மட்டுமல்லாமல், உலகத்தில் உள்ள பல நாடுகளைச் சுட்டிக்காட்டி, அங்கே அப்படி இருப்பதன் காரணமாக அதன் ஒற்றுமை கெடவில்லை, ஆனால் வளர்ச்சிக்குக் காரணமாக அது அமைந்திருக்கிறது, வலுவான இந்தியா கட்டாயம் அமைந்துதான் தீர வேண்டும்; வளமான மாநிலங்களும் அமையத்தான் வேண்டும்; அதற்கான அதிகாரம் மாநிலங்களுக்கு வர வேண்டும்; இந்தியாவின் எல்லையைக் கட்டிக் காப்பதற்கு, இந்தியாவை வலுப்படுத்துவதற்கு என்னென்ன அதிகாரங்கள் வேண்டுமோ அந்த அதிகாரங்கள் அத்தனையும் மத்தியில் இருக்கத்தான் வேண்டும என்ற அந்த அடிப்படையில்தான் நாம் இதை எடுத்துச் சொல்கிறோம். உள்ளாட்சி மன்றங்களைப் பற்றி எடுத்துச் சொன்னார்கள்.

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1986 மார்ச் 31

உள்ளாட்சி மன்றங்கள் அமைக்கப்பட்டதற்கான நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு, அவைகளுக்கு எந்தெந்த தன்மைகளைக் கொடுத்து இருக்கிறோமோ, அவைகளை நிறைவேற்றுவதற்கு எந்தெந்த அதிகாரங்களும் மற்றவைகளும் தேவைப்படுகின்றன என்பதைப் பற்றி உட்கார்ந்து பேசி, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சரவர்களும், மற்றவர்களும், எதிர்க்கட்சிகளும் ஆகிய எல்லோரும் பேசி இன்னின்ன அதிகாரங்களைக் கொடுக்கலாம் என்று முடிவு செய்தால்கூட அந்த அதிகாரங்களை உள்ளாட்சி மன்றங் களுக்குக் கொடுப்பதிலே எங்களுக்கொன்றும் கஷ்டமோ, நஷ்டமோ எதுவும் இல்லை. உள்ளாட்சி மன்றங்களின் பணிகள் சிறப்பாக நடைபெற வேண்டும். எந்த நோக்கத்தினுடைய அடிப்படையிலே உள்ளாட்சி மன்றங்கள் அமைந்து இருக்கின்றனவோ அந்த நோக்கத்தை நிறைவேற்றுவதற்கு இப்பொழுதுள்ள அதிகாரங்கள் போதாது, இந்தந்த அதிகாரங்களைக் கூடுதலாகத் தந்தால் நல்லது என்ற முடிவுக்கு வரலாம்.

இதிலேகூட ஒரு அதிகாரத்தைப் பொறுத்தவரையில், மாண்புமிகு அமைச்சர் திரு. ப. உ. சண்முகம் அவர்கள் பொறுப்பேற்றதற்குப் பிறகுகூட, இந்தக் கல்வியை மறுபடியும் இங்கே கொண்டு வந்தால்தான் சரியாக இருக்கும் என்று அவர்கள் கருதினார்கள். முதலில் அவர்களெல்லாம் கிளர்ச்சிகள் செய்து, அனுப்பி வைத்தோம். மறுபடியும் கொண்டு வரலாம் என்று ஒரு உத்தரவு போட்டவுடன் ஒரு பெருங்கிளர்ச்சி ஆகி, மறுபடியும் கொண்டு போய் அவர்களிடத்தில் சேர்க்கும்படியான ஒரு சூழ்நிலை ஏற்பட்டது.

இப்படிப்பட்ட இக்கட்டான கஷ்டங்கள் இந்தந்தத் தன்மையினாலே இருக்கின்றன என்பதைப் பற்றி உட்கார்ந்து பேசி முடிவுக்கு வரலாம். அவைகள் நல்ல முறையில் பணியாற்ற வேண்டுமென்றுதான் மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சரவர்களும், மாண்புமிகு முதலமைச்சரவர்களும் எண்ணிக் கொண்டிருக்கிறார்கள். கொழுக்கட்டை வேக வேண்டுமென்பது தான் முக்கியமே தவிர, எந்தச் சட்டியிலே வேக வேண்டும். எப்படிப்பட்ட தன்மையிலே வேக வேண்டுமென்பது முக்கியமல்ல. காரியங்கள் நடைபெற வேண்டும். அதற்கான அதிகாரங்களைக்



1986 மார்ச் 31] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

கொடுக்கக் கூடாது என்பது எண்ணம் அல்ல. இந்த நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு, மாண்புமிகு உறுப்பினர்கள் கூறுகின்ற சிறந்த கருத்துக்களையும், மற்றவைகளையும் ஏற்று நடத்துவதற்கு அரசு ஆயத்தமாக இருக்கும் என்பதை இந்த வாய்ப்பிலே நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

மற்றும், வரவு-செலவுத் திட்டத்தின் தன்மைகளைப் பற்றி யெல்லாம் பல உறுப்பினர்களும் பேசினார்கள். ஆண்டுக்காண்டு வருகின்றது என்பதை மாண்புமிகு பேராசிரியர் அவர்கள் சொல்லியது மாதிரி, சாதாரணமாகப் பணத்தின் வேல்யூ— மதிப்பு குறைந்து வருகிறது என்பதைப் பற்றி ரேஷியோ போடுகிறோம். அதற்கான கணக்கையும் போடுகிறோம். நாற்பது, ஐம்பதாண்டுக் காலத்திற்கு முன்பு ஒரு ரூபாய்க்கு இருந்த மதிப்பையும், இப்பொழுது ஒரு ரூபாய்க்கு இருக்கின்ற மதிப்பையும் ஒப்பிடும்பொழுது மதிப்பு வேறுதான். அப்பொழுது ஒரு ரூபாயில் வாங்கிய சாமானையும், இப்பொழுது அதே ஒரு ரூபாயைக் கொண்டு என்ன சாமானை வாங்க முடியும் என்பதையும் பார்க்கின்ற பொழுது ரூபாயின் மதிப்பு குறைந்திருப்பது நன்றாக விளங்கும். 40 ஆண்டுகள், 38 ஆண்டுகளுக்கு முன்பு வெள்ளைக்காரர்கள் ஆண்ட நேரத்தில் அவர்கள் போட்ட பட்ஜெட்டின் தன்மைகளையும், மற்றவைகளையும் பார்க்கின்றபொழுது, இப்பொழுது இந்தியா முழுவதையும் பார்த்தால், மாநிலங்கள் முழுவதையும் பார்த்தால் கூட, எல்லாத் துறைகளிலேயும் வளர வேண்டிய வளர்ச்சியை அடையவில்லை என்ற குற்றச்சாட்டு வேண்டுமானால் இருக்கலாமே தவிர, ஒவ்வொரு ஐந்தாண்டுத் திட்டத்தின் இலக்கு எவ்வளவு என்று பார்க்கின்றபொழுது, போட்ட அளவிற்கு அடைய முடியவில்லை, எய்த முடியவில்லை என்று வேண்டுமானால் சொல்லலாமே தவிர, விரும்பியது இது, விருப்பத்தை நிறைவேற்ற முடியவில்லை என்று சொல்லலாமே தவிர, இந்தியா வளரவே இல்லை என்று சொல்ல முடியாது. வளர்ச்சியே பெறவில்லை என்று இந்த மாநிலத்தைப் பொறுத்த வரையில் சொல்லக்கூடிய நிலைமை இல்லை. இருக்கின்ற வசதி வாய்ப்புகளைக் கொண்டு. இருக்கின்ற சூழ்நிலையில் ஒவ்வொரு துறையைப் பொறுத்தவரையிலும் விரிவாக்கம் பெற்று இருக்கிறோம். ஓரளவிற்கு ரூபாயின் மதிப்பு குறைந்திருந்தாலும்,

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1986 மார்ச் 31

அந்தக் குறையை ஈடுகட்டிச் செய்திருக்கிறோம். ஓரளவிற்கு மக்களின் வருமானமும் பெருகியிருக்கிறது; வரியும் பெருகி இருக்கிறது.

(பிற்பகல் 1-00)

வெள்ளைக்காரர்கள் இந்த நாட்டை விட்டுச் செல்வதற்கு முன்னால் இந்திய அரசினுடைய மொத்த வருமானமே ரூ. 287 கோடிதான். இங்கே, நம்முடைய மாநிலத்தினுடைய மொத்த வருமானம் ரூ. 16 கோடிதான். இப்பொழுது ரூ. 3,000 கோடிக்கு மேல் கன்சாலிடேஷன் பண்ட் என்ற நிதியிலிருந்து எடுக்கிற நிலைமை இருக்கிறது. அன்றைக்கே, திருமதி பொன்னம்மாள் அவர்களுக்குப் பதில் சொல்கிறபொழுது சொன்னேன். காலணாவுக்கு 3 இட்டிலி கிடைத்த காலம் இருந்தது. அப்பொழுது ரூ. 16 கோடிக்குத் திட்டம் போடுகின்ற நிலைமை இருந்தது. அதையும் கணக்கிலே கொண்டு பார்க்க வேண்டும். அப்படிப் பார்த்தாலும்கூட 40 ஆண்டுக் காலத்திற்கு முன்னாலிருந்த தார் ரோடுகள் எவ்வளவு? 40 ஆண்டுக் காலத்திற்கு முன்னாலிருந்து பஸ்கள் எவ்வளவு? 40 ஆண்டுக் காலத்திற்கு முன்னால் எவ்வளவு கார்கள் புழங்கின? 40 ஆண்டுக் காலத்திற்கு முன்னால், சாதாரணமாக மக்கள் வைத்திருந்த டிரான்சிஸ்டர்கள் ரேடியோக்கள், வீட்டு சாமான்கள் எவ்வளவு? அன்றிருந்த வாழ்க்கை வசதிகள் இவற்றையெல்லாம் கணக்கிட்டுப் பார்க்கும் போது, ஒட்டுமொத்தமான வளர்ச்சி இருக்கின்றது என்பதையும் அது மாநில அளவிலே, நாட்டு அளவிலே இருந்து கொண்டிருக்கிறது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். ஓரளவுக்கு இருக்கிற சூழ்நிலையை ஒட்டி செய்து கொண்டு வருகிறோம். அந்த வகையிலேதான் நம்முடைய மாநிலத்தைப் பொறுத்த அளவிலும் நாம் இருக்கிற சூழ்நிலையை ஒட்டி, வாய்ப்பு வசதிகளை வைத்து,—அபாரமான திறமை இருக்கிறது என்று நான் சொல்லவில்லை; இருக்கிற திறமையை வைத்துக் கொண்டு, இருக்கிற அதிகாரிகளின் திறமையை, மற்றவைகளை வைத்துக் கொண்டுதான் நாம் வரவு செலவுத் திட்டத்தையெல்லாம் போட்டுக் கொண்டு வருகிறோம். அந்த அடிப்படையிலே நாம் மனநிறைவு கொள்கிற அளவுக்கும், மற்றவர்களோடு ஒப்பிடுகின்றபொழுது, பாராட்டுதலும்,



1986 மார்ச் 31] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

போற்றுதலும் பெறத்தக்க அளவுக்கும்தான் நம்முடைய மாநிலத்தைப் பொறுத்தவரையில் இருக்கிறது என்பதை நான் அடக்க உணர்வோடுதான் கூறிக் கொள்ளவும் விரும்புகிறேன். அந்த அடிப்படையிலேதான் பணிகளை ஆற்றிக் கொண்டு வருகிறோம்.

திட்டச் செலவுகளைப் பொறுத்த அளவிலும்கூட எவ்வளவு கடுமையான வறட்சி ஏற்பட்ட பொழுதும், நம்முடைய நாடு எவ்வளவு அவதியுற்றபொழுதும், 1981-82 1982-83, ஆண்டுகளில் நாம் திட்டச் செலவைக் கூடுதலாக்கியிருக்கிறோமே தவிர, திட்டச் செலவை, அதற்காக நாம் எந்த வகையிலும் குறைக்கவில்லை என்பதையும் இந்த மாநிலம் எந்த அளவிலே வெற்றி பெற்று இருக்கிறது என்பதையும் நிதிநிலை அறிக்கையில் சுட்டிக்காட்டி இருக்கிறேன். இவையெல்லாம் சாதனை அல்ல என்று மாச்சரியத்திற்காக எடுத்துச் சொன்னாலும், காழ்ப்புணர்ச்சி அடிப்படையில் அவற்றையெல்லாம் மறுக்கின்ற மனப்பான்மை இருந்தாலும், ரூ. 3,150 கோடி நாம் 6-வது ஐந்தாண்டுத் திட்டத்திற்கு ஒதுக்கிய அத்தகைய நிலைமையில், மத்திய அரசினுடைய திட்டக் குழுவே பார்த்து, ரூ. 5,750 கோடி, அளவுக்கு உயர்த்தியிருக்கிறது என்றால், குறிப்பாக 22 மாநிலங்களிலே 5, 6 மாநிலங்களில்தான் 70 சதவிகிதம், 80 சதவிகிதம், 65 சதவிகிதம், 6-வது ஐந்தாண்டுத் திட்டத்திலே யிருந்து, 7-வது ஐந்தாண்டுத் திட்ட ஒதுக்கீட்டுக்கு நகர்ந்திருக்கிறதே தவிர, பல முக்கியமான—அவற்றையெல்லாம் சொல்வதற்கு எனக்கு நேரம் இல்லை — மாநிலங்கள்கூட, 25 சதவிகிதம், 10 சதவிகிதம் கூட வளர்ச்சி காட்ட முடியாத அளவுக்கு இருக்கிற அத்தகைய நிலைமையை, தன்மையைக் கருத்தில் கொண்டு நம்முடைய மாநிலத்தினுடைய தன்மையைக் கண்டு பெருமைப்பட வேண்டுமென்பதற்காகத்தான் அவற்றைச் சொல்கிறேன்.

6-வது ஐந்தாண்டுத் திட்டத்திலிருந்து 7-வது ஐந்தாண்டுத் திட்டத்திற்குத் தமிழகத்தை நகர்த்திச் செல்கின்ற அளவுக்கு ரிசோர்சஸ் இருக்கிறதா என்று பார்க்காமல், திட்டக் குழுவினர் ஒத்துக் கொள்ள மாட்டார்கள். அதற்கான நிதி ஆதாரங்கள் இருந்தால்தான் அவர்களை நாம் கன்வின்ஸ் பண்ண முடியுமே தவிர, அந்தத் திட்டக் குழுவிலே இருக்கிற ஒவ்வொருவரும்

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1986 மார்ச் 31

ஒவ்வொரு துறையைச் சேர்ந்த வல்லுநர்கள். பல பேர்கள் பல துறைகளிலே பெயர் போனவர்கள். அவர்களை நாம் கன்வின்ஸ் பண்ணி, சம்மதிக்க வைத்து, பெறுகிறோம் என்று சொன்னால், இந்த மாநிலத்தினுடைய ரிசோர்சஸ், அதனுடைய ஆக்கம் போன்றவற்றையெல்லாம் கவனித்து ஒத்துக் கொண்டியிருக்கிறார்கள் என்று தான் பொருள். அந்த அடிப்படையிலே தான், ரூ. 5,575 கோடி பெற்றிருக்கிறோம் என்றால், அதனுடைய வளர்ச்சித் தன்மை மற்ற மாநிலங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கும் போது, நம்முடைய மாநிலத்தினுடைய 6-வது ஐந்தாண்டுத் திட்டத்தை, 7-வது ஐந்தாண்டுத் திட்டத்தோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது, நான் நிதிநிலை அறிக்கையிலே குறிப்பிட்டிருப்பதுபோல், 82.54 சத வீதம் நாம் உயர்த்தியிருக்கிறோம்.

அது மட்டுமல்ல, இன்னொரு மகிழ்ச்சிக்குரிய செய்தி, நாம் மத்திய அரசிடத்திலே வாதாடிய வகையிலேயும், பல புள்ளி விவரங்களை எடுத்துக் காட்டிய வகையிலேயும், 8-வது நிதிக் குழுவின்முன் எடுத்துச் சொன்ன கருத்துக்களை பலவற்றை நாம் பயன்படுத்தியதன் காரணமாகவும், பல்வேறு சூழ்நிலைகளை இங்கே உருவாக்கியிருப்பதன் காரணமாகவும் மத்திய அரசு நமக்குக் கொடுக்கிற நிதி உதவியைப் பொறுத்தவரையிலும், 6-வது ஐந்தாண்டுத் திட்டம் முழுவதும் நமக்கு ரூ. 665 கோடி மைய அரசு உதவியிருக்கிறது. இப்பொழுது 7-வது ஐந்தாண்டுக் காலத்திற்கு, மத்திய அரசு மூலம் நமக்குக் கிடைக்கிற திட்ட நிதி ரூ. 1,438 கோடியாக இருக்கும் என்று சொல்கிறபொழுது, பிற மாநிலங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது, அது 116.28 சத வீதம் ஆக உயர்ந்திருக்கிறது. 100 சத வீதத்தை மீறியிருக்கிறது என்கிற பொழுது, உள்ளபடியே நாம் மத்திய அரசுக்கு அந்த வகையிலே நன்றி செலுத்த கடமைப்பட்டிருக்கிறோம். அந்த வகையிலேதான் நான் பாராட்டுதலைத் தெரிவித்து இருக்கிறேன். எங்கெங்கு பாராட்டுத் தெரிவிக்க வேண்டுமோ, பாராட்டு தெரிவித்து இருக்கிறேன். எங்கெங்கு இடித்துச் சொல்லவேண்டுமோ, இடித்துச் சொல்லியிருக்கிறேன். எங்கு கேட்க வேண்டுமோ, அங்கே கேட்டிருக்கிறேன். அதைத்தான் இங்கே உட்கார்ந்து இருக்கிற சில நண்பர்கள் எடுத்துச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். அதைத் தான் மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் திரு. சு. சுப்பிரமணியம் அவர்கள் குறிப்



1986 மார்ச் 31] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

பிட்டுப் பேசினார்கள். ஆதரிக்க வேண்டிய இடத்தில் ஆதரித்திருக்கிறார், பாராட்ட வேண்டிய இடத்தில் பாராட்டியிருக்கிறார் என்று சொன்னார்கள். அவரை எல்லோரும் பின்பற்றினால் நல்லது என்றும் சொன்னார்கள்.

**திரு. என். எஸ். வி. சித்தன் :** மாண்புமிக்க பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நாவலர் உரையில் குறிப்பிடுவதற்காக மன்னிக்க வேண்டும். எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் — எங்கள் கட்சி— எவ்வளவு பெருந்தன்மையோடு குறிப்பிட்டிருக்கிறார்கள் என்பது தெரிகிறது. அதைப்போன்று அமைச்சரவையில் இருக்கிற எல்லோரும் பாராட்ட வேண்டியதை பாராட்டினால் உறவு நன்றாக இருக்கும்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** பேரவைத் தலைவர் அவர்களே, அதையும் நான் ஒத்துக்கொள்கிறேன் நான் குறிப்பிடுகிறேன் என்றால் அப்படித்தான் அர்த்தம். சிலரைப் பொறுத்தவரையில் நீங்களும் தள்ளிவிட வேண்டியது தான், நாங்களும் தள்ளிவிட வேண்டியதுதான்.

**திரு. க. அன்பழகன் :** தலைவரவர்களே, முன்னவர் அவர்கள் நாங்களும் தள்ளிவிட வேண்டியதுதான், நீங்களும் தள்ளிவிட வேண்டியதுதான், என்று சொன்னார்கள். அது உறுதியாகி விட்டதா? (சிரிப்பு).

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, நான் குறிப்பிட்டது, அப்படித் தள்ளப்பட வேண்டியது கருத்துக்களை. எனவே, ஆள்களைச் சொல்ல வேண்டிய அவசியமில்லை.

ஆக, இந்த வகையிலே ஆண்டுக்காண்டு போடுகிறத் திட்டங்களைப் பார்கிறபோது, வளர்ச்சியின் தன்மைகளைப் பார்க்கிற போது, நாம் பாராட்டப்படக்கூடிய நிலையில் முன்னணியில் இருக்கிறோம் என்பதை குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன். முதல் ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் தனி நபர் ஒதுக்கீடு 28 ரூபாய்; இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் ஒதுக்கப்பட்டது 57 ரூபாய் ஆகியது. மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் 98 ரூபாயாகி, நான்காவது திட்டத்தில் 134 ரூபாயாகி, ஐந்தாவது திட்டத்தில் 203 ரூபாயாக உயர்ந்து ஆறாவது திட்டக் காலத்தில் அது 250 ரூபாயாகி இருக்கிறது.

1982-83 ஆம் ஆண்டை எடுத்துக்கொண்டால் தமிழ்நாடு,
கர்நாடகம், கேரளம், ஆந்திரம் ஆகிய நான்கு அண்டை
மாநிலங்களையும் எடுத்துக்கொண்டால், விரலுக்குத் தகுந்த
வீக்கம் என்பதைப்போல, அந்தந்த மாநிலத்தின் தகுதி அடிப்
படையில் திட்டங்களுக்கு தொகை ஒதுக்கப்பட்டது என்றாலும்
தனி நபர் என்று கணக்கிடும்போது எல்லாம் மாநிலங்களுக்கும்
ஒன்றாக வரும்; ஒட்டுமொத்தமாகப் பார்க்கும்போது மாநிலத்
திற்கு மாநிலம் வேறுபடும். அந்த வகையிலே பார்க்கும்போது
1982-83 ஆம் ஆண்டில் திட்டச் செலவைப் பார்க்கிறபோது தனி
நபர் ஒதுக்கீடு ஆந்திரா 104 ரூபாய், கேரளா 105 ரூபாய்,
கர்நாடகம் 138 ரூபாய், தமிழ்நாடு 147 ரூபாய் என்ற அளவுக்கு
வருகிறது. அதைப்போன்று 1983-84 ஆம் ஆண்டை எடுத்துக்
கொண்டால், தமிழ்நாடு 175 ரூபாய், கர்நாடகம் 155 ரூபாய்,
ஆந்திரா 154 ரூபாய், கேரளா 126 ரூபாய் என்று வருகிறது.

அதைப்போன்று 1984-85 ஆம் ஆண்டிற்குப் பார்த்தால், தமிழ்
நாடு 180 ரூபாய், கர்நாடகம் 161 ரூபாய், ஆந்திரா 160 ரூபாய்,
கேரளா 130 ரூபாய் என்ற அளவுக்கு வருகிறது. ஆக இப்படி
பக்கத்தில் இருக்கிற மாநிலங்களை எடுத்து ஒப்பிட்டுப் பார்க்கும்
போது, தட்பவெப்ப நிலை, ஜியோகிராபிக்கல் கண்டிஷன்ஸ்
ஒரேமாதிரியாக இருக்கிற மாநிலங்களை ஒப்பிட்டுப் பார்க்கும்
போது தமிழ்நாடு சோடை போகவில்லை; கூடியவரையில்
இருப்பதை வைத்து இந்த அளவுக்குச் செய்கிறோம் என்பதற்
காக இந்த புள்ளிவிவரங்களை எடுத்துக்காட்டுகிறேன்.

மற்றொன்றையும் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.
மாண்புமிகு பேராசிரியர் அவர்கள் இங்கே குறிப்பிட்டுக் காட்டி
னார்கள். அதைப்போன்று மாண்புமிகு உறுப்பினர் திரு. குமரி
அனந்தன் அவர்களும், திரு. மணிமாறன் அவர்களும் குறிப்
பிட்டார்கள், எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் குறிப்பிட்
டார்கள், மற்றவர்களும் குறிப்பிட்டார்கள். அவர்கள்
எல்லோரும் கம்ப்ட்ரோலர் ஆன்ட் ஆடிட்டர் ஜெனரல் அவர்
களுடைய தணிக்கை அறிக்கையில் வந்திருக்கிற விவரங்களை
எடுத்துச் சொன்னார்கள். பல்வேறு வகைகளிலே குறைபாடு
களைச் சுட்டிக் காட்டியிருப்பதாக எடுத்துச் சொன்னார்கள்.
அது மட்டுமல்லாமல் ஆண்டுக்காண்டு ஒதுக்கப்படுகின்ற நிதி
ஒதுக்கீடுகள் கூட இன்னமும் செலவழிக்கப்படாமல் திருப்பி





அனுப்பப்படுகின்ற சூழ்நிலை ஏற்படுகிறது என்று திரு. குமரி
அனந்தன் தெளிவாக எடுத்துச் சொன்னார்கள். மற்றவர்களும்
பல புள்ளி விவரங்களைச் சொன்னார்கள்.

(பிற்பகல் 1-10)

நம்மைப் பொறுத்தவரையில் ஒவ்வொரு ஆண்டும் திட்டங்
களுக்கு ஒதுக்கப்படுகிற பணம் முழுவதும் அந்த ஆண்டிலேயே
செலவழிக்கப்பட வேண்டும் என்பதில் முனைப்பாக இருக்
கிறோம். குறிப்பாக எந்த எந்த துறையிலே எதற்காகப் பணம்
கேட்கிறார்களோ, எவ்வளவு கேட்டு செயற்குறிப்பு அனுப்பு
கிறார்களோ, அந்தப் பணத்தை ஒதுக்கீடு செய்யும்போது அந்தக்
குறிப்பிட்ட ஆண்டிலேயே அந்தப் பணியை நிறைவேற்ற வேண்டு
மென்று நிதித்துறை வற்புறுத்துகிறது. நிதித்துறையைப்
பொறுத்தவரையிலே இதில் கண்டிப்பாக இருக்கிறார்கள்.
ஆனால் சில நேரங்களிலே திட்டப் பணிகளை மேற்கொள்ளும்
போது பல்வேறு காரணங்களினால் — கடன் கிடைக்காத
காரணத்தினால், ஒப்பந்தக்காரர்கள் வராத காரணத்தால்,
ஒப்பந்தம் ஏற்படாத காரணத்தால், யாராவது ரிட் பெட்டிஷன்
போட்டு கோர்ட்டிலே தடை ஆணை வாங்கிவிட்டால் — பணியை
நிறைவேற்ற முடியாமல் பணத்தை திருப்பிக்கொடுக்க வேண்டிய
அவசியம் ஏற்படுகிறது. சிலபல நேரங்களில் சாங்ஷன் செய்வ
தற்குக் காலதாமதமாகி கடைசி நேரத்தில் அதாவது ஜனவரி
மாதத்தில் சாங்ஷன் பண்ணினால் அதனை மார்ச் மாதத்திற்குள்
செலவிட முடியாது. அக்டோபரிலே, செப்டம்பரிலே,
ஆகஸ்டிலே சாங்ஷன் செய்தால் கூட ஐந்தாறு மாதங்கள்
கிடைக்கும். அப்படிப்பட்டதையும் நாம் வற்புறுத்திக்கொண்டு
வருகிறோம். இந்தக் கருத்தினைப் பொறுத்தவரையில் நான்
மாறுபடவில்லை. ஒதுக்கப்படுகிற நிதியைப் பொறுத்தவரையில்
கூடுமானவரையில் எந்த நோக்கத்தோடு ஒதுக்கப்பட
வேண்டுமோ அந்த நோக்கத்தோடு ஒதுக்கப்பட்டிருக்க
வேண்டும். ஆனால் ஒதுக்கப்படாத சூழ்நிலை ஏற்பட்டது
என்பது இயற்கை என்பதையும், இயல்பு என்பதையும் நான்
சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். அது இங்கே மட்டுமல்ல;
எங்கும் இருப்பதுதான். எப்போதும் இருக்கக்கூடிய ஒன்று
தான் என்பதற்காக நான் குறிப்பிட்டுக் கூற விரும்புகிறேன்.

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1986 மார்ச் 31

ஃபினான்ஷியல் எக்ஸ்பிரஸ் என்ற ஏட்டில் பட்ஜெட் பற்றி எடுத்துச் சொல்கிறபோது அதாவது திரு. கே. பி. ஜோசப் என்ற வல்லுநர் ஒரு கட்டுரை எழுதுகிறபோது தெளிவுபட எழுதியிருக்கிறார்கள். அதை எடுத்துச் சுட்டிக்காட்டினால் நிலைமை என்ன என்பதைப் புரிந்து கொள்ள முடியும் என்பதற்காக நான் சொல்ல விரும்புகிறேன்.

It seems as a surprise that no Government in India, Central or State, succeeds in emptying completely the budget bottle.

என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். பட்ஜெட்டிலே ஒதுக்கப்படுகிற தொகை முழுவதையும் செலவழிக்கிற அளவுக்கு மத்திய அரசோ, மாநில அரசுகளோ இந்தியாவில் எங்கும் இருக்க முடியாது என்று எடுத்துச் சொல்லிவிட்டு அதற்கடுத்ததாக ஒன்றைச் சொல்கிறார்கள். அவர்கள் ஆங்கிலத்திலே எழுதி இருக்கிறார்கள். நான் தமிழில் படிக்கிறேன்.

கேரள அரசாங்கம் 1979-80-ஆம் ஆண்டில் 923 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்தது. ஆனால் இந்தியாவின் தலைமைத் தணிக்கை அதிகாரியின் கூற்றுப்படி 743 கோடி ரூபாய் மட்டுமே அந்த ஆண்டு செலவழிக்கப்பட்டது. செலவழிக்கப்படாத தொகை மட்டுமே 180 கோடி. இது மொத்த வரவு-செலவுத் திட்டத்தில் 19.5 சதவீதமாகும். உத்திரப்பிரதேச மாநிலத்தைப் பொறுத்தவரையில் 1980-ஆம் ஆண்டு மார்ச் திங்களில் மட்டும் செலவழிக்கப்பட்ட தொகை பொதுப்பணித்துறையில் 30.8 சதவீதம். நீர்ப்பாசன துறையில் 22 சதவீதம் வனத் துறையில், 28.2 சதவீதம். ஆகவே 11 மாதத்தை விட்டு விட்டு கடைசியில் மார்ச் மாதத்தில் கொண்டுபோய் ஒதுக்கீடு செய்வதன் காரணமாகத்தான் செலவிட முடியவில்லை என்று கம்ப்ட்ரோலர் எடுத்துச் சொல்லி அந்த மாதத்திலே எவ்வளவு ஒதுக்கீடு செய்ய முடிந்தது என்பதையும் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். உத்திரப் பிரதேச மாநிலத்தில் முதல் 9 மாதத்தில், பொதுப்பணித் துறைக்கு ஒதுக்கிய தொகையில் 38 சதவீதம்தான் செலவழிக்க முடிந்தது என்று எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள்.



1986 மார்ச் 31] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

1979-80-ஆம் ஆண்டில் மத்திய பிரதேச மாநிலத்தில் வரவு-செலவுத் திட்டம் 1,866 கோடி ரூபாய். ஆனால் அந்த ஆண்டில் மொத்தத்தில் செலவழிக்கப்பட்டது 1,467 கோடி ரூபாய். எனவே செலவழிக்கப்படாத தொகை 399 கோடி ரூபாய். இது மொத்த வரவு-செலவுத் திட்டத்தில் 21 சதவீதமாகும், என்று எடுத்துச் சொல்லி பல்வேறு மாநிலங்களை எல்லாம் ஃபைனான்ஷியல் எக்ஸ்பிரஸ் என்ற ஏட்டில் அந்த வல்லுநர்கள் எழுதினார்கள். கடைசியில் அவர்கள் எழுதிக்கொண்டு வருகிறபோது

The Tamil Nadu Government by comparison has done better. Its budget was Rs. 1,483 crores, of which it has spent only Rs. 1,336 crores. The unspent amount came to Rs. 147 crores or 10 per cent of the budget.

என்று சொல்லியிருக்கிறார்கள். அதாவது ஒப்பிட்டுப் பார்க்கிற நிலையில் தமிழ்நாடு அரசு சிறப்பாகச் செயலாற்றியுள்ளது. 1979-84-ல் வரவு-செலவுத் திட்டம் மொத்தம் 1,483 கோடி. அந்த ஆண்டு மொத்தம் செலவழிக்கப்பட்டது 1,336 கோடி. செலவழிக்கப்பட முடியாமல் போன தொகை 147 கோடி. இது 10 சதவீதமாக இருக்கிறது என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். மேலும் அவர்களே குறிப்பிட்டிருப்பது என்னவென்றால் இது தவிர்க்க முடியாத ஒன்று என்பதாகும். ஆனால் கூடுமான வரையில் எவ்வளவுக்கு எவ்வளவு குறைக்க வேண்டுமோ அவ்வளவுக்கவ்வளவு குறைக்க இந்த அரசு முனைப்புள்ளத்தோடு இருக்கிறது. இன்னும் குறைய, குறையத்தான் நமக்கு நல்லது.

குறையாமல் இரண்டு ஆண்டுகள் தவறிவிடுமேயானால் ஒன்றரைப்பங்கு செலவினம் அதிகமாகிறது. இந்த ஆண்டு ஒரு கோடி ரூபாய்க்கு ஆகும் திட்டம் இந்த ஆண்டே நிறைவேற்றப்பட முடியாவிட்டால் அடுத்த ஆண்டு ரிவைஸ்ட் எஸ்டிமேட் வந்து ஒரு கோடியே 40 இலட்சம் என்று பெருகிவிடும். இன்னும் இரண்டாண்டுகள் தவறிவிட்டால் 2½ கோடி 3 கோடி என்று ஆகிவிடும். இப்படி ஒவ்வொரு திட்டமும் போடுகிறபோது நமக்கு அதிகச் செலவு ஏற்படுகிறது. காலத்தாழ்வும் ஏற்படுகிறது. என்வே நோக்கம் நிறைவேறாமல் போகிறது என்பதைப் பொறுத்தவரையில் மாண்புமிகு உறுப்பினர்கள்

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1986 மார்ச் 31

சுட்டிக் காட்டியதை நான் ஏற்றுக்கொண்டு நிதித்துறை அதை அடிக்கடி வற்புறுத்திக் கொண்டு வருகிறது என்பதையும் நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

இந்த மாநிலத்தைப் பொறுத்தவரையில் அதிகமான தொழில் வளர்ச்சி வேண்டும் என்று வற்புறுத்துவதை நான் ஏற்றுக் கொள்கிறேன். அதிக அளவுக்கு ஊக்கமும், ஆக்கமும் பெற வேண்டும் என்பதை ஏற்றுக் கொள்கிறேன். அதிகமான அளவுக்கு அவர்களுக்கு உதவி செய்கிற மனப்பான்மை அதாவது இப்படி உதவி செய்ய வேண்டும் என்பதை ஏற்றுக்கொள்கிறேன். மாவட்டத்திற்கு மாவட்டம் அமைந்திருக்கிற தொழில் துறை அதிகாரிகள் எல்லாம் ஆங்காங்கு தொழில் வளர்ச்சியில் முன்னேறுகிற தொழில் அதிபர்களுக்கு உறுதுணையாக இருந்து, கஷ்டங்கள் இல்லாமல் விரைவாக உரிமங்கள் கிடைப்பதற்கு என்னென்ன செய்யவேண்டுமோ அதைச் செய்கிற சூழ்நிலை ஏற்படவேண்டும்; சிங்கப்பூரில் இருப்பதுபோன்று, வேறு பல இடங்களில் இருப்பது போன்று விரைவு படுத்துகிற ஒரு சூழ்நிலை ஏற்படவேண்டும் என்று எடுத்துச் சொல்லப்பட்ட கருத்துக்கள் அத்தனையையும் நான் ஏற்றுக் கொள்கிறேன். ஆகவே தமிழ்நாட்டிலே தொழிலே வளரவில்லை என்றோ, அல்லது தொழில் வளர்ச்சியே அறவே இல்லை என்றோ, அது கீழே போய்விட்டது என்றோ அவரவர்களுக்குத் தோன்றியபடி அது 14-வது இடம், 15-வது இடம், 19-வது இடம், 25-வது இடம், 30-வது இடம் என்று சொல்லிக் கொண்டு போவதோ சரியாக இருக்காது, பொருத்தமாக இருக்காது என்பதற்காகத்தான் நான் அதைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். எக்கனாமிக் சர்வே ஆஃப் தமிழ்நாடு என்ற அறிக்கையின் அடிப்படையிலே பார்க்கும்போது

The performance of major industries in 1985-86 has been better than in 1984-85 with the aluminium, cement, fertiliser, automobile, electronics, and other similar industries stepping up their output noticeably.

என்று அந்த அறைகளிலே அளவிற்கு 1984-85-ஐ விட, 1985-86-ல் [illegible]தான் தமிழகத்தைப் பொறுத்தவரையில் நடைபெற்[illegible] என்று எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அதைப் [illegible] ரிப்போர்ட் ஆன் தமிழ்நாடு எக்கனாமிக்கல் குரோத்



1986 மார்ச் 31] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

என்கிற அந்த ரிப்போர்ட்டில் The performance of Tamil Nadu economy in 1984-85 and 1985-86 was impressive என்பதையும் அவர்களே எடுத்துக் கொடுத்திருக்கிறார்கள் என்று எடுத்துச் சொல்ல விரும்புகிறேன்.

மற்றொன்றையும் எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். மேதகு இந்தியாவின் துணை குடியரசுத் தலைவர், இந்த மாநிலத்தை நன்கு அறிந்தவர். இங்கே தொழில் அமைச்சராக 10 ஆண்டுகள் இருந்தவர். இப்போது இந்தியாவினுடைய துணை குடியரசுத் தலைவராக இருக்கிற மேதகு ஆர். வெங்கட்ராமன் அவர்கள் 4, 5 தினங்களுக்கு முன்னால் பாண்டிச்சேரிக்கு வந்து, அங்கே ஒரு தொழில் துறையினுடைய திறப்பு விழாவில் கலந்துக் கொண்டு உரையாற்றியபோது அவர்கள் பேசிய பேச்சுக்களை — பத்திரிகையில் வந்ததைத்தான் — நான் எடுத்துச் சொல்ல விரும்புகிறேன்.

இவைகளை ஏன் சொல்கிறேன் என்றால் ஒட்டு மொத்தமாக நாம் தமிழகத்தை இழிவு படுத்திக் கீழே இறக்கவோ, நம்மை நாமே குறை சொல்லிக் கொள்வதோ சரியல்ல. 'தோழமையானாலும் ஏழ்மை பேசல்' என்று ஒரு பழமொழி உண்டு. ஆக நம்மை நாமே குறைத்துக் கொள்வதனால் பயன் இல்லை. ஊக்கம் தருவதற்கு எவ்வளவு வேண்டுமானாலும் சொல்லுங்கள். அத்தோடு, இன்னும் மேலே போக வேண்டும் என்று சொல்லுங்கள்; நடந்து தானே போகிறீர்கள். ஓடுங்கள் என்று வேண்டுமானாலும் சொல்லுங்கள். ஓட வேண்டாம் பாயுங்கள் என்று வேண்டுமானாலும் சொல்லுங்கள்; தாண்டி குதியுங்கள் என்று வேண்டுமானாலும் சொல்லுங்கள். அதற்கு உங்களுக்கு திறமை இல்லை என்று வேண்டுமானாலும் சொல்லுங்கள், ஆனால் இருப்பதையும் கீழே கொண்டு போக வேண்டாம் என்பதுதான் என்னுடைய எண்ணம். அந்த வகையிலேதான் மேதகு துணை குடியரசுத் தலைவர் திரு. ஆர். வெங்கட்ராமன் அவர்கள் பேசியதைக் குறிப்பிட விரும்புகிறேன். அவர்கள் பேசும்போது பேசினார்கள், "பிற மாநிலங்களுக்கு நான் பயணம் செய்கிறபோது பல நண்பர்கள் தமிழகத்தின் வளர்ச்சியை அடிக்கடி குறிப்பிட்டு பாராட்டினார்கள். தமிழகம் தொழில் துறையில் அந்த அளவிற்கு வளர்ச்சி அடைந்ததற்குக் காரணம், நல்ல திறமை மிக்க

தொழில் பயிற்சி அடைந்தவர்களை தமிழகம் அதிக அளவில் பெற்றிருக்கிறது. பாலிடெக்னிக்கில் பயிற்சி பெற்ற பயிற்சியாளர்கள் தங்கள் திறமையை மேலும் மேலும் வளர்த்துக் கொள்ள வேண்டும் என்ற ஆவலின் அடிப்படையில் செயல்படுவதும் காரணம். மேலும் பொறியியல் பயிற்சி அடைந்தவர்கள் தங்கள் தொழில் நிபுணத்துவத்தினால், பிற நாட்டவர்களின் தொழில் திறமையை விட தொழில் வல்லுநர்களாக சிறந்து விளங்குவதும்; மேல்நாட்டு இயந்திரங்களை தருவித்து தமிழகத்து தொழில் வல்லுநர்களான இளைஞர்களிடம் கொடுத்தாலும் சரி, புதிய புதிய தொழில் நுட்பத்தை அயல் நாட்டிலிருந்து தொடர்ந்து பெற்று, இங்கு தொழில் நிபுணர்களிடம் கொடுத்தாலும் சரி, உடனுக்குடன் அதை எழுதிப் புரிந்துக் கொண்டு தமிழகத்தில் வேக வேகமாக தொழில் முன்னேற்றம் காணுகிறார்கள் என்று மேதகு துணை குடியரசுத் தலைவர் திரு. ஆர். வெங்கட்ராமன் அவர்கள் பாராட்டியிருப்பதை நான் இந்தச் சந்தர்ப்பத்தில் இங்கே நினைவூட்ட விரும்புகிறேன்.

மற்றும் வேறு ஒன்றையும் குறிப்பிட ஆசைப்படுகிறேன். ஆறாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் பொருளாதார நிலையைப் பொறுத்தவரைக்கும் கீழே போய்விட்டதா? அல்லது எந்த அளவுக்கு பொருளாதாரம் சீர்குலைந்து போயிருக்கிறது என்று பார்ப்போமேயானால், அகில இந்திய அளவில், 6-வது ஐந்தாண்டுத் திட்டம் முழுவதும், ஆண்டு வளர்ச்சி என்று சராசரி ஆண்டு வளர்ச்சியாக கணக்கிட்டுப் பார்ப்போமேயானால் 5.3 சதவீதமாக இருக்கும்போது தமிழகத்தின் ஆண்டு வளர்ச்சி 7.3 சதவீதமாக இருந்தது.

அதே மாதிரி 1983-84-லே தமிழகத்தினுடைய மொத்த வருமானம் 9 ஆயிரத்து 1 கோடி ரூபாய். அதேபோல 1984-85-லே மொத்த வருமானம் 10 ஆயிரத்து 634 கோடி ரூபாய். அதனுடைய வளர்ச்சி பெர்சென்டேஜ் 18.15 சதவீதம். அதேபோல அகில இந்தியாவினுடைய கணக்கைப் பார்ப்போமேயானால், அகில இந்தியா முழுவதும் 1 லட்சத்து 59 ஆயிரத்து 805 கோடி, அது 1983-84-ன் கீழே வருமானம், 1984-85-லே 1 லட்சத்து 74 ஆயிரத்து 183 கோடி அகில இந்தியா முழுவதும் வருமானம். ஆக அகில இந்தியா முழுவதும் வருமானத்தினுடைய வளர்ச்சி எவ்வளவு

1986 மார்ச் 31] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

என்று கணக்கிட்டுப் பார்த்தால் 9.68 சதவீதம் என்றால், தமிழகத்தினுடைய வளர்ச்சி 18.15 சதவிகிதமாக ஆகியிருக்கிறது. பெர் கேப்பிட்டா என்று தனி நபர் வருமானத்தை எடுத்துக் கொண்டால், தமிழகத்திலே 16.10 என்றால் அகில இந்தியாவில் 7.52 தான். இவை எல்லாம் எதைக் காட்டுகிறது என்றால் நாம் பெற்றிருக்கிற ஊக்கம் ஓரளவுக்கு மனநிறைவு தரத் தக்க வகையிலே இருந்தாலும், மேலும் வளர்வதற்கான, திரு. வெங்கட்ராமன் அவர்கள் சொல்லியதைப் போல மேலும் ஊக்கம் பெறுவதற்கான, வளர்வதற்கான கூறுபாடுகள் நம்பிடத்திலே ஏராளமாக இருக்கின்றன என்பதையும் இந்த வாய்ப்பிலே நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

(பிற்பகல் 1-20)

தொழில் துறைக்கு வரவு—செலவுத் திட்டத்தினுடைய தன்மைகளை எடுத்துச் சொல்கிறபொழுது மாண்புமிகு உறுப்பினர்கள் இந்த பட்ஜெட்டில் தொழிலுக்கு அதிக ஊக்கம் கொடுக்கவில்லை; பல கோடிக்கணக்கான ரூபாய் ஒதுக்கவில்லையென்று சொன்னார்கள். எந்தக் காலத்திலும் எந்தப் பட்ஜெட்டிலும் தொழிலுக்கு 100 கோடி, 200 கோடியென்று ஒதுக்கியதே கிடையாது. ஆனால் தொழிலுக்கு ஊக்கம் தர நாம் பங்கு மூலதனம் எடுக்கிற அளவிற்கு, தொழில் துறையை ஊக்குவிக்கிற அளவிற்கு, ஆக்கமும் ஊக்கமும் தருகிற அளவிற்குத்தான் தொழில் துறை இருக்கும். தொழில் துறை நிதி நிறுவனங்களையெல்லாம் பயன்படுத்தி, வங்கிகளையெல்லாம் பயன்படுத்தி, ஐ.டி.பி.ஐ.-யெல்லாம் பயன்படுத்தி, அகில இந்தியாவில் இருக்கிற நிதிக் கார்ப்பரேஷன்களை எல்லாம் பயன்படுத்தி, எல்.ஐ.சி. யெல்லாம் பயன்படுத்தி, எந்த மாநிலத்தில் எவ்வளவு தொழில் வளர்ச்சியைப் பெருக்குகிறார்களோ அந்தக் கணக்குதான் பார்க்கப்படும். தொழில் துறை மானியக் கோரிக்கை வருகிறபோது தொழில் அமைச்சர் அவர்கள் இந்தப் புள்ளிவிவரங்களையும், மற்றவைகளையும் எந்தெந்த வகையிலே எவ்வளவு வந்தது என்பதை முழுக்க அவர்கள் தருவார்கள்.

மாண்புமிகு உறுப்பினர்கள் இந்த பட்ஜெட்டை மட்டும் புரட்டிப் பார்ப்பார்களானால் தொழிலுக்கு இவ்வளவு தானே ஒதுக்கியிருக்கிறார்கள். இதை வைத்துக் கொண்டு எந்தத் தொழிலை வளர்க்கவிருக்கிறார்கள் என்று கேட்டால் எந்தத்

தொழிலையும் நாம் வளர்க்க முடியாது தான். இதிலே ஒதுக்கியிருக்கிற தன்மையை நீங்கள் பார்ப்பீர்களானால் மாண்புமிகு உறுப்பினர்களுடைய கவனத்திற்கு ஒன்றைக் கொண்டு வருகிறேன். 1938-39 ஆம் ஆண்டிலே 27 லட்சம் ரூபாய் தான் தொழில் வளர்ச்சிக்கென்று ஒதுக்கினார்கள். 1967-68-ல் தொழில் வளர்ச்சிக்கு பட்ஜெட்டில் ஒதுக்கியது 3 கோடியே 56 லட்சம் தான். 1967-68 ஆம் ஆண்டில் தொழில் வளர்ச்சிக்கு நாடு முழுவதற்கும் மாநில அரசு ஒதுக்கிய மூன்று கோடியை வைத்துக் கொண்டா தொழிலை வளர்த்தது? அதற்கு பிறகு 1975-76 ஆம் ஆண்டு பட்ஜெட்டில் பத்து கோடியே 31 லட்சம் ரூபாய் தொழில் வளர்ச்சிக்கென்று இந்தத் துறையின் மூலம் செலவழிக்கப் பட்டது. 1977-78 ஆம் ஆண்டில் தொழில் வளர்ச்சிக்கு இந்தத் துறையின் மூலம் செலவழிக்கப்பட்டது 20 கோடியே 21 லட்சம் ரூபாய். 1985-86 ஆம் ஆண்டில் செலவழிக்கப்பட்டது 53 கோடியே 50 லட்சம் ரூபாய். இந்த ஆண்டிலும் வருகிற ஆண்டிலும் அதாவது 1986-87 ஆம் ஆண்டில் 47 கோடியே 98 லட்சம் ரூபாய் மெஷினரிகளுக்காக நாம் பங்கு மூலதனம் போட புதுப்புது தொழில்களை ஆரம்பிக்க நாம் ஓரளவிற்குத் தான் போடுவோம். மீதியை மற்ற பங்குதாரர்கள் போட, நிதிக் கார்ப்பரேஷன்கள் எல்லாம் கொடுக்க வாங்கிக் கொண்டு தொழில் வளர்ச்சியில் ஆக்கம் தருகிறோமே தவிர இந்தப் பட்ஜெட்டில் இருக்கிற தொகையை மட்டும் பார்ப்பீர்களானால் அதன் மூலம் தொழில் வளர்ச்சி வந்துவிடுமென்று முடிவு கட்டிவிட முடியாது. அந்த வகையிலே பார்க்கிறபோது தமிழ் நாட்டில் சிறு தொழில்களின் வளர்ச்சியின் தன்மைகளைப் பார்க்கிறபோது 1977-78 ஆம் ஆண்டில் அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொள்ளும் பொழுது தமிழகத்திலே பதிவு செய்யப் பெற்ற சிறு தொழிற்சாலைகள், ரெஜிஸ்டர்ட் ஸ்மால் ஸ்கேல் இண்டஸ்ட்ரீஸ் என்ற கணக்கிலே இருந்தவை 18,789. பதிவு செய்யப்படாமல் இதைத் தவிர பல சிறு தொழிற்சாலைகள் இருக்கின்றன. 1986 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 28 ஆம் தேதி வரையில் இந்தக் கணக்கைப் பார்த்தால் தமிழ் நாட்டில் 70,130 சிறு தொழிற்சாலைகள் இருக்கின்றன. ஆகவே 18 ஆயிரத்திலிருந்த சிறு தொழில்கள் பதிவு செய்யப்பட்டவை 90,130 ஆக வளர்ந்திருக்கிறதென்று சொன்னால் சிறு தொழில்களுக்கு ஆக்கம் ஏற்பட்டிருக்கிறது. [illegible] தொழில்களை





பல பேர்கள் நடத்த முன்வந்திருக்கிறார்கள் என்பது உண்மை. மாண்புமிகு பேராசிரியர் அவர்கள் எடுத்துச் சொல்கிறபோது மத்திய அரசு கொண்டு ஒரு திட்டத்தின் மூலம் இந்தியா முழுவதும் இருக்கிற சிறுதொழில்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றன என்று சொன்னார்கள். அதற்கு குரல் கொடுக்க வேண்டுமென்று சொன்னார்கள். மாநில அரசு அவர்களுடன் சேர்ந்து மத்திய அரசோடு வாதாடுவதற்கு ஆயத்தமாக இருக்கிறது. அதையும் எடுத்துச் சொல்லி இருக்கிறோம். 20 லட்சம் வரையில் கொடுத்திருக்கிற அந்தகைய விலக்கு இப்போது 7½ லட்சமாக குறைத்துவிட்டதன் காரணமாக 7½ லட்சத்திற்கும் 20 லட்சத்திற்கும் இடையில் முதலீடு போட்டு சிறு தொழில்களை நடத்துகிறவர்கள் எல்லாம் இந்தப் புதிய திட்டத்தின் அடிப்படையில் மிகவும் அவதியுறுவார்கள். இதுவரையில் எந்தத் தொல்லையும் இல்லாமல் 20 லட்சம் வரையில் முதலீடு செய்தவர்கள், தங்களுடைய பணிகளைச் செய்து கொண்டிருந்தவர்கள் 7½ லட்சத்திற்கு மேலே கணக்கு இருக்குமேயானால் பல சங்கடங்களுக்கு உள்ளாக வேண்டி வரும். மறுபடியும் பழைய 20 லட்சத்தையே இலக்காக வைத்து அதற்குள்ளே இருப்பவர்களுக்கு விலக்கு அளிக்க வேண்டுமென்ற கருத்தை இந்த அரசு ஏற்றுக் கொண்டிருக்கிறது. அதை வாய்ப்பு ஏற்படும் பொழுது தொழில் துறை அமைச்சர் அவர்கள் வலியுறுத்துவார்கள். மத்திய அரசிற்கு இந்த மாநில அரசின் மூலம் எடுத்துச் சொல்லப்படும் என்பதை இந்த வாய்ப்பிலே தெரிவித்துக் கொள்கிறேன்.

பெருந்தொழில்கள், நடுத்தர தொழில்கள் 1977-78 ஆம் ஆண்டில் 480 ஆக இருந்தன. அந்த மிடில் ஸ்கேல் அண்ட் லார்ஜ் ஸ்கேல் இண்டஸ்ட்ரீஸ் இப்போது 1,002 ஆக மாறியிருக்கின்றன என்பதை பார்க்கிறபொழுது தொழில் வளர்ச்சி இருந்து கொண்டு தான் இருக்கிறது என்பதை இந்த வாய்ப்பிலே கூறிக்கொள்ள விரும்புகிறேன். தொழில் வளர்ச்சியினுடைய போக்கு என்று நாம் பார்த்தாலும் கூட அதிலேயும் தமிழகம் எந்த வகையிலேயும் கீழே விழுந்துவிடவில்லை என்பதை நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். அதாவது Industrial growth trend என்ற ஒரு கணக்கின்படி பார்த்தாலும் கூட, 1979-லே 5.2 பர்சென்ட் நம்முடைய குரோத் ட்ரெண்ட் என்றால், ஆல் இந்தியாவிலே 1.9 சதவிகிதம் தான். 1980-லே தமிழகம் 5.7 சதவிகிதம்

என்றால், அகில இந்தியாவிலே 0.7 சதவிகிதம் தான். 1981-லே 10.5 பர்சென்ட் தமிழகத்தினுடைய குரோத் ட்ரெண்ட் என்றால், அகில இந்திய அளவிலே 9.3 பர்சென்ட், அது ஓரளவிற்கு வளர்ந்திருக்கிறது. அந்த ஆண்டு அகில இந்தியாவிலே ஓரளவிற்கு வளர்ந்து இருக்கிறது. அதைவிட அதிகமான வளர்ச்சி நமக்கு என்றாலும், அகில இந்தியாவிலே ஏற்கனவே இருந்ததைவிட அதிகமான வளர்ச்சி நமக்கு இருக்கிறது. 1982-லே தமிழகத்தினுடைய வளர்ச்சி 5.8 சதவிகிதம். ஆல் இந்தியா 4.5 சதவிகிதம். இதையெல்லாம் நான் எதற்காகச் சுட்டிக்காட்டுகிறேன் என்றால், நாம் எதிலும் சோடை போகவில்லை என்பதையும், விழிப்புணர்வோடுதான் இருக்கிறோம், அந்த உணர்வோடுதான் இருந்து பணியாற்றுகிறோம் என்பதற்கும், வாய்ப்பு ஏற்படும்போதெல்லாம் அதை பயன்படுத்திக் கொண்டு வருகிறோம் என்பதையும் மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரிவிப்பதற்காகத்தான் இதை நான் சொல்கிறேன்.

தொழில் உற்பத்தி குறியீட்டுப் போக்கு, Index of Industrial Production Trend என்ற கணக்கின்படி நாம் பார்த்தாலும், 1977-லே தமிழ்நாடு 143 இண்டக்ஸ் நெம்பர், ஆல் இந்தியா 138; 1978-லே தமிழ்நாடு 164, அப்போது ஆல் இந்தியா 148; 1979-லே தமிழ்நாடு 173, அப்போது அகில இந்தியா 150 தான். தமிழ்நாடு 1980-லே 188-க்கு போய்விட்டது. அப்போது 153 ஆல் இந்தியா. 1981-லே தமிழ்நாடு 202, அப்போது ஆல் இந்தியா [illegible] ஆகவே இந்த Industrial Growth Trend பார்த்தாலும் சரி, அல்லது Industrial Production Trend பார்த்தாலும் சரி, ஆல் இந்தியா ஆவரேஜை விட உயர்ந்த நிலையில்தான் தமிழகத்தினுடைய தொழில் வளர்ச்சி போக்கு இருக்கிறது என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன்.

மத்திய அரசினுடைய தொழில் துறை முதலீடுகள் ஆண்டுக்காண்டு மத்திய அரசு கூட்டிக் கொண்டு வருகிறது. அதைத்தான் மாண்புமிகு உறுப்பினர் சித்தன் அவர்கள் குறிப்பிட்டார்கள், அந்தந்த ஆண்டிலே அது வளர்ந்து இருக்கிறது என்பதை. ஆனால் நமக்கு இருக்கிற குறை எல்லாம், இதனை ஒத்த அளவுக் கொண்ட இதனை ஒத்த





நில அளவுக் கொண்ட, மக்கள் எண்ணிக்கை அளவு கொண்ட மற்ற மாநிலங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கிறபோது, நமக்குக் கிடைக்க வேண்டிய பங்கு கிடைக்கவில்லை என்பதுதான். அதற்கு எல்லோரும் சேர்ந்து ஒத்துழைக்க வேண்டும், காங்கிரஸ் கட்சியும் சேர்ந்து ஒத்துழைக்க வேண்டும் என்பதுதான் எங்களுடைய கோரிக்கையே தவிர மத்திய அரசு ஆண்டுக்காண்டு கொடுத்துக் கொண்டு வருகிறது. ஆனால் எப்படிப்பட்ட நிலைமை என்பதை மட்டும், 1983 ஆம் ஆண்டு நிலையை மட்டும் நான் குறிப்பிட்டுக் காட்ட விரும்புகிறேன். மத்திய அரசினுடைய முதலீடு பீகாரிலே மட்டும் 4,692 கோடி, மகாராஷ்டிராவிலே 3,993 கோடி, மத்தியப் பிரதேசத்திலே 3,861 கோடி, உத்தரப் பிரதேசத்திலே 2,490 கோடி, மேற்கு வங்காளத்திலே 2,394 கோடி, ஆந்திர பிரதேசத்திலே 2,118 கோடி, அஸ்ஸாமிலே 1,556 கோடி, ஒரிசாவிலே 1,552 கோடி, தமிழ் நாட்டிலே 1,332 கோடி. ஆகவே 1983 கணக்கை நான் சொல்கிறேன். போன ஆண்டு தமிழகத்திற்கு 1,496 கோடி. 1985-86 கணக்கைப் பார்த்தால் 1,496 கோடிக்கு வருகிறது. இது இன்னும் வளர வேண்டும் என்று நாம் எடுத்துரைக்கும்போதெல்லாம் ஒரு காரணத்தை அவர்கள் சொல்கிறார்கள். அங்கே சுரங்கங்கள் இருக்கின்றன, நிலக்கரி இருக்கிறது, இரும்பு இருக்கிறது, ஆகவே அங்கே முதலீடு செய்ய வேண்டி இருக்கிறது என்று. அப்படிப்பட்ட இடங்களிலே முதலீடு செய்ய வேண்டும் என்பதிலே, அகில இந்திய வளர்ச்சியைக் கருதி நாம் தடுக்கவில்லை. ஆனால் மூலப் பொருள்கள் இல்லாமல் இருக்கிற, எலக்ட்ரானிக்ஸ் போன்றவைகள், மூலப் பொருள்கள் அதிகமாக இல்லாமல், அறிவுத் திறனை மட்டுமே கொண்டு, தொழில் நுட்பத் திறமை மட்டுமே கொண்டு செய்யக் கூடிய இந்த போட்டோ பிலிம்ஸ் போன்றவைகளுக்கு, இப்படிப்பட்ட எலக்ட்ரானிக்ஸ் போன்றவைகளுக்கு எல்லாம், Naphtha Crafters போன்றவைகள் எல்லாம் இங்கே கொண்டு வந்து சேர்க்கலாம் என்பதற்கும், அதற்கு நிதி ஒதுக்க வேண்டும் என்கிறபோது, 'கேளுங்கள் கொடுக்கப்படும், தட்டுங்கள் திறக்கப்படும்' என்று இயேசுநாதர் வேறு ஒரு இடத்திலே எடுத்துச் சொன்னார், ஆகவே கேட்டால்தான் கிடைக்கும், தட்டினால்தான் திறக்கப் படும் என்ற கொள்கையினுடைய அடிப்படையிலே எல்லோரும்

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1986 மார்ச் 31

சேர்ந்து ஒட்டுமொத்தமாக கேட்போமானால், நமக்கு அதிகமான அளவிற்கு பங்கு கிடைப்பதிலே நியாயம் இருக்கிறது. எனவே அந்த அடிப்படையிலே தான் நாம் கேட்கிறோம்.

அடுத்து டெக்னிசியன்களை எடுத்துக் கொண்டால், அகில இந்தியாவிலே பெஸ்ட் டெக்னிசியன்களை உருவாக்கித் தருவது நம்முடைய தமிழகம் தான். இன்றைக்கு இந்தியாவிலே இருக்கிற பெரிய பெரிய தொழிற்சாலைகளைப் பார்த்தால், அங்கே யிருக்கிற முக்கியமான டெக்னிசியன்கள், முக்கியமான எஞ்சினியர்கள் யாரைப் பார்த்தாலும் தமிழகத்தைச் சேர்ந்தவர்கள் தான் பெரும்பாலும் இருக்கிறார்கள் என்பது மட்டுமல்லாமல், பாராட்டுக்குரிய வகையில், போற்றுதலுக்குரிய வகையில், அங்கே இருக்கிற மேனேஜர்கள் மற்றவர்களாலே மெச்சத் தகுந்த அளவிற்கு பணியாற்றி வருகிறார்கள். இவ்வளவு அறிவுத் திறன் இருக்கிற காரணத்தாலே, தொழில் நுட்பத் திறன் இருக்கிற காரணத்தாலே, இந்தத் தொழிற் சாலைகள் அதிகமாக வர வர இந்த மாநிலத்தினுடைய வாழ்க்கைத் தரம் உயர்வதற்கு முடியும்.

(பிற்பகல் 1-30)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் அனுமதியுடன் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, பேராசிரியர் அவர்கள் சொன்னதைப் போல வறுமைக் கோட்டிற்குக் கீழே இருப்பவர்களுடைய எண்ணிக்கை நாளுக்கு நாள் குறைகின்ற அளவுக்கு ஒரு கணக்கை நான் சொன்னதற்கு காரணம் அன்றைக்கு காலையில்தான் நான் வானொலியில் கேட்டேன். அதை வைத்துத்தான் பொதுக் கூட்டத்திலே நான் எடுத்துச் சொன்னேன். 52, கிட்டத்தட்ட 40 அளவுக்கு வந்திருக்கிறது என்றார்கள். அந்த ஏழ்மைக் கோட்டிற்கு கீழே இருக்கிறவர்களைக் கணக்கிடுவதற்குக்கூட ஒரு முறை இல்லாமல் இருக்கிறது. திட்டக் குழு ஒரு கணக்கைச் சொல்கிறது; பைனான்ஸ் டிபார்ட்மெண்ட் ஒரு கணக்கைச் சொல்கிறது; எக்கனாமிஸ்ட்ஸ் ஆளுக்கு ஆள் ஒன்றொன்று சொல்கிறார்கள். நாம் பொதுவாக எடுத்துக் கொண்டிருப்பது திட்டக் குழு சொல்வதைத்தான். எடுத்துக்



1986 மார்ச் 31] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

கொண்டு கணக்குப் போட்டுக் கொண்டு வருகிறோம். அன்றைக்கு நான் பொதுக் கூட்டத்தில் சொன்னது அன்றைக்குக் காலையிலே வானொலியின் மூலமாகச் சொன்னார்கள்; அதை வைத்துக் கொண்டுதான் நான் சொன்னேனே தவிர வேறு குறிப்புகள் என்னிடத்தில் இல்லை. என்னிடத்தில் குறிப்புகள் இருக்கின்றன. அது திட்டக் குழு கொடுத்தக் குறிப்புகள்தான் என்பதையும் குறிப்பிட விரும்புகிறேன். அகில இந்தியா முழுவதும் நிதி நிறுவனங்கள் தொழில் வளர்ச்சிக்காக அளித்த கடன் உதவி 18,500 கோடி ரூபாய். அதிலே கிட்டத்தட்ட தமிழகம் 1,868 கோடியை பல்வேறு தொழிற்சாலைகளுக்கு வாங்கி இருக்கிறோம். ஆகவே, பணமே இல்லாமல் தொழில் வளர்ச்சிக்கு உதவியே இல்லாமல் தமிழகம் இல்லை என்பதற்காகத்தான் சொல்கிறேன். 1984-85-ல் மட்டும் இந்தியா நிதி நிறுவனங்களிடமிருந்தும் பெற்றுள்ளது 18,500 கோடி; அதிலே தமிழகம் மட்டும் பெற்றது 1,868 கோடி. தமிழகத்திலே இருக்கிற தனியார் துறை, பொதுத் துறை, கூட்டுத் துறை எல்லாத் துறைகளும் சேர்ந்து பெற்றது 1,868 கோடி ரூபாய். 10 சதவீதம் நாம் பெற்றிருக்கிறோம். நம்முடைய மக்கள் தொகை 7 புள்ளி சில்லரை தான் வருகிறது என்றாலும், இது ஓரளவுக்கு கூடுதல்தான். இதிலும்கூட முதலிடத்தை மகாராஷ்டிரம் பெற்றிருக்கிறது; இரண்டாவது இடத்தை குஜராத்தும் மூன்றாவது இடத்தை தமிழகமும் பெற்றிருக்கிறது. ஏற்கனவே தொழில் துறையில் வளர்ந்த மாநிலங்கள் இரண்டும்—மகாராஷ்டிரமும், குஜராத்தும், அவைகள் அதிகமாக முதலீடு போடுவதற்கு தயாராக இருக்கின்றன. ஒரு இண்டெண்ட் வாங்கிக் கொண்டு வந்தாலும், லைசன்ஸ் வாங்கிக் கொண்டு வந்தாலும் சரி 15 நாட்களிலே தொழிற்சாலையை உருவாக்குகின்ற தன்மையை பெற்றவர்கள் குஜராத்திலும், மகாராஷ்டிரத்திலும் இருக்கிறார்கள். தமிழகத்திலே லைசன்ஸ் வாங்கிக் கொண்டு வந்தாலும் கூட அதற்கான பொருள்களை திரட்டுவதற்கு மட்டும் 6 மாதம், 8 மாதம் ஆகிறது. கஷ்டப்பட்டு சில பேர் திரட்ட முடியாத நிலையிலே விட்டுவிடுகின்ற சூழ்நிலை கூட இருக்கிறது. வேறு ஒருவருக்கு அதை நாம் வாங்கித் தருகிற சூழ்நிலை கூட இருக்கிறது. அந்த வகையிலே நாம் காணுகின்றபோது கூட நாம் மூன்றாவது இடத்திலே இருக்கிறோம். ஐ.டி.பி.ஐ.-யினுடைய உதவியைக் கணக்குப்

பார்த்தாலும் 1984-85-ல் முதலிடம் மகாராஷ்டிரத்திற்கும், இரண்டாவது இடம் தமிழகத்திற்கும் இருக்கிறது. டி.ஐ.ஐ.சி.-யிலே உதவியைப் பெறுவதிலே நான்காவது இடத்திலே நாம் இருக்கிறோம். முதலாவது இடம் மகாராஷ்டிரம், இரண்டாவது இடம் குஜராத்; மூன்றாவது இடம் உத்திரப் பிரதேசம், நான்காவது இடம் தமிழகமாக இருக்கிறது. ஐ.சி.ஐ.சி.ஐ. என்கிற இந்திய தொழில் முதலீட்டுக் கழகத்தின் உதவியைப் பெறுவதிலே நாம் மூன்றாவது இடத்திலே இருக்கிறோம். ஐ.எஃப்.சி.ஐ. என்கிற இந்திய தொழில் நிதி கழகத்தின் உதவியைப் பெறுவதில் 1984-85-ல் முதலிடத்தில் மகாராஷ்டிரம் இருக்கிறது, இரண்டாவது இடத்தில் தமிழகம் இருக்கிறது. சிப்காட் மூலமாக மாநிலங்களின் தொழில் வளர்ச்சியோடு ஒப்பிடும்போது 1984-85-லே தமிழ் நாட்டை மற்ற மாநிலங்களுடைய சிப்காட்-டுடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போது தமிழ்நாடு இரண்டாவது இடத்திலே இருக்கிறது என்பதையும் நான் குறிப்பிட்டுக் கூறிக்கொள்ள விரும்புகிறேன். எல்.ஐ.சி.யுனுடைய உதவியைப் பெற்று தொழிற்சாலைகளை வளர்க்கிறோம். அதிலேயும் கூட தமிழகம் நான்காவது இடத்திலே இருக்கிறது. 8 பர்சென்ட் உதவியை நாம் எல்.ஐ.சி.யிடமிருந்து பெற்றிருக்கிறோம். யூனிட் டிரஸ்ட் ஆப் இந்தியாவிடமிருந்து உதவியைப் பெறுவதிலே நாம் ஐந்தாவது இடத்திலே இருக்கிறோம். அதிலும் நாம் 8 சதவிகதம் உதவியைப் பெற்றிருக்கிறோம்.

ஜெனரல் இன்சூரன்ஸ் கார்ப்பரேஷன் மூலமாக உதவி பெறுகிறோம். அதிலும் நாம் ஐந்தாவது இடத்திலே இருக்கிறோம். அதிலே கிட்டத்தட்ட 6 சதவிகிதம் தமிழகத்திற்கு வருகிறது. 5, 4, 3, 2 என்ற இடத்திலிருந்து நிதி உதவியைத் தருகின்ற நிறுவனங்களிடமிருந்து நாம் பெற்றுக் கொண்டு இருக்கிறோம் என்பதையும் இந்த வாய்ப்பிலே நான் கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

புதிய தொழிற்சாலைகள் உருப்பெறவில்லை என்று சொன்னார்கள். தொழில் துறை அமைச்சர் அவர்கள் மானிய கோரிக்கை வருகின்றபோது விரிவாகவும், விளக்கமாகவும் எடுத்துச் சொல்வார்கள். ஆனால் தொழில் துறையே வளரவில்லை என்ற தன்மை இல்லை. இந்த நிதி நிலை அறிக்கையில் அவைகள் இருக்க முடியாதே தவிர, தொழில்

1986 மார்ச் 31] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

துறையைப் பற்றி வைக்கப்படுகிற விளக்கங்களிலும், மற்றவைகளிலும் மாண்புமிகு உறுப்பினர்கள் பார்ப்பீர்களே யானால் 1986-87-ல் உருப்பெறும் புதிய தொழில் வெளியீட்டு திட்டங்கள் என்று வருகிறபோது மெக்னீஷியம் மெட்டல் புராஜெக்ட் என்பதற்கு மூலதனச் செலவு 5 கோடியே 85 இலட்சம் ரூபாய். இதிலே 110 பேருக்கு மேல் நேரடியாக வேலை கிடைக்கும். டிட்டோனிடர் மற்றும் டிட்டோனி பிழுல்ஸ் பிட் அப், இவற்றுக்கு 20 கோடியே 55 இலட்சம் ரூபாய் திட்டம்—இதில் 500 பேருக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும்.

அடுத்து, கூட்டுத் துறையில், Messrs. Fablon Limited இது ஒரு கோடியே 80 லட்ச ரூபாய் திட்டம். இதனால் 200 பேருக்கு வேலை கிடைக்கும். "Pentasia Chemicals Limited" இது 19 கோடி ரூபாய் திட்டம். இதனால் 200 பேருக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும். வட ஆற்காடு மாவட்டத்தில் North Arcot Leather Limited இது 1 கோடியே 46 லட்ச ரூபாய் திட்டம். இதனால் 150 பேருக்கு வேலை கிடைக்கும். Uni Organic Industries Limited இது 1 கோடியே 95 லட்ச ரூபாய் திட்டம். இதனால் 200 பேருக்கு வேலை கிடைக்கும். Titan Watch Limited இது 39 கோடியே 20 லட்ச ரூபாய் திட்டம். இதனால் திட்டத்தட்ட 250 பேருக்கு வேலை கிடைக்கும். ஆக 89 கோடியே 31 லட்ச ரூபாய் மதிப்பீட்டுச் செலவில் இப்போது கிடைத்து இருக்கிற இன்டெண்டு லைசன்ஸ் அளவுக்கு 1986-87-ல் கூட்டுத் துறை, பொதுத் துறையிலும் புதுத் தொழிற்சாலை உருவாக்க அந்தகைய சூழ்நிலை ஏற்படுகிறது.

டிட்கோவினுடைய Probilin Oxide Industry என்பதும், Ammonium Nitrate மற்றும் Nitrate Acid என்னும் 22 கோடியே 57 லட்ச ரூபாய் திட்டங்களால் 350 பேருக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும். Jelly Field Telephone Cabini இது 17 கோடியே 35 லட்ச ரூபாய் திட்டம். இதனால் 270 பேருக்கு நேரடி வேலைவாய்ப்பு கிடைக்கும். அந்த வகையில் நடைபெறுகிற இந்த 15 புதிய தொழிற்சாலைகளில் 775 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நடைபெறுகிற அளவுக்கு உரிமங்கள் மற்றவைகள் பெறப்பட்டு வருகின்றன. அந்த வகையில் 5,150 பேருக்கு வேலைவாய்ப்பு கிடைக்கிற சூழ்நிலை எதிர்காலத்தில் ஏற்படுகிறது.

**திரு. கே. கல்லன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏறக்குறைய 170 கோடி ரூபாய் செலவில் மத்திய அரசு எக்ஸ்ரே பிளாண்டை ஊட்டியில் நிறுவ அனுமதி அளித்து இருப்பது மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, ஊட்டி தொழிற்சாலை பிரிவுப்படுத்த வேண்டும் என்று தொடர்ந்து நாம் வற்புறுத்திக் கொண்டு வந்தோம். எல்லோரும் வற்புறுத்தி வந்தார்கள். அது வேறு ஒரு மாநிலத்திற்கு போய்விடும் என்ற ஒரு அச்சம் இடைக் காலத்தில் ஏற்பட்டது. அது மாறி இங்கே வரும் என்ற ஒரு நம்பிக்கைக்கு ஏற்ப அது வந்து விடும் என்ற தன்மை வந்து கிட்டத்தட்ட ரூபாய் 170 கோடிக்கு வரக்கூடும் என்ற செய்தி வந்து இருக்கிறது. அதுவும் திட்டவட்டமான, விரிவான பதில் அரசுக்கு வந்த பிறகு அதைப் பற்றி சொல்லலாம்.

அது மட்டுமல்ல, " T.N. tops engineering experts from South " என்று " Economic Times " என்ற பத்திரிகையில் எழுதியிருக்கிறார்கள். இன்ஜினியரிங் கூட்ஸ்-ஐ உற்பத்தி செய்து வெளிநாட்டுக்கு அனுப்புவதில் தென்னகத்தில் உள்ள 4 மாநிலங்களில் நாம் தான் முதல் இடம் வகிக்கிறோம் என்பதை தெளிவுப்படுத்த கடமைப்பட்டு இருக்கிறேன்.

நிறைய இருக்கிறது. தாங்க மாட்டீர்கள் என்பதால் (சிரிப்பு) அதை எல்லாம் வேறு ஒரு சந்தர்ப்பத்தில் வைத்துக் கொள்கிறேன். இந்த மாதிரி என்ன என்ன வகையில் உதவிகள் செய்து இருக்கிறோம் என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் உள்ளே இருப்பவர்களும் தெரிந்து இருக்க வேண்டும், வெளியில் இருப்பவர்களும் தெரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காக சொல்கிறேன். (குறுக்கீடு) என் வேலை நிறைவைப் பற்றி சொல்லுவது தான். குறையை பற்றி அந்த அந்த டிபார்ட்மெண்டில் உள்ளவர்கள் சொல்ல வேண்டும் என்று நான் முதலிலேயே சொல்லிவிட்டேன். அந்த அந்த துறையைப் பற்றி அந்த அந்த துறையைச் சேர்ந்தவர்கள் பதில் சொல்ல வேண்டும். நிதித் துறையைப் பற்றி நான் முதலில் சொல்லி





விடுகிறேன். அந்த அந்த துறை மானியக் கோரிக்கைகள் வரும்போது விரிவாக தெளிவாக அந்தத் துறை சம்பந்தப் பட்டவர்கள் சொல்லுவார்கள், நான் சொன்னால் அது அரை குறையான பதிலாகத் தான் இருக்கும். ஆக எல்லா துறை களிலும் அந்த அந்த துறைகள் சம்பந்தப்பட்டவைகளை குறிப் பெடுத்துக் கொள்வார்கள். இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் பேசுகிற விஷயங்களை அந்த அந்த துறையால் குறிப்பெடுக்கப் பட்டு அந்த அந்த துறையினர் கவனித்து அந்த குறைகளை போக்குவதற்கு என்ன என்ன செய்ய வேண்டுமோ நியாயமான அடிப்படையில் செய்வார்கள். முதலில் என் வேலையை முடித்து விடுகிறேன். பிறகு உங்கள் வேலைக்கு நான் வருகிறேன். நான் நிலைநாட்ட எண்ணியதை நிலைநாட்டி விட்டு அவர்களுடைய சந்தேகங்களுக்கு எல்லாம் நான் பதில் சொல்லுகிறேன்.

(பிற்பகல் 1-40)

அடுத்து கடிதங்கள் வருவதிலும் லைசன்ஸ் கொடுப்பது பற்றியும் அன்றைக்கு விவாதங்கள் நடைப்பெற்றன. அதைப் பொறுத்தவரையில் 1985 ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் முதல் ஜூன் திங்கள் முடிய 6 திங்களுக்கு கணக்கு எடுத்துப் பார்த்தால் மகாராஷ்டிரா மாநிலத்தில் 119 கடிதங்களும், 68 உரிமங்களும் பெறப் பெற்று இருக்கின்றன. ஆக மொத்தம் குஜராத் 89 கடிதங்களையும், 86 உரிமங்களையும் பெற்றிருக்கிறது. இரண்டாவது இடத்திலே உரிமங்களைப் பொறுத்தவரையில் கணக்கு போட்டு பார்த்தால் மகாராஷ்டிராம் வருகிறது. 68 உரிமங்கள், 119 கடிதங்கள். மூன்றாவது இடத்திலே தமிழகம் இருக்கிறது. 45 உரிமங்கள் நமக்குக் கிடைத்திருக்கின்றன. 114 கடிதங்கள், லெட்டர் ஆப் இண்டெண்ட் கிடைத்திருக்கின்றன. மற்ற மாநிலங்கள் பின்னால் இருக்கின்றன. அதேபோல் ஒவ்வொரு ஆண்டும் இருக்கின்ற சூழ்நிலை நமக்கு இருந்து கொண்டு வருகிறதே தவிர, அதிலும் நாம் பின்வாங்கவில்லை என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன். வங்கிகளிலே மக்களுடைய வைப்பு நிதி, மற்றும் சேமிப்பு ஆதாரங்கள் தமிழகத்தைப் பொறுத்தவரையில் அது குறையவில்லை. வங்கிகளுடைய வைப்பு நிதியைக் கணக்கிட்டுப் பார்த்தால், பர்கேபிட்டா கணக்கைப் பார்த்தால், மகாராஷ்டிராவில் பர்கேபிட்டா தனி நபர்

வங்கிகளிலே வைத்திருக்கிற சூழ்நிலைகளுடைய அடிப்படையிலே 1,530 ரூபாயாக வருகிறது. தமிழகம் இரண்டாவது இடத்தில் வருகிறது. அதாவது ரூ. 720. மேற்கு வங்கம் ரூ. 671. கர்நாடகம் ரூ. 631, கேரளம் ரூ. 611. ஆக அகில இந்திய சராசரி ரூ. 569. அகில இந்திய சராசரி ரூ. 569 ஆக இருக்கும் போது தமிழ் நாட்டிலே ரூ. 720 ஆக இருக்கிறது என்பதை குறிப்பிட்டு கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் சித்தன் அவர்கள் குறிப்பிடும்போது மணலி பெட்ரோ கெமிக்கல் காம்ப்ளெக்ஸ் பற்றி எடுத்துச் சொன்னார்கள். அது பற்றிய உண்மை நிலையை நான் விளக்க விரும்புகிறேன். அந்தத் தொழிற்சாலையை விட்டுவிடவில்லை. அதைப் பொறுத்தவரையில், பெட்ரோ கெமிக்கல் காம்ப்ளெக்ஸில் நாப்தாக்ரேக் 5 இலட்சம் உற்பத்தித் திறன் கொண்டது. ரூ. 300 கோடி முதலீட்டில் அது நடைபெறுகிற ஒன்று. தமிழக அரசு 29—11—1985 அன்று மத்திய அரசிற்கு பரிந்துரை செய்து அனுப்பியிருக்கிறது. அப்படிப்பட்ட தொழிற்சாலை இங்கு வரவேண்டுமென்று தான் நாம் நீண்ட நாட்களாக விரும்பியிருக்கிறோம். இந்த தொழிற்சாலை விரைவாக வந்தால் மிக்க மகிழ்ச்சி. அந்த வகையிலே, ரூ. 300 கோடி முதலீட்டில், அந்த நாப்தாகிரேக் தொழிற்சாலை வருமேயானால், ஆன்சிலியரி பேக்டரிஸ் ஏராளமாக வருவதற்கு வாய்ப்புகள் இருக்கின்றன. 29—11—1985 அன்று நாம் பரிந்துரை செய்து மத்திய அரசிற்கு அனுப்பியிருக்கிறோம். மத்திய அரசினுடைய பதில் எதிர்பார்க்கப்படுகிறது. அதை விட்டுவிடவில்லை. அது வரும். அதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பள்ளிக்கட்டிடங்களை பற்றிச் சொல்கிறபோது நாம் கூடுதலாக இந்த ஆண்டு பார்ட்—2 ஸ்கீமில் ஒதுக்கி இருக்கிற தொகை ரூ. 1 கோடி. மொத்தத்திலே ரூ. 1 கோடி ஒதுக்கியிருக்கிறோம் என்பது பொருளல்ல. ஆண்டுக்காண்டு கூடுதலாக ஒதுக்கிக் கொண்டு வருகிறோம். பள்ளிக்கட்டிடங்களுக்கு, உயர்நிலைப் பள்ளி, மற்றவைகளுக்கான கட்டிடங்களுக்கு 1979-ல் மொத்தமாக பராமரிப்பு செலவுக்காக ரூ. 89.87 இலட்சம் ஒதுக்கியிருக்கிறோம். கட்டிடங்கள் கட்ட ரூ. 6.37 கோடி 1979-80-ல் ஒதுக்கினோம். 1982-83-ல் ரூ. 79.96 இலட்சம் மெயின்டனன்ஸ்





காஸ்ட்க்காக ஒதுக்கியிருக்கிறோம். கட்டிடங்கள் கட்ட ரூ. 7.08 கோடி ஒதுக்கியிருக்கிறோம். இந்த ஆண்டு 1986-87-ல் பல இடங்களில் பார்த்தால், பார்ட்ஸ் — 2 ஸ்கீமில் ரூ. 1 கோடி என்று போட்டோமே தவிர—இந்த ரூ. 1 கோடி போதுமா? இது எந்த மூலைக்குப் போதும் என்றெல்லாம் கேட்டார்கள். ஆனால் அதனுடைய விவரங்களைப் படித்துப் பார்த்தால், ரூ. 7.46 கோடி பள்ளிக் கட்டிடங்களுக்காக ஒதுக்கியிருக்கிறோம். பராமரிப்புச் செலவிற்காக இந்த ஆண்டில் ரூ. 160 இலட்சம் ஒதுக்கப்பட்டது. கட்டிடங்கள் கட்டுவதற்கு ரூ. 7.46 கோடி ஒதுக்கியிருக்கிறோம்.

சாலைகள் அமைப்பது பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் பலர் எடுத்துச் சொன்னார்கள். அதற்காக ஒதுக்கியிருக்கிற தொகை ரூ. 3 கோடிதானா என்று கேட்டார்கள். ஒரு ஸ்பெஷல் திட்டம் போட்டு ரூ. 11 கோடி ஒதுக்கப்பட்டு, இந்த ஆண்டில் ரூ. 3 கோடி கூடுதல் என்று சொல்லப்பட்டதே தவிர, மொத்தமாக ஒதுக்கப்பட்டது என்று அத்தகைய நிலைமை இல்லை. ஆக அதனுடைய கணக்கின் அடிப்படையில் காண்கின்றபோது நாம் ஆண்டுக்காண்டு சாலைகளைப் புதுப்பிக்கவும், பராமரிக்கவும், நாம் அதிகமாகத்தான் நிதி ஒதுக்கிக் கொண்டு வருகிறோம். அது போதாது என்பதை ஒத்துக் கொள்கிறேன். பல்வேறு சாலைகளை புதுப்பிப்பது,—கான்க்ரீட் சாலைகள் மொத்தம் 301 கிலோ மீட்டர் தமிழகத்தில் இருக்கிறது. தார் போடப்பட்ட சாலைகள் 39,377 கிலோ மீட்டர் நீளத்திற்கு இருக்கின்றன. கப்பி போடப்பட்ட சாலைகள் 32,623 கிலோ மீட்டர் இருக்கின்றன. மண் சாலைகள் மட்டும் 56,874 கிலோ மீட்டர் இருக்கின்றன. நாளுக்கு நாள் கப்பி சாலைகளாக்கி, பிறகு தார் சாலைகளாக்குவதற்கு நிதியாதாரங்கள் கிடைக்கக் கிடைக்க நாம் செய்ய வேண்டியவர்களாக இருக்கிறோம். 1977-78 இல் 19 கோடியே 98 இலட்சம் ரூபாய் சாலைகளுக்காக நாம் ஒதுக்கினோம். 1984-85 ஆம் ஆண்டிலே 74 கோடி ரூபாய் அதற்காக ஒதுக்கினோம்; 1985-86 ஆம் ஆண்டிலே 94 கோடியே 75 லட்சம் ரூபாய் ஒதுக்கினோம். இந்த ஆண்டு 113 கோடியே 79 லட்சம் ரூபாய் மெயின்டெனன்ஸிற்காகவும், சாலைகளைப் பாதுகாப்பதற்காகவும் பாலங்களைக் கட்டுவதற்காகவும் ஒதுக்கியிருக்கிறோமே தவிர 3 கோடி அல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். முழு விவரங்களைக் கண்டால் அந்த விவரங்களை முழுமையாக அறிந்து கொள்ளலாம்.

மின்சாரத்தைப் பற்றியெல்லாம் இங்கே பல உறுப்பினர்கள் பேசினார்கள். எதிர்க் கட்சித் தலைவர் அவர்களும் குறிப்பிட்டார்கள். அதற்கு நாம் ஒவ்வொரு தடவையும் முக்கியத்துவம் தந்து வருகிறோம். அரசாங்கம் மின்சாரம் மிக மிக முக்கியமானது என்று தான் கருதுகிறது. ரஷ்ய நாட்டிலே புரட்சி ஏற்பட்டதற்குப் பிறகு அந்த நாடு முன்னேற வேண்டுமென்று லெனின் சொன்னபோது பவர், பவர், பவர் என்று தான் சொன்னார். மின்சாரத்திற்கு நாம் முதலிடம் தந்து வருகிறோம். மின்சாரம் இருந்தால்தான் தொழில் வளம் ஏற்படும், விவசாய வளம் ஏற்படும் என்ற அளவுக்கு நம்முடைய மாநிலத்தைப் பொறுத்தவரையில் ஒவ்வொரு ஐந்தாண்டுத் திட்டத்திலேயும் மின்சாரத்திற்காக அதிகமான தொகைகளை ஒதுக்கி வருகிறோம்.

7வது ஐந்தாண்டுத் திட்டத்தைப் பொறுத்தவரையில் கேரள மாநிலம் 396 கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறது. அவர்களுக்கு ரிசோர்சஸ் அதிகம், அதற்காக அதிகமாகவும் டேப் செய்ய முடியும், மின்சாரத்தை உற்பத்தி செய்வதற்கு வாய்ப்பு இருக்கிறது. கர்நாடக மாநிலத்தில் 800 கோடி ரூபாய் மின்சாரத்திற்காக ஒதுக்கப்பட்டு இருக்கிறது. ஆந்திர மாநிலத்தில் 1104 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டு இருக்கிறது. தமிழகம் 2000 கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறது. திட்டத்தட்ட மூன்றில் ஒரு பங்கு திட்டத்திற்கு 5750 கோடி ரூபாய் என்றால் அதிலே 2000 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதற்குக் காரணம் அதனுடைய தேவைக்கு; டிமாண்ட் அதிகமாக இருப்பதுதான். அதை நிறைவேற்றினால் கூட கொஞ்சம் பற்றாக்குறை இருக்கும் என்று சொல்கிறார்கள். அந்தப் பற்றாக் குறையைப் போக்குவதற்கு அட்டாமிக் பிளான்ட் அமைக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு இருக்கிறோம். நீர் மின்சாரத்திற்கு நம்முடைய மாநிலத்திலே வழியில்லை. அனல் மின்சார நிலையம் அமைத்தால் நிலக்கரி வருவதிலே கஷ்டங்கள் இருக்கின்றன. நம்முடைய மாநிலத்திலே நிலக்கரி கிடையாது, வெகு தொலைவிலிருந்து நிலக்கரி இங்கே கொண்டுவருவதிலே பல சங்கடங்கள் ஏற்படுகின்றன. அதைப் பற்றிப் புரட்சித் தலைவர் அவர்கள் இந்தியப் பிரதமர் அவர்களுக்கு 17 ஆம் தேதி கடிதம் எழுதி அவர்களிடமிருந்து 20, 21 தேதிகளில் பதில் வந்திருக்கிறது. அதற்கு ஒரு கமிட்டி இருக்கிறது, அது முடிவுகட்டியபிறகு முடிவு எடுக்கப்படும் என்றும்





அதைப்பற்றி இந்திய அரசாங்கம் ஆலோசிக்கும் என்றும் பிரதமர் திரு. ராஜீவ் காந்தி அவர்கள் பதில் எழுதியிருக்கிறார்கள். இரண்டாவது அட்டாமிக் பிளான்ட் வைத்தால் தமிழகத்தின் தேவை நிறைவேறமுடியும் என்று நாம் கருதுகிறோம்.

மதுவிலக்குக் கொள்கைபற்றி ஐயப்பாட்டிற்கு இடம் இருப்பதாகச் சிலர் சொன்னார்கள். ஐயப்பாட்டிற்கு இடம் இல்லை. நாங்கள் உறுதியாகச் சொன்னோம். 1987 ஆம் ஆண்டு சனவரி முதல் தேதி முதல் கள்—சாராயக் கடைகள் முதற் கட்டமாக ஒழிக்கப்படும் என்று சொன்னோன். அன்றைக்குச் சொன்னது தான். நமக்கு இந்த ஆண்டு 60 கோடி ரூபாய் இழப்பு ஏற்படும் என்பதை பட்ஜெட்டிலே காட்டியிருக்கிறோம். மதுவிலக்கு நடைமுறைப்படுத்தப்படுகிறபோது அதில் இழப்பு ஏற்படுகிறது என்பதைத்தான் எடுத்துக் காட்டியிருக்கிறோம். அடுத்த ஆண்டில் அதில் 260 கோடி ரூபாய் இழப்பு ஏற்படும் என்று சொல்லியிருப்பதன் காரணம் மத்திய அரசிடம் நாம் சொல்லி இழப்புத் தொகையைக் கேட்க வேண்டுமென்பதற்காகத்தான் குறிப்பிட்டிருக்கிறோம், மத்திய அரசு கொடுக்காவிட்டால் அதை விட்டுவிடுவோம் என்பதல்ல, மத்திய அரசு கொடுக்காவிட்டால்கூட மதுவிலக்குக் கொள்கையைக் கடைப் பிடிக்கவேண்டுமென்பது தான் எண்ணம். அதில் இருக்கிற சங்கடங்களை உணரவேண்டும். அதை நடைமுறைப்படுத்துகிறபோது ஒவ்வொரு மாநிலமும் படுகிற பாட்டை நாம் பட்டாக வேண்டும். அப்போது எல்லோரும் கூக்குரல் எழுப்புவார்கள், கள்ளச்சாராயம் குடிசைத் தொழிலாகி விட்டது. எங்கு பார்த்தாலும் இறக்கிக் கொண்டிருக்கிறார்கள், எங்கு பார்த்தாலும் காய்ச்சிக் கொண்டிருக்கிறார்கள், மாமூல் நடந்து கொண்டிருக்கிறது, பங்களாக்கள் கட்டிக்கொண்டிருக்கிறார்கள், அப்படிப்பட்ட குறைகள் மதுவிலக்கை அமல் நடத்துகிறபோது ஏற்படும். எந்தத் திட்டமாக இருந்தாலும் பொது மக்களின் நல்ல ஒத்துழைப்பும் ஆதரவும் கண்காணிப்பும் இருக்க வேண்டும். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் பேராசிரியர் அவர்களும் சொன்னார்கள். சத்துணவுத் திட்டத்திலே குறைபாடுகள் இருக்கின்றன என்று சொன்னார்கள். நான் ஒத்துக் கொள்கிறேன். நோக்கம் நிறைவேற வேண்டுமென்பதற்காகத்தான் நாம் இவ்வளவும் செய்கிறோம். திட்டத்தட்ட 63 ஆயிரம் சமையற்கூடங்கள் நாடெங்கிலும் பரவியிருக்கிற

சூழ்நிலையில் செம்மையாக நடைபெறுகிறபோது ஒரு குற்றம்கூட ஏற்படாத அளவில் யாருக்கும் அதன் பலன் கிடைக்கவேண்டுமோ அவர்களுக்குச் சென்று அடைவதற்காக நாம் சில பல வழிமுறை களைச் செய்தோம்.

அந்தந்த ஊர்களிலே அவர்கள் சொன்னதுமாதிரி ஊராட்சி மன்றங்களுக்குப் பொறுப்பு வாய்ந்தவர்கள் வந்துவிட்டதால், நகராட்சி மன்றங்களுக்குப் பொறுப்பு வாய்ந்தவர்கள் வந்து விட்டதால் அந்தந்த நகராட்சி மன்றங்கள், ஊராட்சி மன்றங் களின் சார்பில் கண்காணிப்புக் குழு என்ற குழுவை அமைத்துக் கண்காணிக்கலாம். ஒவ்வொரு நாளும் ஒருவர் இருந்து, எத்தனைபேர் வந்தார்கள், எந்தனைபேர் சாப்பிட்டார்கள் என்ற கணக்கை எழுதி வைத்தால்கூட தவறு ஏற்படாது. எத்தனை அட்டென்டென்ஸ், எத்தனைபேர் சாப்பிட்டார்கள் என்று ஒரு புத்தகத்தில் கணக்கு எழுதி வைத்தால்கூட ஏமாற்றுவதற்கான வழி இருக்காது. அதற்கு வழி இல்லாததால், பேராசிரியர் அவர்கள் சொன்னபடி உள்ளாட்சி மன்றங்களுக்கு உறுப்பினர்கள் வந்து விட்டார்கள். எனவே, ஒவ்வோர் இடத்திலேயும் ஒரு குழுவை வைத்து அதில் பொறுப்பு வகிக்கின்றவர்கள், ஒவ்வொரு நாளைக்கு ஒருவர் பொறுப்பு என்ற வகையில் ஏழு நாட்களுக்கும் ஏழு பேர் பொறுப்பு என்று வைத்து, சனிக்கிழமை குப்புசாமி, ஞாயிற்றுக்கிழமை அருணாசலம், திங்கட்கிழமை இன்னொருவர் என்று கிழமைக்கும்கூட ஒருவர் பொறுப்பேற்றுக் கொண்டால் நல்லது. அப்படிப்பட்ட கண்காணிப்பு இருந்தால் திருடாமல் இருப்பார்கள். இல்லையென்றால் மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்னதுமாதிரி, பறி போகிறது, கொள்ளை போகிறது என்ற குற்றச்சாட்டுக்கள்தான் வரும். அப்படியிருந்தால் நம்மை நாமே ஏமாற்றிக்கொண்டிருக்கிறோம் என்ற நிலைதான் ஏற்படும். எனவே, அந்த நோக்கம் நிறைவேறுவதற்கு எல்லாத் தரப்பினரின் முழு ஒத்துழைப்பும், பொறுப்பும் வேண்டுமென்று திரும்பத் திரும்பச் சொல்கிறோம்.

(பிற்பகல் 1-50)

இங்கே பல கருத்துக்களை மாண்புமிகு உறுப்பினர்கள் பலரும் பல வகைகளிலே சொல்லியிருக்கிறார்கள். காலம் அதிகமாக ஆகிவிட்டது. மானியக் கோரிக்கைகள் வருகின்றபொழுது அந்தந்தப் பிரச்சனைகள் வருகின்றபொழுது மாண்புமிகு



சம்பந்தப்பட்ட அமைச்சர்கள் விரிவாகவும், விளக்கமாகவும் சொல்லுவார்கள். நானும் வாய்ப்பு ஏற்படுகின்றபொழுது விளக்கங்கள் தருவேன் என்பதைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிக்க பேரவைத் தலைவர் அவர்களே, நாவலர் அவர்களின் உரையிலே மிக முக்கியமான அறிவிப்பை நாங்களெல்லாம் எதிர் பார்த்தோம். பல்வேறு உறுப்பினர்கள் சுட்டிக்காட்டியதைப்போல, தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களில், அதிலும் குறிப்பாகத் தென் மாவட்டங்களில் வறட்சி அதிகமாக இருக்கின்றது. குடிநீர்த் தட்டுப்பாடு இருக்கின்றது; வறட்சி நிவாரணப் பணிகள் செய்யப் பட வேண்டும். எனவே, வறட்சி நிவாரணப் பணிகள் பற்றியும், கடன் வரி வஜா பற்றியும் அறிவிப்பைக் கொடுப்பார்கள் என்று எதிர்பார்த்தோம். அப்படிக் கொடுத்தால் பொருத்தமாக இருக்கும்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, கலெக்டரிடத்தில் ரிப்போர்ட் கேட்கப்பட்டிருக்கிறது. சிலர் அனுப்பி இருக்கிறார்கள். ஆகவே, வறட்சியின் அளவைக் கண்டறிந்த பிறகு, எவ்வளவு வரி வஜா செய்வது என்பதற்கு ஒரு கணக்கு இருக்கிறது, ஒரு பார்முலா இருக்கிறது, அதன்படி இருக்கிறது என்றால், அந்தக் குறிப்புகள் சொன்னால், அதன்படி அரசு சலுகைகளையும் மற்றவைகளையும் செய்யும். அண்ணா மாவட்டம் வேடசந்தூர் பகுதியில் உள்ள சிலபல சூழ்நிலைகளைப் பற்றி எழுதியிருக்கிறார்கள். எல்லா மாவட்ட ஆட்சித் தலைவர்களின் விரிவான அறிக்கையைப் பெற்று அதன் அடிப்படையில் எங்கெங்கு வஜா செய்ய வேண்டும், என்னென்ன நிவாரணம் அளிக்கப்பட வேண்டும் என்பதையெல் லாம் பற்றி அந்த ரிப்போர்ட்டின் அடிப்படையிலே மேற்கொள்ள வேண்டும். ஆனால் ஆங்காங்கு இருப்பவர்களின் விருப்பத்தின் அடிப்படையில், விழைவின் அடிப்படையில், இந்த ஊருக்கு இப்படிச் செய்ய வேண்டும், இந்த ஊரில் இப்படிச் செய்கிறார்கள் என்று சொன்னால் அதை வைத்துக்கொண்டு செய்வதற்கில்லை. ஆங்காங்கு இருப்பவர்கள் மாவட்ட ஆட்சித் தலைவரிடம் விண்ணப்பம் தரலாம். அவர் தருகின்ற ரிப்போர்ட்டின் அடிப் படையில் நடவடிக்கை எடுக்கப்படும்; எடுத்துக்கொண்டு வருகிறது.

[1986 மார்ச் 31

**திரு. உ. சுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கலெக்டர்களின் ரிப்போர்ட் வருவதற்கு இடையில் விவசாயிகளிடமிருந்து கடன் வசூலுக்கும், கூட்டுறவுக் கடன் வசூலுக்கும் மிகவும் அக்கறை காட்டுவதால் அதிக அளவிற்கு அவர்கள் பாதிக்கப் படுகிறார்கள். ஆகவே, பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நன்மைகள் கிடைப்பதற்காக விரைவில் ஏன் அந்த ரிப்போர்ட்டைப் பெற்று அறிவிப்பு செய்யக் கூடாது; அவ்வாறு செய்தால் உதவியாக இருக்குமே.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கே வலியுறுத்தியதை அடிப்படையாக வைத்து உடனடியாக மாவட்ட ஆட்சித் தலைவரவர்களின் அறிக்கைகளைப் பெற்று அரசு நடவடிக்கை எடுக்க முயலும்.

**திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, டெலிபோன் 72 நாட்களாக . . . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அந்த விஷயம் ஏற்கனவே முடிந்து விட்டது. வரவு-செலவுத் திட்டத்தின் மீதுதான் இப்பொழுது விவாதம்.

**திரு. வி. பி. சிந்தன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அனைத்து எதிர்க்கட்சிகளும் பேசும்பொழுது என்.ஜி.ஓக்கள் மீது உள்ள சஸ்பென்ஷனை வாபஸ் பெற வேண்டுமென்று கூறப்பட்டது. அனுதாபத்துடன் கவனிப்பார்களா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிலைமையை நான் விளக்குகிறேன். அதைப்பற்றி முடிவு எடுக்க வேண்டியவர் மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள்தான். இப்பொழுதிருக்கிற நிலைமையை மட்டும் நான் விளக்குகிறேன்.

தமிழ்நாடு தலைமைச் செயலகச் சங்கம், ஆசிரியர்கள் நடத்திய போராட்டத்தை ஆதரித்தும் தன் ஏழு அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தியும் அரசுப் பணியாளர் சங்க மற்றும் ஆசிரியர் அமைப்புகளின் கூட்டுக்குழு உறுப்பினர் என்ற முறையில் போராட்டத்தில் ஈடுபட்டது. இக்கோரிக்கைகளை அரசுக்குக்



1986 மார்ச் 31] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

கடித மூலமாகவோ, நேரிடையாகவோ, தெரிவிக்கவில்லை. அச்சங்க அலுவலகத்திலிருந்து பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் துறையினால் விவரம் கேட்டுப் பெறப்பட்டது. 25—11—1985 அன்று அலுவலக வளைவுக்குள், பல மாடிக் கட்டிடத்தின் முன் உணவு இடைவேளையில் கூட்டம் நடத்தி கோஷமிட்டது. அரசுப் பணியாளர் சங்கங்கள் உணவு இடைவேளையில் அலுவலக வளைவுக்குள்ளும் அரசு அலுவலகங்களை ஒட்டியுள்ள இடங்களிலும் கூட்டமோ, ஊர்வலமோ நடத்தக் கூடாது என்றுள்ள விதிமுறைகளை அச்சங்கத்திற்கு அறிவுறுத்திய பிறகும் அச்சங்கம் தொடர்ந்து உணவு இடைவேளையில் கூட்டம் நடத்தி கோஷமிட்டு, அலுவலக வேலைக்குக் குந்தகம் செய்து வந்தது. மேலும் 4—12—1985 முதல் தொடர் உண்ணாவிரதத்தையும் மேற்கொண்டது. அரசுப் பணியாளர் சங்க அங்கீகார விதிமுறைகளுக்கு இச்செயல் மாறானது. உண்ணாவிரதமிருந்தோரை, காவல் துறையினர் அகற்றினர் என்பதால், அச்சங்கத்தினர் போராட்டத்தைத் தீவிரமாக்கி 4—12—1985 முதல் பணிக்கு வந்து கையொப்பமிட்டு வெளியேறி, ஆர்ப்பாட்டம் செய்து வந்தனர். முறையான அறிவுறுத்தல்களையும் மதியாது அச்சங்கத்தினர் தொடர்ந்து போராட்டத்தில் விதிகளை மீறி ஈடுபட்டு அரசுப் பணிகளுக்குக் குந்தகம் விளைவித்ததாலும், விசுவாசமாகச் செயல்பட்ட அரசுப் பணியாளர்களுக்கு இடையூறும் அச்சுறுத்தலும் செய்ததாலும் அச்சங்கத்தின் அங்கீகாரத்தை ஏன் ரத்து செய்யக் கூடாது என விளக்கம் கேட்கப்பட்டது. ஆனால், அச்சங்கம் குறிப்பிட்ட காலக் கெடுவுக்குள் விளக்கம் தராதது மட்டுமின்றி, தொடர்ந்து போராட்டத்தைத் தீவிரமாக்கி வந்தது. எனவே, அச்சங்கத்தின் அங்கீகாரத்தை 6—12—1985-ஆம் நாளிட்ட அரசாணை எண். 1148-ல் ரத்து செய்யப்பட்டது.

தமிழ்நாட்டில் சமீபத்தில் ஏற்பட்ட வெள்ளச் சேதத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான நிவாரணப் பணியில் அரசு முழு மூச்சுடன் ஈடுபட்ட நேரத்தில், அப்பணிகளைப் பாதிக்கும் வகையில் தமிழ்நாடு தலைமைச் செயலகச் சங்கம் போராட்டத்தில் ஈடுபட்டது. நிவாரணப் பணிகள் முறைமையாக நடைபெற்று, பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் கிடைக்க வேண்டுமென்பதால், அரசு நிர்வாக இயந்திரத்தின் தலைமையிடமான செயலகத்தில் நடைபெற்ற போராட்டத்தை அரசு தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்தது.

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1986 மார்ச் 31

போராட்டத்தில் ஈடுபட்டு, டிசம்பர் 5, 6, 9 மற்றும் 10 தேதிகளில் பணிக்கு வராத 1888 ஊழியர்களிடம் போராட்டத்தில் ஈடுபட்டதற்காக ஒழுங்கு நடவடிக்கை மேற்கொண்டு விளக்கம் கோரப்பட்டது. அவர்களில் விடுப்பிலிருந்த 6 பேர்களைத் தவிர மற்றவர்கள் மன்னிப்புக் கோரியதால் கடுமையாக எச்சரித்து விடப்பட்டனர். அவர்கள் பணிக்கு வராத காலம் சிறு விடுப்பு நீங்கலாக ஏனைய விடுப்பாக வரன்படுத்தப் பட்டது.

அச்சங்கம் நடத்திய விதிமுறைகளுக்கு மாறான போராட்டத்தில் ஈடுபட்டதும் அன்றி, பணிக்கு வந்தது போல வருகைப் பதிவேட்டில் கையொப்பமிட்டுவிட்டு, வெளியேறி போராட்டத்தில் ஈடுபட்டதற்காகவும், போராட்டத்தில் ஈடுபடுமாறு விசுவாசமான அரசு ஊழியர்களை நிர்பந்தப் படுத்தியதற்காகவும் அரசுப் பணிக்குக் குந்தகம் விளைவித்ததற்காகவும், அவர்கள் தொடர்ந்து பணியில் இருந்தால் அரசுக்கும் மற்ற விசுவாசமான ஊழியர்களுக்கும் பாதகம் விளைவிப்பர் என்பதால் 35 அரசு ஊழியர்கள் (5 பெண் பணியாளர் உட்பட) தற்காலிகப் பணி விலக்கத்தில் வைக்கப்பட்டனர். அவர்கள் மீது பின்வரும் குற்றச் சாட்டுகள் சாட்டப்பட்டு விளக்கம் கோரப்பட்டுள்ளது.

1. தமிழ்நாடு அரசுப் பணியாளர் நடத்தை விதி 22-க்கு முரணாக 5—12—1985 அன்று தலைமைச் செயலகப் புதுக் கட்டிடத்தின் முன்பு கூடி போராட்டத்திலும் ஆர்ப்பாட்டத்திலும் ஈடுபட்டனர்;

2. 5—12—1985 அலுவலக வருகைப் பதிவேட்டில் கையொப்பமிட்டு பின் பணியிடத்தைவிட்டுச் சென்று போராட்டத்தில் கலந்து கொண்டதுமன்றி, அலுவலகத்துக்கு வந்து பணியாற்றியது போன்ற நிலையைத் தோற்றுவித்தனர்;

3. தங்கள் பேச்சினாலும், செயலாலும் விசுவாசமான பணியாளர்களைத் தூண்டிவிட்டு 5—12—1985 அன்று போராட்டத்தில் ஈடுபடுமாறு செய்தனர். அவர்களுடைய விளக்கங்கள் பெறப்பட்டுள்ளன. அவர்கள் மீதான விசாரணையும் முடிக்கப் பெற்று, விசாரணை அறிக்கைகள் சம்பந்தப்பட்ட துறைகளின் பரிசீலனையில் உள்ளது.



1986 மார்ச் 31] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

இதற்கிடையில் தற்காலிகப் பணி விலக்கத்திலிருந்த 35 பேரில் 9 அரசுப் பணியாளர்கள் போராட்டத்தில் கலந்து கொண்டதற்காக மன்னிப்புக் கோரியதால், அவர்கள் மீது தொடரப்பட்டு நிலுவையிலுள்ள துறை நடவடிக்கைக்குப் பாதகமின்றி, அவர்கள் மீண்டும் பணியமர்த்தப்பட்டுள்ளனர். ஏனைய 26 அரசுப் பணியாளர்கள் மீதான விசாரணைக் குறிப்புகள் சம்பந்தப்பட்ட துறைகளில் ஒழுங்கு நடவடிக்கை எடுக்கும் தகுதி வாய்ந்த அலுவலரின் பரிசீலனையில் இருந்து வருகின்றன. ஆகவே, அவர்களிடத்திலே கேட்டபொழுது, நடைபெற்றதற்கு ஒரு வருத்தம் தெரிவியுங்கள் என்று சொன்னதற்கு, அவர்கள் இணங்கவில்லை. 9 பேர்கள் தெரிவித்தார்கள், அவர்களை மறுபடியும் சேர்த்துக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டது. மற்றவர்களிடத்தில் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். இது அதிகாரிகளிடத்தில் இருக்கிறது, அடுத்து என்ன நடவடிக்கை எடுக்க வேண்டுமென்பதைப் பற்றி முடிவு எடுக்க வேண்டும்.

(பிற்பகல் 2.00)

ஆக, அவர்களும் மற்றவர்களுடன் உடன்பட்டு, ஒரு சுமூகமான சூழ்நிலையை ஏற்படுத்த வேண்டும். கட்டுப்பாடுகளை மீறுவோம், விதிமுறைகளை மீறுவோம் என்ற நிலை ஏற்பட்டால், இப்படி எல்லாம் செய்தால்தான் எதிர்காலத்தில் ஏதாவது வரும் என்ற நிலைமை உருவானால், இன்றைக்கு இருக்கிற நாங்கள் அல்ல, எந்தக் கட்சியாக இருந்தாலும் சரி, யார் ஆட்சிக்கு வந்தாலும் சரி, ஆட்சி நிர்வாகம் ஒழுங்காக, முறையாக நடக்க முடியாது. ஆட்சி நிர்வாகம் ஒழுங்காக, முறையாக நடக்க வேண்டுமென்றால் இப்படிப்பட்ட முறைகேடான செயல்களுக்கு யாரும் துணையாக இருக்கக்கூடாது. அவர்களுடைய செய்கைக்கு வருந்த வேண்டும், வருத்தம் தெரிவிக்க வேண்டும். வருத்தங்கூட தெரிவிக்கின்ற நிலைமை இல்லை என்றால் என்ன செய்வது? இப்போது அதிகாரிகளிடம் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்ற கோப்புகள் இருக்கின்றன. அடுத்து என்ன நடக்கும் என்பது போகப்போகத்தான் தெரியும்.

[1986 மார்ச் 31

6. அறிவிப்பு.

[திருவாளர்கள் ஆர். செங்காளியப்பன், கு. ரமணி ஆகியோர் கைது செய்யப்பெற்றுள்ளது.]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. சென்னை மாநகர காவல்துறை கண்காணிப்பாளரிடமிருந்து கீழ்க்கண்ட செய்தி தொலைபேசி மூலம் வரப்பெற்றது:

'I have the honour to inform you that Thiru R. Sengaliappan, M.L.A., Janatha, representing Singanallur Constituency, Coimbatore District and Thiru K. Ramani, M.L.A. CP(M) representing Coimbatore (East) Constituency, were arrested at about 10-45 hours today (31—3—1986) opposite to D.M.S. Office Complex, Anna Salai, Teynampet in X Station Crime No. 318/86 under section 41 M.C.P. Act when they along with 102 others assembled there in violation of the prohibitory order enforced in the City with a view to take out a procession and stage picketing in front of the Secretariat they were removed to the City Police Office, Egmore.'

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளை (1—4—1986) காலை 9-00 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 2-02 மணிக்கு ஒத்தி வைக்கப் பெற்றது.

7. பேரவைமுன் வைக்கப் பெற்ற ஏடுகள்.

(அ) சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

54. திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்தின் 1984-85 ஆம் ஆண்டிற்கான ஆறாவது ஆண்டறிக்கை [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்).



1986 மார்ச் 31]

55. தமிழ்நாடு பீங்கான் நிறுவனத்தின் 1984-85 ஆம் ஆண்டிற்கான பதினொன்றாவது ஆண்டறிக்கை [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது] (தமிழ், ஆங்கிலம்).

56. அண்ணா போக்குவரத்துக் கழகத்தின் 1984-85 ஆம் ஆண்டிற்கான பதின்மூன்றாம் ஆண்டறிக்கை [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது] (தமிழ், ஆங்கிலம்).

(ஆ) அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.

49. உடுக்குறியிடப் பெறாத வினாக்களும் விடைகளும் (1 முதல் 50 வரை) (ஐந்தாவது பட்டியல்).

## இணைப்பு 1.

(621ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிடாத வினா எண். 12(2751)-க்கான விடையைக் காண்க.)

(அ) வேலையற்றோர் நிவாரணத் திட்டத்தின் கீழ் இதுவரை பயனடைந்தோர்களுக்கு கொடுக்கப்பட்ட தொகையின் மாவட்டவாரியான விவரம்.

| வரிசை எண்ணும் மாவட்டமும். | 1980–81 | செலவு செய்த தொகை. 1981–82 | 1982–83 | 1983–84 | 1984–85 |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| 1 சென்னை .. .. | 1,96,480 | 10,67,735 | 6,08,410 | 8,32,224 | 23,11,624 |
| 2 செங்கற்பட்டு .. .. | 81,400 | 2,14,365 | 2,65,912 | 1,31,261 | 5,86,725 |
| 3 வட ஆற்காடு .. .. | 1,53,616 | 5,02,373 | 5,34,423 | 5,03,568 | 11,78,824 |
| 4 தென்னாற்காடு .. .. | 1,49,653 | 3,48,773 | 8,45,676 | 5,01,876 | 1,51,968 |
| 5 கிருஷ்ணகிரி .. .. | 1,20,999 | 2,51,508 | 1,64,674 | 1,01,228 | 4,42,638 |
| 6 தஞ்சாவூர் .. .. | 1,63,630 | 4,96,585 | 6,47,912 | 5,94,288 | 15,36,711 |
| 7 திருச்சி .. .. | 2,57,321 | 5,63,262 | 6,32,617 | 6,59,940 | 14,74,075 |
| 8 புதுக்கோட்டை .. .. | 24,879 | 1,87,821 | 89,805 | 72,160 | 2,39,119 |
| 9 பெரியார் .. .. | 1,32,011 | 3,36,329 | 3,13,294 | 3,21,069 | 8,28,520 |
| 10 சேலம் .. .. | 2,75,242 | 3,26,601 | 9,12,606 | 5,68,856 | 14,53,410 |
| 11 கோயம்புத்தூர் .. | 1,71,639 | 4,42,608 | 4,62,370 | 4,35,446 | 12,52,955 |
| 12 நீலகிரி .. .. | 68,450 | 2,39,600 | 1,74,908 | 1,77,950 | 4,68,225 |
| 13 மதுரை .. .. | 71,200 | 9,50,691 | 8,74,480 | 8,14,513 | 8,15,498 |
| 14 திண்டுக்கல் .. | .. | .. | .. | .. | 5,71,892 |
| 15 திருநெல்வேலி .. | 85,550 | 4,85,388 | 4,44,452 | 4,47,961 | 11,51,116 |
| 16 கன்னியாகுமரி .. | 1,98,883 | 6,86,970 | 6,90,744 | 5,90,022 | 14,01,442 |
| 17 சிவகங்கை .. | .. | .. | .. | .. | 2,18,642 |
| 18 விருதுநகர் .. | .. | .. | .. | .. | 1,32,925 |
| 19 இராமநாதபுரம் .. | 33,046 | 4,28,819 | 4,35,717 | 3,12,663 | 2,44,038 |
| மொத்தம் .. | 22,04,004 | 75,29,437 | 81,58,008 | 70,65,031 | 1,73,60,372 |

(ஆ) 30-4-1985 முடிய படித்த வேலையற்றோருக்கு நிவாரணம் வழங்கப்பட்ட புள்ளி விவரங்கள் மாவட்ட வாரியாக ஆண்டு வாரியாக, பயனடைந்த விண்ணப்பதாரர்களின் எண்ணிக்கை.

| வரிசை எண்ணும், மாவட்டமும். (1) | 1980-81 (2) | 1981–82 (3) | 1982–83 (4) | 1983–84 (5) | 1984–85 (6) | மொத்தம் (7) |
|---|---|---|---|---|---|---|
| 1 சென்னை .. | 112 | 627 | 252 | 219 | 7,940 | 9,150 |
| 2 செங்கற்பட்டு .. | 27 | 437 | 153 | 74 | 1,553 | 2,244 |
| 3 வடஆற்காடு .. | 119 | 573 | 495 | 268 | 2,633 | 4,088 |
| 4 தென்னாற்காடு .. | 590 | 214 | 194 | 114 | 2,721 | 3,833 |
| 5 கிருஷ்ணகிரி .. | 120 | 327 | 95 | 39 | 1,087 | 1,668 |
| 6 சேலம் .. | 695 | 708 | 378 | 134 | 3,098 | 5,013 |
| 7 பெரியார் .. | 535 | 171 | 90 | 70 | 1,115 | 1,981 |
| 8 கோயம்புத்தூர் .. | 228 | 831 | 299 | 39 | 2,076 | 3,473 |
| 9 நீலகிரி .. | 227 | 144 | 81 | 41 | 1,562 | 2,055 |
| 10 தஞ்சாவூர் .. | 138 | 717 | 157 | 470 | 4,779 | 5,661 |
| 11 திருச்சி .. | 490 | 679 | 425 | 44 | 3,975 | 5,613 |
| 12 புதுக்கோட்டை .. | 81 | 70 | 33 | 26 | 801 | 1,011 |
| 13 மதுரை .. | 202 | 1,367 | 516 | 119 | 300 | 2,504 |
| 14 திண்டுக்கல் .. | .. | .. | .. | .. | 1,484 | 1,484 |
| 15 விருதுநகர் .. | .. | .. | .. | .. | 499 | 499 |
| 16 இராமநாதபுரம் | 283 | 430 | 252 | 45 | 75 | 1,085 |
| 17 திருநெல்வேலி | 238 | 662 | 254 | 64 | 2,989 | 4,207 |
| 18 கன்னியாகுமரி.. | 453 | 701 | 316 | 93 | 4,308 | 5,871 |
| 19 சிவகங்கை .. | .. | .. | .. | .. | 829 | 829 |
| மொத்தம் .. | 4,538 | 8,658 | 3,990 | 1,859 | 43,224 | 62,229 |